உ

கடவுள் துணை.

இராமநாதபுரம் திவாத்ரிம் சதாவதானி

## சரவணப்பெருமாள் கவிராயர்

அவர்களாலியற்றிய

# புவனேந்திரன் அம்மானை.

மதுரை சிவஞான தீபச்சபை

காரியதரிசி

ம. அழகர்சாமிபிள்ளை யவர்கள்

பார்வையிட்டு,

894.8113
3193

மதுரை, வடக்காவணிமூலவீதி,

புத்தக வியாபாரம்,

## இ. ராமசாமிக் கோனாரால்

மதுரை

எக்ஸெல்ஸியர் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

179850

இதன் விலை] 1924. [அணா 10.

28 SEP

88

...க்கவும் கேட்கவும் இன்பம்தரும் பாடல்கள்.

முத்தமிழ் க்ஷேத்திர மதுர
## பாஸ்கரதாஸ் அவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 | பாகங்கள் விலை | அணா | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள் | | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | | ,, | 0—5—0 |
| லலிதாங்கி சரித்திரம் | ஷை யாரியற்றியது | ,, | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்திரம் | ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி | ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் | ஷை | ,, | 0—8—0 |

செந்தமிழ்ச் சரபம் விரகாலூர்
### மகா-ா-ா-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ் | 0 | 4 | 0 |
| இராமாயணத்திருப்புகழ், இலங்காதகனக்காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| சிதம்பரம் நடராஜர் நடனத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| ஞானசௌந்தரித் திருப்புகழ் காவடிச்சிந்து 1 2-பாகம் | 0 | 8 | 0 |
| அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| பாண்டவாள் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ் | 0 | 4 | 0 |
| பரமன்திருமால்மருகன் பக்திரஸக் கீர்த்தனை | 0 | 4 | 0 |

### சு. துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| பாகவதத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| சப்தகாண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| ஸ்ரீபாகவத குசேலபக்தியானந்தச் சரித்திரத்திருப்புகழ் | 0 | 4 | 0 |
| பார்வதி சத்தியவான் சாவித்திரி சரித்திரத்திருப்புகழ் | 0 | 4 | 0 |
| வள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |

### மகா-ா-ா-ஸ்ரீ உடையார்பிள்ளையவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |
| அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

17985

உ

வேலுமயிலுந் துணை.

# சாற்றுக்கவிகள்.

26 SEP 1924

ஆற்றங்கரைச் சமஸ்தானம் மகா-ள-ள-ஸ்ரீ;
சொக்கலிங்கப் பெத்தண்ணல் அருளிச்செய்த
எண்சீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்னவர்க்கு மனுக்ஞான நீதியாகும்
மாதவத்தோர்தவத்தினுக்கு மறையேவாழ்த்தும்
கன்னியர்கள் கற்பினுக்கும் விதியேமிக்க
காளையர்க ளுறவின்முறை காட்டு நீர்சூழ்
எந்நிலத்தும் வாணர்தமிழ்க் கிதுவேமுன்னூ
லொப்பான்மை யோர்களுக்கு மிசையாய்நிற்குந்
தன்னிகரில் சரவணப் பெருமாள்வித்வ
சரபமம்மானைப்பெயராத் தருமிந்நூலே

---

எழுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அம்மானைப் பாவையம்புயக்கண்வனக் குறமின்மணந்தவனையுயி ரனைத்தினுக்கும், அம்மானைப் பாவையம்பு நிதமயிலாக் கொண்டதிரு முருகனையுள்ளன்புற்றேத்தி, அம்மானைப் பாவையம்புகொடுதுணித்தானிகர்புவனேந்திரன் சரிதமமைத்த செஞ்சொல், அம்மானைப்பாவையும் புகழக்கொடுத்தா னெங்கள்சர வணப் பெருமாளறிஞர்வாழ்வே.

0-187MSP1 I.P
No.4

---

ஆற்றங்கரைச் சமஸ்தானவித்வான்
சிதம்பர குமாரு கவிராஜாவர்கள்
இயற்றிய கலித்தாழிசை.

உலகமெனுமோ ரண்டமிசை யுதித்தமனரா முடிக்களுக்கோ, ருயர்மாமணிபோற்சிறந்துகலை யுணர்ந்துபுகழா லுயர்ந்தபிரான், சிலைவேணிகரும் பொய்கைநகர்ச்

செங்கோல்வேந்தன் சொக்கலிங்க, கேந்திரன் வாக்கு
னுலிக்கதையைச் செய்யுளாகவியற்றுகென, நல்மார்பு
கலைவப் பதிவேந்த னுளமகிழுங்கவிராச, ராசன் சரவ
ணப்பெருமா னவிலம்மானைப் பெருஞ்சிறப்பை, வல
மார்க்கம்ப னிருந்ததறியவந்தவொட்டக்கூத்தனுளம்,
வருந்தித் தம்முன்பட்டவண்ண மலைந்துகவிமேல்
வழுத்தானே.

---

### மேற்படி சமஸ்தானம் இங்கிலீஷ் மாஷ்டருந்
### தமிழ்ப்புலமையாகிய காருபாரு
### சிவஞானம் பிள்ளையவர்கள் இயற்றிய கலித்தாழிசை.

சோமன்சேதுபதிராச துங்கனுளத்தின்மகிழ்கவி
ஞன், றுவாத்திரிம் சதாவதானியெனச் சொல்லுஞ்சர
வணப்பெருமாள், பூமினுதலிற் றிலதமெனப்பொலியும்
பொய்கைப்பதிபுரக்கும், புகழேர் சொக்கலிங்கேந்த்ரன்
பொருந்துமிதயக் கலைகடலிற், காமன்புவனேந்திரன்
சரிதக்கனிந்த மொழியைக் கவர்ந்துகொண்டும் காள
மேகமெனப்புவியிற் கற்றோர்மற்றோர் களிகூரத், தாமம்
மானைத் தமிழ்மழையாய்த் தரையிற்பொழியவந்தமழை,
தன்னற்கல்விப் பயிர்முளைத்துத் தழைத்ததீரே ழுலகி
னுமே.

---

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வலக்கணமே வலருரத்தை வாட்டுமயில் காத்தேந்
திமன்னன நாட், டிலக்கணமேல் வேய்தழைத்த சொக்க
லிங்கப்பெத்தணமால் தொன்னூலாய்ந்தவ், விலக்கண
மே தெளிந்தசர வணப்பெருமாட்கவிராஜனிடத்திலே
புகலக்கணமே, புவனேந்திரன் கதைதனையம் மானைய
தாய்க் கழன்றான் மாதோ.

---

மேற்படி சமஸ்தானம் அரண்மனை விசாரணை
குமாரசாமி நாயக்கரவர்களியற்றிய
கலித்தாழிசை.

கன்னன்மொழியார் குழலதனைக் கார்வென்றெண்ணி மயிலினங்கள், களிப்புற்றேடிவராஞ்சிமிறின்கானங் கேட்டுமீண்டுவிண்மேல், உன்னுங்காவிற் குலவவள மோங்கும் பொய்கைப்பதிபுரக்கு, முயர்ந்த சில்லவார் குலத்தி லுதித்துவாழு நங்கோமான், சொன்னமகுட முடிவேந்தன் சொக்கலிங்கப் பெத்தணமால், சொல்லின் படியே முகவைநகர்த் தோன்றன் மகிழுங்கவி திருபன், மன்னுங்கலைக்கோர் கடலெனவே வந்தசரவணப்பெருமாள் வள்ளல் புவனேந்திரன் கதையை மகிழ்ந்தம்மானை வழுத்தினனே.

சங்கரநத்தம் இராமலிங்கப்புலவர் மகன்
முத்துக்குமாருப் புலவரியற்றிய
கலித்தாழிசை.

துய்யகமலமலர்வதன் னறுதிகம்பளநற் குலதிலகன் றுலங்கும் பொய்கைப்பதிவேந்தன் சொக்கலிங்கப் பெத்தணமால் வையம்புரக்கு மரசரெல்லா மகிழ்ந்துவரத்திரியும் சதாவதானம்-வங்கு சரவணப்பெருமாள்வாணர்க்கதிபன் றன்னிடத்திற் செய்யபுவனேந்திரன் கதையைச் செஞ்சொற்றரு மம்மானையதாய்ச் செய்தவெனலுஞ் செய்ததமிழ்ச் சிறப்பைக்கேட்ட குறுமுனிவன், அய்யமுடன்றனுளம்நாணி யலைவாய்ப்பயங்கொண்ட துவுமன்றி-யாகமந்திகமக்குறுகி யந்தோமலைவாயிருந்தனனே.

முதுகுளத்தூர் பூலாருசாமியாபிள்ளை இயற்றிய
வெண்பா.

சொக்கலிங்கப்பெத்தணமால் சொல்லப்புவனேந்திர
சக்கரவர்த்தியம்மானை சாற்றினன்-முக்கனித்தேன்
கண்டாரமுதிற் கவிச்சரவணப்பெருமாள்
வெண்டேன்மனமுருக வே.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்னுறைமால் புவனேந்திரன்கதையச் சீர்சால்
பொங்கைநகர்ச் சொக்கலிங்கப் பெத்தணேந்த்ரன்
மன்னுரையா லம்மானைப் பாவாற்கல்வி
மணிசரவணப் பெருமாள் வழுத்தவேதான்
மின்னுரையோ டகம்விளக்க வினத்தனுணி
வியப்படைய முத்தமிழாய் விரியிந் நூற்சீ
ரென்னிரையாற் சொலவெளிதோ கவிஞோர்மூல
விலக்கியத்துக் கிலக்கியமென் றியம்புவாரே

இந்நூற்செய்தவராது மைத்துனராகிய சோடாசவ
தானம் வேலாயுதக் கவிராயரவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய
விருத்தம்.

அம்மானை யாய்விழியார் மதன்புவனேந் திரன் கதைநூலாற் சொல்வாயென், றம்மானை யாண்டனேர் சொக்கலிங்கப் பெத்தணலெம்மாசான்கூற, அம்மானை யானவன்ருள் பரவுசரவணப்பெருமா ளறிஞோர் கொள்ள, அம்மானையாவுரைத்தா னிதனிரசமமுதிரச மாமென்பாரே.

இதுவுமது.

பரும்பவளந் தமிழ்க்குதவு சொக்கலிங்கப் பெத்த ணல்விற்பன்ன நீதி, யரும்பவள நாடுபுரக் கும்புவனே ந்திரன்கதை நூலாற்சொல்லென்று, விரும்பவளக்கர முதவி தேனச்சர வணப்பெருமாள் வித்தைவேந்தன், கரும்பவளவுந்தருமி ரசச்சொலினு னம்மானை கழறி னனே.

காரைக்காலைச்சார்ந்த நெடுங்காடு மகா-ா-ா-ஸ்ரீ,
ரா. ஆதிமூலப் பாவல ரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்பூத்தபுவனேந்திரன் காதையை யம்மானையதாய்ச் செப்புகென்னப், பார்பூத்தபன்னாட்டுன் முன்னாட்

டுந்தென்னாட்டாம் பாவைக்கென்றும் மேர்பூத்த திரு முகநேர் பொய்கைநக ராகபுரியிறைவன்முல்லைத் தார் பூத்ததிண்புயத்தான் சொக்கலிங்கப் .பெத்தண்ணல் சாற்றக்கேட்டு

கன்னலினற் பாகோமுக் கனியோசெந்தேனோகற் கண்டோபாலோ, பொன்னமர் மார்பினன்பு னரிகடை ந்தமரர்க் கன்றருள்புத் தமிர்தமோவீ, தென்னவியந்த ரிஞருளங்களிப்பவியற் றமிழினவ்வா றியற்றினனல், அன்னவனை யினியனென வியம்புதும்யாங்கேண்மின ந்தவகிலந்தன்னில்.

ஓதுபதி களிலுளதீர்த் தத்தாடு பலனெல்லாமொ ருங்குநல்கிக், கோதுபதியா துறுவார்க் காற்றுமுயர் தீர் த்தமுமோர் குற்றமீன்ற, மாதுபதி யினிதுறையுந் தல முமணிமாடமுநீண் மதிலுமோங்குஞ், சேதுபதி நனி சிவிகை யாதிபல வரிசைபெறு சிறப்பான்மிக்கோன்.

நத்துதிறை முதுகுளத்தூ ருறையருணா சலக்கவி ஞன்றவத்தால்வந்தோன், முத்தமிழ்வாரிதிமடுத்துநாற் கவிமாமாரிபொழி முகிலொப்பில்லா, வித்துவசிகாம ணிபல்லவதானி சிவதொண்டின் மிக்கோன்தக்கோன், எத்திசையும் புகழ்சரவணப்பெருமாள் நாவலோரேறு மாதோ.

சாற்றுகவி-முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

# புவனேந்திரனம்மானை.

## பாயிரம்.

### அறுசீர்க்கழிநெடிலடி யாசியவிருத்தம்.

திருப்பதியுமணிமார்பன் புவனேந்திரன் சரித்திரத்தைச் செகத்தோரெல்லாம், விருப்பகமாய்க்கேட்கவம்மானைச் செந்தமிழால் விளம்பவிண்ணோர், தருப்பதியிற்சிறந்தபொய்கைத் திருப்பதிவாழ்கடவுளொரு தங்கமேருப்,பொருப்பதிற் பாரதம்வரைந்தகற்பகவிநாயகன்ருள் போற்றுவேனே.

தருமதுரைதாலபுரந்தானீன்ற புவனேந்த்ரன்சரிதந்தன்னை, யருமதுரையாந்தேடியம்மானைச் செந்தமிழாலறைந்தாற்செல்வந், தருமதுரை யெனப்பொய்கை மன்னனுரை படிபடியிற் சாற்றப்பாண்டித், திருமதுரைப் பதிதழைத்த சொக்கலிங்கேசனைத்தினமுந் தியானிப்பேனே.

தாரலைவாய்த் திடுமார்பன் புவனேந்த்ரன் சரித்திரத்தைத் தரையிற்கற்றோர், மூரலைவாயிகழையெண்ணி நாணுதம்மானையதாமொழியத்தெவ்வர், ஊரலைவாயிடத் தேருர் நீரலையாயிடக்காத்திலொருவேலேற்றுஞ்,சீரலைவாய்ச் செவ்வேளை யெவ்வேளை யினும்பரவித் தியானிப்பேனே.

பாயிரம்-முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

# புவனேந்திரனம்மானை.

—————(❀)—————

## நூல்வரலாறு.

பூவாழரசன் புவனேந்திரன் கதையைப்
பாவாலம்மானையெனப் பார்புகழநானுரைக்க
பொற்பகமெல்லாம்விளங்கப் பொய்கைப்பதிவாழுங்
கற்பகவிநாயகனார் கமலத்தாள்காப்பாமே
ஆலவாய்ச்சொக்கரையு மங்கையற்கண்ணம்மனையுங்
காலையினுமாலையினும் கருத்திலிருத்திடுவேன்
சாரங்கபாணிசெழுந் தாமரைப்பூமான்வருவுஞ்
சீரங்கநாதமலர்ச் சேவடியுங்காப்பாமே
செந்திநகரார்வணங்கத்தேவரெல்லாம்தெண்டனிடச்
செந்திநகராளவந்த செவ்வேளை நான்மறவேன்
வெள்ளைக்கமலத்தின் மேவுங்கலைவாணி
உள்ளக்கமலத்தி லுறைந்துநல்லவாக்கருள்வாள்
பொன்மான்வளர்மார்பன் புவனேந்திரன்கதையை
அம்மானைச்செந்தமிழாலாய்ந்துரைக்கவேணுமென்று
பாவேந்தர்தம்மைப் பதிவேந்தராக்கிவைப்போன்
பூவேந்தரேத்துமுடிப்பொன்னேந்துபொற்பதத்தான்
கற்பகத்தைப்போற்கொடுக்குங் கஞ்சமலர்க்கரத்தான்
கற்பகத்தையலொரு கல்வில்வரக்கால்பதித்தோன்
கல்விக்களஞ்சியமாங் கருணைக்கிருப்பிடமாஞ்
செல்வக்குபேரன் றிருமாலவதாரன்
தானகர் றளுஞ் சகத்திற்கனுகூலன்
ஞானசனகன் நவிலுமொழிபொய்யாதான்
மேற்குலவுஞ்சந்திரகாவிக்குடையன்பொற்குடையன்
மேற்குலவார்க்குலத்து வேந்தருக்கெல்லாம்வேந்தன்

சேமம்பெருகுமேற் சில்லவார் தன்குலத்தான்
சோமத்தலைவிருது துலங்குகின்றபொற்பதத்தான்
பாரித்தமுக்கணித்தேன் பாய்ந்துவயலிற்பெருகப்
பூரித்தநெல்விளையும் பொய்கைப்பதிவேந்தன்
தாதிலகும்பூஞ்சோலைச் சந்த்ரகிரியாதிபதி
சோதிமதிமுகத்தான் சொக்கலிங்கம்பெத்தணமால்
உத்தாரஞ்செய்தபடி யுலகோர்க்கெல்லாம்விளங்க
வித்தாரமாக விளம்பினேனம்மானை
தாதுபதியும்முல்லைத் தாமன்மனுராமன்
சேதுபதி நீதிபதி தென்முகவையாதிபதி
கல்விக்குக்கம்பன் கருணைக்கிராமச்சந்த்ரன்
செல்வத்திற்பூலோக தேவேந்த்ரன்போல்வேந்தன்
வாரணியுங்கொங்கைமின்னார் மடலூர்வடிவழகன்
தீரன்முத்துராமலிங்கச் சேதுபதிராசேந்த்ரன்
சித்தந்தினமகிழச் செப்புகவிஞோர்திலகன்
எத்திசையுமன்னர்புகழெண்ணுங்கவதானி
கருணாநிதியுயர்ந்த கங்கைகுலதிலகன்
அருணாசலக்கவிஞனன்பினாற்பெற்றமைந்தன்
புள்ளிமயிலேறிப் பொருந்துமயிலேந்துகையான்
வள்ளிமயில்கேள்வன் மலர்த்தாண்மறவாதான்
செப்பமிகவோங்குந் திருவாவடுதுறைவாழ்
சுப்பிரமணியதேசிகனைத் துதியாதிராநாவான்
செங்கனித்தேனாறுந் திரண்ட கருப்பஞ்சாறும்
பொங்கவயலிற்பெருகும் பொய்கைப்பதிவேந்தன்
பாவலரையளகைப் பதிவேந்தனுக்கிளைப்போன்
தாவுபரிநகுலன் சந்த்ரகிரியாதிபதி
துன்னலர்க்குச்சிங்கேறு சொக்கலிங்கப்பெத்தணமால்
மன்னுபுகழ்ப்பயிரை வளர்க்குங்கவிமேகம்
கொத்துமலர்த்தேன்பாய்ந்து குலவுவயற்செந்நெலெ
முத்துவிளையு முதுகுளத் தூர்வாழ்கவிஞன் (லாம்



2 6 SEP 1924

மன்னர்மகிழக்கவிசொன் மால்சரவணப்பெருமான்
என்னுங்கவிராஜ னிசைந்தேன்காணிக்கதையை

### நாட்டுச்சிறப்பு.

பூவேந்தர்வேந்தன் புவனேந்திரன்கதையைப்
பாவேந்தர்தங்கண்முன்னே பண்பாகநானுரைத்தல்
ஓங்குமழைத்துளியை யுயர்ந்தமரக்கொம்பிலை ள்
தாங்கிப்பின்காற்றசைவாற் றரைமேலுகுத்ததொக்கும்
யானைநடக்கு மழகுகண்டுநீராமை
தானுநடக்கத் தரைமீதுவந்ததொக்கும்
முக்கனிதேனூறு முழுதும்வயல்பாய்ந்து
பக்கமெல்லாஞ்செந்நெற் பயிரைவளர்த்துவரும்
ஆலைக்கரும்பிரச மாறுபோலேபெருகி
வேலைக்குள்ளேபாய்ந்து மீனூற்றந்தான்மாற்றும்
மின்னிட்டதாமரைப்பூ மேன்முத்தையன்னமெல்லாம்
தன்முட்டையென்று தழுவியடைகாக்கும்
கன்னல்வளர்ந்து கமுகுக்கிணைகாட்டுஞ் (குவியும்
செந்நென்முத்து ன்னன்முத்துந் திரண்டுமலைபோற்
கருங்குவளைதன்னைமள்ளர் களையென்றுதானெடுப்பார்
நெருங்குவளைமுத்துகளை நெருடிக்கல்லென்றெறிவார்
தண்ணீர்குட்டன் நிழலைத் தாங்கண்டமள்ளியர்கள்
கண்ணாடியென்றெடுக்கக் கையாற்றடவுவராம்
வண்ணரம்பத்தோகையசை வண்ணமிந்தமாதருடன்
விண்ணரம்பைத்தோகையரைவிளையாடக்கூவலொக்கும்
தேவரம்பைமார்தனத்தைச் செவ்விளநீரென்றுமந்தி
தாவிப்பிடிப்பதற்குத் தவ்விவிண்ணின்மேற்பாயும்
மாஞ்சோலையெங்கு மருவுங்குயிலோசை
பூஞ்சோலையெங்கும் புகுந்தாடுந்தோகைமயில்
மாமாதுலவி வளங்குலவும்பூமிதனைப்
பூமாதென்றெங்கும் புகலுவதற்கொப்பாக
மஞ்சுகுழல்காட்டும் வள்ளைசெவிகாட்டும்
கஞ்சமுகங்காட்டுங் கருங்குவளைகண்காட்டும்

நெற்றிவடிவதனை நெட்டகத்திப்பூகாட்டும்
குற்றமற்றமூக்கைக் குமிழமலர்காட்டும்
அல்லிமலர்வாய்காட்டு மாணிமுத்துப்பற்காட்டும்
சொல்லைக்கிளிகாட்டுந் துவரிதழைதான்காட்டும்
கரும்புபுயங்காட்டுங் கமுகுகழுதைக்காட்டும்
விரும்பும்படிமகர மீனின்முன்கைகாட்டும்
செங்காந்தள்செம்பவளஞ் செங்கைவிரல்காட்டும்
அங்கார்கிளிமூக் கழகுநகங்காட்டும்
தென்னைகுரும்பை திரண்டகனங்காட்டும்
மன்னுஞ்சிறுவயிற்றை மாலாலிலைகாட்டும்
வண்டொழுக்குமார்பின் வயிரொழுங்குதான்காட்டும்
ஒண்டும்புனற்குமிழி யுந்திச்சுழிகாட்டும்
வல்லிக்கொடிகள் வளையுமிடைகாட்டும்
மெல்வாழைத்தண்டு விளங்குதுடைகாட்டும்
அல்குல்வடிவை யரகினிலைகாட்டும்
மல்கும்வராலினங்கள் வயங்குகணைக்கால்காட்டும்
நீராமைகாட்டும் நெருங்கும்புறவடியை
ஆராமுள்ளங்காலை யனிச்சமலர்காட்டும்
பாயுங்களிற்றுமீன் பத்துவிரலுங்காட்டும்
சாயன்மயில்காட்டுநடை தன்னையனந்தான்காட்டும்
தேமாந்தளிர்கள் திருமேனிதான்காட்டும்
காமாங்குயில்கள் கனித்தமொழிகாட்டும்
காயாம்புமேனிக் கடைசியர்கள்கட்குடித்த
வாயம்பலென்றுகரு வண்டினங்கள்போய்காட்டும்
கல்விதழைக்குங் கவிஞோர்குடிதழைக்குஞ்
செல்வந்தழைக்குந் திரவியமெலாந்தழைக்கும்
துய்யமதிமதனன் சொக்கலிங்கப்பெத்தணமால்
பொய்கைவளநாட்டைப் போலவளந்தான்பெருகும்
இந்தவளமெல்லா மிலங்குவளநாடதுதான்
கந்தமலர்வாவிதிகழ் காம்போகதேசமதில்

## நகரச்சிறப்பு.

பூமாதுக்கோர் திலகம் பொன்மாடம்மணிப்பீடம்
பாமாதுக்காதீனம் பண்மான்புனைமகுடம்
வையம்புகழுமமரா வதிரிமளகாபுரியும்
பொய்கைப்பதியுமன்றிப் புவியிலிணையில்லாத
பொற்பதியினாமம் புவனேந்திரமாகும்
அப்பதியின்சீரதனை யறிந்தமட்டும்யானுரைப்பேன்
சித்திரக்கூடங்களுஞ் செம்பொன்மணிமாடங்களும்
பத்திபத்தியான பளிங்குமணிமேடைகளும்
வச்சிரத்தினாலழுத்தி வைத்திருக்குமாளிகையும்
பச்சைமரகதத்தாற் பதித்தமாமண்டபமும்
செம்பொற்சிகரஞ் சிறந்தமணிக்கோபுரமும்
அம்பவளத்தூண்களமைத்தசித்ரச்சாலைகளும்
நாடகசாலைகளும் நவரத்தினவேதிகையும்
பாடகசாலைகளும் பசும்பொன்னாற்பீடிகையும்
வீதிக்குவீதி விளங்குசித்ரச்சாவடியும்
சோதிபவளத் துலங்குமணிமண்டபமும்
மாமறையோர்வீதிகளும் மன்னர்பெருந்தெருவும்
தாமவணிகர் தழைக்குந்தெருச்சிறப்பும்
விருந்தழைத்துச்சோறூட்டு வேளாளர்வீதிகளும்
நெருங்கும்பலகுடிகள் நிறைந்தபெருந்தெருவும்
கோட்டையுங்கொத்தளமுங் கோபுரவாயில்களும்
நாட்டையெல்லாம்வாங்கும் நவரத்னக்கடைத்தெருவும்
தாமரைவாவிகளும் தண்மலர்ப்பூவாடைகளும்
பூமலரும்நந்தனமும் பொங்குமிளஞ்சோலைகளும்
சந்தணப்பூஞ்சோலைகளுஞ் சண்பகப்பூங்காவனமும்
வந்தவர்தாகந்தீர்க்க வைத்ததண்ணீர்ப்பந்தல்களும்
உற்றவருக்கெந்நாளு மூட்டுமன்னசத்திரமும்
நற்றவத்தோருக்குணவு நல்குமடாலயமும்
செல்விசரசுவதி தேவியிருந்துலவும்
கல்விப்பிரசங்கங் கதிக்கும்பெருஞ்சபையும்

எங்கும்விளங்கி யிருக்குமந்தமாநகரிற்
சங்கநந்தழைக்குந் தனதானியம்தழைக்கும்
மாடக்கொடிகண்மதி மண்டலத்தைத்தொட்டுலவும்
கூடச்சிகரமண்ட கோளகைக்குமேற்படரும்
மீனுலவுமாளிகையில் விளையாட்டுப்பெண்களுடன்
வானுலகமங்கையர் வந்துமேபந்தடிப்பார்
சந்திரகாந்தத்தாற் சமைத்தமணிமேடையெல்லாம்
சந்திரனைக்கண்டுருகித் தண்ணீர்மிகப்பெருகும்
ஊடன்மடவார்க ளொளித்தபளிங்குக்கரையில்
ஆடுநிழலைக்கணவ ரவனென்றுகும்பிடுவார்
உலவுமதிக்கலையை யுரிந்தகலையாமிதென்று
கலவிசெய்யுமின்னார் கருத்தாற்றடவிநிற்பார்
சன்னலுக்குள்ளேதோன்றுஞ் சந்திரனைப்பாங்கியர்கள்
மின்னுமுகமென்றுசிலர் விரும்பியழைத்திடுவார்
புலவிமடவார்பறித்துப் போட்டபணியாபரணம்
இலகுமணிவீதியெல்லா மிரவைப்பகலாக்கும்
கண்டுமொழிமின்னார் கழற்றியபூமாலையெல்லாம்
வண்டுமொய்த்துக்கொண்டுவிலை மாதரைச்சேர்மைந்த
காரோடுபோருடுங் களியானையூற்றுமதந் [ரொக்கும்
தேரோடுவீதியெல்லாந் திரண்டாறுபோலோடும்
நாட்டரசர்மைந்தர் நடத்துஞ்சிறுதேர்கள்
ஓட்டுவதாலந்தநதி யொட்டுக்குச்சேறுரும்
ஏறுபோய்வீரரெங்கு மேறுபரிக்கான்மிதியாற்
சேறுநீருய்ப்பரிவாய் சிந்துநுரையாவடங்கும்
யானைகட்டும்பந்தி யசுவங்கள்கட்டும்பந்தி
சேனைத்திரங்கள்கூடுஞ் சிறந்தலயன்வீதி
வில்வீரர்வாள்வீரர் விளங்குமணிமாடம்
மல்வீரர்யுத்தம் வகுக்குஞ்சமர்க்கூடம்
இந்நகரந்நா ளிருக்கின்றதென்றறிந்தால்
எந்நகருமிந்நகருக் கிணையென்றுசொல்லுவரோ

மாவிந்தமா நகரை வழுதிபுகழ்ந்துரையான்
பூவிலரிந்தோரெவரும் புகழாரொருபதியை
எந்தப்பதியு மிதற்குநிகரில்லையென்றால்
இந்தப்பதிசிறப்பை யென்னாற்சொல்லப்படுமோ

## அரசியல்பு.

அப்பதிக்குவேந்தன் அமுதகுண சாந்தன்
எப்புவியுங்காக்கு மிரவிகுல திலகன்
வரைப்போன்முலைமடவார் மட லூரும்பேரழகன்
தரையேழையும்புரக்குந் தாலப்புரந்தரனும்
முத்துமுடிவேந்தன் முதல்வன்ரதிகாந்தன்
சத்துருசங்காரன் சமரரணகெம்பீரன்
போருக்குடையான் புனைவாண்மருங்குடையான்
பாருக்குடையான் பனிவெண்மதிக்குடையான்
மாணிக்கமாமுடியான் மாற்றார்வெலமுடியான்
காணிக்கைவைத்துமன்னர் காத்திருக்கும்வாசலினன்
தேவேந்திரன்போற் றிருவேந்துந்தன்புயத்திற்
பூவேந்துதால புரந்தரநரேந்திரனும்
அவ்வரசன்புத்திக் கமைந்தமதியமைச்சர்
தெவ்வரசைவென்று நிதி சேர்க்குந்திறலுடையார்
மின்பதுமமாது விளங்குதிருமுகத்தான்
ஐம்பதுபேர்மந்திரிக ளவரின்முதன்மந்திரியாம்
போருங்கல்விப் பெருங்கடலுக்கெல்லைகண்டோன்
சார்வாமனு நீதி சாஸ்திரகுருபீடம்
தேவகுருவுக்குஞ் செகத்திலுள்ளமந்திரிகள்
யாவருக்குமேலா யறிவுமிகச்சிறந்தோன்
காசினியுள்ளோரெவர்க்குங் கனிவுள்ளதாயனையான்
பேசுமிந்தமந்திரியின் பேர்சுமந்திரரகரனும்

## மன்னனுக்கும் மந்திரிக்கும் குழந்தைபிறந்தது.

சாற்றுமிந்தமந்திரியுந் தாலபுரந்தரனும்
போற்றியரசுவளர்த்துப் புவியாளுநாளதனில்



மன்னவனுக்கோர்மகனு மந்திரிக்கோர்புத்திரனும்
முன்னமிவர்செய்த முழுத்தவத்தினுற்பிறந்தார்
மைந்தரிருவருடனே மன்மதன்மூன்றுகுமென்றே
இந்தவுலகத்திலுள்ளோ ரெல்லாருந்தான்புகழ
பூவேந்தன்மைந்தனுக்குப் புவனேந்திரனெனவே
பாவேந்தருந்துதிக்கப் பகர்ந்தான் திருநாமம்
சிந்தைமகிழ்புத்தி சிகாமணிதானுகுமென்று
மந்திரிகுமாரனுக்கு வழங்குபெயரிட்டார்கள்
மாமறையோர்வாழ்த்த மகிதலத்தோர்போற்றிசெய்ய
நாமகரணமிட்டு நாடோறுந்தான்வளர்த்தார்

கல்விகள் பயிலல்.

மன்னவனும்மந்திரியும் மைந்தர்பருவம்பார்த்துப்
பன்னுகல்விச்சாலையிலே படிக்கவைத்துப்பார்த்தார்கள்
எல்லாக்கலைகளையு மெழுவயதுக்குள்ளாக
வல்லாரிவர்களென்று மதிக்கும்படிபடித்தார்
நாடியறுபத்து நாலுகலைஞானமெல்லாம்
தேடிப்படித்தார் செகத்திலுள்ளோர்கொண்டாட
தாளஞ்சுரக்ஞானஞ் சங்கீதசாஸ்திரமும்
நாளுநடன நயப்பரதசாத்திரமும்
சற்பன்னபாஷைகளுந் தாங்கள்படித்தார்கள்
விற்பன்னம்மேலாகி விளங்கினுர்மேதினியில்
பாலருக்கந்நாள்வயது பன்னிரண்டுதானுக
சீலமுள்ளவித்தையெல்லாந் தெளிவாகக்கற்றபின்பு
மருவுமணிமா மகிமாலகிமாவுங்
கரிமாபிராத்திபிரா காமியமீசத்துவமும்
வசித்துவமென்றெட்டா வகுத்தசித்தியெட்டினையும்
பசித்துவந்தபேர்படைத்த பாலன்னமுண்பதுபோல்
அன்பாய்ப்படித்தார்க ளட்டமாசித்தியெல்லாம்
இன்பாயதன்பொருளை யானுரைப்பேனம்மானை
ஆற்றுமுயிர்தோறு மருவுருவாய்த்தான்புகுந்து
தோற்றியுந்தோற்ருதிருத்தல் சொல்லுமணிமாவாம்

ஆறாறுதத்துவத்து மமைவாயுள்ளும்புறம்பும்
மாறாதுறைவதனை மகிமாவென்பார்பெரியோர்
அடுக்குமலைப்பாரம்போ லமர்ந்திருக்கும்யோகிதனை
எடுக்கிலணுப்போலிருப்ப தேயிலகிமாவாகும்
ஓங்குமணுப்போலிருக்கும் யோகிதனையெடுத்தால்
ஏங்குமலைப்பாரம்போ லிருத்தல்கரிமாவாகும்
பாதலத்துள்ளோனொருவன் பங்கயத்தோன்வாழுலகிற்
போதலும்பின்பாதலத்திற் புகுதலும்பிராத்தியமாம்
கூடுவிட்டுக்கூடு குறிப்பாகப்பாய்வதுவும்
சாடியந்தவிண்ணுலகிற் சஞ்சரித்துமீளுவதும்
இச்சித்தபோகமெல்லாம் இருக்குந்தலத்திடையே
மெச்சத்தனைத்தேடி விரும்பிவரச்செய்வதுவும்
விண்ணிரவிதன்னொளியா லெல்லாம்விளங்குதல்போல்
மண்ணினுளபொருளும் வானுலகினுட்பொருளும்
திரிகாதமுந்தனது தேகவொளியாற்றெறியும்
பெருமையுறுமிந்நான்கும் பிராகாமியமாகும்
எந்நாளுமுத்தொழில்செய் திசைந்தநவக்கிரகத்
தன்னேவல்கேட்பச் சமைவதீசத்துவமாம்
பூதமுந்தானவரும் புனலும்விலங்குகளும்
ஓதுமனிதர்களு மூலகமுதலானவையும்
அசையாமற்றாங்கிவரும் அட்டதிக்குப்பாலருந்தான்
வசமாகக்கொள்கை வகித்துவமென்றேயுரைப்பார்
அட்டமாசித்தியிவை யாகுமென்பாரத்தனையும்
இட்டமாகத்தா னிவர்களுங்கற்றிருந்தார்
மைந்தரிருவர்க்கும் வயதுபதினைந்தாக
அந்தப்பருவமதி லறிந்தார்கொடிதனை
வில்வித்தைவாள்வித்தை வேல்வித்தைவானவித்தை
மல்வித்தையெல்லாம் வகைவகையாய்க்கற்றார்கள்
ஆனைபரியேற்றம் அழகுள்ளதேரேற்றம்
சேனைவகுக்குந் திறமும்படித்தார்கள்

சாத்திரங்களெல்லாஞ் சரசுவதிக்குமிவர்
வாத்தியாராகுமென்று வெழுத்தப்படித்தார்கள்
எல்லாக்கலையு மிருவர்களுநங்கற்றபின்பு
வல்லாளுர்களதின் மந்திரிகுமாரனென்போன்
செத்தார்பிழைத்துவரச் செய்யுமணிமந்திரத்தை
சந்தானவரிடத்திற் ருனொருத்தனும்படித்தான்
யூகசிகாமணியும் ஒதுபுவனேந்திரனும்
தேகமிரண்டுமவர் ஜீவனொன்றுமாயிருப்பார்
வாசமலரைவிட்டு மணந்தான்பிரிந்தாலும்
ஈசனடியைப்பெரியோ ரிதயம்பிரிந்தாலும்
குடிக்குஞ்சலத்தைவிட்டுக் குளிர்ச்சிபிரிந்தாலும்
படிக்குமிராகத்தைவிட்டுப் பண்கள்பிரிந்தாலும்
விளங்குமணியையொலி விட்டுப்பிரிந்தாலும்
துலங்குதீம்பாலைவிட்டுச் சுவைதான்பிரிந்தாலும்
சூரியன்தன்னைவிட்டுச் சுடர்கள்பிரிந்தாலும்
வீரியவான்வீரமனம் விட்டுப்பிரிந்தாலும்
மெய்யடியார்நெஞ்சையரன் விட்டுப்பிரிந்தாலும்
துய்யமின்னர்கற்புநிலைத் தொடர்புபிரிந்தாலும்
மன்னன்மகனுமந்த மந்திரியின்புத்திரனுங்
கன்னலரையேனுமொருக் காலும்பிரியார்கள்
மன்னவனுமந்திரியு மைந்தர்களைப்பெற்றெடுக்க
என்னதவஞ்செய்தாரோ வென்றுலகெலாம்புகழப்
பருவமதன்போலும் பரவுமுருகன்போலும்
மருவியிருவோரும் வளர்ந்துவருநாளதனில்
மன்னவனர்மைந்தன் மந்திரியைப்பார்த்துரைப்பான்
என்னுயிருக்கொப்பவனே யெனக்குரியமந்திரியே
நேசச்சிரோன்மணியே நிறைந்தமதிக்கடலே
தேசுயர்ந்தபுத்தி சிகாமணியே நீகேளாய்
தந்தையவர்கள்நம்மைச் சகலகலைஞானமெல்லாம்
விந்தைவிந்தையாக விரும்பிப்படிக்கவைத்தார்

அப்படியேநாமு மறிந்தோமெல்லாக்கலையும்
எப்படியும்நம்மையவ ரின்னஞ்சிலநாளில்
வையகத்தையாளவென்று மகுடமெனக்குச்சூட்டிச்
செய்யமதிமந்திரியாய்ச் செய்வார்களுநன்றனையும்
காசினிராஜாங்கமதைக் கைக்கொண்டோமானுக்கால்
தேசவளம்பார்த்துத் திரும்பமுடியாது
கலைகளனைத்தினையுங் கற்றறிந்தோமானாலும்
உலகவழக்கங்களையு முய்த்துணரவேண்டுமல்லோ
ஆதலினால் நம்மை யரசாட்சிக்காக்குமுன்னே
பூதலத்திலுள்ள புதுமைகளெல்லாம்பார்த்துத்
தேசம்வளம்பார்த்துச் சிலஸ்தலமெல்லாம்பணிந்து
ராசர்பலர்செய்துவரும் ஞானமுறையுந்தெரிநது
வரலாமென்றென்னுடைய மனதினினைந்தேன்காண்
உரமாவிக்காரியத்தை யோசித்துச்சொல்லுமென்றான்
மன்னனுரைத்தமொழி மந்திரியுந்தான்கேட்டுத்
துன்னலர்க்குச்சிங்கேறே துரைகள்சிகாமணியே
கல்விக்கடலே கருணைக்களஞ்சியமே
செல்வத்துரையே சிறந்தமதிப்பொக்கிஷமே
அனைத்துயிர்க்குந்தாயே யரசேயென்னுண்டவனே
நினைத்தகருமம்வெகு நேர்த்தியென்றுதோணுதுகாண்
அப்படியேபூமிவள மத்தனையும்நாம்பார்த்துச்
செப்பமுடனே திரும்பிவரவேணுமென்றால்
தந்தையர்களுத்தரவு தான்கேட்கவேணுமென்று
மந்திரிகுமாரனுந்தான் மன்னனுக்குத்தானுரைத்தான்

## இராஜகுமாரன் தேசவளம் பார்த்துவர வேணுமென்று தந்தையிடத்தில் விடைகேட்குதல்.

சொன்னமொழிகேட்டுத் தோன்றல்புவனேந்திரனுந்
தன்னுரியமந்திரியுந் தரைவேந்தன்பாலடைந்தார்
கஞ்சமுகமைந்தர்புவிக் காவலவன்வீற்றிருக்குஞ்
செஞ்சமுகந்தான்சேர்ந்து தெண்டனிட்டுநின்றார்கள்

வந்துவணங்கிநின்ற மைந்தர்களைவாள்வேந்தன்
சிந்தைமகிழ்ந்துமணிச் சிம்மாதனத்தருகே
சாந்திருங்களென்று தரைவேந்தன்றானுரைக்கப்
பாந்தமுள்ளமைந்தர்பய பக்தியுடனேயிருந்தார்
அடுத்தபொருள்காட்டும் அழகுகண்ணாடியைப்போல்
தொடுத்தநெஞ்சினுட்பொருளைத் துலங்குமுகங்காட்டு
மேலோருரைத்ததமிழ் வேதமொழிபோலே (மென்று
பாலர்மனக்குறிப்பைப் பார்த்தீபனுந்தானறிந்து
புவனேந்திரன்முகத்தைப் பூவேந்தன்றான்பார்த்து
கவனமில்லாநெஞ்சிலொரு காரியமுண்டென்றறிந்து
நேசனைக்காணுவிடத்தே நினைத்துப்புகழ்வதுவும்
ஆசானுக்கெப்பொழுது மப்படியேசெய்வதுவும்
வேளைமுடிவில் வினையாளைமெச்சுவதும்
மாலைமனையாட்டியை மஞ்சத்திலேகொஞ்சுவதும்
நேயமகனைத்தமது நெஞ்சிற்புகழுதலும்
ஞாயவுபாயமென்று நன்னூலுரைப்பதனால்
மைந்தன்மேலன்பினைதன் மனத்தினுக்குள்ளேயடக்கி
சிந்தைகளிப்பாகியத்தத் தேர்வேந்தனேதுரைப்பான்
சீதாரவிந்தமுகச் செல்வமேயுன்மனத்துள்
ஏதோகவலையொன் றிருப்பதுபோற்றோனுதையா
நேரேயுன்னெஞ்சில் நினைத்திருக்குங்காரியத்தைச்
சீராகவேநமக்குச் செப்புவாயென்றுரைத்தான்
அந்தமொழிகேட் டழகுபுவனேந்திரனும்
தந்தையடிவணங்கிச் சாற்றுவானம்மானை
படியேழையும்புரக்கும் பார்த்திபசிலாக்கியரே
அடியேன்விண்ணப்பத்தை யையாவேகேட்டருளும்
அய்யாவேயுங்க ளனுமதியினல்யானும்
பொய்யாதமெய்யனிந்தப் புத்திசிகாமணியும்
எங்களுக்குவேண்டு மினியகலைகற்றறிந்தோம்
தங்கள்மனங்களிக்கத் தக்கப்படிநடப்போம்

பண்பானமேலவரும் படைத்துணையுந்தானிருந்தி
தண்போடுபயிர்த்துணையாய் நாங்களிருவரும்போய்
தேசம்பலவுஞ் சிலவளமும்பார்ப்பதற்கு
நேசமிகுந்தெங்களுட நெஞ்சிலுதித்ததையா
காவலரேயெங்கள் கருத்தின்படியாக
மேவிவரும்படிக்கு விடைகொடுக்கவேண்டுமையா
என்றுவணங்கி யிறைவன்மகனுரைத்தான்
நன்றென்றுகேட்டு நரபதியங்கேதுரைப்பான்
மந்திரிமாரையெல்லாம் வரவழையுமென்றுரைக்க
அந்தட்சணமே யமைச்சருடதூதுவர்போய்
வேந்தனுமையழைக்க விடைகொடுத்தாரென்றுரைக்க
வாய்ந்தபுகழோங்கு மதிச்சுமந்திராகரனும்
நண்புடனேயொன்பதுபேர் நாற்பதுபேர்மந்திரியும்
கும்புகும்பாகத்திரண்டு கூடியொருமுகமாய்
மன்னன்சமுகத்தில் வந்துபணிந்திருந்தார்
முன்னிருந்தமந்திரியை முடிவேந்தனும்பார்த்து
மந்திரியேகேட்டீரோ மைந்தர்கருத்ததனை
இந்தப்பருவ மிளமைமுதிராவயதில்
அன்னியதேச மனேகமன்னராச்சியங்கள்
மின்னுநதிகளெங்கு மேவும்வளங்களெல்லாம்
சேவகருமின்றிச் சிலபேர்துணையுமின்றி
ஏவலருமின்றி யிவர்களிருவருமாய்ச்
சென்றுசென்றுபார்த்துத் திரும்பிவரவேணுமென்று
கன்றிமனமெனக்குக் களங்கவுரைத்தார்காண்
மெத்தைமணிமேடைவிட்டு வீதியறியார்கள்
தத்துநடையின்னுந் தளர்ச்சிமுதிரவில்லை
பகைவர்சினேகரென்று பகுத்தறியமாட்டார்கள்
முகமறியாதேசமதின் முன்பின்னறிவாரோ
அன்னத்தையின்னுமவ ரள்ளியுண்ணவேதெரியார்
வன்னமுலைப்பாலாசை யாதும்மறக்கவில்லை

உடைகளிவர்க்கின்ன மூடுத்திவிட ஆள்வேண்டும்
படைகளெதிர்த்தாற்பொருதும் பண்பரியமாட்டார்கள்
பாலப்பருவம் பசியறிந்துசோறுமுண்ணுர்
தாலத்திணிவிவரைத் தனியேவிடலாமோ
கோதாட்டிப்பாராட்டிக் குவிமுலைப்பாலூட்டிவைத்த
மாதாக்கள்சற்று மனதுசகிப்பாரோ
இந்தமுயற்சியிவ ரேனெடுத்துக்கொண்டார்கள்
மந்திரிசொல்லுமென்று மன்னவனுந்தானுரைத்தான்
வேந்தன்மொழிகேட்டு வியந்துசிலமந்திரிகள்
ஆய்ந்துசிலவார்த்தை யரசனுக்குத்தானுரைப்பார்
செய்யமனுநீதிச் செங்கோல்செலுத்தியிந்த
வையகத்தையாண்டுவரு மன்னரேகேட்டருளும்
மைந்தரிருவருக்கும் வயதுபதினுருச்சு
எந்தக்கலைகளையு மேற்றமாக்கற்றறிந்தார்
வாரம்படைத்துவரு மாற்ரூர்படைத்திரளைத்
தீரம்படைத்துவென்று ஜெயம்படைக்குதிண்புயத்தார்
மாதாபிதாக்களுக்கு வாலைப்பருவமிவர்
தீதாயெதிர்த்தவர்க்குச் சிங்கமிவராகுமையா
ஒன்னலரைவெல்லு முபாயமிகத்தெரிவார்
இன்னமிவருக் கிளம்பருவமென்றுரைத்தீர்
பாருலகிலுள்ளவளம் பார்த்துவருவாராகில்
ஆருமிவருக்குநிக ராகார்காண்மன்னவனே
சிந்தைதெளிவாகுந் திறமைமிகவுண்டாகும்
மைந்தரிவர்கல்வியெல்லாம் மனந்தெளியக்கற்ரூலும்
பாராளும்வேந்தர்செய்யும் பண்புமமைச்சியலும்
ஆராய்ந்துசெய்யும் அனுபோகம்வேண்டாமோ
ஆதலினுலெங்க ளரசேயிவர்முயற்சி
தீதுவராதென்றெடுத்துச் செப்பினுர்மந்திரிகள்
மந்திரிமார்தேர்ந்துரைத்த வார்த்தையெல்லாங்கேட்
அந்தமுதன்மந்த்ரி அமூர்தமுகம்பார்த்தான் [டங்கு

முடிவேந்தன்பார்த்தவுடன் முதன்மந்திரியுரைப்பான்
படிவேந்தேமைந்தருக்குப் பாலப்பருவமென்றீர்
பள்ளக்கடற்புனலிற் படியுமீன்குஞ்சி னுக்குத்
துள்ளித்திரிநீச்சுச் சொல்லிக்கொடுத்தவராார்
வாய்த்தசிங்கக்குட்டி மதயானைமத்தகத்திற்
பாய்ந்திடுமென்பாரதற்குப் பழக்கமார்செய்துவைத்தார்
மட்டில்கதிபெற்று வருமானைச்சிறியபுலிக்
குட்டியுணப்பாயுங் கொள்கையார்சொல்லிவைத்தார்
அந்தமுள்ளவேந்தர்குல மமைச்சர்குலந்தனிலே
வந்துபிறந்தார்க்கேதும் வலியவேவாராதோ
வேந்தர்திறமைந்தரிந்த மேதினியின்றன்மையெல்லாம்
ஆய்ந்துவருதல் அதிகவழக்கமையா
வழக்கமேலானலு மைந்தரிவர்கள்சற்றும்
பழக்கமில்லாச்சிறிய பாலரென்பீராமாகில்
வாளபிமன்சுந்திரியை மாலையிடச்சென்றவந்நாள்
தோளிரண்டுமென்றித் துணையவனுக்கார்போனர்
செல்வமிகத்தழைக்குந் தென்பாண்டிநாடாளும்
அல்லியரசாணிபெற்ற அழகுபுரந்திரனர்
மிச்சவளமோங்கி விளங்குமஸ்தினபுரியில்
துச்சனையின்புத்திரியைத் துணிந்துமருவுதற்கே
தேரும்பரியேறிச் சிறுவனெருவனும்போய்க்
காரிகையைச்சேர்ந்துவந்த கதைதானறியீரோ
பருவஞ்சிறிதான பக்குவத்திலேசீதை
தருமைந்தர்போர்புரிந்த சங்கதிநீர்கேளீரோ
மைந்தர்பலமும் மனவலியும்நானறிவேன்
எந்தவுலகத்துக் கிவர்தனியேசென்ருலும்
மேதினியிலுள்ளோர் விரோதமிகச்செய்தாலும்
தீதுசெய்யும்பூதஞ் சினந்தெதிர்த்துவந்தாலும்
வனவேங்கைசிங்கம் வழிமறித்துக்கொண்டாலுஞ்
சினமோங்குசர்ப்பமெல்லாஞ் சீறிக்கடித்தாலும்

இன்னமிடைஞ்சலிவர்க் கெத்தனைதான்வந்தாலும்
மன்னனிவனுமிவன் மந்திரியாமென்மகனும்
சிந்தைகலங்கார்கள் சிறிதுமயங்கார்கள்
வந்ததுயரையெல்லாம் மாற்றிவரும்வல்லவர்காண்
சதிராப்புவியாண்ட தசரதசக்கிரவத்தி
மதியாலுயர்ந்தமுனி வசிட்டர்மொழிதட்டாமல்
தேசுயரிராமனையுஞ் சுமைத்திரையாள்மைந்தனையும்
கோசிகமாமுனிபின் கூட்டிவிட்டானதலினுல்
தாடகையைச்சங்கரித்துச் சானகியைமாலையிட்டு
நாடுமுனிவரிடம் நல்லவரங்கள்பெற்றுப்
பெற்றோர்கள்சிந்தை பெருமகிழ்ச்சிதானடைய
மற்றோருங்கொண்டாட மாநகரஞ்சேர்ந்தார்கள்
ஆர்கலிசேர்எங்க ளரசேயிவர்கருத்தை
நீர்தடைசெய்யாமல் நிறைவேற்றுமென்றுரைத்தான்

### இராசகுமாரனுக்கும் மந்திரி குமாரனுக்குந் தேசவளம் பார்த்து வரும்படி விடைகொடுத்தல்

ஐம்பதிலொன்றில் லமைச்சர்மொழிவார்த்தையும்
நம்பிமுகன்மந்திரி நவின்றநியாயங்களையும்
வேந்தன்மதித்து விரும்பிமுகமலர்ந்து
வாய்ந்ததன்மைந்தனையும் மந்திரிகுமாரனையும்
அன்பாய்த்தழுவி யருகில்வரவழைத்தே
இன்பம்பெருக இனிதானவார்த்தைசொல்லி
முத்தங்கொடுத்து முதுகுதனைத்தடவி
சித்தங்களித்துச் செகவேந்தனேதுரைப்பான்
என்னுடையகண்மணியே யென்மந்திரிமகனே
மின்னடையவாள்வேந்தா விரும்புமதிவல்லவரே
உங்கள்கருத்துப்போ லுமக்குவிடைகொடுத்தோம்
எங்கள்கருத்துக் கிடைஞ்சலொன்றும்வாராமல்
செல்லுமிடத்துங்கள் சேர்க்கைபிரியாமல்
எல்லார்க்கும்நல்லவரா யெவ்விடத்துஞ்சஞ்சரித்து

மெத்தநாட்செல்லாமல் விரைவாகநீர்திரும்பி
உத்தமரேயெங்கட் குயிர்கொடுக்கவேண்டுமய்யா
வில்லெடுத்துவாளெடுத்து வேண்டும்படையெடுத்துச்
செல்லும்படிக்குத் திரவியமுந்தானெடுத்து
வாம்பாரியிலுங்கள் மனதுக்கிசைந்தபடி
தாம்பாரிவாகக்கொண்டு தனையரேசெல்லுமென்முன்
சென்றுதிரும்பிவந்து சேருங்காண்செல்வர்களே
என்றுபுவிவேந்த னிவர்க்குவிடைகொடுத்தான்
மைந்தரிருவர்களும் மன்னன்பாதம்பணிந்து
தந்தைவிடைபெற்றுத் தமதுமனங்களித்தார்
அந்தச்சமயத்தி லழகுபுவனேந்திரனை
மந்தரிமாரெல்லோரும் வணங்கிப்புகழ்ந்தனுப்ப
புத்திசிகாமணிக்குப் பொருந்தவிடைகொடுத்தார்
அத்தருணந்தன்னி லமைச்சன்திருமகனும்
தன்றந்தைதன்னைத் தணித்தழைத்துத்தாள்பணித்து
நின்றபொழுதமைச்ச னிகழ்த்துவான்மைந்தனுக்கு
பொன்னேயென்கண்மணியே புத்திசிகாமணியே
நன்னேயமாயுனக்கு நானுரைக்கும்வார்த்தையைக்கேள்
திருபன்றிருமகனும் நீயும்போய்ச்சஞ்சரித்து
வருமளவுநீங்கள் வரும்வழியைப்பார்ப்பேன்காண்
சஞ்சரிப்பில்மன்னவனைச் சற்றும்பிரியாமல்
நெஞ்சகத்தயிரியமுன் நினைவைவிட்டுநீங்காமல்
தூக்கம்விரும்பாமற் சுகஞ்சற்றும்பாராமல்
காக்குங்கடமை கருத்தைவிட்டுப்போகாமல்
மண்ணுக்கரசன்மகன் மனம்வெறுப்புக்கொள்ளாமல்
கண்ணுக்கிமைபோலக் காத்துவரவேணுமைய்யா
ஆராய்ந்திடாமலொன்றை யரசன்மகன்செய்தாலும்
சீராயவன்மனதைத் திருப்பிக்கொள்ளவேண்டும்
வந்துதுயர்சேரிலந்த மன்னன்மகன்வேர்வை
சிந்துமிடத்துன்னிரத்தஞ் சிந்திடவுந்தான்வேணடும்

அய்யா நீயெல்லா மறியவல்லதாதலினால்
மெய்யாகநானுனக்கு விரித்துரைக்கவேண்டாங்காண்
செல்வன்கருத்ததுபோற் சிலநாட்டிற்சஞ்சரித்து
மெல்லமனந்திருப்பி மீண்டுவரவேண்டுமைய்யா
மனதுகலங்கிநின்ற மன்னவனைநான்தேற்றி
உனதுதயிரியத்தால் உமக்குவிடை வாங்கினேன்காண்
ஆகையினாலம்ம ளரசன்மகனுடனே
சேகரமாய்ச்சென்றுவந்து சேரென்றுதானுரைத்தான்
தந்தைசொல்புத்தியெல்லாந்தனயனுமன்பாய்க்கேட்டு
சிந்தைமகிழ்வாய்த் தெண்டனிட்டுக்கொண்டுடனே
தன்மனையினுட்புகுந்து தாயார்பதம்பணிந்து
மன்மகனுந்தானும் வளம்பார்க்கச்செல்வதெல்லாம்
சுருக்கமாய்ச்சொல்லியறு சுவையோடமுதருந்தி
உருக்கமாய்த்தாயிடத்தி லுத்திரவுந்தான்வாங்கி
வேந்தன்மகனிடத்தில் மேவினான்மந்திரியும்
வாய்ந்தமதியமைச்சன் வந்தகுறிப்பறிந்தான்
அந்தக்ஷணமே யழகுபுவனேந்திரனும்
தந்தைவிடைதந்ததுவைத் தாயார்க்குத்தானுரைத்து
மாதாமனது வருந்தாமலேதேற்றிச்
சூதானதில்லையென்று தொழுதுவிடைதான்வாங்கி
அன்னமறுசுவையோ டன்பாகத்தாமருந்திப்
பின்னிரவுபோயுதையம் பிரயாணஞ்செய்யவெண்ணி
ஓதுபுவனேந்திரனும் யூகசிகாமணியும்
போதுமெனத்தக்கநிதி பொக்கிஷத்தில்தானெடுத்து
கனகமணிப்பூஷணமுங் கதித்தமணியாடைகளும்
மனதுக்கிசைந்தபடி வகைவகையாய்த்தானெடுத்தார்
அந்தச்சமயமதி லாயுதசாலையுட்போய்
மந்திரவாளுமுடை வாளுந்தெரிந்தெடுத்தார்
சேர்ந்தாரிருவர்களுஞ் சேர்ந்துபடுத்திருந்தார்
பார்த்தாரெழுந்திருந்தார் பரிதியுதிக்குஞ்சமயம்

பாரக்குடைகட்டும் பந்தர்களில்வந்தனுகி
வாரியுலகிலுள்ள வாசியிலெல்லாஞ்சிறந்த
வாயுவேகி மனவேகியென்றுசொல்லுந்
தூயபரியிரண்டுஞ் சோடாயிருப்பதது
கால்களொருநான்கினிலுங் கதித்தமுகத்தினிலும்
பால்போலும்வெள்ளையுள்ள பஞ்சகலியாணியவை
இந்தகுதிரைகள்போ லெவ்வுலகுங்கண்டதில்லை
அந்தக்குதிரைகளை யவரவிழ்த்துக்கொண்டார்கள்
தங்கலகாம்போட்டுச் சரியானசீனிவைத்து
அங்கவடியும் அமைவாகத்தானிறுத்தி
முகப்பட்டை தாவிமுகன் முகப்பெல்லாமணிந்து
சுகப்பட்டதேசமெல்லாஞ் சுற்றிவருமென்றறிந்து
மின்னுமனவேகிதன்னில் வேந்தன்திருமகனும்
பின்வாயுவேகிதனிற் பேரமைச்சன்புத்திரனும்
ஏறினார்சோடாக இந்திரதிசைநோக்கிக்
கூறினார்விஞ்ஞைமந்த்ரங் குதிரைசெவிதனிலே
ஆகாயவீதியினி லசுவங்களுமேலேறி
வாகாய்க்கிழக்கு வழிநோக்கிச்சென்றதுகாண்
வாயுவிண்மண்டலத்தில் வாம்பரிகள்சேராமல்
வாயுவைத்தம்மந்திரத்தால் வசமாக்கிக்கொண்டார்கள்
சோடாகவேயிரண்டு துரகதமுஞ்செல்வழியில்
வாடாதவீரர்புவி வனம்பார்த்துச்சென்றார்கள்
மலையின்பெருவளமும் வனத்தின்சிறப்புகளும்
உலையுங்கடுஞ்சுரத்தி லுயிர்கள்சுழலுவதும்
செந்நெலுங்கன்னல்களுஞ் செழித்தவயல்வளமும்
புன்னைமலர்தாழைமலர் பூத்திருக்குந்நீர்வளமும்
பூமிவளங்களெல்லாம் புவனேந்திரன்பார்த்துத்
தாமறிந்துமந்திரிக்குச் சாற்றுவானம்மானை
பாரமலையும் பருத்தசிகரங்களுஞ்
சேரத்தெரிவதையா சிவலிங்கம்போற்பாராய்

வேங்கையொலிகேட்டு வெருண்டுமான்கன்றுமலை
ஒங்குகுகையுள்ளொளிக்க ஓடுவது நீர்பாராய்
ஆடுமயிலினைக்கண் டரவம்பயந்துபுற்றில்
ஒடுந்தலை நீட்டுமுள்வாங்கும் நீர்பாராய்
தேங்கிடைப்பெண்டு சேலைகொண்டுசேர்ந்ததுபோல்
பூங்குருந்தின்மேற்காயாப் பூத்திருக்குநேத்தியைப்பார்
என்றும்வறியோர்க்குதவ எந்தைதரும்பொற்பதுபோல்
கொன்றைமலர்பூத்துக் குலுங்குமது நீபாராய்
பாம்புபட நிழலிற் பதுங்கியெலிக்குலங்கள்
சோம்பிகிடக்குஞ் சுடுசுரத்தை நீபாராய்
பாலை நிலச்சூடு பரிதியையுஞ்சுட்டுநம்மள்
மேலேபடருகின்ற வெப்பமதை நீபாராய்
எந்தாம்பைமார்முலைக ளிளநீர்க்கொப்பில்லையென்று
மாந்தளிர்கைபோலசையு மருதவளம்பாராய்
காவிற்கிளிச்சேவல் கற்பகப்பூஞ்சோலைகளில்
மேவிகிளிப்பேடுகளை விரும்பியணைப்பதுபார்
வேய்ந்தமுத்தம்மானையென்று மேடைச்சிறுமடவார்
ஏந்துநட்சத்திரத்தி விருகையும்நீட்டுதல்பார்
வெள்ளைமணற்குன்றுதொறும் வேலையலைமோதவதிற்
பிள்ளையனமூசலெனப் பெயர்ந்தாடுந்தன்மையைப்பார்
பாரையாவென்று பகர்ந்துபுவனேந்திரனுந்
தீரமுள்ளபுத்தி சிகாமணிக்குத்தான்காட்டி
இந்தவிதமாய்ப்புவியி லிலங்குவளம்பார்த்து
மைந்தரிருவர்களும் வான்வழியிற்சென்றார்கள்
செல்லுமந்தவேளைதனில் தேசுபுவனேந்திரர்க்கு
மெல்லமுகத்தில் வியர்வைகொஞ்சமுண்டாகி
ஆயாசந்தோன்ற அரசனதையறிந்து
வாயாரமந்திரிக்கு வழுத்துவானம்மானை
மீதேமுமகதனில் வேர்வைமிகத்துளிக்க
ஏதோகளையா யிருக்குதுகாண்மந்திரியே

இங்கிச்சமய மிறங்கிநாம்பூமியிலே
தங்கியிருந்து தகையாறவேணுமென்முன்
மன்னனுரைத்தமொழி மந்திரியுந்தான்கேட்டு
மின்னுமணிமகுட வேந்தனேகேட்டருளும்
இப்போதுநாமிங் கிறங்கிஇருக்கவென்றால்
தப்போதவில்லை சமுத்திரத்தின்மத்தியிது
இவ்விடத்திற்பூமியில்லை யின்னுஞ்சிலதூரம்
அவ்விடத்திற்சென்று லடுத்தகரைகாணும்
ஆதலினுல்வந்த அயற்சிமயக்கமதைச்
சாதகத்திலைடக்கிச் சற்றேறயிருங்களென்று
பூமிக்குறிப்பினைத்தன் புத்திமதியாலறிந்து
நேமித்தமந்திரியும் நிகழ்த்தினன்மானை
மந்திரிசொற்கேட்டு மன்னன்புவனேந்திரனும்
சிந்தையறிவாலடக்கிச் சென்றார்சிலதூரம்
தாவுபரிமீது தாணிபனுமந்திரியும்
மேவயாகாயவழி வெகுதூரஞ்சென்றார்கள்
ஆழிகடந்தப்பால் அக்கரையும்நேராகச்
சூழமதிமந்திரிதன் சூழ்ச்சியதினுலறிந்து
மந்திரியுமன்னேரம் மன்னவனைப்பார்த்துரைப்பான்
இந்தப்பொழுதிலிங்கே யிறங்கச்சமயமென்முன்
என்றபொழுதி லிறங்குபரிமந்திரத்தை
துன்றுகுதிரைச்செவியிற் சொன்னூரிருவர்களும்
பரிச்செவியின்மந்திரத்தைப் பகர்ந்தவுடன்கீழ்நோக்கி
இருவர்களுஞ்சோடா யிறங்கினூர்பூமிதனில்

இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் பூங்காவனத்தையும் தேப்பக்குளத்தையுங் காணுதல்.

பூமிதனைச்சேர்ந்து புரவிவிட்டுக்கீழிறங்கிச்
காமருவும்பூஞ்சோலை கண்டார்கள்கண்களிக்க
சோலையொன்றுகண்டு துரைகளிருவருமே
கோலத்தருவடியிற் குதிரைகளைக்கட்டிவைத்து

மாந்தருவின்கீழிருந்து மைந்தரிளைப்பாரியபின்
சேர்ந்தெழுந்துசோலைவளஞ் சென்றங்குபார்த்தாரே
சந்தனச்சோலைகளுஞ்சண்பகப்பூஞ்சோலைகளும்
பந்திபந்தியாகப் படர்ந்திருக்குமாமாமும்
புன்னைசம்பாதிரியும் பூத்தமலர்க்கோங்குகளும்
தென்னையசோகஞ் செழித்தபலாமாமும்
மந்தாரைப்பூந்தருவும் வானைத்தொடுங்கமுகும்
கொந்தார்சிறுதேக்குங் குங்குமப்பூஞ்சோலைகளும்
இன்னும்பலதருவு மெங்குந்தழைத்திருக்கும்
வன்னம்பலவாய் மலர்ச்செடியெலாமிருக்கும்
இனிதானதேங்கா யெலாங்காய்க்குமாமாங்கள்
கனிவாயின்பால்வருமாங் காய்காய்க்குந்தென்னைமரம்
கோங்குமரஞ்செவ்விள நீர்கொத்துகளைத்தான்காய்க்கும்
பாங்கெல்லாங்குங்குமங்கள் பலாவின்கனிபழுக்கும்
பாக்குமரந்தேக்கின் பழங்கள்பழுத்திருக்கும்
தேக்குமரமின்பாக்குந் தேங்காயுந்தான் காய்க்கும்
எங்கெங்குமுல்லை யிருவாட்சிப்பூப்பூக்கும்
பொங்குள்ளமல்லிகைமேற் பூத்திருக்கும்பிச்சிமலர்
மருவுஞ்செவ்வந்தியினில் வாசமுல்லைப்பூப்பூக்கும்
தருவுகொடியுந் தழைக்குமந்தப்பூஞ்சோலை
மாஞ்சோலைசோலையெங்கு மதன்காளம்வைக்குமிடம்
பூஞ்சோலையெங்குமதன் புரவிகட்டும்பந்திகளாம்
மேகம்வரக்கண்டு விளங்குமயிலாடும்
பாகுமொழிமாதரைப்போற் பச்சைக்கிளிபேசும்
வருக்கைகனிதேனு மாங்கனியின் தீஞ்சாறுஞ்
செருக்குகதலிக்கனியின் தேனுங்கலந்தோடும்
முல்லைமலர்மீதுவந்து மொய்த்தந்தத்தேன்குடித்து
மல்லிகைப்பூமேலிருந்து வண்டினங்கள்பண்பாடும்
பொன்னுலகுகற்பகத்தைப் போலிருக்கும்பூந்தருக்கள்
இன்னமனேகவள மிருக்குமந்தப்பூஞ்சோலை

அந்தப்பூங்காவனத்தி லமைந்தவளங்களெல்லாம்
மைந்தரிவர்பார்த்து வரும்போது மத்தியினில்
சொர்னப்படித்துறையுந் துலங்குபளிங்குச்சுவரும்
வர்னத்துடன்விளங்கும் வாவியொன்றுகண்டார்கள்
பளிங்குத்தகட்டைப் பதித்துப்பரப்புதல்போல்
விளங்கித்தெளிந்து மிருந்ததண்ணீர்ப்பெருக்கம்
இடங்களெங்குஞ்சங்கினங்க ளீன்றபருமுத்தினங்கள்
தடந்தரயிற்றோன்றிய நட் சத்திரம்போல்விளங்கும்
துள்ளிப்புனலிற் சுழலும்கயல்மீன்கள்
பள்ள நீர்பெண்களெட்டி பார்க்குங்கண்போல்விளங்கும்
சன்னவெளிக்கம்பியின்மேற் றங்கமலாம்பூசுதல்போல்
சொர்னப்படித்துறையின் சுடர்கள்சுவர்மேற்படரும்
அண்டச்சுவரில்வெள்ளை யானைவந்துமுட்டுதல்போல்
மண்டிப்புனலலைகள் வாவிக்கரைமோதும்
பொய்கைக்கரைமுழுதும் பூஞ்சோலைசூழ்ந்திருக்கும்
மையத்தின்மண்டபம்பொன் மகமேருபோல்விளங்கும்
அந்தத்தடாகவளம் அளவிட்டுச்சொல்லவென்றால்
சிந்தைக்கடங்காது சேடனுக்குங்கூடாது
புவனேந்திரவேந்தும் புத்திசிகாமணியும்
கவனமுடனக்குளத்தைக் கண்டுமனங்களித்தார்
வாவிக்கரையருகே பந்துபடித்துறையின்
மேவிப்புனலிருக்கு மிருதுவைப்பார்த்தாசைமிஞ்சி
கைகால்சுத்திசெய்து கண்ணுமுகந்துடைத்து
மெய்காட்டு நீரையள்ளி விடாய்தீர்த்தான்பருகி
பொற்படியின்மேலிருந்து போர்வேந்தன்புத்திரனும்
அற்புதமாங்கே யமைச்சன்முகம்பார்த்துரைம்பான்

இராஜகுமசரனுக்கு மந்திரிகுமாரன் சாதங்
கொண்டுவரப் போகுதல்.

இந்தப்படித்துறையி லிருந்துகோலாகலமாய்
மந்திரியேசட்டரச வர்க்கவகையன்னமதைக்

கொண்டுவந்துவைத்துக் குலாவியிருவோரும்
உண்டால்மனதுக் குவகையுண்டாகுமென்ருன்
வேந்தன்மனதில் விரும்பியுரைத்தமொழி
வாய்ந்தமதிமந்திரியும் மனமகிழ்ச்சியாய்க்கேட்டு
மன்னவனேயுன்றன் மனம்போற்கறிவகையும்
அன்னமுநான்கொண்டிங் கணுகுவேனேர்ஞெடியில்
சென்றுவருமளவுஞ் சித்திரப்பூங்காவனத்தில்
துன்றியிளைப்பாறிச் சுகத்திலிருமென்றுசொல்லி
வாயுவுவேகியென்னும் வாம்பரியின்மேலேறித்
தூயவிஞ்சைமந்திரத்தைச் சொன்னன்பரிக்காதில்
வடக்குத்திசைநோக்கி வாம்பரியாகாயவழி
நடக்கும்பொழுதிலங்கே நன்னகரமொன்றுகண்டான்
அந்தநகரத்தி லருகானசோலையொன்றில்
வந்துபரியுடனே மந்திரியுந்தானிறங்கிப்
பூமிதனிலே புரவிதனைநடத்திச்
சேமமுள்ளபட்டணத்தின் தெருவூடேபோம்பொழுது
மாடமணிவீதியிற்பூ வாணிபச்சிவாழ்ந்திருக்கும்
வீடொன்றிருப்பததை விசாரித்தங்கேசேர்ந்தான்
சேர்ந்தகுமாரன் திருமேனியினழகைக்
காந்தையருங்காளையருங் கண்குளிரப்பார்த்தார்கள்
வந்தகுமரனைப்பூ வாணிச்சிதான்பார்த்து
எந்தவூர்யார்குழந்தை யெங்கிருந்துவாரீர்காண்
செப்புமையாவென்றுரைக்கத் திறலமைச்சனங்குபதில்
இப்பொழுதிவ்வூர்தா னெனதூர்நெடுந்தூரம்
சென்று நானின்னந் திரும்புவழிமூக்காதம்
இன்று நான்சொன்னபடி இன்னமுது நீர்சமைத்தால்
வரையறையில்லாதுமக்கு வழங்குவேன்சொர்னமம்மா
விரைவாய்ச்சமைத்திடென வேண்டுநிதிகொடுத்தான்
மைந்தன்கொடுத்தநிதி வாங்கியந்தமங்கைநல்லாள்
விந்தைவிந்தையாய்க்கறியும் மெல்லியசம்பாவமுதும்

இனியபலகாரவகை யெல்லாஞ்சமையல்செய்து
புனிதமுடன்கட்டமுதுப் பொட்டணமதாய்ச்சேர்த்து
மங்கையெடுத்துக்கொடுக்க மந்திரியுந்தான்வாங்கித்
தங்களரசனுக்குத் தான்கொண்டுபோகவென்று
நெஞ்சில் நினைத்தான் நினைக்குமந்தவேளையிலே
துஞ்சிமிருள்படர்ந்து சுடரோன்மறைந்ததனுல்
இந்தவிரவி லெழுந்துமேசெல்லவென்ருல்
வந்தவழியுமந்த மன்னனிருப்பிடமும்
குறிப்புத்தெரியாது குதிரைவழிகூடாது
மறுக்கமின்றியின்றிரவு மட்டுநாமிங்கிருந்து
காலையொழுந்திருந்து கடும்பரியின்மீதேறி
சோலையிலேவீற்றிருக்குந் துரையிடம்போவமென
மந்திரிதன்சிந்தை மதித்தந்தராத்திரியில்
அந்தமனையி லமர்ந்திருந்தாரம்மானை
அரசன்பசியால்வருந்தி யங்கிருப்பானென்றேங்கி
இரவியெழும்வேளைபார்த் திங்கேயிவனிருக்க
வாவிப்படித்துறையில் வசித்தபுவனேந்திரனுக்கு
மேவியசங்கையெல்லாம் விளம்புவேனம்மானை
மந்திரிசென்றபின்பு மன்னனங்கேதுசெய்தான்
அந்தத்தடாகக்கரையை யகன்றுவெளிறேறிக்
காவிற்குயிலோசைக் காதுகுளிரக்கேட்டு
மேவியொருமரநிழலில் வீற்றிருந்தானவ்வேளை
மேகங்குமுறுதல்போல் வேங்கைவாய்விட்டதுபோல்
சேகரமாய்ச்சிங்கம் சினந்துமுழங்குதல்போல்
வாவிக்குமத்தியிலே வந்ததொருமுழக்கம்
காவிலிருந்தமன்னன் காதாரக்கேட்டெழுந்தான்
அந்தக்குளத்தருகே யானைபுலியொன்றுமில்லை
இந்தப்பெருமுழக்க மிங்குவரக்காரணமேன்
மஞ்சுபடியவில்லை வனமிருகஞ்சாரவில்லை
மிஞ்சுமுழக்கம்வந்த விதமென்னவென்றுணர்ந்து

நேராகநின்று நிமைநிமையுங்கொட்டாமல்
பாராளுமன்னனங்கே பார்த்திருக்கும்வேளைதனில்
வாவிநடுவே வகிர்ந்துபுனல்கிழியத்
தாவியங்கோரைந்துதலைச் சர்ப்பம்வெளியேறி
மானிடவாடையிங்கே வாசிக்குதென்றறிந்து
கானமலர்க்காவில் நின்ற காவலனைத்தானோக்கி
ஐந்துதலைப்படமு மாங்காரமாய்விரித்து
சிந்துகனல்கொப்பளிக்கச் சீறிவிழச்சிவந்து
மனிதனொருவனிங்கே வந்துநின்றானென்றுகண்டு
சினமிகுந்துமன்னவன்மேற் சீறியேவந்ததுகாண்
நாகம்வரும்வேகமதைநாட்டரசன்தானறிந்து
சோகமுறவிதனைத் துணித்துவிடவேண்டுமென்று
மந்திரவாளுருவி மலர்க்காத்திலேபிடித்து
வெந்துவந்தநாகமதை வெட்டினானிரண்டுதுண்டாய்
பறந்துகடிக்கவந்த பாம்பிரண்டுதுண்டாகி
இறந்தவுடன்தலையி லிருக்குமந்தநாகரத்நம்
சீவரத்நமாமிவைகள் சிதறித்தரையில்விழ
காவலவனெடுத்துக் கண்குளிரத்தான்பார்த்து
நாகரத்தினத்துடனே நலமாகசீவரத்நம்
சேகரமாய்வந்ததென்று செங்கையிலேதானெடுத்து
உன்னிவந்தநாகமதை யோங்கிவெட்டும்போதிரத்தந்
தன்னுடலிற்சிந்தியதைச் சலத்தால்கழுவுதற்கு
குளத்துப்படித்துறையைக் கொற்றவனுந்தானணுகி
தளத்தைவிட்டுக்கீழிறங்கித் தண்ணீர்க்கருகுசென்றான்
தண்ணீர்ப்படியிலிவன் தானெடுத்துவைக்குமுன்னே
உண்ணீரதைவிட் டொருபடிக்குக்கீழ்போக
அந்தப்படிவிட் டடுத்தபடிமேற்பதத்தை
முந்தப்பதித்திடுமுன் முன்போலப்பின்போக
இந்தப்படியா யிறைவனுமொவ்வோர்படியில்
விந்தைப்படியிதென்று மிதித்துக்கீழ்ப்போகையிலே

ஓராயிரம்படியு மொருநொடிக்குள்ளே நடந்து
சேராவ்டி தலத்திற் சேர்ந்தனன் காணம்மானை
இனியதற்குக்கீழ்ப்படிக ளேதுமில்லையாதலினல்
தனியேதண்ணீருமிவன் தலைக்குமேலேயெழுந்து
இடையேவெளிகாட்டி யிவன்தலைக்குமேற்பிடிக்கும்
குடைபோற்கவிந்துநின்று கொண்டதுகாணம்மானை

## இராசகுமாரன் பாதாளவழி சென்று மாளிகையைக் காணுதல்.

கண்டானேர்மாளிகையைக் கண்ணாரவேகளிப்பு
கொண்டானிவ்வாச்சர்யக்குறிப்பையோசித்துநின்ருன்
நிற்கும்போதந்த நிலத்தளத்தின்கீழொருபாற்
பொற்குவையிஞலமைத்துப் பொதிந்தநிலையுங்கதவும்
நேரிருக்கக்கண்டு நிருபனின்னமிங்குசில
காரணமுள்ளதுபோற் காண்பதனைக்காண்பமென்று
சென்றந்தபொற்கதவைச் செங்கையால்தொட்டவுடன்
தன்றனங்களாற்புகழைத் தருமத்தைத்தான்வளர்த்து
வந்தவர்க்குப்பின்புசொர்க்கவாசல்திறப்பதுபோல்
சந்தமணிக்கதவு தானேதிறந்ததுகாண்
கதவுதிறந்தவுடன் காவலனுட்புகுந்து
புதுமையிருக்குமென்று புத்தியிஞலேமதித்தான்
மன்னன்மனத்தின் மதித்தமதிப்பின்படியே
மின்னுப்படியவ்விடத்தின் மேவியிருக்கப்பார்த்தான்
பாதாளலோகமதைப் பார்த்துவரச்செல்லும்வழி
யீதாகுமென்றரச னெண்ணினபடியே
அந்தப்படிவழியே யரசனுந்தானிறங்கச்
சிந்தைபடிநடந்து சென்ருன்வெகுதூரம்
படிகளையெல்லாங்கடந்து பார்வேந்தன்போகையிலே
அடியிலிருக்கு மடித்தளமொன்றங்குகண்டான்
கண்டவந்தப்பூமியொரு கால்யோசனையகலம்
உண்டதற்குநீளமுந்தி யுரைத்தபடியேயாகும்

மன்னுமந்தக்கீழ்ப்பூமி மதிலுக்குள்ளேவிளங்கி
மின்னுகதிரோனனந்தம் மேலேவிளங்குதல்போல்
தங்கமகமேருவங்கு தான்வந்திருந்ததுபோல்
திங்களனேகந் திரண்டங்குதித்ததுபோல்
மாற்றுயர்ந்ததங்கமதை வகுப்பாக்கிவைத்ததுபோல்
போற்றுநவரத்னமதைப் பொருப்பாக்குவித்ததுபோல்
எங்குஞ்சுடர்விளங்கு மேழடுக்குமாளிகையொன்
றங்கேயிருப்பதுகண் டாச்சரியந்தானுகி
இந்தமணிமாட மெவருக்கிருப்பிடமோ
எந்தவுலகத்து மிதுபோலக்கண்டதில்லை
ஆனாலுமின்ன மறிவோமெனநினைத்துப்
போனனம்மாளிகைக்குட் புவனேந்திராசன்
முதலாம்பொன்மாளிகையில் மூடிவேந்தனும்நுழைய
சதிராகஅவ்விடத்திற் சமையல்செய்யும்பாத்ரம்
அன்னத்துக்கான அரிசிகறிவகையும்
வன்னத்துக்கோரடுப்பு வைத்தமடப்பள்ளிகளும்
அண்டாவிற்கொப்பரையில் அள்ளிவைத்ததண்ணீரும்
துண்டாயடுப்பிற் சுடவைத்தவெந்நீரும்
ஆக்கியிறக்கிவைத்த அன்னங்கறிவகையும்
நோக்கியிங்கேயாரும் நுழைந்திருக்கவேணுமென்று
சுற்றுப்புறங்களிலுஞ் சூழ்ந்தவறைகளிலும்
உற்றுற்றுப்பார்த்தங் கொருவரையுங்காணுமல்
சற்றேதிகைத்துநின்று சார்ந்தறிவோமின்னமென்று
வற்றுதகொப்பரையில் வாரிவைத்தநீரைமொண்டு
தேகத்தின்மேலே தெரித்திருந்தபாம்பின்ரத்தம்
போகக்கழுவிமுகம் பொற்கையால்சுத்திசெய்து
திரண்டங்கிருந்ததெல்லாந் தேர்வேந்தன்பார்த்தேகி
இரண்டாந்தளமேடை யேறினன்பார்வேந்தன்
தங்கத்தினலே தளிகைகளுங்கும்பாவுஞ்
செங்கைதண்ணீர்பருகுஞ் செம்பினங்கள்தான்பலவும்

கிண்ணமுங்கூசாவுங் கெண்டிவாய்ச்செம்புகளும்
வண்ணமுள்ள அண்டாவும் வட்டிலுங்கொப்பரையும்
குத்துவிளக்குங் குலுங்குஞ்செடிவிளக்கும்
பத்துவகுப்பிதழாற் பண்ணுஞ்செடிவிளக்கும்
பத்தரைமாற்றுப் பசும்பொன்னாற்சமைத்து
வைத்திருக்கும்பாத்திரத்தின் வகையனேகம்பார்த்தான்
இங்காகிலுமெவரு மிருக்கலாமென்றுசுற்றி
அங்காருமில்லாமை யறிந்தததனைவிட்டகன்று
மூன்றாம்பொன்மேடையிலேமுடிவேந்துசென்றபோது
நான்றானெவ்வாறுரைப்பேனணையவாரிவகை
தங்கத்தணிக்காசுந் தனிப்பொன்னால்நாணயமும்
எங்குந்தகடு மிலங்குகின்றகம்பிகளும்
வெள்ளிரூபமாயும் விளங்கும்பலநாணயமும்
அள்ளிக்குவித்தங் கடுக்கடுக்காய்வைத்திருக்கும்
வேலைக்கருவிகளும் வேண்டும்வகையாயுதமும்
மூலைக்குமூலையங்கே மொய்த்திருக்குந்தன்மைகளும்
மாலாகப்பார்த்தங்கு மனிதரையுங்காணமல்
நாலாம்பொன்மேடையிலே ராசன்புகுந்தானே
பச்சையுமுத்தும் பவளமுங்கோமேதகமும்
வச்சிரக்குப்பலும் வயிடூரியக்குதையும்
மாணிக்கநீல மணிப்புட்பராகமுடன்
பாணிக்கக்கூடாத பளிங்குநவரத்தினமும்
எட்டுத்திசையு மிருள்விளங்குஞ்சூரியன்போற்
கொட்டிக்குவித்திருக்கும் கும்பலையெல்லாம்பார்த்து
தகுந்தாரியாருமிங்கே சார்ந்திருப்பாரில்லையென்று
புகுந்தானைந்தாந்தளத்திற் போர்வேந்தன்புத்திரனும்
பொன்னாபரணம்வைத்துப் பூட்டியபொற்பெட்டிகளும்
மின்னரும்பொன்னுடை மேவியபொற்பேழைகளும்
தந்தத்தினாலே சமைத்தபலபெட்டிகளும்
வந்தபன்றிமுள்ளால் வகுத்தமணிப்பேழைகளும்

அத்தர்வகையெல்லா மடைத்துவைத்தபேழைகளும்
கஸ்தூரிச்செப்புகளும் கற்பூரவைப்புகளும்
விழுதுபடிவரைத்த வில்லைவைத்தபெட்டிகளும்
மெழுகுதிரிவத்திகளும் விளங்குகந்தவத்திகளும்
கந்தபொடிகள்வைத்துக் கட்டியபொற்பெட்டிகளும்
இந்தப்படியா யிருந்ததந்தமாளிகையில்
கூடும்வளத்தையெல்லாங் கோமகனும்பார்த்துமகிழ்
வேறிங்கேயாரு மிருப்பாரெனத்தேடி
வேறொருமில்லையென்று வேந்தனதைவிட்டேகி
யாரும்பொன்மாளிகைக்கு ளன்பாகத்தான்புகுந்தான்
தம்புருவீணை சரமண்டலஞ்சாலர்
பப்புசுரப்பத்துப் பரிவுசாரங்கிப்பிட்டில்
சாரந்தாகின்னரிமிர் தங்கமோர்ச்சங்குமுதற்
சாரந்தானேகொடுக்குஞ் சங்கீதவாத்தியங்கள்
வகைவகைச்சோடாக வைத்திருக்குஞ்சித்திரமும்
நகைக்கும்பதுமைகளும் நாட்டியப்பூம்பாவைகளும்
வாத்தியப்பெட்டிகளும் வைத்திருக்குமேசைகளும்
சூஸ்திரமாய்ச்செய்து துலங்குஞ்சிலவாத்தியமும்
இன்னம்பலவகையா மிசைவாத்தியங்களந்தச்
சொர்னமணிமாளிகையின் சூழறையெலாமிருக்க
அந்தவளமெல்லா மடுத்தடுத்துத்தான்பார்த்தான்
எந்தவிடங்களிலிலு மில்லாதவாத்தியங்கள்
நாலிடமும்பார்த்திதற்குள் நாகலோகத்தாரோ
மேலுலவுந்தேவர்களோ மேதினியாள்மன்னவரோ
பாரோர்புகழும் படுநாககன்னியரோ
யாரோவிதிலிருப்பார் யாமறியக்கூடவில்லை
இன்னமொருமாட மிருப்பதையும்பார்த்தாலே
என்னவிதந்தானுகு மென்றறிவேமென்றரசன்
மனத்திலேயெண்ணியந்த மாளிகைவிட்டேகி
இனமினத்தைசேர்வதுபோ லேழாந்தளஞ்சேர்ந்தான்

ஏழாம்பொன்மாளிகையி லிறைவன்மகனேறித்
தாழாவளங்களெல்லாந் தனித்தனியேபார்த்துவந்தான்
பள்ளியறையும் படுக்கைச்சிறப்புகளும்
அள்ளிமலர்விரித்த அஞ்சடுக்குமெத்தைகளும்
தைத்தவுருட்டுத் தலையணையுந்திண்டுகளும்
மெத்தைகளும்வில்லைகளும் விரித்தரத்னக்கம்பளமும்
பவளக்கால்கட்டில்களும் பட்டுமேற்கட்டில்களும்
தவளமுத்துச்சாலர்களுந் தங்கச்சிங்காதனமும்
படுக்கைக்குத்தூங்குமஞ்சம் பஞ்சவர்ணபாயல்களும்
தொடுக்குமலர்மாலை தூக்கியபூம்பந்தர்களும்
பளிங்குவாசற்கேட்டுகளும் பச்சைகுளோபர்களும்
விளங்குநீலஞ்சிவப்பு வெள்ளைக்குளோப்புகளும்
மூத்துச்சாமு முழுப்பளிங்கித்தொங்கல்களும்
கொத்துப்பளிங்குவைத்துக் கோர்த்தசாவிளக்கும்
தங்கப்பலகையினுற் சமைத்தபலமேஜைகளும்
துங்கச்சுடர்விளக்குந் தூண்டாமணிவிளக்கும்
வர்ணமகமற்சுருட்டால் வகுத்தபங்காத்தொங்கல்களும்
சொர்னக்களாஞ்சிகளும் சுருட்டுவிசிரிகளும்
இன்னம்பலசிறப்பு மிருக்குமந்தமாளிகையை
மன்னன்கண்ணுற்பார்த்து மனதுமிகமகிழ்ந்து
புவனேந்திரனுமங்கே பொன்னறையெல்லாம்புகுந்து
கவனமுடன்பார்த்துக் கடந்துவரும்வேளைதனில்
அங்கோர்புறத்தி லலங்காரமாயிருக்குஞ்
சிங்காரமண்டபத்தில் தேர்வேந்தன்போயடுத்தான்

இராசகுமாரன் மாளிகையிற்
பெண்ணைக்கண்டது.

வீணைநரம்போசையொன்று வேந்தனுக்குகேட்டதங்கு
காணலாமிங்கிருக்குங் கண்காட்சியென்றவனும்
சிங்காரமண்டபத்திற் சித்தமகிழ்வாய்ப்புகுந்தான்
அங்காரக்கண்டா னழகாவோர்பெண்கொடியை

வண்டார்குழலணங்கோர் மஞ்சத்தின்மேலிருக்கக்
கண்டானரசன் கனகச்சிலையதுபோல்
மின்னலொளிபோல் விளங்குமிளஞ்சூரியன்போல்
சொர்ணமயமாய்ச்சமைத்த சூத்திரப்பாவையைப்போல்
மன்மதன்கையாலெழுதி வைத்ததொருசித்திரம்போல்
பொன்மயமாத்தழைத்துப்பூத்தமலர்க்கொம்பதுபோல்
தென்னமுதினல்வகுத்துச் செய்தபிரதமைபோல்
உள்ளவழகெல்லா முறையுமணிப்பொக்ஷிஷம்போல்
கோலமலர்க்காவிருந்து கூவுமிளங்குயில்போற்
சோலைக்கழகுசெய்யுந் தோகைமயிலதுபோல்
அம்புயப்பூமேலிருக்கும் அன்னப்பேடையதுபோல்
பம்புமலர்க்கொம்பிருக்கும் பஞ்சவர்ணக்கிளிபோல்
வாதைமிகச்செய்யும் வறுமையுடையானொருவன்
பாதைவழிபோகையிலேபணப்புதையல்கண்டதுபோல்
தேசமஞ்சமேலிருந்து செங்கையின்மேல்வீணைவைத்து
வாசிக்கும்பெண்ணரசை மன்னவனுங்கண்டான்காண்
கண்டானரசன் கருத்தினுள்ளேசந்தேகம்
கொண்டானிப்பெண்ணரசு கோகனகப்பூந்திருவோ
மாமலரோனுவில் வசிக்குங்கலைமகளோ
காமனுக்குவாய்த்திருக்குங் கன்னிரதிதானே
அரம்பையுருவசியோ அழகுதிலோர்த்தமையோ
வரம்பையிலுமேனகையோ மாநாகக்கன்னிகையோ
பூலோகந்தன்னிற் புகழ்படைத்தபெண்ணணங்கோ
மேலோகத்திந்திரையோவிஞ்சையர்கள்பெண்ணரசோ
கந்திருவர்கூடி கலந்திருக்குங்கன்னிகையோ
எந்தவுலகப்பெண் ணிவளென்றுதான்கருதி
விழிகளிமைப்பதினல் மென்மலர்கள்வாடுவதால்
வழியுமுகவேர்வையினல் வையகப்பெண்ணுகுமிவள்
ஆனலிக்கீழ்ப்பூமிக் கார்கூடவந்திருந்தாள்
மானலிம்மாளிகையில் வசிப்பதற்குக்காரணமேன்

என்றுபலவிதமா யெண்ணியந்தமன்னவனும்
சென்றானங்கேயிருக்குஞ் சேயிழையாளுக்கெதிரே
பஞ்சணைமேலிருந்த பாவைநல்லாள்மன்மதன்போல்
விஞ்சழகுகொண்டுவரும் வேந்தனையுந்தான்பார்த்தாள்
ஆரோவிவனோ ராசன்குமாரனைப்போல்
வாரானிங்கெவ்விதமாய் வழியதனைக்கண்டுவந்தான்
நம்மையணைந்துவரும் நாகஞ்செய்தவஞ்சனையோ
மன்மதன்றானிந்த வடிவெடுத்துவந்தானோ
கானரசவிஞ்ஞையனோ கந்திருவன்புத்திரனோ
வானவனோமாயை வடிவெடுக்குமாட்சதனோ
மடல்விரிசெந்தாமரைபோல் வாய்த்தவிழியழகும்
விடையேறுபோலே விளங்குநடையழகும்
பூவேந்துதோளழகும் பொன்னேந்துமார்பழகும்
மாவேந்தரும்வெருவ மாலேந்துங்கையழகும்
தீர்க்கமனமுஞ் சிரித்தமுகக்குறியும்
பார்க்கும்பொழுதிலிவன் பார்த்தன்குமாரனன்றி
மற்றொருமில்லையவன் வருங்காரணமதனைச்
சற்றேதெரிவமென்று தானங்கெழுந்திருந்தாள்
வாராரும்பூண்முலையாள் மன்னனெதிரேநடந்து
நேராகநின்று நிகழ்த்துவாளம்மானை
ஆர்காணுஞ்சற்றுமன மஞ்சாமலிங்குவந்தீர்
பேர்தானுமக்கேது பெற்றோர்பெயர்களென்ன
அய்யோவுமைவிட் டழகுபிரிந்திருந்த
வையகத்தின்பேரேது வசிக்கும்நகரேது
அரசர்திருமகனோ அன்றியொருமானிடனோ
விரைவிலொளியாமல் விளம்புங்காணென்றுரைத்தாள்
கோதையுரைத்தமொழி கொற்றவனுந்தான்கேட்டு
மாதரசேயென்றன் வரலாற்றுறைப்பின்னுரைப்பேன்
வானுலகைவிட்டு வழுக்கிவிழுந்தமின்போல்
தேனனையசெஞ்சொற் றிருவேந்தெங்கிருந்தீர்

எந்தவூருங்கட் கிதுதான்புராதனமோ
தந்தைதிருநாமமென்ன தாயார்பெயரேது
ஆருஞ்சகாயமின்றி யாண்பாலெவருமின்றி
நீரிங்குவாழ்ந்திருக்கும் நிலமைதெரியவில்லை
இந்தமணிமேடையினி யேகாந்தமாயிருக்க
வந்தவரலாற்றை வழூத்துங்காணென்றுரைத்தான்
வேந்தனுரைத்தமொழி மின்னுமிடையாள்கேட்டு
காந்திமனம்வருந்திக் கண்கலங்கித்தானுரைப்பாள்
அய்யோநானும்மை யறிந்துக்கொள்ளகேட்கவில்லை
வெய்யபகையுமக்கு விரைவில்வரப்போகுதுகாண்
அத்துயரிலேநீ ரகப்பட்டுக்கொள்ளாமல்
வித்தகரேயும்மை விலக்கிவிடக்கேட்டேன்காண்
இங்குநீர்தாமதஞ்சற் றில்லாமற்செல்லுமென்று
மங்கைமனம்பதறி வழூத்தினளந்நேரம்
என்னவிரோதமிங்கே எனக்குவருமதனை
மின்னரசேசொல்லுமென்று வேந்தன்மகனுரைக்க
நெஞ்சந்துணிவும் நிலைபெயராவல்லமையும்
வஞ்சியிடையாளறிந்துமன்னவனைப்பார்த்துரைப்பாள்
நீருரையாவிட்டாலும் நேரிடும்விரோதமதைச்
சீருடனேநான்சுருக்கிச் செப்புவேன்கேளுமையா
தேவரானாலுந் திரிமூர்த்தியானாலும்
யாவரானாலுமஞ்சா ஐந்துதலைநாகமொன்று
என்னைப்பூங்காவனத்தி லெடுத்துக்கொண்டிங்குவந்து
தன்னையெனக்குக்கணவன் தானாக்கிக்கொண்டதுகாண்
பொல்லாதபாம்புடனே புணர்ச்சிசெய்வதெந்தவிதம்
சொல்வாயென்பீராகிற் சொரூபமது ஆணாகி
என்னிடத்திற்சேர்ந்திருக்கு மெடுக்கும்பலரூபமது
பின்னைபலபேச்சுப் பேசுவதுசந்தியில்லை
சென்றதுகாண்வெளியில் திரும்புமினுமோர்நொடியில்
நின்றவுமைக்கண்டால் நிமிஷத்திற்கொன்றுவிடும்

தின்றுவிடுமையா சினமிகுந்தநாகமது
கொன்றுவிடுமுன்விலகிக் கொள்ளும்வழிபாருமென
மின்னாள்மனமிரங்கி விளம்பியதெல்லாங்கேட்டு
பொன்னுருமார்பன் புவனேந்த்ரனேதுரைப்பான்
மானினமேயும்முடைய மனத்துயரம்வேண்டாங்காண்
நானந்தப்பாம்பை நறுக்கிவிட்டேன்வாளாலே
பூங்காவில்நானிருக்கும் போதந்தப்பாம்பதுதான்
ஆங்கரித்தென்னை யடுத்துவரும்போததனை
வெட்டினேன்வாளாலே விழுந்ததிரண்டுதுண்டாய்
கொட்டினதுரத்தங் குவலயமெல்லாம்பெருக
துண்டாகிப்பாம்பு துடித்திரத்தம்போனதை நீர்
கண்டாலுமக்குக் கலக்கம்விடுமென்றுரைத்தான்
வெட்டினேன்பாம்பையென்று வேந்தனுரைத்தமொழி
தட்டினாள்யாரிடத்திற் சாலவித்தைபேசுகிறீர்
யாவருக்குமஞ்சாத வைந்துதலைநாகமதைத்
தேவருங்கண்டால் திடுக்கிட்டுப்போவார்கள்
சும்மாவிடுமூச்சில் தொலைந்தபேர்மெத்தவுண்டு
உம்மாலிறந்ததென்ற வுரையையான்நம்பவில்லை
வருகாரியத்தை மதித்தறியமாட்டாமல்
விருதாவிலேன்காண் விகடம்நீர்பேசுகிறீர்
என்றுமனம்பதறி யேந்திழையாள்சொன்னசொல்லை
அன்றுபுவிவேந்த னருமையாய்க்கேட்டருளி
வாருங்காண்மங்கையரே வல்லரவுமாய்ந்தவிடஞ்
சேருங்காண்பாருமிதோ சிவாத்னம்நாகரத்னம்
நானெடுத்துவந்தேன்காண் நாகந்தலைசிதறி
மீனடுத்தகண்ணியரே மெலிவுமக்குவேண்டாங்காண்
பாருமென்றுரத்தினத்தைப் பாராசன்தான்காட்ட
கூர்விழியாள்பார்த்திதுபோற்கோடிரத்நமிவ்விடத்தில்
கொட்டிக்கிடக்குமதிற் கொண்டுவந்தாலாகாதோ
வெட்டிக்கிடக்கும்பாம்பை மேவினான்பார்த்துவந்தால்

சந்நேகந்தீருமென்று தையலருந்தானினைந்து
வந்தவரைக்கூட்டியந்த மாளிகையைவிட்டிறங்கி
நடந்தாரிருவர்களும் நாகலோகப்படியைக்
கடந்தாரங்கேவாவி கண்டாடித்தளத்தில்
தானேயவ்வாவியிலுள்ள தண்ணீர்வழிவிலகப்
போனார்படியேறிப் புகுந்தார்கள்மேற்றளத்தில்
வாவிக்கரையேறி மலர்க்காவில்வந்தணுகிப்
பூவையுடன்மன்னன் புகுந்தானிருந்தவிடம்
அவ்விடத்திலோர்புறத்தி லைந்துதலைநாகம்
வெவ்விடத்தைக்கொட்டியங்கே வெட்டுண்டுமேகிடக்க
கண்டாளவ்வாரணங்கு காவலன்வல்லபத்தைக்
கொண்டாடிவந்துகட்டிக் கொண்டாளவன்புயத்தை
ஐயந்தவிர்ந்தா ளரசனிவனேநமக்கு
செய்யகணவனென்று சிந்தைகளிகூர்ந்தாள்
மன்னவரேயும்முடைய மகிமையறியாமல்
என்னமோலேசாக வெண்ணியிகழ்ந்துரைத்தேன்
பேதையர்வார்த்தைகளைப் பெரியார்பொறுப்பதுபோல்
தீதுடையள்சொன்னதெலாம் தேவரீர்மன்னியுங்காண்
பாம்புடனேகூடிப்பரதவிக்குமென்றனக்குத்
தேம்புதுயர் நீக்குங்குல தெய்வம்போல்வந்தீர்காண்
ஏதோநான்செய்தவினை யிருந்ததிந்நாள்வரைக்கும்
தீர்தானதையெனக்கு நீக்கவலியவந்தீர்
மாப்பிள்ளை நீராக மணையாட்டிநானாகச்
சேர்ப்பித்ததெய்வமெந் தெய்வமென்றுநானறியேன்
என்றுபலவிதமா யேந்திழையுந்தான்புகழ்ந்து
மன்றன்மலர்மாலை மன்னன்கழுத்திலிட்டாள்
மங்கையணிந்தமண மாலைகழுத்திலிட்டுச்
செங்கைவிரல்பிடித்துத் தேர்வேந்தனும்மகிழ்ந்தான்
சித்தங்களித்திருந்த தேர்வேந்தனைப்பார்த்து
மூத்தநகமாது மொழிவாள்சிலவசனம்

நானிருந்தமாளிகையே நாம்வசிக்கத்தக்கவிடம்
ஆனதனாலவ்விடத்துக் கண்ணலேவாருமென்றாள்
மங்கையுரைத்தமொழி மன்னன்செவிகுளிரச்
செங்கையினாலணைத்துச் சென்றான்குளக்கரையில்
வாவித்தண்ணீருமக்கு வழிவிட்டகாரணத்தைப்
பாவித்துநானுரைக்கப் பார்வேந்தேகேளுமது
நாகத்தலையிலுள்ள நாகரத்னஞ்சீவரத்னம்
சேகரமானவைகள் தேவரீர்கைவசத்தில்
வைத்திருந்ததாலுமக்கு வாவிப்புனல்விலகிச்
சித்தமாய்க்கீழ்பூமி செல்லும்வழிகாட்டியது
இந்தமணியை யெவர்வைத்திருந்தாலும்
அந்தப்புனல்விட் டகலுங்காண மன்னவரே
வாய்த்தமணியின் மகிமையிதுவாகுமென்று
வேய்த்தடத்தோள்மின்னாள் விளம்புமொழிகேட்டே
கோதையருந்தானுங் குளத்தினுள்ளேயிறங்கிப்
பாதாலத்திற்கட்டிவைத்த படிகளையெல்லாங்கடந்து
செம்பொன்மணிமாளிகையிற் சேர்ந்தாரிருவர்களும்
கொம்பனைமன்னவனைக் கூட்டிமடப்பள்ளியிற்போய்
நீராட்டிப்பின்பு நிறைந்தமணியாசனத்திற்
பாராட்டிநல்ல பரிகலமெல்லாந்திருத்தி
சட்டரசவர்க்கமுடன் சம்பாவமுதெடுத்துத்
திட்டமுடனேபடைத்துச் செப்புமுபசாரமுடன்
போசனஞ்செய்துவைத்துப் புரவலனுமங்கையரும்
நேசமுடனேழாம் நிலமாளிகைசேர்ந்து
சந்தனம்கஸ்தூரி சவ்வாதுபுழுகணிந்து
கந்தமுள்ளதாம்பூலங் கனிவாயெடுத்தருந்தி
பஞ்சணையின்மீதேறிப் பாவையுமன்னவனும்
கொஞ்சிப்புணர்ந்து குலாவிச்சுகித்தார்கள்
கதிரோனுதிக்கும்வரை காவலனுங்காரிகையும்
மதனுமிரதியும்போல் மருவிக்கலந்திருந்தார்

கலவிவிளையாட்டிலந்தக் காமனும்போதாதெனவே
திலகநுதலாள்புகழச் சேர்ந்திருந்தாரம்மானை
அன்னோமன்னனந்த ஆயிழையைப்பார்த்துப்
பொன்னேமணியே புனத்துக்கிளிமொழியே
தேனேயமுதேயென் செல்வத்திரவியமே
மானேமயிலே மரகதமேகேட்டருள்வாய்
எந்தனகராமுன்னை யிழந்திருக்குமாநகரம்
தந்தைபெயரென்னவுந்தன் தாயார்பெயரேது
இந்தப்பாய்புன்னையுந்தா னெவ்விடத்திலேயெடுத்து
வந்ததுகாணெல்லாம் வகைவிபரமாயுரைப்பீர்
ஒன்றுந்தவறும லுரைப்பீரெனவுரைக்க
மன்றன்மலர்க்குழலாள்மன்னவனைப்பார்த்துரைப்பாள்
இத்திசைக்குநேரே யிருக்குமந்தகீழ்த்திசையிற்
பத்திமணிமாடம் பளிங்கினுலுப்பரிகை
சந்திரனைத்தொட்டுத் தடவும்விரிஞ்சநகர்
அந்தநகருக் கரசன்விரிஞ்சாதிபன்
காவலவன்மனைவி காமரசவல்லியென்னும்
பூவையவள்வயிற்றிற் புத்திரியாய்நான்பிறந்தேன்
மேலோகரம்பையிலு மேலாமழகியிவள்
பூலோகரம்பையென்று புனைந்தார்திருநாமம்
சேமகரத்துடனே சேயிழையாளெனக்கிந்த
நாமகரணமிட்டு நாளொருவண்ணமதாய்
வளரும்பருவமதில் வயதுபதிமூன்ருகித்
தளர்வுவராதபடி தன்னையறிந்தேன்நான்
என்னையறிந்தே னிளமைப்பருவமதில்
அன்னைவளர்த்துவர யான்வளரும்நாளதனில்
பாங்காயெனக்கிசைந்த பாங்கியரும்நானுமொரு
பூங்காவனம்புகுந்து பூவெடுக்கச்சென்ருேங்காண்
கோட்டுமலருங் கொடியிற்புதுமலருந்
தோட்டுச்செடிமலருந் துரிதமுடனேயெடுத்தோம்

மல்லிகையேபிச்சிகளே வாசமுள்ளசண்பகமே
முல்லையேநாங்கள் முடிக்கமலர்தாரீரோ
தாரீரோவென்றுசொல்லித் தாதியருநானுமங்கே
நேராகப்பூவெடுத்து நிற்குமந்தவேளையிலே
நானுமக்குப்பாரியென் நான்முகத்தோனென்தலையில்
மேனுளெழுதிவைத்த விதிவந்துமூண்டதனல்
அந்தவிடத்திலிருந் தைந்துதலைநாகமொன்று
வந்ததுகாணெங்கள் மனதுதிடுக்கிடவே
பாம்புவரக்கண்டு பதறிமனங்கலங்கித்
தேம்பியுடம்பு தியங்கிமயங்கிவிட்டோம்
கால்பதறிக்கைபதறிக் கருத்துமிகப்பதறி
மேல்பதறிநாங்கள் விரைந்தோடிப்போகையிலே
ஓட்டத்திலேநாங்க ளோடுகின்றபோதிலெங்கள்
கூட்டத்திலேமுன் நுழைந்து கொதித்துமிகச்சீறி
சென்றுபடம்விரித்துச் சீத்தென்றுமூச்சுவிட்டு
துன்றுமுயிர்ப்பாங்கியரைத் துடர்ந்துவிரட்டிடவே
நாகம்விரட்டுதென்று நங்கையரெல்லாம்பயந்து
சேகரமாய்விட்டங்கே சிதைந்தோடிப்போனார்கள்
போனவுடனேநானும் புத்திமிகமயங்கிக்
கானத்திலேதனியே கலங்கிநிற்கும்வேளைதனில்
மெல்லியரையெல்லாம் விரட்டிவிட்டபாம்பதுதான்
பொல்லாதராட்சதனைப் போலோர்வடிவெடுத்து
வந்தெனக்குநேரே மயங்காதேபெண்மயிலே
சிந்தைகலங்காதே சேயிழையேயென்றுசொல்லி
என்னையெடுத்துத்தன் னிலங்குதோள்மீதில்வைத்து
உன்னதமாகவேதா ேனாடோடிவந்ததுகாண்
கொண்டுவந்திம்மாளிகையிற் குடியாகவைத்துமிகப்
பண்டுமுதலின்றளவும் பாலித்துவந்ததுகாண்
இரவுபகலாய்ச்சிலநா ளென்னைமனந்தேற்றி
மருவும்படிக்கு வசப்படுத்திவந்ததுகாண்
நீடராக்கன்ரூ!மதை நீக்கிமனிதனைப்போல்
வேடமெடுத்தென்னை விரும்பியேசேருமது

போகியென்றுபாம்பினுக்குப் புலவோருரைத்தபெயர்
நாகமிதனுலென்று நானறிந்தேன்காரணத்தை
மற்றுமதுபாம்பு வடிவுகொண்டு நாட்டிலெங்குஞ்
சுற்றிவந்திங்கேயெனக்குத் துணையாகக்காத்திருக்கும்
காத்திருந்தமாப்பிள்ளையைக் கதறவிட்டுக்கன்னிகையை
நேத்துவந்தார்கொண்டதுபோனீரெனக்குவாய்த்தீரே
எனதுகதையெல்லா மிதுதானென்றேந்திழையாள்
மனதுமகிழ்வாக மன்னவர்க்குத்தானுரைத்தாள்
சங்கையெல்லாந்தீர்ந்து தாணிபனுமவ்விடத்தில்
மங்கையுடன்கூடி மகிழ்ந்திருந்தானம்மானை
இந்தவிதமாக இறைவன்மகனிங்கிருக்க
மந்திரியின்மைந்தன் வரலாறினியுரைப்பேன்

## மந்திரியின் குமாரன் சாதங்கொண்டு வந்து இராசகுமாரனைத் தேடுதல்.

மண்டலத்தில்மிக்கவளம் வாய்த்ததங்கமாபுரியில்
பண்டுபூவாணிபஞ்செய் பாவைத்திருமனையில்
கட்டமுதுவாங்கிக் கவலையுடனன்றிரவு
மட்டுமங்கேயிருந்த மந்திரிகுமாரனப்பால்
எப்போதிரவி யெழுமென்றுபார்த்திருந்தான்
அப்போதுகண்டா னருணோதயமதனைக்
கண்டவுடனெழுந்து கட்டமுதைத்தோளேந்தி
கொண்டுகுதிரையின்மேற் கொண்டுநகரைக்கடந்து
தேசியின்காதுகளிற் செப்பினன்மந்திரத்தை
வாசியுமாகாயவழி மார்க்கமாய்ச்சென்றதங்கே
மன்னன்மகனிருந்த மலர்ச்சோலைநேரில்வந்து
மின்னுபரியுடனே மேதினியில்வந்திறங்கி
குதிரைவிட்டுக்கீழே குதித்தந்தமந்திரியுஞ்
சதிராய்க்குதிரையையோர் தருவிலேகட்டிவைத்து
ஏந்தலிருந்த விடத்திலேபோய்ப்பார்த்தான்
வாய்ந்தமனவேகிமட்டு மரத்தடியிற்கட்டிநிற்க

மன்னவனைக்காணாமல் மந்திரியுந்தான்திகைத்து
மின்னுமந்தவாவி விளங்கும்படித்துறையில்
வந்துநின்றுநோக்கியந்த வாவிப்படிமுழுதும்
கொந்துகொந்தாகத்தேடிக் குளக்கரையெல்லாமோடி
தேடியுங்காணாமலவன் சிந்தைமிகக்கலங்கி
ஓடிவந்தான்பின்னுமுன் னுரைத்தமரத்தடியில்
மாவுங்குதிரைமட்டு மரத்தடியில்கட்டிவைத்து
காவலவனெங்குசென்றான் காரணந்தானென்னவென
மந்திரியுஞ்சிந்தை மயங்கியங்கேநிற்கையிலே
அந்தவிடத்திற் கடுத்தசமீபத்தில்
பார்த்தானைந்துதலை பாம்பிரண்டுதுண்டை
வேர்த்தான்மனங்கலங்கி விளைந்தவாறென்னவென்று
வெட்டுண்டுபூமியின்மேல் வீழ்ந்துகிடப்பதனை
மட்டுண்டதார்மார்பன் மலர்விழியால்கண்டுநின்று
சற்பமொன்றிங்கேயிறந்து தரையிற்கிடப்பதிது
சொற்பமலவிதனைத் துணித்தவனுமன்னவனே
இன்னமறிவோமென் றெண்ணியந்தமந்திரியுங்
கன்னலரைக்குள்ளேபூங் காவனமெல்லாமோடி
தேடினான்காணான் திரும்பினானவ்விடத்தில்
ஓடிவந்தான்பின்புபல யோசனைகள்செய்துநின்றான்
உடனேவருவேனென் றோதினேனன்றிரவு
தடையாயிருந்ததனாற் றாழ்வுவந்துநேர்ந்ததிங்கே
நானுடனேவாராமல் நள்ளிரவிற்றங்கிவிட்டேன்
ஆனதினாலிவ்விடத்து அடியேனைக்காணாமல்
என்னையவர்தேடி யெவ்விடத்தேசென்றாரோ
அன்னபடிபோனாலும் அசுவம்விட்டுப்போவாரோ
மாற்றாரொரிவரிங்கே வந்துபோர்செய்தாலும்
தோற்போர்பகைவரல்லால் துரைதோற்கமாட்டாரே
சண்டையிட்டுமாண்டாலும் சடமிருக்கவேணுமிங்கே
வண்டையிட்டகண்மடவார்மயக்கிக்கொண்டேகினரோ

இந்திரனார்தன்மனதை என்றும்மகிழநடிக்கும்
கந்திருவமாதர்வந்து கைகொண்டுசென்றாரோ
பாராளும்வேந்தனில்லாப் பட்டணத்தையாள்வதற்கு
காரானைவந்துபட்டங் கட்டிக்கொண்டேகியதோ
அல்லதொருபட்சிக் கரசாகியசரபம்
வல்லசிங்கமென்றுவந்து வாரிக்கொண்டேகியதோ
இந்தவனத்தி லிறந்தவுயிர்க்காவிரங்கி
வந்தந்தக்கூட்டில் மருவியிருக்கின்றாரோ
தனித்துவிட்டுப்போயிரவிற் றங்கிவந்தானிங்கென்று
மனத்தைமயக்குதற்கு மறைவாயிருக்கிறாரோ
தாரணியாள்வேந்தனென்னைத் தனியேபுலம்பவிட்ட
காரணந்தானின்னதென்று கண்டறியக்கூடவில்லை
எத்தலத்திலெந்நாளி லென்னரசைக்காண்பதென்ன
புத்திமயங்கினான்காண் புத்திசிகாமணியும்
அட்டமாசித்தியிலொன் றானபிராகாமியத்தை
இஷ்டமாய்க்கற்றுமிவ னென்மயங்கவேணுமென்றால்
கற்றவித்தையெல்லாங் கபடமாய்க்கற்றதனால்
உற்றசமயத்தி லுதவாமற்போகவென்று
நன்னயஞ்சேரும்பரசி ராமமுனிசாபமதாற்
கன்னமகாராஜனுக்குக் கணைகளுதவாததுபோல்
இன்னஞ்சிலதுயர மிறைவனடைவதற்கும்
மன்னவனைக்காணாமல் மதியமைச்சனோவதற்கும்
எதுவாய்வேத னெழுதும்விதியாலும்
சாதகத்தின்கிரக சாரபலனாலும்
ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந் துறுமென்றுவள்ளுவனார்
பண்டுரைத்தசொற்போலும் பார்த்திபன்சென்றவிடம்
கண்டுகொள்ளமாட்டாமற் கலங்கினான்மந்திரியும்
எந்தவிதந்தேடியுந்தன் னிறைவனைக்காணாமையினால்
அந்தமதியமைச்சன் அறிவுமிகக்கலங்கி

சித்தமயங்கித் தியங்கித்தயங்கியங்கே
புத்தியற்றூற்போலே புலம்புவானம்மானை
நானேதுமிங்கே நடந்தவகையறியேன்
மானேகலேயயென் மன்னவனைக்காணீரோ
வெங்கரியின்மத்தகத்தின் மேலேறிப்பாய்ந்துலவுஞ்
சிங்கமேயென்னரசச் சிங்கம்வரக்காணீரோ
தூங்கியகைவாரணமே சூழுஞ்சிறுபுலியே
வேங்கையேமாற்றலர்க்கு வேங்கைவரக்காணீரோ
சோலேமேகத்திரள்போற் சோலையெல்லாஞ்சுற்றிவரும்
ஆனையேயெங்களரசானைவரக்காணீரோ
பாடுங்கிளியே பசுங்கிளியேதோகைவிரித்
தாடுமயிலேயென் னாண்டவனைக்காணீரோ
பாயுஞ்சிறுமுயலே பட்சிகளேபட்சிகட்கு
நாயகமேயெங்கள் நாயகனைக்காணீரோ
புரசேபலாமரமே புன்னையேசெண்பகமே
அரசேயெனக்குரிய அண்ணல்வரக்காணீரோ
தேவதருப்போல்வளர்ந்த செண்பகமேகுங்குமமே
பூவரசேவாரிதிசூழ் பூவரசைக்காணீரோ
தேர்வேந்தன்பெற்றெடுத்த செல்வத்திரவியமே
போர்வேந்தர்சிங்கேறே பூலோகத்திந்திரனே
வித்தகப்பெருங்கடலே விற்பனசிந்தாமணியே
புத்திக்களஞ்சியமே புரவலர்சிகாமணியே
சிவனேந்தியசிலேபோல் திரண்டிருக்குந்திண்புயனே
புவனேந்திரனே நீ புகுந்தவிடங்காணேனே
உன்னைப்பிரிந்துசற்று முயிர்வாழமாட்டாதே
என்னைத்தனியேவைத் தெவ்விடத்திற்சென்றூரோ
வெயிலிற்புழுப்போல் வெதும்புதேயென்மேனி
உயிரைப்பிரிந்துவிட்ட வுடலுக்கோர்தஞ்சமுண்டோ
என்னையுனக்குத்துணையா யெந்தையுமுன்தந்தையுமுன்
பின்னனுப்பிவைத்தவுனைப் பிரிந்துவருந்துதற்கோ

கண்ணுக்கிமைபோலக் காத்துவாவென்றுசொன்ன
அண்ணலென்தந்தைக் கடியேன்போயேதுரைப்பேன்
சேர்க்கைபிரியாமலொன்று சேர்ந்துநீர் சஞ்சரித்து
மார்க்கமுடன்வாருமென்றமன்னவர்க்கென்சொல்வேன்
தேன்சிந்துதாரான்வேர்வை சிந்திடத்திலுன்னிரத்தந்
தான்சிந்தவேணுமென்ற தந்தையர்க்கென்சொல்வேன்
தன்னுயிரைக்கொண்டுவந்து தானீவீரென்றுரைத்த
மன்னவருக்கென்சொல்வேன் மந்திரிமார்க்கேதுரைக்க
என்னுயிர் நீயுன்னுடல்நா மென்றிருந்தோம் நீபிரிந்து
மின்னுமுயிர்வைத் திருக்கின்றேன்மன்னவனே
பிரிந்தாயோவென்மேற் பிரியம்விட்டுப்போனதுவோ
தெரிந்தாயோவேறுவழி தேர்வேந்தன்கண்மணியே
மன்னவனேயென்றுசொல்லி வாடிப்பாதவித்துத்
தன்னந்தனியேபுலம்பிச் சற்றேமனந்தேறி
அங்கோரிடத்திலிருந் தாலோசனைகள்செய்வான்
இங்கேயிருந்தமன்ன னெவ்விடத்திற்போயிருப்பான்
அப்படிப்போனாலுமென்னை யறியாமற்போகானே
இப்படிக்குள்யாரேனு மிடையூறுசெய்தாரோ
ஆவிக்குமோசம்வந்தா லாக்கைகிடவாதோ
காவிற்றறிவேங்கை கண்டிழுத்துப்போனதுவோ
வரிவேங்கைதானிழுத்து வன்புடைக்குட்சென்றாலும்
தரையிலேயந்தத் தடங்கிடக்கக்காணோமே
ஆனதனாலுயிருக் கபாயமொன்றும்வந்ததில்லை
மானிலத்திலுள்ள மனிதரோமங்கையரோ
மைம்மயக்கினாலோசெய் வஞ்சனையாலோதமது
கைமயக்காற்கொண்டுசென்ற காரணமீதாகுமென்று
புத்திசிகாமணிதன் புத்தியினால் நிட்சயித்துப்
பித்துவிலக்கிப் பிதற்றுந்தொழிலைவிட்டு
சிந்தைகலக்கஞ் சிறிதுதெளிவாகி
இந்தத்துயர்படவோ இறைவனுடனிங்குவந்தேன்

அழியும்பொருளழியு மழியாப்பொருளழியா
தழிவதழிந்தால்வருந்த லாமோவென்பார்பெரியோர்
அன்னுளெழுத்தை யழித்தெழுதுவாருமில்லை
முன்னுள்விதிபோல் முடியுமெந்தக்காரியமும்
ஆகையினலிந்த வரசனெனைவிட்டகன்று
போகவுநானிங்கே புலம்பித்தவித்திடவும்
வேதனுமென்றலைமேல் விதித்திருக்கவேணுமென்று
போதமயலுணர்ந்தான் புத்திசிகாமணியும்
எல்லாம்சரிதானிங் கெனதுமனந்தேறிடினுஞ்
சொல்லாலுயர்ந்த துரைமகனை நானிழந்து
தனியேநகர்புகுந்தென் தந்தைக்கும்மன்னனுக்கும்
அனியாயமாமிதனை யடியேனெவ்வாறுரைப்பேன்
படியேழுங்காத்திடுமென் பாலனெங்கேயென்றுபணி
முடிவேந்தன்கேட்கில் முகாந்திரநானென்சொல்வேன்
மைந்தன்மனஸ்தாபமுன்மேல்வைத்ததால்விட்டுவிட்டு
முந்தியிங்குவந்தாயோ முகாந்திரந்தான்வேறுண்டோ
சீவனுக்குமோசம்வந்து சேர்ந்ததோசெல்வனுக்குப்
பாவிநீயுண்மை பகரென்றாலேதுசொல்வேன்
மந்திரிமார்தன்குலத்தில் வசைதேடிவைத்தாயென்
றந்தநகரமைச்ச ரனைவர்களுஞ்சொல்லுவரே
உற்றார்பழிப்பாரே ஊராருமேசுவாரே
பெற்றாருமென்மேற் பிரியம்விட்டுப்போவாரே
இங்கேநடந்தகதை யெல்லாம்நான்சொன்னாலும்
அங்கேநிசமென் றணுவுமொப்புக்கொள்வாரோ
ஆதலினலென்னுயிர்மே லாசைவைத்துவாழ்வதிலும்
சாதலேநல்லதென்று தானினைப்போமானாலும்
வேந்தனுந்தானிறந்து விட்டானோ அல்லவெங்குஞ்
சார்ந்திருக்கின்றானோவச் சந்தேகந்தீரவில்லை
சீவனிருந்தாலுமவன் சினேகமிருந்ததென்றால்
ஆவலுடனுயிருண் டாக்கிக்கொளக்கூடும்

அப்படிச்செய்யாம லடியேனுமாய்ந்துவிட்டால்
எப்படித்தானெப்பிறப்பி லென்னரசைநான்காண்பேன்
இந்தச்சிறுவயதி லென்னைப்போலிடைஞ்சலுற்றார்
எந்தக்கதைகளிலு மெவராலுங்கேட்டதுண்டோ

மந்திரி காசியாத்திரைக்குப் போகுதல்.

பண்ணியபாவங்கள் பழவினைகளுள்ளதெல்லாம்
புண்ணியதீர்த்தங்கள் புகுந்தாடினல்விலகும்
காசிமுதலான காசினியில்தீர்த்தமெல்லாம்
நேசமுடனாடிவந்தால் நினைத்ததெல்லாங்கைகூடும்
ஆசையினாற்காசி யாத்திரைநாம்செய்துவந்தால்
சோகமதுதீருமென்று துணிந்தான்மனத்தனிலே
இந்தப்படியமைச்ச னெண்ணியங்கேயேதுசெய்வான்
அந்தத்தடாகமதி லவன்புகுந்துநீராடி
பூசைமுடித்தந்தப் பொற்படியில்வந்திருந்தான்
வாசவகைக்கட்டமுதை மந்திரியுந்தானவிழ்த்தான்
கட்டமுதைத்தானெடுத்துக் கையாலவிழ்த்தவுடன்
மட்டவிழ்ந்ததாரணிந்த மன்னவனைத்தானினைந்தான்
சிவனேசிவனேயென் சீவனுக்குநேரான
புவனேந்திரனைவிட்டுப் போசனமுஞ்செய்வேனே
அருந்தமுதங்கொண்டுவந்தா லழகானபொற்படியில்
இருந்துபுசித்திடலா மென்றுசொன்னமன்னவனே
உன்னைப்பிரிந்துமின்ன முயிர்வைத்திருப்பதற்கோ
அன்னத்தையுண்ணவெனக் காசையுந்தானுண்டாச்சே
என்னிடத்திற்சொன்னபடி எழிலன்னங்கொண்டுவந்து
மன்னவனேயுன்னையிங்கே வந்திருக்கக்காணேனே
என்றுபுலம்பி யிருகண்ணும்நீர்சொரியக்
கன்றிமனது கலங்கினனம்மானை
வருந்துமனதையுந்தான் மதியினாலேதேற்றி
இருந்தமுதிற்கொஞ்ச மெடுத்துண்டுநீர்பருகி

பூங்காவனத்தில்வத்து புரவியிரண்டினுக்கும்
பாங்காகமீந்திருந்த பாலனத்தைத்தான்கொடுத்து
சீனியிருபரிக்குஞ் சேர்க்கையுடனிருக்கித்
தானுமுடைவாளெடுத்துத் தன்னிடையிலேயிருக்கி
கச்சதனையெடுத்துக் கட்டினானம்மானை
அச்சணத்தில்மந்திரியு மசுவமிரண்டினையும்
சேர்க்கைபிரியாமல்முன்பின் செல்லாமற்செல்வதற்கு
வார்க்கொண்டவைகழுத்தில்வகையாகத்தான்பிணைந்து
வாயுவுவேகிதனில் மந்திரியுந்தானேறி
தூயமனவேகியங்கே சோடுபிரியாமல்வா
தேசியிரண்டினுக்குஞ் செவியிலேமந்திரத்தைப்
பேசியாகாயவழி பிரியாமலேநடத்தி
சீரானசெல்வஞ் செழித்ததங்கமாபுரிக்கு
நேராகவந்து நிலத்திலோர்பாலிரங்கி
நடத்திப்பரியையந்த நகரத்தின்வீதியிலோர்
இடத்திலேதானிருக்கு மேந்திழைபூவாணிபச்சி
வீட்டினருகில்வந்து வெம்பரியைவிட்டிறங்கி
மாட்டுமுளையிலந்த மாவிரண்டுங்கட்டிவைத்து
சென்றானவள்மனையிற் சேயிழைபூவாணிபச்சி
அன்றாசையாயிவனை ஆசனத்திலேயிருத்தி
செல்லுமிடத்தினுக்குச் சென்றுநீர்வந்தீரோ
சொல்லுமையாவென்று சுரிகுழலாள்கேட்டவுடன்
மந்திரியும்தானுரைப்பான் மங்கையரேகேளுமென
இந்தநாளிங்குவந்தே னின்னஞ்சிலவூர்க்கும்
எனதுசொந்தக்காரியமா யேகிவரவேண்டும்
உனதுதவிவேண்டுமதற் குண்மைநான்சொல்லுகிறேன்
நான்போய்வருமளவும் நங்காய்குதிரைகளைத்
தான்பார்த்துவாவென்று தாயேயடைக்கலங்காண்
திரும்பினானிங்குவரச் செல்லுமோராண்டளவும்
வருஞ்சிலவையிப்பொழுதே வாங்கிக்கொள்ளம்மணியே

என்னவுரைத்தாளதனுக் கிணங்கிபூவாணிபச்சி
தன்னுடையநாயகர்க்குந் தானுரைத்துச்சம்மதித்தாள்
வருடமொன்றுக்குள்ளே வராகன்முழுதுங்கொடுத்துப்
பிரியமுடனவர்க்குப் பின்னுமினுமுங்கொடுத்து
வந்தகுதிரைகளை வசப்படுத்திக்கொள்ளவென்று
புந்தியுடன்சொல்லிப் புறப்பட்டானம்மானை
புத்திசிகாமணியும் பொன்னகரைவிட்டேகி
அத்தலத்துக்கப்பா லடுத்தவொருதலத்தில்
தவவேடம்பூண்டுபெருஞ் சன்னசிபோலாகிச்
சிவனேகதியெனவே தேசாந்திரம்போக
காவிவஸ்த்ரம்வாங்கியவன் காசாயமுந்தரித்து
மேவினன்காசிமுதன் மிகுதீர்த்தயாத்திரைக்கு

இராஜகுமாரன் மந்திரியை நினைத்தல்.

காசிநதியாத்திரையைக் கருதியவன்சென்றகதை
பேசினேன்பின்பு பெருமானுக்குற்றதெல்லாம்
சொல்லமனதுந் துணிந்தேன்கானம்மானை
எல்லிபகலறியா வேழடுக்குமாளிகையில்
பூலோகரம்பையுடன் புவனேந்திரவேந்தும்
மாலோடுகூடியங்கே வாழ்ந்திருந்தநாளதனில்
நாகந்தனிலெடுத்த நாகரத்னஞ்சீவரத்னம்
ஆகுமணிகளையு மமைந்ததங்கக்கம்பிதனில்
கோர்த்தெடுத்துப்பின்னிக் குலவுகணையாழியதாய்ச்
சேர்ந்ததன்கைவிரலிற் சிறப்பாயணிந்துகொண்டான்
வாய்ந்தபூலோகரம்பை மாதரசிமன்னவனும்
பாந்தமுடனேகலவி பாராட்டிவாழ்ந்திருந்தார்
ஐந்துகணைமன்மதனு மழகுரதிபோலும்
இந்திரனும்விண்ணுலகத் திந்த்ராணியும்போலும்
மாநாககன்னியுடன் மருவருச்சுனன்போலுந்
தேனார்மலர்த்திருவுஞ் செங்கண்மாலும்போலும்
சிவனுங்கூடும்போலுஞ் சேர்க்கைபிரியாமல்
மேவிக்கலந்திருந்தார் வேந்தனுமவ்வேந்திழையும்

கூடிமருவுவதுங் கொஞ்சிவிளையாடுவதும்
பாடுமின்சக்ஞானம் பாடிப்படிப்பதுவும்
வீணைவாசிப்பதுவும் மேவிச்சுகிப்பதுவும்
வாணியிவளாகுமென்று மன்னவன்கொண்டாடுவதும்
இந்தவிதமாக இவர்பொழுதுபோக்கியங்கே
சிந்தைக்களிப்புடனே சேர்ந்துமேவாழ்ந்திருந்தார்
கன்னிவிரகக்கடலிற் கருத்தென்னுங்கப்பலதை
மன்னன்கவிழவிட்டு மந்திரியைத்தான்மறந்தான்
குற்றமற்றமந்திரியுங் கூடவந்தானென்பதனைச்
சற்றும் நினைக்கவில்லை தார்வேந்தனம்மானே
வாய்த்தமதிமந்திரியை மறந்துவிட்டமன்னனுக்கு
சார்ந்தபரிமேல் நினைப்புத் தானெப்படிவருமோ
தனக்குரியமந்திரியைத் தானேறியபரியை
மனத்தில்மறந்தரசன் வாழ்ந்திருக்கும்நாளதனில்
அங்கோர்வனத்தி லவர்பொழுதுபோக்குதற்காய்ச்
சிங்காரமண்டபத்திற் சேர்ந்துமணியாசனத்தில்
வாசமுடன்மேவியந்த மங்கைக்கரசியரும்
ராசனுமாடுசது ரங்கவிளையாட்டதனில்
இந்தமின்னாள்மன்னவனே யென்காயாலுமது
மந்திரிக்குமோசம் வரும்பாருமென்றுரைத்தாள்
மந்திரிக்குமோசமென்ற வார்த்தையினைக்கேட்டரசன்
சிந்தைமயங்கித் திண்டின்மேற்சாய்ந்துவிட்டான்
மூர்ச்சையுடன்சாய்ந்தான் மூச்சடங்குந்தன்மைகண்டு
மாச்சரியமென்னவிங்கே வந்ததென்றுமங்கைநல்லாள்
ஆலோசனைசெய் தரசனிவன்கூடவங்கே
மாலாயமைச்சொருவன் வந்திருக்கத்தான்வேணும்
வந்தவிடத்திலந்த மந்திரியும்மன்னவனை
எந்தவிடத்திற்பிரிந்தோ எவ்விடத்திற்கேகினனோ
அவனைப்பிரிந்துநம தாசையினாலிவ்வரசன்
கவனமறந்துநம்மைக் கலந்தணைந்ததாகுமிதை

அல்லாதிவர் மூர்ச்சை யாவதற்குவேறுமில்லை
பொல்லாங்குநாமும் புகன்றதாயொன்றுமில்லை
என்றுபூலோகரம்பை யெண்ணியுமங்கேதுசெய்வாள்
பொன்றினவர்போன் மூர்ச்சைபோய்கிடந்தமன்னவனை
மார்போடெடுத்தணைத் துவதனத்திற்பன்னீர்தெளித்து
சீராய்விசிறிகொண்டு திருமுகத்தில்தான்வீசி
முதுகுதடவி முகந்துடைத்துக்கால்வருடிப்
பதிவானமூச்சுவரப் பண்ணினாள்பெண்ணரசி
இன்னியவன் மூச்சுவிட்டு சோபந்தெளிந்தவுடன்
மன்னவனுங்கண்விழித்து மந்திரியேயென்றெழுந்தான்
எழுந்தானெழுந்துமன மேங்கிப்பரதவித்தான்
அழுந்தாத்துயர்க்கடலி லழுந்திபுலம்பலுற்றான்
சிந்தைபடியமுது தேடிவரப்போயிருந்த
மந்திரியேவுன்னை மறந்துமிருந்தேனே
அன்னத்தைக்கொண்டுவந்தங் கடுத்தபூங்காவனத்தில்
என்னைக்காணுமல்மன மெப்படித்தானேங்கினையோ
பாம்பினது துண்டமதைப்பட்சிகொண்டுபோகுமெனில்
தேம்பிரத்தங்கண்டரசு செத்தானென்றெண்ணினையோ
என்னுயிருமாய்ந்துவிட்ட தென்று நீ நிச்சயித்து
உன்னுடையவுயிரை ஒருநொடியில்மாய்ப்பாயே
உன்னைப்பிரிந்திங் குயிர்வாழ்ந்தேனையோவென்
றன்னைப்பிரிந்து நீ க்ஷணமிருக்கமாட்டாயே
தேடியலைந்தாயோ சிந்தைமிகநொந்தாயோ
ஓடியலைந்தாயோ உயிரைவிட்டுக்கொண்டாயோ
மாய்ந்தார்பிழைத்திடச்செய் மந்த்ரவித்தை நீபடித்தும்
மாய்ந்தாயென்றுனையார் வரவழைக்கப்போறார்காண்
சீவனைத்தான்விட்டாயோ தேர்வேந்தன்சென்றவிடம்
மேவிவிசாரிப்போமென்று வேறிடத்திற்சென்றாயோ
பொய்யாதவாசகனே புத்திசிகாமணியே
அய்யோவுனைப்போ லறிவுகெட்டார்யாருமுண்டோ

மாலான நாகமுமென் மதியைவிழுங்கினதால்
ஆலோசனைவிட் டமச்சேயுனைமறந்தேன்
காமத்தால்ன்றோ கலக்கமுற்றான்ராவணனும்
காமத்தாலிந்திரனுங் கண்ணாயிரம்படைத்தான்
ஆனதனாற்காமமென்னை யறிவழித்துபோட்டதையோ
ஞானமனுவுமில்லா நானுரைநொந்துகொள்வேன்
தெய்வமேநானினியென் செய்வேனெனப்புலம்பி
வையகத்தரசன்மகன் வாடினனம்மானை
வாடியமன்னவனை மாதுமனந்தேற்றி
ஓடியகண்ணீரை உருமால்கொண்டே துடைத்து
மந்திரியேயென்றுசொல்லி வருந்துகிறீர்மன்னவனே
மந்திரியாருமுடனே வந்தவர்களெத்தனைபேர்
எந்தவிடத்திலிருந் திவ்விடத்திற்வந்தீர்கள்
சொந்தநகரமெது துணையாகவந்தவரார்
கூடவந்தமந்திரியைக் கோமான்மறப்பதுண்டோ
நாடியிங்கேநீரும்வந்து நாலுநாளாகுதையா
நடந்தவகையெல்லாமென் னுயகனேசொல்லுமென்று
மடந்தையருங்கேட்டவுடன் மன்னனவனுரைப்பான்
மாதருக்கெல்லாமரசே வளர்புவனாம்பையென்னும்
காதற்கடலேயென் கதையெல்லாஞ்சொல்லிடக்கேள்
புவனேந்திரனெனுமோர் பொன்னகரமந்நகர்க்குத்
தவமேந்திவரசன் தாலப்புரந்தரனும்
அந்தவரசனுக்கங் கைம்பதுபேர்மந்திரிகள்
மந்திரிக்கெல்லாந்தலைவன் மால்சுமந்திராகரனும்
மன்னனுக்குநான்பிறந்தேன் மந்திரிக்கோர்மகனுண்டு
பின்னவனும்நானும் பிரியாச்சிநேகிதர்காண்
என்பேர்புவனேந்திர னெனதுமனதுக்கிசைந்த
பொன்போலுமந்திரிபேர் புத்திசிகாமணியாம்
வயதுபன்னிரண்டினுக்குள் வகையானகல்வியெல்லாம்
நயமாகவேபடித்தோம் நாங்களிருபேரும்

மாண்டார்பிழைத்து வரச்செய்யுமந்திரவித்தை
பூண்டானெனப்படித்தான் புத்திசிகாமணியும்
நாங்களிருவோருமொரு நாளும்பிரியாமல்
தீங்கொன்றும்வாராமற் சேர்ந்திருக்கும்நாளையிலே
நாட்டுவளம்பார்த்து நாங்கள்வரவேணுமென்று
தாட்டீகமன்னன் சமுகத்திற்போய்க்கேட்டோம்
மன்னனெங்கள்வார்த்தையினை மறுத்துவிட்டாரப்போ
தன்மையாய்மந்திரிகள் தார்வேந்தன்தன்னிடத்தில்
எந்தவிதமு மிவர்மனம்போற்செய்யுமென்று
தநதிரமாயுத்திரவு தான்வாங்கித்தந்தார்காண்
உத்தரவுபெற்ற வுடனேபயணம்வைத்தோம்
சித்தமுடன்புத்தி சிகாமணியும்நானுமங்கே
பொக்கிஷத்தில்வேண்டும் பொருள்களையுந்தானெடுத்து
கைக்கிசைந்தமந்திரவாள் கதித்தவுடைவாளெடுத்து
வாயுவிவேகி மனவேகியென்றுரைக்குந்
தூயபரியிரண்டுஞ் சோடாதனப்பரியில்
மனவேகியில்நானும் மற்றதனில்மந்திரியுங்
கனவேகமாய்க்குதிரை காதில்விஞ்சைமந்திரத்தை
மேவியுரைத்தோமுடனே வெம்பரியாகாயவழி
தாவியேகீழ்த்திசையைத் தானோக்கிச்சென்றதுகாண்
காம்போஜதேசமுதற் கனதேசமும்பார்த்துப்
பாம்போடுவாழுமிந்த பசுஞ்சோலைசேர்ந்தோங்காண்
சோலைக்கருகில்வந்து தூண்டுபரியைக்கட்டி
மாலைப்பசுந்தருவில் வாம்பரியைக்கட்டிவைத்தோம்
பூங்காவனம்பார்த்து போகின்றவேளையிலே
அங்கோர்தடாகமதையவ்விடத்திற்கண்டுகொண்டோம்
கண்டோந்தடாகமதில் கனகப்படித்துறையும்
விண்டோய்ந்தகங்கையென மிருதுவுள்ளதண்ணீரும்
அந்தப்புனலும் அழகுபடியும்பார்த்து
மந்திரியைநோக்கியொரு வார்த்தைநான்சொன்னேன்

சம்பாவமுதுஞ் சமைத்தபுளியோதரையும்
கும்பாங்கறிவகையுங் கொண்டுவந்தாலிப்படியில்
வைத்துப்பொசித்தால் மனத்திருப்தியாகுமென்று
புத்திசிகாமணிதான் புகன்றமொழிகேட்டவுடன்
அன்னமதுதான்வாங்கி யடியேன்வரும்வரைக்கும்
மன்னவனேபூங்கா வனத்திலிருமென்றுசொல்லி
சென்றானமைச்சன் திரும்புமட்டும்நான்சோலை
குன்றாவளம்பார்த்துக் கொண்டிருக்கும்வேளைதனில்
சேயிழையேயுன்னிடத்திற் சேர்ந்திருந்தபாம்பதுதான்
காயுஞ்சினத்துடனே கடிக்கவரக்கண்டேனே
வெட்டினேனப்பால் விளைந்தகதையெவ்வளவுஞ்
சட்டமுடன்முன் னுனக்குத் தானுரைக்கநீதெரிவாய்
பாம்பிரத்தமென்மேலே பட்டதனைச்சுத்திசெய்ய
நான்படிக்குள்வந்து நின்றேன் நாகரத்னந்தன்னுடனே
வந்தவெனைக்கண்டுபுனல் வாவியின்கீழ்போய்விலக
அந்தவழிவந்தலவோ அணங்கேயுனையடைந்தேன்
மின்னேநானன்றுமுதல் மெய்ம்மறந்தேன்மந்திரியை
என்னாலமைச்சனங்கே என்னதுயர்பட்டானோ
மானார்மயக்கின் வசப்பட்டார்புத்தியற்றுப்
போனாரென்றேதுணிந்து புகன்றார்பெரியோர்கள்
பூங்குயிலேயென்று புவனேந்திரனுரைத்துத்
தாங்கவொண்ணாத்துன்ப சமுத்திரத்தின்மூழ்கிநின்றே
ஒருவேளைமந்திரியங் குள்ளமலர்க்காவிலின்னம்
வருவேனோவென்றுசொல்லிவந்திருந்தாலுமிருப்பான்
பார்த்துவருவோமென்று பாவையுடன்மன்னவனும்
ஆத்திரமாய்ப்போய்ப்பார்த்தா ரந்தப்பூங்காவனத்தில்
பூங்காவனமும் புதியமலர்ச்சோலைகளும்
பாங்காவிடங்களெங்கும் பார்த்தாரிருவர்களும்
பார்த்தார்கள்மந்திரியும் பரிகளையுங்காணமல்
வேர்த்தாருடலும் வெதும்பிமனம்நொந்துநின்றார்.

கட்டமுதுகொண்டுவந்து கனிவாயெனைத்தேடி
இட்டமுடனேநா னிங்கிருக்கக்காணுமல்
எங்கியலைந்தானே எவ்விடத்திற்சென்றானே
தாங்காத்துயருடனே தன்பதிக்குச்சென்றானே
ஜீவனைவிட்டானே தேசாந்திரியானானே
பூவுலகெல்லாந்தேடிப் போனானேமந்திரியும்
இன்னபடியென் றெனக்கறியக்கூடவில்லை
கன்னியரேயென்று கலங்கினான்மன்னவனும்
மன்னன்மதிமயங்க மங்கைநல்லாளே துரைப்பாள்
இன்னாள்வரையிலிவ னிங்கிருக்கப்போறானே
பாங்குடையமந்திரியும் பார்வேந்தே நீருமிங்கே
நீங்குதற்குக்காலம்வந்து நேர்ந்ததுமுன்னாள்விதிகாண்
அந்நாள்விதியா லவனைவிட்டு நீர்பிரிந்தீர்
இன்னாள்வருந்துவதா லினிவருவதொன்றுமில்லை
ஊழிவினையா லுமைவிட்டவன்பிரிந்தான்
பாழிலே நீரேன் பரிதாபமிஞ்சுகிறீர்
ஆங்காலவெப்பொருளு மாகுமதுபோலெதுவும்
போங்காலம்வந்ததென்றாற் போமென்றார்பொய்யலவே
ஆனதனாலெங்க ளரசேமனத்துயரம்
ஏனினிமேல்விட்டுவிடு மென்றாளவ்வேந்திழையாள்
மின்னனையாள்சொல்மருந்தால் வேந்தன்மனந்தேறி
மன்னனுமங்கையும்பொன் மாளிகைபோய்ச்சேர்ந்தார்
துன்பத்தை நீக்கித் துரைமகனுந்தோகையரும்
இன்பக்கடல்மூழ்கி யிருந்தார்களம்மானை
காமத்தேனுண்டு களித்தந்தக்காரிகையும்
சேமத்தேர்மன்னவனுஞ் சேர்ந்திருக்கும்நாளதனில்
பூமிபுரக்கும் புவனேந்திரனொருநாள்
காமரசவல்லிபெற்ற கன்னிகையைப்பார்த்துரைப்பான்
மாளிகையினுள்ளே மறுமுகம்பாராதிருந்தோம்
வேளிரதிபோலேநாம் வெளியேறிமீண்டுவந்தால்

தேகசவுக்கியமுஞ் சித்தந்திருப்தியுமுண்
டாகுமெனவுரைத்தா னதைக்கேட்டவளுரைப்பாள்
நிலமைபிரிந்துசென்றால் நேரிடுங்காண் பொல்லாங்கு
கலகம்விளைவதற்குக் காரணமுமுண்டாகும்
சற்பம்வெளியேறியல்லோ தன்னுயிரைவிட்டதுகாண்
எப்போதும்நாமிங் கிருப்பதேயல்லாமல்
வெளியேறிப்போய்வருதல் வீண்துன்பமுண்டாகும்
எளியேன்சொல்கேளுமென வேந்திழையாளுந்தடுக்க
மெய்தானணங்கே விளம்பியதானாலுமந்தப்
பொய்கைவிட்டுவேறோர் புறத்திலும்நாம்போரோமோ
மண்டபத்துச்சோலையினும் வசித்துவிளையாடி
கொண்டுடனேவந்திடலாங் கோதையரேயதற்குள்
என்னபகைவந்துவிடும் ஏதும்வராதென்றுசொல்லி
கன்னிமனந்தேற்றியந்தக் காவலனுங்கன்னிகையும்
மாளிகைவிட்டேகிமைய மண்டபத்துச்சோலையினும்
வேளுமிரதியும்போல் விளையாடிக்கொண்டிருப்பார்
பூலோகரம்பையுடன் புவனேந்திரனொருநாள்
மாலோடுகூடிமைய மண்டபத்தில்வந்திருந்து
காவிற்குயிலோசை காதுகுளிரக்கேட்டு
மேவிச்சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தார்
இவர்விளையாடியங்கே யிருக்குமந்தவேளைதனில்
புவியில்நடந்தகதை புகலுவேனம்மானை

விஜயநகரத்தரசன் வேட்டைக்குவந்து காண்குதல்.

காவலனுங்காரிகையுங் களித்துவிளையாடுமந்த
வாவிதனக்கு வடகிழக்கதாந்திசையில்
இருக்குவ்விஜயநக ரென்றுரைக்குமோர்நகரம்
விரிக்கிலந்தமாநகர்க்கு விஜயதரனும்வேந்தன்
மாவேந்தனங்கொருநாள் மலைவேட்டையாடவென்று
தேர்வேந்தரைஜெயிக்குஞ் சேனையுடைசூழ்ந்து
காட்டிற்புகுந்து கரிபுலிமான்வேங்கைபன்றி
வேட்டையெல்லாமாடி வெயிலாலுடல்வாடித்

தாகத்தினாலே தயங்கிமரத்தடியிற்
சோகத்துடனிருந்து சொல்லுவான்மந்திரிக்கே
தரிக்கமுடியாது தண்ணீர்த் தாகமெங்கேயானாலும்
இருக்குமிடந்தேடி யெடுத்துவரவேணுமென்றான்
மன்னனுரைத்தமொழி மந்திரியுந்தான்கேட்டான்
உன்னிவளர்ந்தமலை யொருகுமட்டின்மீதேறி
பார்க்கும்பொழுதிலங்கே பரவுகன்னிமூலையிலே
கார்க்குலங்கள்சூழ்ந்து கவியுமலர்ச்சோலையொன்று
கண்டானச்சோலைவளங் கதிப்பாகக்காணுதவில்
உண்டாயிருக்கும்நீ ரோடைகிணறுகுமென்று
சீலமுடனந்தத் திசைகுறித்துத்தானிறங்கிக்
கோலப்பரியேறிக் குடிசெம்புகைபிடித்து
சென்று நீர்கொண்டுவந்து சேருகிறேனென்றுசொல்லி
நின்றசிலபேரையந்த நிருபனருகில்வைத்து
கதியாப்பரிநடத்திக் கானகமெல்லாங்கடந்து
எதிரேயச்சோலை யிருக்குமிடத்தில்வந்து
பார்த்தானச்சோலையினோர் பக்கத்தில்திவ்வியமாய்
நீர்த்தான்பெருகி நிறைந்திருக்கும்வாவிதனை
தேசிவிட்டுக்கீழிறங்கிச் சேர்ந்தான்குளத்தினுள்ளே
நேசமுடன்தாகவிடாய் நீங்கத்தண்ணீர்குடித்துப்
பிடிசெம்பில்நீரைமொண்டு பின்புகரையேறி
நெடியக்குளக்கரையில் நின்றானவ்வேளையிலே
வாவிக்குள்ளேமைய மண்டபத்திலேகமலப்
பூவுக்குள்வீற்றிருந்த பொன்போலோர்பெண்கொடியும்
மாரனையும்வென்று வடிவழகினால்மிகுந்த
வீரனுமங்கேசேர்ந்து விளையாடத்தான்பார்த்தான்
தேவியுமன்னவனுஞ் செய்விளையாட்டதனால்
வாவிதனில்நீரெடுக்க வந்தவனைக்கண்டார்கள்
மன்னன்குமாரனிவன் மங்கையுமோராஜகன்னி
என்னமதிதானமைச்ச னிரதியிவட்கொப்பார்காண்

மெய்யழகுக்கொப்பாயிரம் மேதினியிற்கண்டதில்லை
தையலுக்குவாய்ந்த தலைவனுக்கொப்பாருமில்லை
ஆனாலிவளையிவ னாருமறியாதபடி
தானேகவர்ந்துவந்த சாடைபோற்றோணுதிங்கே
நல்லதுகண்டாலுலகோர் நாயனுக்கென்பாரதுபோல்
மெல்லியரைநம்முடைய வேந்தனுக்குச்சேர்த்திடலாம்
வாவிக்குள்ளேயிருக்கும் மங்கைதனைச்சேனையுடன்
காவலனைக்கூட்டிவந்து கைப்பற்றவேணுமென்று
வேகமிகுந்தபரி மேலேறிப்போய்ச்சேர்ந்து
தாகமுள்ளமன்னனுக்குத் தண்ணீரைமுன்கொடுத்தான்
ஆசாபாசத்துடனே யாசனெழுந்திருந்து
கூசாவிநீரெடுத்துக் குடித்துவிடாய்தீர்த்தான்
தாகவிடாய்தீர்ந்து தனித்திருந்தமன்னனுக்கு
மோகவிடாயையங்கே மூட்டிவிட்டான்மந்திரியும்
வேந்தருக்குவேந்தே விஜயநகர்க்கரசே
வாய்ந்தவிஜயரே மன்னவனேகேட்டருள்வீர்
தங்களுக்குநீரெடுக்கச் சார்ந்தேனொருகுளத்தில்
அங்குநான்கண்டவந்த ஆச்சரியமென்னசொல்வேன்
வாவிப்புனலெடுத்து வந்துபடித்துறையில்
மேவிநின்றுகாணஒரு மின்னல்தெரிந்ததங்கே
மின்னலங்கேவந்த விதமென்னவென்றுசொல்லி
என்னிரண்டுகண்ணு மிமையாமற்பார்த்துநின்றேன்
தெப்பக்குளம்நடுவிற் சேர்ந்தமையமண்டபத்திற்
கற்பகவல்லிக்கொடிபோற் கண்டேனோர்பெண்ணரசை
செந்திருவோநாமகளோ தேவரம்பையோரதியோ
கந்திருவப்பெண்ணனங்கு காசினியோர்கன்னிகையோ
யாரோவிவளென் றதிசயித்துநான்மயங்கித்
தாரோதியிந்தத் தரைமாதென்றேமதித்தேன்
பூவேந்தர்போற்றும் புதல்வியிவளல்லாமல்
தேவேந்திரன்முதலோர் தேவியல்லவென்றறிந்தேன்

பூவுலகப்பெண்களிந்தப் பூவையழகுகண்டால்
ஆவலுடனுண்வடிவுக் காசைகொள்ளார்யாருமில்லை
வாணியிந்தமங்கை வடிவழகைக்கண்டல்லவோ
நாணிமலரோனுடைய நாவிலேபோயொளித்தாள்
சுந்தரமாமழகை தொடையழகுகண்டல்லவோ
அந்தரமாய்ப்போனா ரம்பையரெல்லோருமையா
மா இவளைக்கண்டாள்மால் வசப்படுவாரென்றுமலர்
கோதையவன்மார்பிற் குடியாயிருந்தனள்காண்
தேமலழகிபின்னே ஜெனிப்பதைமுன்னோர்ந்தலவோ
பூமிதனைப்பிளந்து போய்மறந்தாள்ஜானகியாள்
தத்தைமொழியாளழகு தன்னைமொத்தமாயுரைத்தேன்
மூத்துநகையாள்வடிவை முறையாய்ச்சொல்லக்கேளும்
ஆமைபுறவடிக்கொப் பாமென்றுகற்றுணர்ந்தோர்
தாமெல்லாஞ்சொன்னாற் சமானமினியேதுரைப்பேன்
செம்பவளத்துண்டைச் சிறுவிரலென்பேனுகிற்
பம்புநகம்பத்தும் பதித்திருந்தாலொப்பாகும்
குதிக்குஞ்சிறுபாலர்கையாற் கொண்டிருக்கும்பந்துதனை
குதிக்குநிகராகுமென்று கூறுவதுங்குற்றமன்றோ
புள்ளடிவைத்தாற்சங்கிப் போகாவனிச்சமலர்
உள்ளடிக்கொப்பாமென் றுரைத்தல்பழுதாய்முடியும்
கணைக்காற்பரடிரண்டுங் கட்டுதராசன்றிமற்றோர்
இணைக்கார்புணைபட் டெடுத்துரைப்பார்மன்னவனே
மின்னாசிதன்கணைக்கால் மேவுவராற்கன்றென்றுஞ்
சின்னமென்றுஞ்சொல்லிலது சின்னமன்றிவேறிலையே
முழங்காலலவனென்று மொழிந்திடுவேனுகிலது
பழங்கால்வயல்வளையிற் பாயிலதுநேராமோ
வாழையிளந்தண்டை மதயானைக்கையதனை
ஏழைதுடையென்றிரைந்தா லிருப்புதங்கமொப்பாமோ
அவளுக்கிசைந்தவல்கு லாய்ந்துபுலவோருரைத்த
உவமைக்குவமையதா யுள்ளிருக்குமென்றுணர்ந்தேன்

பிடியுந் துடியுமந்தப் பெண்ணிடையென்பேன்சிலரால்
அடியும்பிடியும்வந்தால் யானதற்கிங்கென்னசெய்வேன்
கொங்கைமதயானைகட்டக் கொண்டமுளைச்சங்கிலியே
மங்கைமயிரொழுக்கா மற்றொன்றுமொவ்வாதே
ஆலிலையேயன்றி யணிவயிற்றுக்கொப்புரைக்க
மேலிலையென்றாலதற்கு வேறேநானேதுரைப்பேன்
உந்திமகிழம்பூவென் றுரைப்பேன் அதுபூத்துப்
பிந்திவாய்தும்பிவிட்டாற்பேசவுந்தான்வேறுமுண்டோ
பொற்படியும் நீர்த்துறையும் போலுமடிப்பெனலாம்
எப்படியும்நானுமவை யியம்பாமற்றீராதே
கொங்கைக்கரும்பு குமிழிசிமிழ்சூதுகிண்ணந்
தங்கக்குடங்கும்பை தாளமிளநீர்கவசம்
பம்பரம்பொன்வெற்புப் பருத்தமதயானைக்
கொப்புரத்னச்செப்புமணிக் கும்பஞ்சகோரமுடன்
சொல்லியவீரெட்டுமின்னுஞ் சொல்லாவுவமைகளும்
பல்விதமாகப்புலவோர் பகர்ந்தார்பொதுவாக
அத்தனைக்குங்குற்றம் அவரேசொல்வாரானல்
தத்தைமொழிமங்கை ஸ்தனத்துக்கிணையேதோ
கொந்தார்மலர்க்குழலாள் கொங்கைமுகக்கண்ணதனைச்
செந்தாமரையரும்பிற் சேர்ந்திருக்கும்வண்டெனலாம்
பங்கயத்தினுள்ளே பதுங்காதிருக்குமெனிற்
செங்கைவிரலுக்குச் சிணைக்களிறுநேராகும்
தண்டிவருடிச்சுகத்தைத் தருமுகிற்குப்பல்கனியுங்
கிண்டிக்கிளறிவிடுங் கிளிமூக்குநேராமோ
செங்காந்தள்செங்கையென்றார் செந்தாமரைரேகை
சங்காரும்ரேகையதிற் சார்ந்திருக்கமாட்டாதே
முன்கையைவீணையென்று மொழிந்தார்சிலபேர்கள்
என்கருத்துக்கவ்வுவமை யேதுமிணங்கவில்லை
கன்னலைத்தோளென்றாற் கழுத்தடிதித்திக்காதே
இன்னுமதற்குவமை யேதென்றெடுத்துரைப்பேன்

தேனோசருக்கரையோ சீனியோமுக்கனியோ
மானேர்விழியாள் வசனமொன்றுதானுரைப்பேன்
கழுத்துக்கிணையாகக் கமுகதனைச்சொல்வதென்றால்
அழுத்துங்குறியை யதுமறக்கமாட்டாதே
முல்லையரும்பு முருந்துவெள்ளைமுத்தையன்றிப்
பல்லையெதற்கிணையாம் பகரலாம்பார்வேந்தே
ஆம்பலுக்குள்முத்திருந்தா லவள்வாய்க்கிணையாகும்
நாம்பவளமென்றிதழை நாட்டிலமுதூராதே
நாசியினைச்செண்பகப்பூ நாமிணையென்போமாகில்
வாசமுடனேவருஞ் சுவாசமதற்கில்லையே
மாரன்கணையுடனே வாளெடுத்துத்தீட்டுதற்குச்
சேருமொருசாணையென்று செப்பலாங்கன்னமதை
நேசமுடன்பார்த்தவர்கள் நெஞ்சூசலாடுவதால்
ஊசலன்றிவேறுவமை யொவ்வாதவள்செவிக்கு
சாருமுகத்தினுக்குத் தாமரைப்பூதோற்றலவோ
நேரும்வனத்தினுள்ளே நின்றுதவஞ்செய்வதுகாண்
வேலோகடலோ விடமோவடிவாளோ
சேலோபிணைவிழியோ செந்தாமரைமலரோ
வாய்ந்தவரிவண்டோகூர் வாளியோமாவடுவோ
ஏந்திழையாள்கண்களெதுவென்றெடுத்துரைப்பேன்
வில்லேகரும்புருவம் வெண்பிறையேநெற்றியென்று
சொல்லேநல்லாள்வேறு சொல்லும்பொருளுளதோ
கொண்டன்மலைவாயலையுங் கூந்தற்பனையலரும்
வண்டுசிறைபட்டுழலும்வார்ந்தகொன்றைக்காய்சிதறும்
சோலைசருகாயுதிருந் துண்டுதுண்டாஞ்சைவலமும்
மாலைக்குழற்கினியான் வகுத்தெதையொப்பாயுரைக்க
அன்னத்துக்கெல்லாந்தன் னழகுநடைகற்பிக்க
வன்னமயிலக்குளத்தில் வந்திருந்தாளென்றிடலாம்
தேவர்கடைந்தெடுத்த தெள்ளமுதேமேனியெனப்
பூவிலயன்செய்து புனைந்துவைத்தபாவையவள்

மாதினழகை மதித்துரைக்கவென்னாலே
ஆமோவச்சேடனுக்கு மறையமுடியாதே
இந்தமடமயிலை யெப்படியோவங்கொருவன்
சொந்தமாய்க்கொண்டு துணையிருக்கநான்பார்த்தேன்
கன்னியழகுக்கவனுங் காலழகுமொவ்வான்காண்
உன்னழகுகண்டா லுடன்படுவாள்மன்னவனே
வாவிநடுமண்டபத்தின் மங்கையிருப்பதினால்
தாவியெடுப்பதற்குச் சகாயமின்றிவந்தேன்காண்
எங்குமவர்க ளெழுந்தோடிப்போகுமுன்னே
பொங்குபெருஞ்சேனையுடன்போய்ச் சூழவேணுமென
மந்திரிசொற்போய் நுழைந்த வழியேமதன்வாளி
யைந்திலொருநான்குபுக அரசன்மையலாகிவிட்டான்
காமன்றொடுத்தமலர்க் கணையாற்கருத்தழிந்த
பூமன்னவனுளத்து புகுந்துவிட்டாள்பொற்கொடியாள்
நல்லாளைக்காணுதற்கு நமதுபெருஞ்சேனையெல்லாஞ்
செல்லும்வழிகாட்டிச் செல்லென்றான்மந்திரியை
மன்னனுரைகேட்டு மந்திரியும்வாம்பரிமேல்
முன்னேறப்பின்னேறி மொய்த்ததுசேனையெல்லாம்
சேனைதிரண்டுவரத் தேர்வேந்தன்வாம்பரிமேல்
மானைவிரும்பி வரும்வேங்கைபோற்புகுந்தான்
மான்வேட்டையாடவந்த மன்னனுக்குநல்லகன்னி
மான்வேட்டைவாய்த்ததென்று மகிழ்ந்தார்சிலவீரர்
பாய்ந்துசெல்லுந்தேசிகனைப் பாத்திந்தவாம்பரியில்
வேந்தனைப்போலவிரக மிஞ்சியதோவென்றுரைப்பார்
அத்தருணம்வாவி யடுத்ததென்றுசேனையெல்லாஞ்
சத்தமில்லாமல்வாத் தான்செய்தான்மந்திரியும்
வீரர்புடைசூல வேந்தனும்மந்திரியுஞ்
சேராவனங்கடந்து சேர்ந்தார்குளக்கரையில்
வாவிக்கரையருகே வந்துநின்றமன்னவனும்
பூவைநடுவேயிருக்கும் புதுமைதனைப்பார்த்தான்

கார்க்கடலி னூடே கதிருதயமான துபோற்
பார்க்கின்றகண்களிக்கப் பார்த்தான்விஜயதரன்
மங்கைவடிவழகின் மந்திரியங்கேநூறு
பங்கிலொருபங்கு பகர்ந்திருக்கவே ணுமென்றான்
மடந்தையிவளையொரு மனிதன்வந்துகாத்திருக்க
உடந்தைதானேதுமிவர்க் குண்டுமோவென்று நின்றான்
எவராயிருந்தாலு மென்னவிந்தப்பெண்கொடியைக்
கவராதுபோவேனோ காரியமும்நன்றுமோ
ஆரோவிவனை யடித்துத் துரத்திவிட்டுக்
காரோதியைநமது கைப்பற்றிச்செல்வமென்று
சேனைகளுக்குத்தரவு செய்தான்விஜயதரன்
மானுளிருக்குமந்த வாவிதனைச்சூழ்ந்துகொண்டார்
வாவியைச்சுற்றி வளைந்ததங்கேசேனையெல்லாம்
காவலன்மந்திரியுங் கைநீட்டி நின்றார்கள்
இந்தப்படியா யிவர்கள்பெருஞ்சேனையெல்லாம்
வந்தக்குளக்கரையை வளைந்துகொண் டிருப்பதெல்லாம்
கோதையுமன்னவனுங் குலவுவிளையாட்டதனால்
ஏதுந்தெரியாம லிருக்குமந்தவேளைதனில்
ஆரடாமங்கையுட னங்கிருப்போன்மண்டபத்திற்
சேரடாவிங்கெனவே சினந்துரைத்தான்மந்திரியும்
இடியிடித்தாற்போல யிவனுரைத்தவார்த்தைதனைப்
படியரசன்கேட்டுப் பயிலும்விளையாட்டைவிட்டு
கண்டான்புவனேந்த்ரன் கனசேனைக்கூட்டமதை
வண்டார்குழலணங்குவதனத்தைப்பார்த்துரைப்பான்
ஏதோவெகுதளங்க ளெவ்விடத்துஞ்சூழ்ந்துகொண்டு
மாதேநமைப்பிடிக்க வந்ததுபோற்றோணுதுகாண்
மின்னரசேயுன்னுடைய மெய்யழகுகண்டுபுவி
மன்னெவனோவிரும்பி வந்ததாக்காணுதென்றான்
பாவையுமச்சேனைகளைப் பார்த்தவுடனேபயந்தாள்
காவலனைத்தழுவிக் கட்டினாள்நெஞ்சுருகி

முன்னமேசொன்னேன் முடிவேந்தேகேட்டீரோ
என்னவினைக்கேவந் திவர்கள்வளைத்துக்கொண்டார்
நாமிங்கினியிருக்க ஞாயமில்லையென்றுசொல்லப்
பூமன்னவனுமந்தப் பூலோகரம்பையுந்தான்
விளையாட்டைவிட்டு விரைவாயெழுந்திருந்து
வளைவாயிருக்குமந்த வாவிக்குள்ளேகுதித்தார்
வாவிவழிவிலக மங்கையுமன்னவனும்
மேவிப்போய்மாளிகையில்வீற்றிருந்தாரம்மானை
மாளிகையிற்போய்ச் சேர்ந்துமன்னவனுமங்கையுமெவ்
வேளையினும் நீங்காமல் மேவிச்சுகித்திருந்தார்
தண்ணீர்க்குள்ளேகுதித்துத் தையலொளித்ததனைக்
கண்ணாரக்கண்டார்கள் காவலனுமந்திரியும்
மாயமோவஞ்சனையோ மனிதனும்மாதரசும்
போயொளித்தார் தண்ணீர்க்குட் புதுமையிதுவாமால்
புனலிலொளித்தாரோகீழ்ப் பூமியினுட்போனரோ
மனத்தின்மதித்திதனை மந்திரியேசொல்லுமென்றான்
வேந்தன்விஜயதரன் விளப்புமொழிகேட்டமைச்சன்
ஆய்ந்துபலவிதமா யரசனுக்குத்தானுரைப்பான்
பாதாளபூமிக்குப் பாதையிந்தவாவியினுள்
ஏதாயினுமிருக்கு மென்பதற்கிங்கேதுவில்லை
அப்படிக்கில்லாதிருந்தா லமைவாகமூச்சடங்கி
இப்புனலுக்குள்ளோ ரிடத்திருக்கத்தான்வேண்டும்
வெள்ளைப்புனலூடே மேவிச்சோதிப்பதற்கு
வள்ளமுந்தோணிகளும் வலையும்பெருவலையும்
வாரும்வளையு மணிவலையும்கைவலையுஞ்
சேரவழைத்துத்தெரிந்துகொள்ளவேணுமென்றான்
கோலவளைமுத்துக் குளிக்கின்றபேர்களையும்
சாலவரவழைத்துத் தானறியவேண்டுமென்றான்
சொன்னவுரைகேட்டுத் துரைமகனுங்கூடாரந்
தன்னையந்தச்சோலையிலே தானடிக்கச்சொல்லியபின்

கோலவிழிமாஞெளித்துக் கொண்டகுளத்தினுக்கு
நாலுதிசைக்குங்காவல் நானூறுபேரைவைத்து
சொந்தநகர்தனக்குத் தூதாளைப்போகவிட்டு
மந்திரிசொற்போலே வரவழைத்தான் மன்னவனும்
வலைகாரரெல்லோரும் வந்தந்தமன்னனை
தலையால்வணங்கிநிற்கத் தரைவேந்தனே துரைப்பான்
வாவிக்குள்ளேயொருவன்மாஞெளித்துகொண்டதனை
மேவிவலைகளெல்லாம் வீசிப்பிடியுங்களென்ருன்
வேந்தனிவ்வாறுரைக்க மேவும்வலைக்காரரெல்லாம்
பாய்ந்தார்படித்துறையிற் பலவலையும்வீசிநின்ருர்
வள்ளத்தைத்தோணிகளை வாவிக்குள்ளேநடத்திப்
பள்ளத்துக்குள்ளேயும் பாச்சுவலைபோட்டிழுத்தார்
பாச்சுவலையும் பருத்தபெருவலையும்
வீச்சுவலையுமங்கே வீசியிழுத்தார்கள்
எல்லோருங்கூடி யிழுத்திழுத்துப்பார்த்ததிலும்
வல்லார்தனத்தியையு மன்னனையுங்காணமல்
குளிகாரனையழைத்துக் குளத்திலேமுழுகிக்குளித்துத்
தெளிவாகப்பெண்மயிலைத்தேடித்தாவென்றுரைத்தான்
வேந்தனுரைத்தபடி விரைந்துகுளிகாரனங்கே
நீந்திப்புனலி னிலையறியமாட்டாமல்
வாவியினுழத்தை மதித்தறியவேணுமென்ருல்
தேவர்களாஞலுந் தெரியமுடியாது
உற்றுற்றுப்பார்த்தாலும் ஒன்றுமங்கேகாணவில்லை
கொற்றவனேயென்று குளிகாரர்சொன்னர்கள்
நாங்ளினியென்னசெய்வோம் நாடியொருவாரமட்டும்
நீங்காமல்தேடிவிட்டோம் நேரிழையிங்கில்லையென்ருர்
மன்னனதைக்கேட்டு வலைகளுக்குஞ்சிக்காமற்
கன்னியொளித்ததென்ன காரணமோவென்றேங்கி
எட்டாததேனெடுக்க வெண்ணியொருமூடன்
கொட்டாவிகொண்டதுபோற்கோமான்வருத்தமுற்று

அய்யோவிப்பெண்ணாசையணையலாமென்றிருந்தேன்
பொய்யானகதையாய்ப் போச்சேஎன்எண்ணமெல்லாம்
வட்டிலிற்சோற்றையள்ளி வாயினிற்வைக்கும்போது
தட்டிப்பறித்தகதை தானாய்முடிந்ததுவே
கற்பனேயோசற்பனையோ கன்னியைப்போலிவ்விடத்திற்
சொற்பனங்கண்டேனே சோதனேயோ நானறியேன்
என்றுபுலம்பி யிறைவன் மனம்வருந்திக்
கன்றிவிரகத்தாற் கலங்கினானம்மானே
மன்னன்மயங்குவதை மந்திரியுந்தான்பார்த்தான்
என்னவினையிருக்கவிங்கே என்னவந்துமூண்டதய்யோ
சும்மாவிருந்த துரைமகனே நானொருவன்
அம்மாபெருந்துயருக் காளாக்கிவிட்டேனே
பிள்ளையாராகப் பிடித்துவைக்கப்பின்பதுவுஞ்
சள்ளைக்குரங்காச் சமைந்தகதைபோலாச்சே
என்னவிதமாயிவர்க ளிக்குளதொளித்தார்கள்
கன்னிக்குழுச்சடக்கக் காரணந்தான்வேறுமுண்டோ
மீழித்தயிர்கடைந்து வெண்ணெய்திரளும்போது
தாழியுடைந்த தனிக்கதையும்போலாச்சே
கன்னிவடிவழகைக் கண்டுவிட்டகாவலவன்
தன்னுயிரோர்பொருளாய்த் தானினைக்கமாட்டானே
என்றுபலவிதமாய் யிரங்கியமந்திரியும்
மன்றலர்ந்தார்மன்னவனே மனதுமிகத்தேற்றி
வேந்தனேயும்முடைய விருப்பம்போலின்னமிந்த
ஏந்திழையாள்வஞ்சகத்தை யின்னதென்றுநானறிந்து
எந்தவிதத்தினாலு மிவளுமக்குமாலையிடச்
சொந்தமாய் செய்வேன் துணிந்திதனை நம்புமையா
எங்கோவேநம்மூர்க் கெழுந்தருளவேணுமென்றான்
அங்கேயம்மன்னவனு மப்படியேயாகவென்றான்
வல்லமதிமந்திரியு மன்னவனுஞ்சேனைகளும்
மெல்லமெல்லப்போனார்காண் விசையநகர்தானேக்கி

வாவிக்குள்ளேபுகுந்த மங்கையிடந்தன்னுடைய
சீவனைவைத்தரசன் தேகத்தைக்கொண்டுசென்றான்
கானகமுமலையுங் காட்டாறுந்தான்கடந்து
சேனையுடன்மன்னவனுஞ் சேர்ந்தார்விஜயநகர்
பைம்பொன்முடிவேந்தன் பரியைவிட்டுக்கீழிறங்கிச்
செம்பொன்னரண்மனைக்குட் சேர்ந்திருந்தானம்மானை
பார்த்தவிடமெங்குமந்தப் பாவையுமண்டபமும்
நீர்த்தடமுமாக நிருபனுக்குத்தோன்றிடவே
மாரனெடுத்தான் வளைத்தான் கரும்புவில்லை
சூரன்மணிமார்பைத் துளைத்துவிட்டான்பூங்கணையால்
ஊன்றுமலர்வாளி துளைத்ததுளைவழியே
தென்றற்புலிகுந்து தேர்மனதைவேறாக்க
அந்திமாலைப்பொழுது மம்புலியுந்தான்காயக்
கொந்துமலர்த்தேமாங் குயிலறிவைக்கொள்ளைகொள்ள
விரித்தமலர்மெத்தை வெதுப்பிக்கருகிவிடத்
தரித்தமுத்துமாலையெல்லாம் சாம்பலாய்த்தானுதிர
பாலுங்கசக்கப் பழமுந்துவர்ப்பாக
மேலும்கருக மெலிந்தான்விஜயதரன்
மாதாசிதான்கொடுத்த மையல்வலைக்குள்ளாகிக்
காதற்கடல்கவிழ்ந்த கப்பலைப்போலாகிவிட்டான்
புத்திமயங்கிப் புலம்பிப்பரதவித்து
சித்தங்கலங்கித் தியங்கினான்தேர்வேந்தன்
இந்தவிதமாவரச னிராமுழுதுந்தான்மயங்கிக்
கந்தமலர்விரியக் கதிரோனுதித்தவுடன்
பஞ்சணையைவிட்டெழுந்த பார்த்திபனுக்கந்நேரம்
கொஞ்சங்கொஞ்சமாகக் கொடுங்காய்ச்சல்மாறியபின்
மன்னவன்பொன்னாசனத்தில் வந்திருந்துமந்திரியை
அன்னேரந்தன்னிடத்துக் கழைத்துப்புகலலுற்றான்
எனதுமனமயங்கி யென்னறிவையென்னுயிரைத்
தனதுவசப்படுத்திச் சதிசெய்தபெண்கொடியை

கண்டுபிடித்திந்தக் காசினியில்யாரேனுங்
கொண்டுவந்தென்னிடத்திற் கொடுத்துவிடுவாராகில்
என்னுடையசீமையி னிற்பாதிநான்கொடுப்பேன்
பின்னுமவர்க்குப் பெருமையினுமுங்கொடுப்பேன்
என்றிந்தப்பட்டணத்து மெங்குமுள்ளமானகர்க்குஞ்
சென்றுபறையறையச் செய்யுமென்றான்தேர்வேந்தன்
மன்னனுரைத்தபடி மந்திரியும்வள்ளுவர்க்கு
சொன்னான்பறையறையச் சொன்னபடிதானறைந்தார்
அந்தநகர்களிலும் அடுத்தநகரங்களிலும்
இந்தவிதம்வள்ளுவரும் மிசைந்துபறையடித்தார்
அடித்தபறைகேட்டவுடன் அந்நகரார்நம்மாலே
முடித்தலரிதானவிதை முடிப்பவராரென்றிருந்தார்
பின்னுமந்தபட்டணத்தில் பிராமணர்கள்தன்குலத்தில்
மன்னுமொருசண்டாளி மங்கலமில்லாவிதவை
அவளுக்கொருகுழந்தை ஆண்பிள்ளைதானுமுண்டு
இவளுக்கதைவளர்க்க ஏதுவொன்றுமில்லாமல்
பட்டணத்தில்யாசகங்கள் பண்ணியந்தப்பிள்ளைதனை
இட்டமுடன்காப்பாற்றி யிவள்வளர்க்கும்நாளதனில்
தாய்க்கும்மகனுக்குந் தரித்திரத்தாற்சண்டைவாத்
தாக்கினுள்மைந்தன் தலையிலேசட்டுவத்தால்
சட்டுவத்தினுலடிக்கத் தனயனுக்குக்கோபமிஞ்சி
எட்டுவயதிலிவன் ஏகினான்யாத்திரையாய்
காசிக்குப்போகவென்று கட்டினான்காஷாயம்
தேசுமிகுந்தமைந்தன் தேசாந்திரியானபின்பு
முண்டச்சியாயிருந்த மூர்க்கப்பிராமணத்தி
அண்டச்சகாயமின்றி யங்கிருக்கும்நாளதனில்
பட்டணத்தில்வள்ளுவமார் பறையடித்தசொற்கேட்டுக்
கட்டமெல்லாந்தீரவிது காலமென்றுதான்மதித்து
கன்னியைக்கொண்டுவந்து காவலன்பாற்கொடுத்தால்
மன்னவனுர்சீமைதனில் வளநாடுபாதிவரும்

வந்ததென்றால்நம்முடைய மைந்தனெங்கேபோனாலும்
அந்தட்சணமே யவனையழைத்துவந்து
நல்லகுலத்தில் நலமானபெண்ணெடுத்துச்
செல்வக்கலியாணஞ் செய்துவைத்துப்பார்த்திடலாம்
இன்னமரச னிசைத்தமொழிநிட்சயத்தைத்
தன்னமைவினாலே தானறியவேண்டுமென்று
வேந்தன்சமுகத்தை மேவினாள்பார்ப்பனத்தி
வாய்ந்தமதிமன்னனிவள் வந்தகுறிப்பறிந்து
மறையோர்குலத்தணங்கே வந்தவகையென்னவென்றார்
பறையோசைகேட்டுவந்தேன் பார்வேந்தெனவுரைத்து
எந்தைபெருமானே யிறையோனேவும்முடைய
சிந்தைப்படியந்தத் தெரிவையைக்கொண்டுவந்தால்
சீமையிற்பாதிதருஞ் செய்திநிஜந்தானோ
சாமியுரையுமென்று சாற்றினாள்பார்ப்பனத்தி
பார்ப்பனத்திசொன்னமொழி பார்த்திபன்தான்கேட்டு
கார்ப்பருவங்கண்டமயிற் கணம்போல்மனங்களித்து
இன்னாள்வரையி லிவள்போலொருவர்வந்து
சொன்னாருமில்லையென்று துரைமகன்மனங்களித்து
வேதகுலமயிலே விரும்பிநான்சொன்னதற்குப்
பேதகந்தானுண்டாமோ பேச்சுந்தவறுவனோ
ஐயம்மனதில் அணுவளவும்வேண்டாங்காண்
தையலேயென்று தரைவேந்தன்தானுரைக்க
திருவேயனையுமந்தச் சேயிழைக்கூட்டியிங்கே
வருவேன்சிலநாளில் மன்னவனேயென்றுசொல்லி
மீண்டாள்பிராமணத்தி வீடுதனில்வந்திருந்து
பூண்டாளொருவிரதம் புத்தியினாலேதேர்ந்து
மதித்தாளோர்புத்திதனை மற்றதுபோல்செய்வனென்று
கதித்தாள்பரபரத்தாள் கைமருந்துசேர்ப்பதற்கு
பாஷாணநாவிமுதற் பாவிநஞ்சாயுள்ளதெல்லாங்
கூசாமல்வாங்கிவந்து குழியம்மியிலாட்டி

உருட்டுவுண்டைமாத்திரையாய் ஒன்ருகத்தானரைத்து
திருட்டுமுண்டைசேர்த்துத் திரட்டினளம்மானை
சேர்த்துத்திரட்டிஒரு செப்பில்வைத்துமூடி நன்ருய்ப்
பார்த்திடையிற்கட்டிப் பசிக்குத்தின்பண்டமுடன்
புறப்பட்டாள்வீடுவிட்டுப் போனளவ்வூர்கடந்து
திறப்பட்டசிந்தையினள் சென்ருள்திசைநோக்கி
மாயமாய்மாதுசென்ற வாவியிருப்பிடத்தைப்
போய்வந்தபேரிடத்தே புலன்வெளியிடாதறிந்தாள்
நாடுகடந்து நகரம்பலகடந்து
காடுமலேயுங் கடந்துநடந்துசென்ருள்
கண்டாள்குளக்கரையுங் கனகப்படித்துறையும்
வண்டார்குழலிருந்த மையமணிமண்டபமும்
சுற்றியெங்கும்பார்த்துவந்து சுவருக்கருகிலொரு
பொற்றருவினிழலிலே போயிருந்தாள்பார்ப்பனத்தி
இருந்தாள்மகனை யிறக்கக்கொடுத்தவள்போல்
வருந்தாரைக்கண்ணீர் வழிந்துநதிபோற்பெருக
வனதேவதையிருந்து வாய்விட்டழுவதுபோற்
கனதாரை நீர்பெருகக் கதறியழுகலுற்ருள்
என்னரசேயென்மகனே என்னுடையகண்மணியே
மன்னர்மனதுக்கிசைந்த மாணிக்கரத்தினமே
வித்தைக்களஞ்சியமே வேதகுலநாயகமே
தித்திக்கும்முக்கனியே தேனேதிரவியமே
பிள்ளைகலிதீர்க்கப் பிறந்தகுலவிளக்கே
வள்ளைக்குழைமின்ஞர்க்கு வாய்ந்தவெழில்மகனே
கட்டித்திரவியமே கற்பகமேசர்க்கரையே
பெட்டிக்குள்வைத்த பெருநிதிப்பொக்கிஷமே
என்னேரமுமென் னிருதயத்திலேபுதைத்த
பொன்னேமரகதமே பூமன்னர்பூஷணமே
அய்யோமகனேயென் னரும்பொருளேயாரமுதே
பொய்யாநீதானிறந்து போனவிடங்காணேனே

உன்னையிறக்கக்கொடுத்து முயிர்வாழ்ந்துநானிருந்தால்
என்னையுலகுள்ளோ ரெவரும்நகையாரோ
என்னுசை நாயகனை யிறக்கக்கொடுத் துவிட்டும்
உன்னுசையாலல்லோ உயிர்வைத்துநானிருந்தேன்
என்னைவிட்டு நீயிறந்தா லினியிருக்கஞாயமுண்டோ
உன்னைவிட்டுநானிருந்தா லுலகோர்பழியாரோ
தேவகுமாரருடன் சேர்ந்துவிளையாடுதற்கோ
ஆவலுடன்சென்முயென் னுசையுள்ளபுத்திரனே
கல்யாணம்பண்ணிக் கண்ணுலேபார்க்குமுன்னே
விண்ணுர்மடந்தையரை மேவுதற்குச்சென்முயோ
வீட்டுக்கணவனைக்கை விட்டுனையும்நானிழந்தேன்
பாட்டுக்கிருந்தபெரும் பாவினுனேனே
முத்துக்கரும்பே முகிழ்விரியாப்பூவரும்பே
தித்திக்கும்புத்தமுதே செல்வச்சிகாமணியே
தந்தைபுகுந்திடத்தைத் தான்பார்க்கவே ணுமென்று
சிந்தைதனில் நினைத்து தேகம்விட்டுச்சென்முயோ
பொய்வாழ்க்கையிந்தப் புவிவாழ்க்கையென்றுணர்ந்து
மெய்வாழ்க்கையாயிருக்கும் விண்ணுலகில் நீபுகுந்தாய்
இந்தவுலகமுனக் கிடந்தான் கொடுக்கிலேயோ
அந்தவுலகிலுனக் காசையுந்தா னுண்டாச்சோ
தாயார்க்குச்செய்யுஞ்சடங்குகள் நீசெய்யாமற்
பேயாய்நானிங்கே பிதற்றவிட்டுப்போவாயோ
மஞ்சனிருந்து மகிழ்ச்சிதரும் நாளையிலே
பஞ்சையாய்நானிருந்து பாதவிக்கலானேனே
பிள்ளையிருந்துமனம் பேசவரும்நாளி லுன்னைக்
கொள்ளைகொடுத்துமனங் குளம்பித்தவித்தேனே
அப்பாமகனே அருமைத்திரவியமே
எப்போதுனைக்காண்பே னென்னுள் துயர்தீர்வேன்
என்றுபுலம்பி யிருந்தமுதாள்பார்ப்பனத்தி
கன்றிறந்தபாற்பசுபோற் கதறினுள்பார்ப்பனத்தி

மண்ணுமுருக மரமுருகக்கல்லுருக
விண்ணுமுருகவிலங்கின மெல்லாமுருக
காடுமுருகிக் கசிந்துகண்ணீர்வடிக்க
மாடுமுருக வரிவேங்கைதானுருக
சோலைக்கிளியுருகத் தோகைமயில்நெஞ்சுருகக்
கோலக்குயிலினங்கள் கூகூவெனக்குழற
காட்டிலுள்ளபன்றி கலைமான்புலிகரடி
கூட்டமிட்டுநெஞ்சுருகிக் குழைந்துகண்ணீர்வடிக்க
விந்தைவிந்தையாக விளம்பியொப்பாரிசொல்லி
அந்தப்பிரமணத்தி யழுதனள்காணம்மானை
ஒப்பாரியாலிவளுக் கொப்பாரியாரென்று
செப்பாரியாவரந்தத் தேசத்தோரம்மானை
முட்டிவிழுந்து முகத்திலறைந்துகொண்டு
பட்டிப்பிராமணத்தி பரதவித்துத்தானழுதாள்
இந்தப்படியா யிவள்மூன்றுநாளழுதாள்
அந்தப்பொன்மாளிகையி லமர்ந்தபுவவேந்திரனும்
மின்னுளுடன்கூடி விளையாடிக்கொண்டிருந்து
சின்னாட்கழித்தபின்புசேயிழையைப்பார்த்துரைப்பான்
மாதராசேநாமிந்த மாளிகைக்குள்ளேயிருந்து
பேரதுகழித்தோமினிமேற் பூமியிலுஞ்சற்றேபோய்
வாவிநடுவேயிருக்கும் மண்டபத்திலேபுகுந்து
மேவிவிளையாடிவர மெல்லியரேவாருமென்றான்
வாருமென்றமன்னனுக்கு மங்கைநலாளேதுரைப்பாள்
பாரிலுள்ளோர்யாரும் பகைத்துவருவார்களங்கே
முன்னேநான்சொன்ன மொழியைக்கேளாமையினால்
என்னவினைவந்ததங்கே யின்னுந்தெரியாதோ
போவதுநல்லதல்ல புரவலனேயென்றுசொல்ல
மேலவர்வந்தாலும்நம்மை வெல்லமுடிந்திடுமோ
அப்படிவந்தாலு மவர்விழியிற்காணமற்
பொற்படிவாவிக்குட் புகுந்துவிடலாமலவோ

பொய்கைவழியறிந்து புகமாட்டாரானதனுல்
தையலேவாருமென்று தானழைத்துவந்திருந்தான்
மண்டபத்தில்வந்திருந்த மங்கையையும்மன்னனையுங்
கண்டாள்பிராமணத்தி காவலன்சொன்னவர்கள்
இவர்தான்போற்காணுதுநா னெண்ணிவந்தவெண்ண
மினித்-தவருதிதுதான் சமையமென்றுதானினைத்து
முன்னமழுததினும் மூன்றுபங்குமேலாகப்
பின்னும்பொருமிப் பெருமூச்சுவிட்டழுதாள்
மண்டபத்தில்மங்கையுடன் வந்திருந்தமன்னனங்கே
மூண்டையழுதமுறையீதெலாங்கேட்டான்
கள்ளியழுதசத்தங் காதிலேகேட்டரசன்
உள்ளமுருகி யுடலோடெலும்புருகி
ஆரோயிவளொருத்தி யாருந்துணையுமின்றித்
தீராத்துயருடனே தியங்கியழுகலுற்ருள்
அய்யோவிவளுக்கோ ராண்பிள்ளைசெத்ததென்று
குய்யோமுறையென்று கூவிக்கதறுகிருள்
நான்போயறிந்திங்கே நாடிவருவேநொடியில்
மீன்போல்விழியணங்கே வீற்றிருநீயென்றுரைத்தான்
ஏதையாசும்மா விருக்கவிட்டுதில்லையும்மைப்
பாதையிலேபோவார்க்குப் பலகாரியமிருக்கும்
அந்தவிசாரணையை யாமேன்செய்யவேண்டும்
இந்தமட்டும்போதும்நா மேகுவோம்வாருமென்ருள்
வந்தார்கள்முன்சிலபேர் வருவார்களின்னமென்று
சிந்தாகுலமுடனே செப்பினையேதேன்மொழியே
யானென்னவாண்பிள்ளையோ வல்லவோவந்தாலும்
மானினம்வேங்கைமுன்னேவந்துவெற்றிகொள்ளுமோ
சிங்கத்தின்குட்டிதன்னைச் சிறுபுலியோவென்றுவிடும்
இங்குநீயஞ்சா திருவென்றுதான்தேற்றி
மின்னரசையங்கிருத்தி வேந்தன்கரையேறித்
தன்னந்தனியேயழுத தையல்முன்னேசென்றுநின்று

ஆரம்மாவிங்கே யழுதுபுலம்புகிருய்
ஊரெங்கிருந்துவந்தா யுற்றதுயரமென்ன
அம்மா நீசும்மா அழுகாமற்சொல்லிடென்று
இம்மா நிலத்தரச னிரக்கமாய்க்கேட்டு நின்முன்
மன்னன்வந்துகேட்டவுடன் வஞ்சப்பிராமணத்தி
கன்னியைக்கொண்டுசென்ற கள்ளனிவனுகுமிவன்
தன்னைவசப்படுத்தச் சமயமிதுவாகுமென்று
பின்னும்மெத்தமெத்தப் பிதற்றியழுகலுற்ருள்
ஓயாதழுதவளை யுத்தமனும்பார்த்துரைப்பான்
ஆயாளேவேண்டா மழுகாதேயம்மணியே
அம்மாவுனக்குவந்த ஆபத்தைச்சொல்லிவிடு
சும்மாஅழுகாதே துயரத்தைச்சொல்லிடென்முன்
ஆரையாவென்பாட்டி லழுகிறேனென்விதியாற்
பேரையுமென்னூரையும்நீ பேசென்றேன்கேட்கிருய்
சாகத்துணிந்தவர்க்குச் சமுத்திரமுன்காலளவாம்
ஆகையினுலுன்பேச்சை யான்கேட்கப்போறேனே
என்றன்மகனிறந்தா னினியானிருப்பேனே
உன்றன்மொழிகேட்பேனே வுயிரைவிடப்போகிறநான்
நீபோவுன்பாட்டிலென்று நெஞ்சந்திடுக்கிடவே
மாபாவிசொன்னசொல்லை மன்னன்மனதிலெண்ணி
மைந்தனெப்போதிறந்தான் வந்தவரலாறேது
சிந்தைகலங்காதே செப்புவாயம்மணியே
அன்னுளருச்சுனனு மக்கினியில்வீழ்வனென்று
தன்னுலேசுற்றுகையில் தடுத்தாற்சொற்கேட்கலையோ
ஜானகியசோகவனந் தனிலிறக்கப்போம்போது
மானபரனனுமான் வார்த்தையைக்கேட்கலையோ
உனக்குமனஞ்சாக வுறுதிகொண்டு நின்முலும்
எனக்கதனைச்சற்றே யியம்புவாயென்றுரைத்தான்
அப்போதவளுரைப்பா ளையாநான்பட்ட துயர்
இப்போதுரைப்பதனு லென்னபயனுண்டாகும்

ஆனாலும் நீயென் னருமைமகன்போலே
தானிருக்கிருயதனுற் சாற்றுகிறேனென் றுரைப்பாள்
நாயகனும்நானும்நெடு நாள்மகவிலாதிருந்து
ஆயகணவன்வய தறுபதுக்குமேலாக
பிள்ளையொருவனை நான் பெற்றிருக்கும்நாளையிலே
கொள்ளைகொண்டான்கூற்றன் கொண்டகணவனுயிரை
கணவனிறந்தாலுங் கைக்குக்கனமானபிள்ளை
துணையிருக்குதென்று துணிந்துயிர்வைத்திருந்தேன்
வளர்த்தேன்மகனை வயதுபதினறுவரை
உளத்தேமகிழ்ந்திருந்தே னுனைப்போல்வானுதலினுல்
அவனுக்குபநயன மாகியறுசாஸ்திரமும்
கவனமுடன்வேதமெல்லாங் கற்றுவல்லனுகிவிட்டான்
கலியாணஞ்செய்யக் கருதினேனிவ்வருடம்
பலியாமற்போச்சுதையா பாதகத்தியெண்ணமெல்லாம்
அந்தநகரத்தி லநேகமுயிரிருக்க
மைந்தனுயிர்க்குமட்டும வந்தானேபாவிஎமன்
பிள்ளையிறந்தவுடன் பேருலகில்தானிருக்க
எள்ளளவுஞ்சம்மதியா திறக்கத்துணிந்துவந்தேன்
இந்தக்குளத்தி லிறங்கிநான்சாவதற்கு
வந்தேனினிநீ மறுத்துரைக்கவேண்டாங்காண்
செத்தாலல்லாலெனக்குத் தீவினையுந்தீராது
வைத்தேயினியுயிரை வாழேனென்றேயுரைத்தாள்
பாப்பாத்திசொன்ன பாதவிப்பெல்லாங்கேட்டுக்
காப்பாற்றுமன்னன் கருத்துருகியேதுசொல்வான்
என்னைப்போலுன்மகனு மிருப்பானென்ருயெனக்கு
அன்னையைப்போல்வந்தா யழுகையும்வேண்டாங்காண்
இறந்தாருடனிறந்தா ரிவ்வுலகில்யாருமில்லை
துறந்தார்க்கும்பெண்டுபிள்ளை துணைவர்துணையானுரோ
நானேயுனக்குமொரு நல்லமகனம்மா நீ
தானேயெனக்குமொரு தாயாகவந்திடென்ருன்

வந்திருப்பாயென்றுபுவி ன்மனனுரைத்திடவே
தந்திரக்காரியந்தச் சண்டாளிசம்மதித்தாள்
அப்பாதுரையேயென் னருமைத்திருமகனே
யொப்பாக நீயிருந்தா யுன்னுரையை நான்மறுக்கச்
சற்றுந் துணியவில்லை சாதியில்நான்வேதகுலம்
மற்றுன்குலமெதுவோ வாழுமிடமெதுவோ
எனக்குத்தெரியவில்லை யென்றவளைப்பார்த்துரைப்பான்
உனக்குந்தெரிய வுரைப்பேன் நான்க்ஷத்திரியன்
என்னுட நீவந்தா லிருக்குமிடங்கண்டிடலாம்
உன்னைத்தவிற வொருபோதும்விட்டுவிடேன்
சும்மாவாவென்று துரைமகனுந்தானுரைக்கப்
பம்மாத்துக்காரியந்தப் பாதகத்தியேதுரைப்பாள்
என்னையாதரித்திடுவே னென்றழைக்கிறுயுனது
மனையாட்டியினுடைய மனதுதானெப்படியோ
எனையவளறியாள் யானவளைத்தானறியேன்
உன்னை நம்பிவந்தாலு முருக்கமவட்குண்டாமோ
ஆரோபிராமணத்தி யனுதிமுண்டையிங்கிவளை
நீரேனழைத்துவந்தீர் நிமிஷந்துரத்துமென்ருல்
நீயதற்கென்னசெய்வாய் நிந்தனையாயென்னையவள்
வாய்மதங்கள்பேசிடிலென் மனஞ்சகிக்கமாட்டாது
ஆகையினலுன்னுடனே யானும்வரமாட்டேன்
சாகுவதே நிட்சயங்காண் தம்பியெனவுரைத்தாள்
என்னடியம்மா நீ யிறந்திடவே துணிந்தாய்
சொன்னதை நீதட்டாதே சொந்தமனையாட்டியுன்னை
கண்டால்மகிழ்வாளென் கருத்தின்படியேயவளுங்
கொண்டுவருவாளுனக்கோர் குற்றமும்வாராதுசும்மா
வாவென்றுடன்கூட்டி வாவிக்குள்ளேயிறங்கித்
தேவியிருந்தவிடஞ் சேர்ந்தான்காணம்மானை
மோதிரத்தை நீட்டுவதால் முன்னீர்விலகுவதைப்
பாதைக்கிதேதுவென்று பாதகத்திபார்ந்திருத்தாள்

மண்டபத்தில்வந்திருந்து மங்கையிடம்பார்ப்பினியை
கண்டுகொண்டதேமுதலாய் கருத்தவளைத்தேற்றியிங்கே
கூட்டிவந்ததிருகக் கூறினன்பார்வேந்தன்
வாட்டடங்கண்ணுளுமவள் வரலாறெல்லாங்கேட்டாள்
வானகலம்நீளம் வளஞ்சேர்கடலாழந்
தானறிந்துகொள்ளுஞ் சமத்தரேயானுலும்
வஞ்சனைதான்மிஞ்சும் மடவார்மன நிலையைக்
கொஞ்சமானுலுங் குறித்தறிவாராருமுண்டோ
ஆனதினுல்முன்பின் னறியாதிருந்தவளை
ஏனழைத்துவந்தீ ரிவளாலிங்காவதென்ன
ஆர்க்குந்தெரியாமல் யாமிருக்குமாளிகையைப்
பார்க்குளிவள்யார்க்கும் பறைபோட்டாலென்செயலாம்
விற்பனத்திலேசிறந்த வேந்தேயென்றேந்திழையாள்
சற்பன்னபாஷையிலே சாற்றினள்மன்னனுக்கு
இந்தக்கிழவிருத்தை யிவளாலேயாபத்து
வந்துவிடுமென்று மதிக்கிறீர்மாதரசே
துன்பமொருவர்க்குத் தொடர்ந்துவருமாகிலதைத்
தன்குலத்தினுலே தடுத்திடவல்லாருளரோ
ஆர்க்கும்வருமின்பதுன்ப மவரேயடைவதல்லாற்
பார்க்குளெவர்க்கும் பகிர்ந்துவிட்டாற்போய்விடுமோ
மசகங்கடிக்கவுயிர் மாய்ந்தாரொருவருண்டோ
பிசகுவருமாகிலிந்தப் பேதையன்றிவாராதோ
தானே நீசெய்யுஞ் சமயல்வருத்தமதை
மானேயிவளாலே மாற்றலாமென்றுமின்னும்
கருப்பமாய் நீயிருக்குங் காரணத்தினுலுமுன்மேல்
விருப்பமாய்ப்பெண்டுணைவே ணுமென்றுதானெண்ணி
ஏதுந்துணையில்லாத வேழையிவளால்நமக்கோர்
தீதும்வராதென்றிவளைத் தேற்றினன்கூட்டிவந்தேன்
ஆதலினுல்நமக்கோ ராபத்துவாராது
பாதகமில்லையென்ருன் பைந்தொடியுஞ்சம்மதித்தாள்

நீதியில்லாவீடு நிறையாதொருநாளும்
தாயில்லாவெங்களுக்கோர் தாயாயிருந்திடம்மா
கைவேலையைமாற்றிக் காப்பாற்றிக்கொண்டிருந்தாற்
செய்வேலையேதுணையோர் தெய்வமாயெணணிடுவேன்
ஆயாளேயென்றங் கனேகவுபசாரமெல்லாம்
வாயாரச்சொல்லி மகிழ்ந்தாரிருவர்களும்
அந்தோசுடுநெருப்பை யள்ளியங்கிடைச்சேலை
முந்தானையிலே முடிந்துவைத்துக்கொள்வார்போல்
சண்டாளமுண்டையினைத் தாயென்றுதானினைத்து
கொண்டாடிக்கொண்டே கூட்டிபோய்வைத்திருந்தார்
அன்னமுதலாமுணவை யரசேநீரென்னையன்றி
மின்னுளிடப்சிக்க வேண்டாமோர்நாளுமென்ருள்
மாளிகையிற்கூட்டி வைத்திருந்தார்பார்ப்பினியை
வேளைவருமென்று விதவையும்பார்த்திருந்தாள்
பாங்காய்ச்சமயலெல்லாம் பண்ணியிருவருக்குந்
தீங்கானதில்லாமற் செய்பவள்போற்செய்துவந்தாள்
மன்னனிவளன்னம் வளமாய்ச்சமைத்தாலும்
கன்னியவளன்றியிவள் கையிலன்னம்வாங்கியுண்ணான்
இந்தப்படியா யிவரிருக்கும்நாளையிலே
அந்தப்பழிகாரிசெய்த அநியாயமென்னசொல்வேன்
தரைகாவலனொருநாள் தயிலமிட்டுத்தான்முழுகி
விரைவாயுடல்துடைத்து மெய்யானபூஜைசெய்து
போஜனசாலைதனிற் போயிருந்தானப்பொழுது
வாசமலர்க்குழலாள் மற்றுமொருகட்டிடத்தில்
போனசமயம் பூங்குழலைச்சிக்கெடுப்ப
தானசமயமதை யறிந்துகொண்டாள்பாதகத்தி
வந்தாளரசனிடம் மைந்தனேமங்கைநல்லாள்
கொந்தார்குழலூர்த்திக்கொண்டுவரச்செல்லுமின்னும்
மாதுவரும்வரைக்கும் வயிறுபசித்திருந்தால்
சாதம்படைப்பேனுன் சாப்பிடுநீயென்றுரைத்தாள்

மங்கைவரட்டுமென்றான் மன்னவனுந்தானுரைக்கப்
பங்கயக்கைமங்கைவந்து படைத்தபின்புசாப்பிடலாம்
வாயுவுக்கொள்ளாதிங்கே வைத்தரசமானாலுந்
தாயுனக்குநான்தருவேன் சாப்பிடாயென்றுறைத்தாள்
சங்கரனுமையந் தனையெடுத்தார்ஜானகியாம்
மங்கையுடன்காடுறைந்தான் மாலென்றவாசகம்போல்
விதிவலியையார்தான் விலக்கவல்லாராதலினால்
மதிமிகுந்தவேந்தனவள் வார்த்தைக்குச்சம்மதித்தான்
நல்லசமயமென்று நடந்தாள்மடைப்பள்ளியில்
வல்லிடைக்குள்ளொளித்துவைத்தநஞ்சுசெப்பெடுத்து
கரைத்தாளங்கேரசத்திற் காரமுள்ளதென்றவனுக்
குரைத்தாள்குடியென்றுடனேகொடுத்துவிட்டாள்
குடிகோடிகையாற் கொடுத்தவிஷரசத்தைக்
குடிகேடென்றெண்ணாமற் குடித்தான்புவனேந்த்ரன்
வாங்கிக்குடித்தான் மழுகாச்சிவிட்டதுபோல்
ஓங்கருப்புமேலாகி யுள்ளேகுடல்புரட்டி
நெஞ்சடைத்துக்கொள்ள நினைவுமொறிடக்கண்
பஞ்சடையநாவும் பசையற்றுத்தான்வரளக்
கண்ணுஞ்சுழலக் கருத்துமிகமயங்கிப்
பெண்ணேயென்றோர்வார்த்தைபெருங்குரலதாய்க்கூவி
மடிந்தான்முடிவேந்தன் மாபாபிபார்பனத்தி
முடிந்ததுநம்மெண்ணமென்று மூச்சுவிடாமலிங்கே
கணையாளிதன்னைக் கழற்றித்தான்கையிலிட்டாள்
இணையாளியாவர்நமக் கென்றிருந்தாள்பாதகத்தி
அந்தச்சமயமின்னா ளரசன்மொழிகேட்டோடி
வந்துநின்றுபார்த்தாள் மடிந்தபுவனேந்திரனை
என்னடியம்மா இவர்க்குவந்தபொல்லாங்கு
பன்னடியென்று பதைத்தாள் துடிதுடித்தாள்
மூக்கிலேகையைவைத்தாள் மூச்சுவராமைகண்டாள்
நாக்கின்குறிபார்த்தாள் நாடிபிடித்துபார்த்தாள்

போனதுஜீவனென்று புத்தியினாலேயறிந்தாள்
நானினியென்னசெய்வே னையகனேசொல்லுமென்றாள்
முட்டிவிழுந்தாள் முகத்திலறைந்துகொண்டாள்
கட்டியணைத்தாளரசன் கன்னத்திற்கன்னம்வைத்தாள்
எண்ணெய்முழுகிவந்தீ ரியான்வந்துசேருமுன்னே
கண்ணைவிழியாமற் கயிலாசஞ்சேர்ந்தீரோ
மனமும்வெருப்பாச்சோ வாழ்ந்துவெகுநாளாச்சோ
தினமுமெனைக்கலந்த சிந்தையும்வேறாச்சோ
பூலோகரம்பையிந்தப் பூவையிலுஞ்சிறந்தாள்
மேலோகரம்பையென்று மேவிவரச்சென்றீரோ
ஐந்துதலைநாகத்தா லவதிநான்பட்டதெல்லாம்
வந்துவிலக்கிவைத்த மன்னவர்சிகாமணியே
பூவுலகையாண்டமட்டும் போதுமென்றுதானினைந்து
தேவருலகத்தரசு செய்வதற்குச்சென்றீரோ
இந்தநாள் நீரிங் கிறப்பதறியாமல்
மந்திரியைத்தேடி மயங்கினீர் மன்னவனே
பொன்னுந்துரையே புரவலர்சிகாமணியே
மன்னர்பெருமானே மறந்தென்கைவிட்டீரோ
காயலாய் நீரிருக்கக் காணேனொருநாளும்
மாயமாய்த்தானுமக்கு வந்தமரணமென்ன
என்றுபுலம்பியிருந்தழுதாள் யேந்திழையாள்
ஒன்றுமறியாதவள்போ லுடனழுதாள்பார்ப்பாத்தி
அப்போதவளும் அழுகையினைத்தான்மாற்றிக்
கொப்போடுலாவும்விழி கோதைவாய்பொத்திநின்றாள்
மங்கையழுகுரலை மாற்றிக்கண்ணீர் துடைத்துக்
கொங்கைகுடைத்தவிழ்ந்த குழலையள்ளித்தான்முடித்து
மாதேயுனக்கு வருத்தமினிவேண்டாங்காண்
ஏதோவுனதழகுக் கிசைந்ததொருமாப்பிள்ளையைத்
தேடித்தருவனான் ஜெகத்தினுக்கெல்லாமரசாய்
வாடிக்கருத்து மயங்காதேமாதரசே

இந்தப்புருடன்போனு லிவனிலுமோரெண்மடங்காய்
அந்தமுள்ளநாயகனை யான்சேர்த்துவைத்திடுவேன்
ஆருந்துணையிலா அனுதிப்பயலிவனுக்
கூருமின்னதென்றறியா யுற்றூரொருவரில்லை
வழிக்குத்துணையாக வந்தவனைத்தானும்நம்பிப்
பழிக்கேதுவாயிருந்த பட்சத்தைவிட்டுவிடு
சிந்தைமயங்காதே தேம்பியழுகாதே
வந்திடுவாயென்கூட வையகமெல்லாம்புரப்போன்
விசயநகர்காக்கும் வேந்தன்விஜயதரன்
அசையாமணிகட்டி யாடுமணிவாசலினுன்
கருப்புவில்லைப்பூட்டி வருங் காமனிலுங்கட்டழகன்
விருப்புமுன்மேல்வைத்து மெலிந்துவழிபார்த்தான்
என்றுமுனக்கவனே யிசைந்தமணவாளனங்கே
சென்றிடுவோமல்லவென்று செப்புவாயாகிலுன்னை
விட்டுவிட்டுப்போவேனே விருதாப்பயலைநம்பிக்
கெட்டுப்போகாதே கிறுக்குப்பிடித்தவள்போல்
ஏண்டிபுலம்புகிறு யென்னடிநானிங்குவர
வேண்டியதுமுன்னுல் விளைந்தகதையறிவாய்
காவலனைக்கொன்றுனையுங் கைப்பிடியாகப்பிடித்துப்
போவதற்காகவல்லோ புத்தியுடன்வந்தேனுன்
சேதிதெரியாதோவென் சித்தம்போலாச்சுதுன்னைப்
பூதலத்தில் நான்கொண்டுபோகாமற்போவேனே
மாட்டேனென்பாயாகிலுன் மண்டையிற்கல்லெடுத்துப்
போட்டுன்னுயிரையுமிப் போதேநான்வாங்கிடுவேன்
பாரடியென்றுள்கடித்தாள் பல்லைநெறுநெறென்றே
சீரழிவாள்செய்ததுன்பஞ் செய்யவெவரான்முடியும்
மாறுபடலின்றியங்கே வருகிறுயோவில்லையோ
கூறடிநீயென்றுசொல்லிக் கோபித்தாள்சண்டாளி
பாதகத்திசொன்ன பழமொழியெல்லாங்கேட்டு
மாதகத்தில்நொந்துபல வாருய்நினைக்கலுற்றுள்

சண்டாளிசெய்த சதியன்றிவேறுமில்லை
பண்டுநான்சொன்னதெல்லாம் பாராசன்கேட்கவில்லை
வந்தாளென்னுயகனைவஞ்சனையால்கென்றுவிட்டாள்
சந்தேகமில்லையினித் தவறியபின்னென்செய்யலாம்
மன்னவனைகொன்றெனக்கு மாப்பிழையுந்தேடிவிட்டு
இன்னமுனைக்கொன்றிடுவே னென்றுகூத்தாடுகிருள்
இப்போதிவளைவிரோ திப்பதுகூடாதவள்சொல்
சொற்போல்நடக்கத் துணிந்ததுபோற்செய்வமென்று
மந்திரியுமென்கூட வந்தானவனிறந்து
சிந்துமுயிர்பிழைக்கச் செய்யும்வித்தைகற்றிருந்தான்
என்றுநமக்கோர்நா ளிசைத்ததுண்டேயென்கணவன்
சென்றிடுவோம்நாமுமங்கே தெய்வபலமிருந்தால்
வருவாளுருவேளை மன்னவனைத்தேடிவந்தால்
தெரிவேனவனையங்கே சேர்ந்துசிலதந்திரத்தால்
மந்திரிவந்தாலவனல் மன்னனுயிர்பிழைக்குந்
தந்திரங்கள்செய்தவனைத் தானேயெழுப்பிடலாம்
அப்படிக்கில்லாதுவிட்டா லாவிதனைமாய்த்திடலாம்
எப்படிக்குமேல்பூமிக் கேகுவதுகாரியந்தான்
ஆகையினலிந்த அரசழிவாள்சொற்படியே
போகுவதுநல்லதென்று புத்தியினல்நிட்சயித்தாள்
மாய்ந்தகணவனையும் மார்போடெடுத்தணைத்துச்
சேர்ந்தவொருபெட்டகத்திற் சேர்த்துப்பதனமிட்டு
வாடியுடலம் வதங்காதிருக்கும்வண்ணம்
போடுஞ்சரக்கெல்லாம் போட்டுவைத்துப்பத்திரமாய்
பூட்டியப்பெட்டிதனைப் பொன்னறைக்குள்ளேசேர்த்து
மீட்டுங்கதவில் வெளிப்பூட்டுப்பூட்டிவைத்தாள்
வைத்துவெளியில்வந்து மாபாவியைப்பார்த்துச்
சித்தங்கலங்கித் தியங்கியவளேதுசொல்வாள்
உன்னைவிடவெனக்கிங் குதவிசெய்வாராருமில்லை
அன்னைபோலென்னையினி யாதரிக்கவேணுமம்மா

உன்வார்த்தைதன்னை யொருபோதும் நான்கடவேன்
என்வார்த்தைதட்டா தெனைக்காப்பதுன்கடனும்
இந்நாள்வரையி லிவனுடனே நான்கூடித்
தன்னாலேபட்டமனச் சஞ்சலங்கள்மெத்தவுண்டு
உற்றாருமில்லா தொருவர் துணையுமின்றிச்
சற்றாகிலுமெனக்கோர் தயிரியஞ்சொல்வாருமின்றிச்
சும்மாவிப்பாழிடத்தில் துக்கித்துக்கொண்டிருந்தேன்
அம்மா நீவந்தே அவஸ்தையெல்லாம் நீக்கிவைத்தாய்
ஆகையினால் நீதா னழைத்தவிடம்போய்ச்சேர்வோம்
சேகரமாய்வாவென்று செப்பினளம்மானை
வாவென்றவளுரைத்த வார்த்தைதனைக்கேட்டவுடன்
கோவென்றழுதகுரல் கூட்டிமுடிந்ததென்று
மனதுமிகமகிழ்ந்து மாளிகையினுட்புகுந்து
கனகமுகராவுங் கதித்தநகைவகையும்
இன்னமவள்மனதுக் கிச்சையுண்டானதெல்லாம்
பொன்னறைகட்குள்ளே புகுந்துபுகுந்தெடுத்து
புத்திமகிழ்ந்து புறப்பட்டாள்சண்டாளி
பைந்தொடியைமுன்னடத்திப்படியேறித்தானடந்தாள்
நடந்தார்வெகுதூரம் நாகலோகத்தைவிட்டுக்
கடந்தாரவள்விரலிற் கணையாழிகண்டவுடன்
வாவிப்புனல்விலக வந்தார்கரையேறி
மேவிக்கணையாழி விசேடத்தையும்மறிந்தாள்
மாதரசைக்கூட்டி வழிநடந்தாள்பார்ப்பபனத்தி
பாதையெல்லாங்கடந்து பதிகள்பலகடந்து
அந்தவிஜயநகர்க் கருகாகவந்தவுடன்
வந்தோர்சிலரை வரவழைத்தங்கேதுரைப்பாள்
போனாள்பிராமணத்தி புனல்வாவிக்குள்ளிருந்த
மானைக்கூட்டியிங்கே வந்தாளென்றோர்நொடியில்
வேந்தனுக்குநீர்போய் விளம்புவீரிட்சணத்தில்
வாய்ந்தமன்னனாலுமக்கு வரிசைகிடைக்குமென்றாள்

அந்தமொழிதான்கேட் டவர்கள்விரைவாயோடிச்
சிந்தைமகிழ்ந்து நின்று செப்பினார்மன்னனுக்கு
மிஞ்சிப்பசியாளருக்கு விரும்பியன்னமிட்டதுபோல்
துஞ்சுமுயிர்பிழைக்கத் துணிந்தவிழ்தமீந்ததுபோல்
மன்னன்செவியில் மனமகிழ்ச்சியுண்டாக
சொன்னார்கள் நல்ல சோபனங்காணென்றுசொல்லிச்
சொன்னமொழிகேட்டவுடன் தோள்கள்பூரித்ததனை
யின்ன நீர்சொல்லுமவ ளெங்கேயெங்கேயெனவே,
வந்துசொன்னபேர்க்கு வரிசைமிகக்கொடுத்து,
மந்திரியையங்கே வரவழைத்துந்தானுரைப்பான்,
விருதுபலவுடனே மின்னாட்கெதிரேபோய்க்
கருதியழைத்துவரக் கட்டளையிட்டானரசன்
மந்திரியங்கேயெழுந்து வாத்தியமெல்லாமுழங்கச்
சிந்தைமகிழ்ந்துபல சேனைபடைநெருங்கக்
கொடிகள்சுருட்டிக் குடைகள்பலநெருங்கப்
பிடியானைபெண்பரிகள் பெண்சேனைசூழ்ந்துவர
ஊழியப்பெண்கள் ஒருகோடிபேர்கள்வரச்
சூழ்ந்ததானுபதியாந் தோகையர்கள்முன்னடக்க
மங்கைக்கரசியிடம் வந்தெதிரேகண்டுகொண்டு
தங்கத்தினாலமைத்த தண்டிகையின்மேலேற்றி
சுற்றுந்திரைபோட்டுத் தோகையர்கள்சூழ்ந்துவரப்
பற்றிவருந்தானு பதிப்பெண்கள்முன்னடக்க
கொண்டுவந்துசேர்த்தார்கள் கோமானரண்மனையில்
தண்டிகைவிட்டிறங்கித் தனித்தோரரண்மனையில்
மின்னரசிதான்புகுந்து வீற்றிருந்தாளம்மானை
பொன்னரசிபோழகைப் பூவையரெல்லாம்புகழ்ந்தார்
வேலைக்கமைந்தசில மெல்லியரையேற்படுத்திச்
சீலசமையலுக்குந் திட்டப்படுத்திவிட்டான்
செய்யுஞ்சிறப்பையெல்லாஞ் செய்தந்தச்சேயிழைக்கு
வையகத்துவேந்தன் மகிழ்ந்திருக்கும்வேளைதனில்

மானரசைக்கொண்டுவந்த வல்லபிராமணத்தி
தானேயரசன் சமூகத்தைவந்துகண்டாள்
மின்னாளைக்கண்டவுடன் வேந்தன்மனமகிழ்ந்து
சொன்னாளனேகந் துதியானவார்த்தையெல்லாம்
மங்கையங்கேசென்றதுவும் மாதரசைக்கண்டதுவும்
சங்கதிகளொன்றுந் தவறாமலேயுரைத்தாள்
வேந்தனதைக்கேட்டு மிகவும்மனமகிழ்ந்து
பாந்தமுடனவட்குப் பட்சமாய்வார்த்தைசொல்லி
கனகாபரணங் கதித்தபொன்னாடையவள்
மனதாசைதீர வரிசையெல்லாங்கொடுத்து
என்சீமையிற்பாதி யிசைத்தபடிநான்கொடுத்தேன்
பின்சேதிகளிருந்தாற் பேசென்றுதானுரைத்தான்
மன்னர்பெருமானேயென் மைந்தனிங்குவந்தவுடன்
உன்னருளாற்சொன்னபடி உன்சீமைபாதிகொள்வேன்
பார்த்திபாவென்மகன்மேற் பக்ஷம்வைக்கவேணுமென
தோத்திரங்கள்சொல்லியந்த துட்டமுண்டைவீடுசெல
அன்றுகதிரோனடைந்துவிட்டான்மேற்குத்திக்கில்
மன்றலந்தராவிசய மன்னவனங்கேதுசெய்தான்
மாதரசுவீற்றிருக்கும் மாளிகையின்வாசல்வந்து
கோதையர்க்குத்தான்வந்த குறிப்புரைக்கத் தூதுவிடத்
தாதியருமுள்ளேபோய்ச் சாற்றினார்தையலுக்கு
பேதையுமப்போது பிரியமுள்ளாள்சொற்கேட்டு
மன்னவனுக்கோர்புறத்தில் மணியாசனம்விரித்துத்
தன்னிருப்புக்கூடே தனித்துத்திரைபோட்டு
மன்னவனையிங்கே வரவழைத்திவ்வாசனத்தில்
துன்னியிருக்கும்படிக்குச் சொல்லுமென்றாள்தாதிகட்கு
தாதியருமப்படியே தார்வேந்தனையழைத்து
மாதரசிசொன்னபடி வைத்தார்களாசனத்தில்
வந்திருந்தமன்னன் வளைதிரைக்குள்ளேயிருந்த
பைந்தொடியைநோக்கிப் பகர்வான்சிலவார்த்தை

அன்னமேமின்னூர்க் கரசேயுமக்குமனம்
இன்னமிரங்கிலேயோ இடங்கொடுக்கமாட்டீரோ
மாரன்கணை துளைத்த வழியாகவென்னுளத்தில்
நீரும்புகுந்துகொண்டு நிதம்வருத்த நீதியதோ
உள்ளபடியேயென் னுயிருசலாடுவதை
மெள்ளத்திரையெடுத்து விட்டாலறுத்திடலாம்
காமனெனதுயிரைக் கைப்பற்றிக்கொள்ளுமுன்னே
தாமதஞ்செய்யாது தழுவச்சமயமென்றான்
வேந்தனுரைத்தமொழி மெல்லிநல்லாளுங்கேட்டுக்
காந்துமனமடக்கிக் கனிவானவார்த்தைசொல்வாள்
மன்னவனேவும்முடைய மனம்போல்நடவாமற்
பின்னொருவர்க்காவோ பிரியமுடனிங்வந்தே
வலைக்குளகப்பட்டுவிட்ட மான்கடந்துபோய்விடுமோ
நிலைகிணற்றுநீரைவெள்ளம் நேரேகொண்டோடிடுமோ
அழகுமணவாளனுமை யல்லாமல்வேறுமுண்டோ
பழகுவதும்மோடலது பாரிலினியாருமில்லை
உமக்குநான்பாரியென்ப துண்மையிதற்கையமில்லை
தமைக்கலந்துநான்மருவுஞ்சமயமதைநானுரைப்பேன்
மனதுக்கிசைந்த மணவாளனெனக்குக்கிடைத்தால்
வினவுக்கௌரி விரதமிருப்பமென்று
அந்நாட்பிரார்த்தனை அடியேனுஞ்செய்திருந்தேன்
இந்நாளதுபோ லெனக்குநீர்தான்கிடைத்தீர்
ஆனதனுல்நாள்நாற்பத் தைந்துவரையவ்விரதம்
தானிருந்துபின்பு தழுவியுமைச்சேர்ந்திடுவேன்
இந்தவரம்நீ ரெனக்குத்தரவேண்டும்
அந்தவிரதத்துக் கமைந்ததெல்லாந்தான்வேண்டும்
மாநகருக்கோர்புறத்தில் மண்டபமொன்றுகட்டி
நானிருக்கவே ணுமதில் நாட்டிலுள்ளோர்யாரேனும்
எத்தனைபேர்வந்தாலும் என்றுமமுதம்படைக்குஞ்
சத்திரங்கட்டியன்ன தானஞ்செய்யவும்வேண்டும்

வந்தவர்க்கெல்லாம்பூரி மாருமலேகொடுத்துச்
சிந்தைமகிழச் செய்யவேண்டுமன்னவனே
என்றந்தமின்னு ளிசைத்ததெல்லாங்கேட்டரசன்
கன்றியிருந்தமனக் கலக்கந்தெளிவாகி
சேயிழையாள்சொன்னபடி செய்யென்றுமந்திரிக்கு
நேயமுடனே நிகழ்த்தினனம்மானை
மந்திரியுஞ்சொன்ன வகைப்படியெல்லாமுடித்தான்
கந்தமலரோதியந்தக் கன்னிமடம்புகுந்தாள்
சத்திரங்கட்டியன்ன தானம்நடத்திவந்தார்
நித்தியாதானம்பூரி நிறைவேற்றிவந்தார்கள்
பூரிகொடுத்துவரும் புதுக்காரியஸ்தர்களைக்
காரிகையங்கழைத்துக்கருதியோர்வார்த்தைசொல்வாள்
இருந்துவந்தபேரி லிருவர்களிலொருவர்
பிரிந்ததுண்டோவென்றவரைப் பேசிவிலைவிடுவீர்
வார்த்தையதுகேட்டவரும் மயங்கியேவான்முகத்தைப்
பார்த்தாரவர்களைப் பற்றியிங்கேவாருமென்றாள்
அப்படியேசொல்லி யவர்கள்கொடுத்துவந்தார்
எப்படியுபார்ப்பமென் றிவள்விரதம்பூண்டிருந்தாள்
விஜயதரமன்னவனும் மேவுந்தனமந்திரிக்கு
இசையுங்கலியாணமதற் கேற்றமுயற்சிசெய்து
பதிவாழரசருக்கும் பார்க்கமணவோலைவிட்டு
விதவிதமாய்ப்பட்டணத்தை விளங்கவலங்கரிக்க
உத்தாரஞ்செய்தபடி யொப்பியேமந்திரியும்
எத்திசைக்குமோலைகளை ஏவினனம்மானை
வேந்துநாட்பார்த்து விரலெண்ணிக்கொண்டிருந்தான்
பாந்தமகன்வரவு பார்த்திருந்தாள்பார்ப்பாத்தி

மந்திரிகுமாரன் யாத்திரைபோய்வருகுதல்.

இந்தவிதமா யிங்கிவரிருக்கமுன்போன
மந்திரியின்மைந்தன் வரலாறினியுரைப்பேன

அம்புவியிற்காசிநதி யாத்திரைதான்செய்யவென்று
செம்புகடுக்கனிட்டுச் செங்காவித்தூசுடுத்தி
கழுத்திலுத்திராட்சக் கண்டியுந்தான்புனைந்து
பழுத்தபற்றுவெண்ணீற்றுப் பையும்மடியில்வைத்து
பார்த்திபன்மேல்வைத்திருக்கும் பட்சமறவாமல்
தீர்த்தங்களாடிச் சிவஸ்தலமெல்லாம்பணிந்து
காசிநகாடைந்து கங்கைநதிநீராடிப்
பூசுரரைக்கூட்டமிட்டுப் புத்திசிகாமணியும்
சோதிடத்திலிதுவே துயர்நீங்குகாலமென்று
மாதிடத்தினூற்றிரும்பி வந்தான்வழிநோக்கி
மன்னவனை நான்பிரிந்து வந்தவளநாட்டினுக்கே
இன்னமுநான்சென்றாலங் கெதுவுந்தெரியுமென்று
வந்ததிசைநோக்கியந்த மந்திரியுந்தான்திரும்பிக்
கந்தமிகுங்காசிநீர்க் காவடியுந்தோளேந்திக்
காடுகடந்து கனத்தமலைகடந்து
நாடுகடந்து நகரம்பலதேடி
சேர்ந்தான்விஜயநகர்ச் சேர்க்கையுள்ளதேசமதில்
ஓர்ந்தோர்ந்துவந்தானங் குள்ளவிசேடமெல்லாம்
தன்னுடையசேதியொன் றுந் தட்டுப்படாமையினால்
இன்னமறிவோமென் றெழுந்துநடந்துவந்தான்
மந்திரியுமங்கே வருகின்றவேளைதனில்
எந்தத்திசைவழியு மிருந்துவருவோரெவரும்
தானேவிஜயநகர் தனக்குப்போம்பாதைவழி
போனாரொருமுகமாய்ப் போனவரைத்தான்பார்த்தான்
ஏதோபலவழிவிட் டெல்லோருமோர்வழியாய்
ஆகாரமொன்றைஎண்ணியதிவிரைவாய்ச்செல்லுகிறார்
நாமுமிவருடனே தண்ணில்விசேடமெல்லாந்
தாமேதெரியுமென்று சார்ந்தானக்கூட்டமதில்
விரைவாகச்செல்லுகிறீர் விசேடமுண்டோவென்றான்
அவரிலிவனுக்கொருவ னன்பாயெடுத்துரைப்பான்

மின்னாளைக்கல்யாணம் விஜயதான்செய்வதற்கு
இன்னாளிற்கொண்டுவந்தே யிருத்தியிருக்கின்றாராம்
அந்தமின்னாளோர்விரத மனுசரித்துக்கொண்டாளாம்
வந்தவரெல்லார்க்குமன்னன் வழங்கும்படியாயோர்
சத்திரமுங்கட்டியன்ன தானம்நடக்கிறதாம்
நித்தநித்தம்பூரி நிதியெவர்க்கும்நல்குவராம்
அந்தவிசேஷத்தை யறிவதற்குச்சத்திரத்தில்
வந்துபுசித்துப்பூரி வாங்குதற்குமாகவெண்ணிச்
செல்கின்றோங்காணெவருஞ் சேர்ந்துநீரெம்முடனே
நில்லாமல்வாருமென்று நிகழ்த்தினனம்மானை
அன்றவன்சொன்னமொழி யவ்வளவுந்தான்கேட்டான்
இன்றோர்புதுமையிதி லேதுமிருக்குமென்று
சந்தேகமாகியின்னந் தானறியவேணுமென்று
வந்தான்சிலதூரம் மாநகர்க்குச்சமீபமதாய்
அந்தநகருக் கடுத்துவருப் பாதையினில்
வந்துசெலும்போதுசில வழிப்போக்கரைப்பார்த்து
மேதினியோர்போற்றும் விஜயநகரந்தன்னிலே
ஏதும்விசேடமுண்டோ இயம்புமெனத்தானுரைக்க
விஜயநகர்வேந்தனொரு மின்னாளைக்கண்டுவந்து
வசமாக்கவென்றுகன்னி மாடத்தில்வைத்தனராம்
மானாளிருந்தவிடம் வாவிக்குள்மண்டபமாம்
ஆனாலவளுக் கரசனொருவனுண்டாம்
மன்னவனைவஞ்சித்து மாதைவெளியேற்றித்
தன்னாலேபார்ப்பனத்தி தனித்தழைத்துவந்தாளாம்
அந்தப்பிராமணத்திக் கழகுள்ளவோர்மகனும்
மைந்தனுக்குந்தாய்க்கும் வறுமையிற்சண்டைவந்து
சட்டுவத்தினாலவனைத் தலையிலடித்தாளாம்
எட்டுவயதாமவனு மெழுந்தானுங்கோபமதாய்
நேசத்தைவிட்டவனும் நெஞ்சம்வெறுப்பாகிக்
காசிக்குப்போவனென்று காளையவன்போனானும்

அந்தவிதங்காசிக் கவன்போனநாள்முதலாய்
இந்தவருடம்வரை யெட்டாச்சுதாம்வருடம்
வாசிக்குமாலையணி மார்பன்விஜயதரன்
யோசித்துமுன்னு னுரைத்தவுரைப்படியே
அவளுக்குத்தன்சீமை யதிற்பாதிதந்தாராம்
நவமணியும்வஸ்திரமும் நாலாவகைநகையும்
வென்றியராசன்கொடுக்க விரும்பியவள்வாங்கி
என்றுவருவான்மகனென் றிருக்கின்றாளாமவளும்
சத்திரத்தில்வந்தவர்க்குச் சாப்பாடுசெய்தபின்பு
நிந்தம்நித்தம்பூரி நிதிகொடுப்பாராம்பிதெல்லாம்
போனல்விளங்குமென்று புகன்றார்வழிப்போக்கர்
ஆனல்விசேடமுள தறிவோமென்றேயமைச்சன்
வாவியென்றும்மன்னனென்றும் வழுத்தியதுகேட்டு
ஆவிபதறியங்கே யாலோசனைகள்செய்து
அந்தநகரத்துக் கடுத்துவரும்போதிலங்கே
வந்தான் விஜயநகர் வாழ்க்கையுடையானொருவன்
எவ்வூர் நீரையாவென் றிவனையவன்கேட்கவவன்
இவ்வூர்விஜயநகர் யானிருப்பதென் றுரைத்தான்
அண்ணலேயும்மூ ரதுவாகில்வேந்தனுக்கோர்
பெண்ணழைத்துக்கொண்டுவந்த பேதைப்பிராமணத்தி
எந்தத்தெருவி லிருப்பதுவீடவட்கு
வந்தபெயரேது மைந்தர்களெத்தனைபேர்
காசிக்குப்போயிருக்குங் காதலன்மட்டுந்தானே
பேசிலவளுக்கினமும்பிள்ளை பெண்கள்வேறுமுண்டோ
இருந்தாலப்பிள்ளைகள்பே ரென்னவிதெல்லாமுமக்குத்
தெரிந்தாலுரையுமெனச் செப்புவானம்மானை
அந்தநகருக்குள் அரண்மனைக்குமேற்புறத்தில்
ஐந்தாவதுவீதி யக்கிராகாரமதில்
வீடொன்றிருப்பதுபேர் வெங்கட்டம்மாளெனவே
நாடெங்குந்தான்தெரியும் நாரியர்க்குநாமுரைத்தால்

மகனொருவனல்லாமல் மாற்றான்பெண்ணொன் றுமில்லை
ஜகமதனில்வெங்குவென்று சாற்றுவார்காணவன்பேர்
அந்தநாட்காசிக் கவன்போனானின்னமிங்கு
வந்ததாயில்லையென்று வழுத்தியவன்போனான்
அத்தலத்தான்சொன்ன தெல்லாமமைவாயிவன்கேட்டு
சித்தந்தனிலந்தச் செய்தியெல்லாமுள்ளடக்கிப்
பார்ப்பாத்திமைந்தனென்று பாலித்தவளிடத்தில்
போய்ப்பார்த்தாலெல்லாம் புலனும்வெளியாகுமென்று
சீலமிகுபுத்தி சிகாமணியுந்தேர்ந்தந்தக்
கோலநகர்வழியைக் கூடினனம்மானை
கூடிவழிநடந்து கோட்டையுங்கொத்தளமும்
மேடைகளுங்கண்டு விஜயநகருட்புகுந்தான்
மேவினனந்த விஜயநகர்வீதியிலே
காவடியோடிவனைக் கண்டவிளங்காளையர்கள்
ஆரையா நீரென் றவனைவிசாரித்திடவுந்
தீரமுடனிவனுஞ் செப்புவான்கேட்டவர்க்கு
என்னகாண் தம்பியரே யென்னையறியீரோவென்
அன்னைவெங்கட்டம்மாளை யறியாதபேருமுண்டோ
காசிக்குநான்போன கதைநீரறியீரோ
பேசிலென்பேர்வெங்குவென் றீ பின்னுமறியீரோ
வருடமுமெட்டானதனுல் மறந்தீரோவென்றனையும்
இருவருமென்மேற்பட்ச மிப்படியோவைத்திருந்தீர்
அம்மாள்சுகமோவென் னம்மாஞ்சியுஞ்சுகமோ
நம்மோடுநேயமுள்ள நண்பர்களெல்லாஞ்சுகமோ
சொல்லுமையாவென்று துரிதமுடனேகேட்டான்
நல்லதையாவுமையையோ நாங்களறியாதுவிட்டோம்
தாயாருடனே நீர் சல்லியங்கள்செய் துகொண்டு
போயுநாளாச்சுதல்லோ புகுந்தவிடம்நாமறியோம்
வாருங்காணென்றார் மருவிக்கலந்தார்கள்
சேருஞ்சிலபேருந் தெரிந்தார்விசாரணையால்

179850

ஓடிச்சிலபே ருரைத்தார்பார்ப்பாத்தியிடந்
தேடிச்சிலநாளாய்ச் செல்வனைக்காணாதிருந்தாய்
காசிக்குப்போனமகன் காவடியோடிங்குவந்தான்
யோசிக்கவேண்டுங்கா ணுண்மையிதுவென் றுரைத்தார்
வந்தான்மகனென்று மைந்தர்சிலர்சொன்னவுடன்
சிந்தாகுலந்தீர்ந்தாள் திடுக்கென்றெழுந்திருந்தாள்
எங்கேயெனதுமக னென்றுநடந்தோடிவந்தாள்
அங்கேசிலபே ரதோவாராரென்றுரைத்தார்
வந்தாளைக்கண்டுசில மைந்தர்மக னுரைப்பார்
அந்தாலோவாராளுன் னம்மாளைப்பார்த்திடென்றார்
கண்டானவனுமிந்தக் காரிகைதானென்றறிந்து
கொண்டானிதனாற் குறிப்பறிந்துகொள்ளானே
பிள்ளைவரும்வேடமதைப் பிராமணத்திதான்பார்த்து
துள்ளிநடந்தோடிச் சுருக்காயருகில்வந்தாள்
ஆவலுடனோடி யவள்வருதல்பார்த்திவனுங்
காவடியையங்கொருவன் கையிலேதான்கொடுத்து
தாயார்பாதந்தனிலே சாஷ்டாங்கமாய்விழுந்தான்
ஆயாளவனை யணைத்திருகையாலெடுத்து
முகத்தோடுதன்னுடைய முகத்தைவைத்துமுத்தமிட்டு
மிகத்தான்மனமுருகி விழிவழியேநீர்பெருக
கையாற்றழுவியடா கண்ணேயென்கண்மணியே
ஐயாஅரசே யருமையுள்ளபுத்திரனே
யாத்திரைக்குச்சென்றாயோ ஐயோநானுன்முகத்தைப்
பார்த்திருக்கக்காணாமற் பரதவித்துநின்றேனே
வந்தாயோவென்னுடைய மனஸ்தாபந்தீர்ப்பதற்கு
முந்தாநாட்கண்டகனா முழுதும்பலித்ததையா
சுகமாகவந்தெனது துக்கமெல்லாம்மாற்றிவிட்டாய்
மகனேயெனத்தழுவி மகிழ்ந்தாள்பிராமணத்தி
ஆமடியம்மாவுன் னருளினாற்காசிவரை
க்ஷேமமுடன்போய்வந்து சேர்ந்தேன்சிவன்செயலால்

சட்டுவத்தினுலென் தலையிலடித்ததினுல்
இட்டம்வெறுப்பாய்ப்போயின் றுனைத்தேடிவந்தேன்
மாதாவுடைய மனஸ்தாபம்வந்ததென்ருல்
தீதாகுமென்று திரும்பிவந்தேனுன்னிடத்தில்
இனிமேலுன் னுத்திரவு எப்பொழுதும்நான்கடவேன்
தனியேநான்சென்ருலுந் தாயாரேயுன்னருளால்
ஆபத்தொன்றில்லாமல் அனேகநதியாடிப்
பாபத்தைப்தீர்பதற்குப் பலனெல்லாந்தேடிவந்தேன்
அம்மாடிநம்முடைய அகத்துக்குநாம்போவோம்
சும்மாவாவென்றவனுந் தோளிற்சுமையெடுக்க
தாயும்மகனைத் தழுவிமனைக்கழைத்துப்
போயினர்வீட்டிற் புகுந்தார்கிளைகளுடன்
தாய்க்குந்தமர்களுக்கும் தான்கொணர்ந்ததீர்த்தமுடன்
வாய்க்கும்பிரசாதம் வழங்கியவர்பெற்றபின்பு
கூடிவந்தபேர்களெல்லாங் கூட்டங்கலைந்துதங்கள்
வீடுகட்குச்சென்ருர்கள் மேல்நடந்தவாறுசொல்வேன்
தாயுமகனுந் தனித்திருக்கும்வேளையிலே
நேயனன்னையைப்பார்த்து நிகழ்த்துவானம்மானை
முன்னளில்நம்மகத்தில முழுவறுமைதானுண்டே
இன்னளிற்செல்வமெலா மெங்குபெற்ருயென்றுரைக்க
அய்யாமகனே யாத்திரையாய்ப்போனபின்பு
மெய்வாடிசிந்தைநொந்து வெறுமையாநானிருந்தேன்
அப்போதிங்கேநடந்த அதிசயங்களென்மகனே
ஒப்போதக்கூடாவிவ் வூராளும்நம்மாசன்
வேட்டைக்குப்போயுடனே மீண்டுவரும்போதிலங்கு
காட்டிலொருவாவியுள்ளே கண்டொருகன்னிகையைக்
கண்டவந்தப்பெண்மீது காதல்கொண்டுகாவலவன்
கொண்டுவாவேணுமென்று குளக்கரையில் நிற்கையிலே
அந்தமடமாது அவளுடையநாயகனும்
இந்தமன்னன்வந்துநிற்கு மேற்பாடெல்லாந்தெரிந்து

வாவிக்குள்ளேகுதித்து மறைந்துவிட்டாரந்நேரம்
மேவிக்குளத்தில் நின்ற வேந்தன்மகன்வாடி
வள்ளமுந்தோணிகளும் வலையுங்குளிகாரர்களும்
கொள்ளைகொள்ளையாகவந்தக் கோமான்வரவழைத்து
குளத்திலேபோட்டிழுத்துங் குளிகாரராக்குளித்தும்
களைத்தவர்கள்போவதன்றிக் கன்னிவரக்காணுமல்
மன்னன்மனமேங்கியொரு வாரமட்டுமெங்கிருந்து
பின்னும்பலவிதமாய்ப் பேதைதனைத்தேடியங்கே
காணப்படாமையாற் காவலனிங்குவந்தான்
மாணிழையைத்தேடி வரவழைத்தார்வந்தாலும்
அவருக்கென்சீமை யதிற்பாதிதான்கொடுப்பேன்
தவறிக்கையில்லையென்று சாற்றுவித்தான் வள்ளுவனல்
அந்தமொழிநான்கேட் டதற்கானயுத்திசெய்து
தந்திரமாய்நஞ்சுகொண்டு சார்ந்தேனவ்வாவியிடம்
ஒப்பாரிவைத்தழுதே னுணர்ந்தந்தமன்னன்வந்தான்
அப்பா நீயாறென்றே னவன் தானவள்கணவன்
போற்றியுன்னைக்காப்பாற்றிப் பூசிப்பேன்வாவென்று
தேற்றியென்னைக்கூட்டியங்கே சேர்ந்தானவ்வாவியுளே
மையமண்டபத்திலுள்ளே மங்கையையும்தான்பார்த்து
தையலும்நானுமவள் தலைவனுடன் மூவருமாய்ப்
போனேமவ்வாவியுட்கீழ் பூமிவழிகண்டதங்கே
தானேயனேகம்படி தனையுங்கடந்துசென்றேம்
ஏழடுக்குமாளிகையொன் றெதிரேயிருந்ததவர்
வாழுமிடமதுபோல் மாநிலத்திலெங்குமில்லை
அவ்விடத்திலேசமையற் காகவென்னைவைத்திருந்தார்
வெவ்விடநஞ்சாலேயவ் வேந்தனையான்கொன்றுவிட்டு
கோதையைதேற்றியிங்கே கொண்டுவந்தேனுன்ருயார்
மேதினியாள்வேந்தனிடம் விருப்பமுடன்சேர்த்தேன்
பொன்னுடையுமதிக பூஷணமும்பொன்முடிப்பும்
மன்னனவன்கொடுத்தான் மாநிலத்திற்பாதியையும்

தருவேனென்ருனுடனே தார்வேந்தேயென்மகனும்
வருவான்சிலனுளில் வந்தபின்புதாருமென்றேன்
அந்தப்படியரச னுகட்டுமென்றுசொன்னுன்
இந்தப்படிமகனே யிங்குநடந்தகதை
மின்னுளவள்கௌரி விரதமுடிந்தபின்பு
மன்னவனேநான்கூடி வாழுவேனென்றுசொல்லி
கன்னிமாடத்திலந்தக் கன்னியிருக்கின்ருள்
மன்னவனேச்சேருமுன்னம் வைத்தபிரார்த்தனையாம்
ஐந்துநாள்நாற்பதுநா ளவ்விரதமென்றுரைத்தாள்
இந்தத்தினந்தானே இன்னமொருநாளுளதோ
வாயிதாமங்கையவள் வைத்தநாளென்றுரைத்தாள்
தாயுரைத்தவார்த்தையெலாந் தவருமற்ருன்கேட்டான்
அன்னையேயுன்றனைப்போலார்தான்செயப்போரார்
என்னைக்குறித்தலவோ வித்தனையுந்தேடிவைத்தாய்
பாவிமகளேசரிதான் பண்பாய்த்தண்ணீர்நிறைந்த
வாவிக்குளெப்படித்தான் வழிகண்டுபோனீர்கள்
அதுதான்தெரியவில்லை யம்மாசொல்லென்றுரைத்தான்
இதுகேளேபோமகனே யென்னசொல்வேனுச்சரியம்
நாகரத்னம்போலும் நலமானரத்தினத்தை
சேகரமாய்ச்சேர்த்துச் சிறந்தகணையாழிசெய்து
கைவிரலிற்போட்டிருந்தான் காவலன்மோதிரத்தால்
எவ்விதநீர்கண்டாலு மெவர்க்கும்வழிகொடுக்கும்
அந்தக்கணையாழியையும் யான்கொடுவந்துவிட்டேன்
இந்தாவிருக்குதுபா ரென்றெடுத்துங்காட்டிவிட்டாள்
காட்டினுள்மோதிரத்தைக் கண்டானவனுடனே
கேட்டான்தனக்கென்று கிழவியதற்கேதுசொல்வாள்
அய்யாகுழந்தாயென் னுஸ்திகளுன்னையன்றி
வையகத்தில்யார்க்கு வழங்கநான்வைத்திருக்கேன்
மைந்தனேயுன்னையன்றி மக்களெனக்குமுண்டோ
இந்தக்கணையாழி யெதற்குமுயர்ந்ததையா

சித்தமயங்காதே சிலநாட்கழித்துனக்குச்
சத்தியம்நான்கொடுப்பன் தடையின்றெனவுரைத்தாள்
நல்லதம்மா நீயெனக்கு நகையும்திரவியமுஞ்
செல்வவளநாடுஞ்சேர்த்துவைத்தேனென்றுரைத்தாய்
இந்தக்கணையாழிதனை யெனக்குத்தாவென்றதற்குச்
சிந்தைவிருப்பமற்றோ சிலநாட்செல்லட்டுமென்றாய்
மோதிரத்திலுள்ளாசை மொழியம்மாவென்மீது
ஏது நினைக்கவில்லை யிதுவோதாய்க்குள்ளன்பு
பச்சையுள்ளநாள்நாழிப் பால்கறக் காதபசு
கொச்சைநாள்வத்தாற் குறுணிப்பாலோகறக்கும்
நானாசைப்பட்டவுடன் நல்கமனமில்லா நீ
தானாகப்பின்னாலே சாதிக்கவோபோராய்
மூன்போனகாசி மொழியில்வழிதூரமில்லை
என்சேதியின்னமுனக் கேதுந்தெரியாதே
நீதானேவீட்டில் நிலையாயிருந்திடம்மா
மாதாவேநான்போரேன்வைத்திருநீதேட்டை என்றான்
பாலன்மொழிநாராசம் பாய்ச்சினதுபோற்கேட்டு
காலவித்தியாசமின்னங் கடக்கவில்லைநமக்கு
மைந்தனுக்குப்புத்தியிந்த வண்ணமிருக்குமென்றால்
எத்தவிதநாம்பிழைப்போ மின்னமிவன்முன்போலே
போனாலும்போய்விடுவான் போலேயிருக்குதென்று
மானாருமோதிரத்தை மகன்கையிலேகொடுத்து
சிறுபிள்ளைபுத்தியின்னந் தீரவில்லையோமகனே
மறுபிள்ளைக்கோகொடுக்க வைத்திருந்தேனிந்தநகை
உனதுமனம்போற்கொடுத்துன்னை நம்பிநானிருந்தேன்
இனிமேல்சரியா யிருந்துபிழையென்றுரைத்தாள்
வாங்கினானந்த மணிமோதிரமதனைத்
தாங்கினான்கையிலதைத்தன்விரலிற்பூண்டுகொண்டான்
அம்மாவினிச்சமய லாக்கிநீர்போடவென்றால்
உம்மாலுமாகாதிங் கொருவேளைமட்டினுக்கும்

சத்திரத்தில்நான்புகுந்து சாப்பிட்டுவந்திடுவேன்
பத்திரமாய்வீட்டிற் படுத்திருங்காணென்றுசொல்லி
சொல்லத்தகும்வார்த்தை சொல்லியந்தப்பார்ப்பணியை
மெல்லவிருத்தி வெளியில்வந்தானம்மானை
சீராய்வெளியேறித் தெருவீதியைக்கடந்து
தாரார்குழலணங்கின் சத்திரத்திற்போய்ச்சேர்ந்தான்
சார்ந்தோர்புறத்திற் றனியாகவேயிருக்கச்
சேர்ந்தானேபுத்தி சிகாமணியுமந்நேரம்
வாவிஎன்றுளங்குநடு மண்டபமொன்றுள்ளதென்றாள்
தேவியும்நாயகனுஞ் சேர்ந்திருந்தாரென்றுரைத்தாள்
பாதாளத்துள்ளிருக்கும் பசியபொன்மேடைஎன்றாள்
கோதாகநாயகனைக் கொன்றேனென்றும்புகன்றாள்
ஆகையினுலிதையெல்லா மாலோசிப்போமானல்
மோகமுடன்மன்னனெருமொய்குழலைக்கண்டிருப்பான்
பூவைவசப்பட்டவனும் புகுந்துமணிமாளிகையில்
தேவியுமன்னவனுஞ் சேர்ந்திருக்கும்நாளதினில்
சண்டாளிமன்னவனைச் சதிசெய்துகொன்றுவிட்டு
வண்டார்குழலிதனை வசமாக்கியதாகும்
ஆனலுமின்னு மறிவோமெனமயங்கித்
தானேமனதைத் தயிரியங்கொண்டுசென்று
சத்திரத்திற்போய்ப்புகுந்து சாப்பிட்டிளைப்பாறிப்
புத்திசிகாமணியும் பூரிகொடுப்பாரிடம்போய்
இருந்தானவரு மிருவரிலேயொருவர்
பிரிந்தாருண்டோவென்று பேசிநிதிகொடுத்தார்
கொடுத்தார்முகம்கண்டு குறிப்பாய்த்திகைத்துநின்றான்
பிடித்தாரவரிவனைப் பெருமாடிபாற்கொடுபோய்
ஆதரவாய்நிறுத்தி யவளுக்குச்சொன்னர்கள்
சேதியறிந்து திகைத்தங்கதுகேட்டு
இன்னுமிடத்தினிலே யேதுமிரகசியங்கள்
தன்னுல்வெளிப்படலாம் சாருவோமென்றெண்ணி

மாதரசியேகாந்த மாகத்தனித்திருந்து
தாதியொருத்தி தனையனுப்பிப்பாராவில்
வைத்தவனையிங்கே வரவழைப்பாயென்றுசொல்ல
அத்தருணம்போயவனையழைத்தெதிரேவிட்டுநின்றாள்
நின்றவனையப்புறத்தில் நீயிம்போவென்றுரைத்தாள்
அன்றவளும்போனு ளதற்குமேலாரணங்கு
முன்னலேநின்றாள் முகக்குறிநன்றாய்ப்பார்த்தாள்
இன்னனேமந்திரியா யிருக்கலாமென்றுணர்ந்தாள்
மங்கைமுகக்குறியும் மனக்குறியுந்தான்மதித்தே
இங்கிவளால்நம்மரச னியலறிவமென்றுணர்ந்தான்
அந்தச்சமயத்தி லமைச்சன்முகம்நோக்கி
வந்தவர்நீயார்காண் வரலாறுசொல்லுமென்றாள்
நானேர்பரதேசி நாட்டிலெங்குஞ்சஞ்சரித்து
தானேவந்தும்முடைய சத்திரத்தில்அன்னமுண்டேன்
பூரிகொடுப்பார்களென்னை பொறுக்கென்றுகைபிடித்து
வாருமென்றுகூட்டிவந்து வைத்தாரெனவுரைத்தான்
தேசாந்தரியானல் திரவியம்வாங்கும்போது
பேசாதிராமற் பிரமித்துப்பார்த்ததென்ன
பிரிந்தாரிருவரிலோர் பேருண்டாவென்றதற்குத்
தெரிந்தாரைப்போலே திகைத்துநீர்பார்த்ததென்ன
கூசாமற்சொல்லுமென்று கோதைநலாள்கேட்டவுடன்
தேசாந்தரியதற்குச் செப்புவானம்மானை
பூரிகொடுப்போர் புகலுமந்தவார்த்தையென்ன
காரியமோவென்று கருதினேனல்லாமல்
ஏதொன்றுநானறியே னென்றான்மதியமைச்சன்
காதொன்றுங்கண்ணுலுங் கபடமிவன்பேசுகிறான்
மெல்லநயம்பேசியினம் வெளிப்படுத்தவேணுமென்றே
அல்லநீரொன்று மறிந்ததில்லையானலும்
ஆதியிலும்மூரே தமைச்சர்குலம்போலுமது
சோதிமிகக்குறிப்புத் தோன்றுதெதுமூதலாய்

மிக்கபாதேசி வேடப்புனைந்திருமக்குத்
தக்கதிந்தவேடமென்று தானினைக்கக்கூடவில்லை
உள்ளதைச்சொல்லுமென வுரைத்தவுடனேயமைச்சன்
மெள்ளமெள்ளவந்தாள் வெளியிலிவள்வாக்காலே
இன்னம்வரட்டுமென வெண்ணியவனே துரைப்பான்
மன்னர்குலக்கொழுந்தேவழுத்துகிறவார்த்தையினல்
ஏதோவோர்காரியத்தா லென்னிடத்திற்சந்தேகம்
நீர்தானினைக்கிறதாய் நினைக்கிறேனுகையினல்
தங்களுடவாக்காலே தானேயச்சங்கதியை
இங்கெனக்குச்சொன்னு லெனதுவரலாறுகளும்
ஒருவேளையச்செயலுக் கொவ்வியிருக்கக்கூடும்
இருவோர்க்குமூடேயோ ரேதுவிருக்கக்கூடும்
ஆனதனுலுங்கள்வர லாற்றையுரைத்தருளும்
மானனேமீரென்று வழுத்தினன்மந்திரியும்
அங்கவளோதண்ணீரி லவிகிழுனில்லையிவன்
தங்கருத்துக்கொஞ்சங்கொஞ்சந் தானும்வெளியிடுருன்
இவனேயவனுகு மென்பதற்கோரையமில்லை
அவனுகில்முந்தி யறைவதனுற்றோஷமில்லை
சொல்வேனுனென்று அணிந்தந்தத்தோகைநல்லாள்
வல்லான்முகம்பார்த்து வழுத்துவாளம்மானை
மன்னன்மகனெருவன் மந்திரிமகனெருவன்
அன்னரிருவர்களும் அசுவமிரண்டேறி
ஆகாயவீதிவழி யாகவெல்லாப்பூவளமும்
வாகாகத்தான்பார்த்து வாரிதிபெல்லாங்கடந்து
வந்தாரோர்பூங்கா வனத்திலேவந்திறங்கி
சந்தோஷமாகித் தடாகமொன்றங்கேயிருக்கக்
கண்டார்படித்துறையைக் கறிவகையோடன்னமிங்கே
யுண்டாலுண்டுகளிப் புற்றிடலாமென்றவுடன்
மந்திரிநான்சென்றுகொண்டு வருகிறேன் நீருமிங்கே
குந்தியிருமென்றவனேர்குதிரைமேற்சென்றுவிட்டான்

பின்னந்தமன்னன் பிரிந்திருக்குஞ்சோலையிலே
தன்னந்தனியே தனித்திருக்கும்வேளையிலே
ஐந்துதலைநாகமொன்றவ் வரசன்றனைக்கடிக்க
வந்ததுகண்டவன்கை வாளாற்றுணித்துவிட்டான்
தாவிவெட்டுப்பட்டவைந்து தலைப்பாம்பினுரத்னஞ்
சீவரத்னஞ்சிந்தினதைச்சேர்த்தெடுத்துக்கொண்டரசர்
அக்குளத்திற்சென்றபின்னுண் டானகதைமுதலாய்
இக்கணத்திலிப்பதிசேர்ந் திருந்தகதையீராக
ஒன்றுந்தவறும லுரைத்தாளமைச்சனுக்காய்
அன்றுவரையெதிர்பார்த் தவனிறந்ததும்புகன்றாள்
சொன்னதெலாங்கேட்டுத் துரையிறந்தானென்றவுடன்
தன்னையறியாதுகண்ணீர் தாரைவழிந்தோட
தோகையரசே நீர் துரையிறந்தானென்றுசொன்னீர்
தேகமிருப்பதுவோ சிதைவாகிப்போனதுவோ
மின்னரசேசொல்லுமென்று விரைவாயவன்கேட்க
மன்னவனையந்தமொருமாளிகையில்வாடாது
பத்திரிலேபோட்டுப் படினமிட்டுப்பத்திரமாய்
வைத்திருக்கிறேனமைச்சன்வல்லபம்நோக்கியென்றாள்
என்றமொழிகேட்டவனு மிரங்கிநெடுமூச்சுவிட்டு
நின்றுவணங்கி நிகழ்த்துவானம்மானை
ஈன்றாளனையீர் நீ ரெதிர்பார்த்திருந்தவனும்
தான்றானப்பாவியென நவின்றுபினுந்தானுரைப்பான்
தாயே நீர்சொல்லிவந்த சங்கதியெல்லாஞ்சரிதான்
நாயேனவ்வாவியினில் ராஜனைவிட்டுவிட்டுப்
புகுந்தேன்பரியேறிப் போய்த்தங்கமாபுரியில்
தகுந்தாளொருத்தியிடஞ் சாதங்கறிவாங்கி
வர நினைக்கும்போதிலங்கே வல்லிரவுவந்ததினால்
இரவுவிடிந்தவுட னேகுவோமென்றிருந்தேன்
விடிந்தவுடனெழுந்து விரைவாய்வழிகளெல்லாங்
கடந்துவந்தேன்பூங்காவிற் காவலனைக்காணவில்லை

வாவிக்கரையினிலும் வனத்திலேபூஞ்சோலையிலுங்
கூவித்தேடித்திரிந்துங் கொற்றவனைக்காணுமல்
சித்தங்கலங்கியங்கே தேசிமட்டம்நின்றதனைக்
கைத்தலத்திற்பற்றிக் கடுங்காடெல்லாங்கடந்து
தங்கநகரில்வந்து தங்கியொருநாளிருந்தேன்
அங்கேபரிகளையோ ராள்வசத்திலொப்பிவித்தேன்
காயாசம்பூண்டுகொண்டேன் காசிநதியாடிவந்தேன்
ஆயாசந்தீருமென்றே யடைந்தேநக்காசிநதி
நீராடியங்கேயும் நினைத்தேனென்மன்னவனைக்
காராடுசோலைகளுங் காசினியுந்தேடிவந்தேன்
வந்தவழியிலுங்கள் வரலாறெல்லாஞ்சிலபேர்
விந்தைதனிலுரைத்த விதமெல்லாங்கேட்டுரைத்தேன்
பார்ப்பாத்திசெய்த பழிமொழியும்நான்கேட்டேன்
போய்ப்பார்ப்போமென்று புகுந்துவரும்வழியில்
அந்தப்பிராமணத்திக் கருமைமகனொருவன்
புந்திநொந்துகாசிக்குப் போனுனென்ருர்சிலபேர்
அந்தமகன்பேரு மவன்போனநாளுமவன்
சொந்தப்பெயரும்நனி சொல்பவர்பற்கேட்டறிந்தேன்
போவோமவளிடத்திற் போனுல்நடந்தகதை
யாவுந்தெரியுமென்றே யவள்மகனுனென்றுசொல்லி
காவடியுங்கொண்டந்தக் கன்னிமனைசேர்ந்தவனை
ஆவலுடன்ருயென் றனுசரித்துக்கொண்டவுடன்
தன்மகனென்றெவ்வளவுஞ் சந்தேகமில்லாமல்
என்மகனேகேளென் றிசைந்தாள்நடந்ததெல்லாம்
கையிலிட்டமோதிரத்தைக் கருத்தாகநான்வாங்கிக்
கையிலிட்டுவந்தேனீர் காணுமென்றுகாட்டிநின்ருன்
பார்த்தாளம்மோதிரத்தைப்பார்த்திபனைத்தானினைத்து
வேர்த்தாள்பெருமூச்சு விட்டாள்கட்டாண்மையுள்ள
மந்திரியின்புத்திதனை மதித்துமனமகிழ்ந்தாள்
சிந்தையிலையமெல்லாந் தீர்ந்தாள்பின்செப்பலுற்ருள்

பொய்யாதவாசகனே புத்திசிகாமணியே
அய்யாவுன்சொல்லா லடைந்தேனென துயிர்நான்
எனக்குமுயிர்கொடுத்தா யென் னுடையநாயகனுர்
தனக்குமுயிர்கொடுக்குஞ் சஞ்சீவியாகவந்தாய்
மன்னவரைநோக்கிமனம் வாடியெங்குநீயலைந்தாய்
உன்வரவுநோக்கியன்றே வுயிரின்னம்வைத்திருந்தேன்
இவ்வூரான்ராஜனுக்கு யானுரைத்தநாட்கணக்குஞ்
செவ்வையாயின்றோடே திர்ந்ததினியிங்கிருந்தால்
நானையவனென்னை நயந்தழைக்கத்தான்வருவான்
வேளையிதுவேயவனை விலகிவிட்டுப்போவதற்கு
தாமதமாயிருந்தாற் சதிவந்துநேருமையா
நீமனதிலெண்ணி நிகழ்த்துவாயென் றுரைத்தாள்
அம்மாவும்மாலென் னரசனைக்காண்பதன்றி
சும்மாநான்போவேனோ சொல்லைக்கடப்பேனோ
இந்நகர்வேந்தென்னோ டெதிர்த்துப்போர்செய்தாலும்
மன்னவனையானொருகை யானமட்டும்பார்த்திடுவேன்
இந்தச்சமயமதற் கிசைந்தசமயமல்ல
அந்தப்புனல்வாவி யதற்குநாம்போய்ச்சேர்ந்து
மன்னவனைக்காண மனத்துரிதமாகுமம்மா
மின்னரசேயுங்கள் விருப்பமுமப்படியே
இருக்குமென் றுநானினைத்தே னெப்படியோவுங்கள்
கருத்தைவெளிப்படுத்திக்காட்டுமம்மாவென் றுரைத்தான்
மந்திரியேயுன் னுடைய மனம்போலேயென்மனமும்
அந்தப்படியேசெய் யதுவேநலமுமென்றாள்
இஷ்டமென்றபோதே யிருவருமோர்மனதாய்க்
கஷ்டமெல்லா நீங்குதற்குக் காலமிதுவாகுமென்று
காவல்வைத்ததாதியருங் கடைவாயில்காப்பவரும்
மேவித்துயிலும்வண்ணம் வித்தையினாலேமயக்கிப்
பாதியிரவிலந்தப் பாவையுமந்திரியும்
தாதியருமந்தத் தலத்தாருங்காணாமல்

கன்னிமாடத்தைவிட்டுக் கலந்துவெளியேறி
அன்னவர்களவ்வூ ரகன்றுவழிநடந்து
பொழுதுவிடியுமுன்னே போய்த்தங்கமாபுரியில்
பழுதுவராமலொரு பசுங்காவிலோரிடத்தில்
மாதரசிதன்னைவைத்து மந்திரியவ்வூர்புகுந்து
கோதைபூவாணிச்சி கோலமனைதான்சேர்ந்து
கூறுவதெல்லாமவட்குக் கூறியபின்னங்குநின்ற
ஏறுபரிக ளிரண்டையுங்கைக்கொண்டகன்று
வந்துபூங்காவனத்தில் வார்கொண்டசுவமதைத்
தந்திரமாய்ப்பிணைத்துத் தாரார்குழலணங்கை
மனவேகியிலேற்றி மந்திரியுந்தன்குதிரை
தனிலேறிமந்திரத்தைச் சாற்றினன்காதுகளில்
குதிரையிரண்டினுக்குங் கூறினன்மந்திரத்தை
கதிரோனுதயமதிற் ககனவழியாய்நடக்கப்
பூங்காவனமும் புனல்வாவியும்நோக்கி
ஆங்கேயச்சோலைக் கருகாகவந்திறங்கி
கன்னியருந்தானுங் கதித்தபதிவிட்டிறங்கித்
துன்னுமரத்தடியிற் றுரகமதைக்கட்டிவைத்து
மங்கையுந்தானுமந்த வாவிக்குள்வந்தவுடன்
அங்குபுனல்வாவி யவர்க்குவழிகொடுக்க
மந்திரியுங்கண்டு மதித்தந்தவாவியின்கீழ்ப்
பைந்தொடியுந்தானும் படிவழியேசென்றார்கள்
இந்தப்படிமகிமை யிப்படியோவென்றுசொல்லி
அந்தப்படிகள்கடந் தடைந்தார்பொன்மாளிகையில்
ஆறடுக்குமாளிகையி னழகெல்லாம்பார்த்தமைச்சன்
ஏறினன்மங்கையுட னேழாம்பொன்மாளிகையில்
இன்னமணிமாளிகையு மிவ்வணங்குங்கண்டமன்னன்
என்னைமட்டுமோமறப்பா னென்றுமனத்தேமதித்தான்
மாதரசும்மந்திரியும் மாளிகையினுட்புகுந்தார்
கோதையருமங்கேயோர் கொட்டடிக்குள்ளேபுகுந்து

மன்னவனை வைத்துப்பூட்டி வைத்தவறையைத்திறந்து
முன்னிருந்தபெட்டகத்தின் மூடிதனைத்திறந்து
காட்டினுள் மந்திரிக்குக் கண்டான்மதியமைச்சன்
மூட்டினுள்வெந்துயரை முட்டிவிழுந்தானவனும்
கையான்முகத்திற் கனமாயறைந்துகொண்டான்
ஐயாவேஐயாவே அழகுபுவனேந்திரனே
உன்னைப்பிரிந்துநா னுயிரின்னம்வைத்திருந்தேன்
என்னைப்பிரிந்து நீ யிருந்துவிடலாமோ
மன்னர்குலவிளக்கே மறுமன்னர்போரேறே
தன்னுயிர்போன்மன்னுயிர் தாங்குஞ்செங்கோலரசே
புத்திக்களஞ்சியமே போதநிறைப்பொக்கிஷமே
வித்தைக்ககத்தியனே வேல்வேந்தன்கண்மணியே
மெய்யாயிறந்தாயோ விளையாட்டுச்செய்தாயோ
அய்யாவென்றின்ன மனேகமாய்த்தான்புலம்பி
சோர்ந்துவிழுந்து துணுக்கென்றெழுந்திருந்து
காந்திமனது கலங்கினுன்மந்திரியும்
மந்திரிதன்சிந்தை மயங்குவதைத்தான்பார்த்து
பைந்தொடியுந்தேறுதலை பண்ணியவனுக்குரைப்பாள்
பொல்லாதகாலம் புரவலனைக்கொன்றது நீர்
எல்லாமறிந்திருந்து மேகினுலென்னசெய்வேன்
ஆனபடியாச்சுதினி யாங்காரியாமதனைத்
தானினைத்துச்செய்யிலன்றேசஞ்சலமுந்தீர்த்திடலாம்
மன்னனுயிர்பிழைக்கும் வகையதனை நீதேடி
என்னையுமிருண்டாக் கெனவுரைத்தாளேந்திழையாள்
தத்தைமொழியாளுரையைத் தான்கேட்டுமந்திரிதன்
சித்தமதைத்தேற்றித் தெளிந்தபின்னேதுசெய்வான்
எண்ணெயிட்டபந்தலுக்கு ளிருந்தமன்னர்தேகமதை
வண்ணமணிப்பெட்டியிலே வகையாயெடுத்துவைத்து
வெந்நீரினுற்கழுவி வெண்ணீறள்ளித்தெளித்துப்
பன்னீர்தெளித்துப் பரிமளமுந்தான்பூசி

கைவசத்தில்வைத்திருந்த காசிநதிதீர்த்தமதை
மெய்முழுதுந்தெளித்து மின்னுள்முகம்பார்த்து
மானமேசேசற்றே மறைவாக நீரிருந்து
நானழைக்கவாருமென்று நங்கையையோர்பாலனுப்பி

### இராஜகுமாரனுக்கு மந்திரிகுமாரன் உயிருண்டாக்குதல்.

மூடிக்கொண்டுபெட்டகத்தை மூடியெதிரேயிருந்து
ஓடித்திரியும்மனத்தை ஒழுங்காய்வசப்படுத்தி
தபத்தாலுயர்ந்தோர் தனக்குபதேசித்தபடி
செபித்தானுயிர்பிழைக்கச் செய்யுமணிமந்திரத்தை
மந்திரத்தையுச்சரித்து மகதேவற்பொற்பதத்திற்
சிந்தைதனையிருத்திச் செபித்தானொருசாமம்
சாமஞ்செபித்தபின்பு சடத்திலுயிருண்டாகும்
நேமக்கணக்கறிந்து நீக்கினான்பெட்டியினை
மூடிதனைத்திறந்து முகத்தையவன்பார்க்கையிலே
ஆடியுடல்கைகா லசைந்ததுகாணந்நேரம்
பாங்கிலிருந்தமைச்சன் பார்த்திருக்கும்போதரசன்
தூங்கியெழுந்தவர்போற் றுணுக்காவெழுந்திருந்தான்
நித்திரைசெய்தான்போல் நிருபனெழுந்திருந்து
புத்திசிகாமணிதன் புதியமுகந்தான்பார்த்தான்
மண்டலத்தார்வாழ்ந்துபொய்கை மன்னன்மதிமுகத்து
கண்டகவிமனம்போற் களித்தான்புவனேந்திரன்
மன்னனெழுந்தவுடன் மந்திரியைப்போய்த்தழுவிக்
கன்னத்தொடுகன்னம்வைத்தே கட்டியணைந்தான்காண்
புத்திசிகாமணியே போதஞ்சிந்தாமணியே
இத்தனைநாள்வரைக்கு மெவ்விடத்திற்போயிருந்தாய்
இந்தக்கீழ்பூமிவழி யெப்படி நீகண்டுவந்தாய்
அந்தப்புனல்வாவிவழி யாருனக்குக்காட்டினவர்
தாகத்தாலிந்தவழி நான்கண்டுவந்திருந்தேன்
மோகத்தாலுன்னை முழுதுமறந்துவிட்டேன்

நாலுநாட்சென்றபின்பு நானுமுனை நினைத்தேன்
சோலையிற்போய்த்தேடிச் சுற்றிவந்துங்காணவில்லை
வாடித்திரும்பியிங்கே வந்திருந்தேன்மங்கையுடன்
தேடி நீயென்னைவந்து சேர்வதெந்நாளென்றிருந்தேன்
நான்செய்தநல்வினையால் நாடி நீயிங்குவந்தாய்
தான்செய்திருந்த தவமேதவமலவோ
என்றுபலவாறு யிரங்கினான் மன்னவனும்
நன்றையாவிங்கே நடந்ததறியீர்போலும்
எல்லாம்விஸ்தாரமதா யினிப்பேசலாமரசே
நல்லார்பொல்லாரையவர் நடத்தையினாற்கண்டிடலாம்
வேந்தனேயென்றமைச்சன் விளம்பியதெல்லாங்கேட்டு
வாய்த்தமடமாது மனதுபூரித்திருந்தாள்
மறைவிலிருந்தமங்கை மன்னன்பிழைத்தெழுந்த
முறையுமவன்வார்த்தை மொழிவதுவுந்தானறிந்து
மந்திரியேயங்கேநான் வரலாமோவென்றுரைத்தாள்
அந்தமொழிகேட்டமைச்ச னன்னையேவாருமென்றான்
மங்கையுடனேயெழுந்து மன்னன்முன்வந்துநிற்க
அங்கவளைக்கண்டவுடன் அணங்கே நீயிந்நேரம்
எவ்விடத்திற்போயிருந்தா யென்னுடையமந்திரியும்
இவ்விடத்துவந்துவிட்டான்யான்செய்தபாக்கியமே
கண்டாயோவென்றுரைத்த காவலவன்சொற்கேட்டு
வண்டார்குழலிகண்ணீர் வழியநின்றுதானுரைப்பாள்
நல்லதையாமன்னவனே நானும்மாற்பட்டதுயர்
எல்லாமுரைப்பே னெழுந்திருந்துவாருமென்று
மன்னவனும்மங்கையரும் மந்திரியுமாய்ச்சேர்ந்து
பின்னேரிடத்திற் பிரியமுடன்வந்திருந்தார்
வந்திருக்கும்போதிலந்த மந்திரியைப்பார்த்தரசன்
இந்தநாளுன்வரலாறெல்லாஞ்சொலென்றுரைத்தான்
பின்னாலேயும்மைப் பிரிந்தகதைநானுரைப்பேன்
முன்னாலேதாங்கள்பட்ட முறையெல்லாங்கேளுமென

மந்திரியவ்வாறுரைக்க மன்னன்முகம்பார்த்துச்
சுந்தரமாதுசொல்லத் துடங்கினளம்மானை
யாராரசேயும்முடைய பார்ப்பாத்திசெய்துவைத்த
சீரழிவையெல்லாஞ் சிறுதுமறியாமல்
இருந்தபடியே யிருக்கிறேமென்றேநீர்
வருந்தலறியாதிருந்தீர்மன்னவனேயென்றுரைத்தாள்
அப்போதரச னறியேனென்றினையும்
எப்போதும்போலே யிருக்கிறேனென்றுரைத்தான்
எண்ணெயிட்டுநீர்முழுகி யிருந்தீரேயப்பொழுது
பெண்ணைப்போல்வந்துற்றபிராமணத்திசெய்ததென்ன
விள்ளுமென்றாளப்போது வேந்தனுரைப்பானிசைந்த
கொள்ளைப்பசியுடனே குழந்தாயிருப்பானேன்
அன்னம்படைப்பே னருந்துவாயென்றுரைத்தாள்
கன்னிவரட்டுமென்றேன் கன்னிவரச்செல்லுமின்னும்
வைத்தரசமிருக்கு வாயுவுக்கொள்ளுமுன்னம்
புத்திராவுண்ணென்றாள் பொருந்தவேநான்குடித்தேன்
குடித்தவுடனேமனத்தைக் குமட்டிக்குரல்புரட்டித்
துடித்தபுழுப்போற்புரண்டு சோர்ந்துகிடந்துநொந்து
விருத்தமாய்க்கண்சுழல மெய்வேர்த்துநெஞ்சடைக்க
வருத்தமாய்ப்புத்தி மயங்கினேன்மாதரசே
அதுதான்தெரியுமங்கே யப்பால்நடந்தகதை
எதுவுந்தெரியாதெனக் கென்றானேபார்வேந்தன்
சண்டாளிசெய்த சதிக்கிதுவேசாட்சியென்று
கண்டேன்விஷத்தைக் கரைத்தாள்போற்காணுதென
அய்யோநானும்மை யடுத்துவந்துபார்க்கையிலே
மெய்யாவிறந்து வெறுந்தேகமாயிருந்தீர்
கண்டுநான்சிந்தை கலங்கியலறும்போது
முண்டைச்சியென்னை முனிந்தாள்பயமுறுத்தி
நானும்பயந்து நமக்குவிதியிப்படியோ
தானிருந்ததென்று தயங்கினேனப்பொழுதோர்

எண்ணமெனக்குலந்த திறந்தார்பிழைத்துவரப்
பண்ணும்வித்தைமந்த்ரி படித்துளானென்றொருநாள்
எனக்குநீர்சொல்லி யிருந்தீரல்லோவதைநான்
நினைத்தேனதனாலே நேயமுள்ளமந்திரியைக்
கண்டாலுங்காண்போமா காலமுமக்குயிரை
யுண்டாக்கவேண்டி யுடலிருக்கவேணுமென்று
வேந்தேநானும்முடைய மெய்யைநெய்ப்பந்தலிட்டுச்
சேர்ந்தேன்பூமிக்குளென்று செப்பியதுமுதலாய்
மந்திரியால்மன்னனுயிர் வந்தெழுந்ததீருகப்
பைந்தொடியாள்சொல்லிப் பரதவித்தாளம்மானை
பட்டதுயரமெல்லாம் பாவைசொல்லத்தான்கேட்டுக்
கஷ்டமெலாமின்றோடே கழிந்ததென்றான்காவலவன்
அப்பாலுமங்கைபட்ட ஆபத்தெல்லாம் நினைத்தே
யெப்போதிதற்கென் றிருப்பமனந்தளர்ந்தான்
மந்திரியும்மன்னவனை வாவியில்விட்டன்னமதைச்
சிந்தையுடன்கொண்டுவரச் சென்றகதைமுதலாய்
மாதரசைக்கண்டந்த மங்கையுடன்மாவியில்வந்
தாதரமாய்மாளிகையி லடைந்தகதையீருகச்
சொல்லிமுடித்தான் துயர்க்கடலில்மூழ்குமந்த
வல்லிதுன்பந்தீர்ப்பதற்காய்வந்தமதியமைச்சன்
வேந்தனதுகேட்டவுடன் மெத்தமனந்தளர்ந்து
தேர்ந்தமைந்தபுத்தி சிகாமணியைப்பார்த்துரைப்பான்
என்னையுங்காப்பாற்றிவிட்ட யென்னால்வருந்துமிந்த
மின்னையுங்காப்பாற்றி மிகுந்புகழ்நீபடைத்தாய்
மந்திரிமார்தங்குலத்தில் மாணிக்கம்போலுதித்தாய்
எந்தவுலகத்திலுமே னிசைவிளங்கச்செய்துவைத்தாய்
தாயார்க்குந்தந்தையர்க்குந் தவருதுயிர்கொடுத்தாய்
நீயிருக்கும்போதுகுறை நேருமோவென்றுரைத்தான்

## புவனேந்திரன் தனது வீரப்பாடு சொல்லுதல்.

இந்தப்படியா யிவர்களொரு மூவர்களுந்
தந்தமது செய்கையெலாந் தனித்தனியேதா னுரைத்து
வந்ததுயரமெல்லாம் மன்னன்மகனெண்ணியெண்ணிச்
சிந்தைவருந்திச் சினந்துரைப்பான் மந்திரிக்கு
நீதிநெறியை நெஞ்சில்நினையாமல்
ஜாதியின்வீரமதைச் சற்றுமெண்ணிப்பாராமல்
என்னையிந்தமோசடிசெய்தென் னுயிர்க்கொப்பாயிருந்த
மின்னையுங்கைக்கொண்டுசென்ற விஜயநகர்க்காவலனை
கத்திமுனையாலணங்கின் கட்டழகைப்பார்த்தகண்ணைக்
குத்திக்கலக்கிமையல் கொண்டநெஞ்சையும்பிளந்து
பருந்துக்குங்காக்கைகட்கும் பாரக்கழுகினுக்கும்
விருந்துக்கிடமாக்கி வெற்றித்தாருஞ்சூட்டி
பட்டணத்தைச்சூறையிட்டுப் பார்ப்பாத்தியைப்பிடித்து
கட்டியடித்துநடுக் கழுவிலேபோட்டுவைத்து
இத்தனைக்குக்காரணமா யிருந்த அவன்மந்திரியைச்
சித்திரவதைபண்ணிச் செகப்ரசித்தஞ்செய்யாமல்
ஏதுமனவீரமில்லா தேழையர்போல்நானிருந்தாற்
பேதையருமென்னையொரு பேடியென்றுசொல்லாரோ
தாலபுரந்தரனுஞ் சவுகவில்வேந்தனுக்குப்
பாலனெனநான்பிறந்தும் பகைக்கெளியனாவேனோ
ஒலிக்குங்கடலுலகி லொரியுமோவிந்தவசை
சலிக்காதுசென்றுநான் சக்கவெற்றிபெற்றிடுவேன்
ஆதலினால்யானோ ராசனமகனென்றிருந்தும்
பேதையர்போலாவேனோ பேசென்றானம்மானை
வேந்தன்மகனுரைத்த வீரக்குறிப்பையெல்லாம்
சேர்ந்துயர்ந்தபுத்தி சிகாமணியுஞ்செப்பலுற்றான்
வரைசேர்புயத்தரசே மன்னர்மன்னர்போரேறே
உரைசேரநீருரைத்த துண்மையேயாகுமையா

அந்தவிஜயநகர்க் கடியேனன்றுளடைந்து
பைந்தொடியைக்கண்டு பழங்கதையெல்லாங்கேட்டு
நெஞ்சங்கொதித்தே னெரித்ததிருக்கண்புருவம்
வஞ்சனவன்தலையை வாளுக்கிரையாக்க
எண்ணினேனப்பொழுது என்மனத்தோர்யோசனையும்
பண்ணினேனிந்தப் பகைவரையாம்வெல்லநின்றால்
பார்வேந்தங்கேமாண்டு பாதலத்திலேகிடக்க
ஆருயிருண்டாக்கிவைப்ப ரவ்விடம்யாஞ்செலுவோம்
என்றுகருதியல்லோ எளியேனவனுயிரை
இன்றுவரைவைத்துநா னிவ்விடத்துவந்துகண்டேன்
எனக்கேமனரோஷ மிப்படிக்குண்டாமென்னில்
வனக்கேசரியுமக்கு மனவயிரம்வாராதோ
சிங்கமெதிர்த்ததென்றாற் சிறுநரிநேர்நின்றிடுமோ
எங்களரசேயுமக்கிங் கெதிரிந்தப்பூவிலுண்டோ
உம்முடையபாரியென்றே யுணர்ந்தால்விஜயநகர்ச்
செம்மலிந்தமாதைவஞ்சஞ் செய்யநினைப்பானோ
மண்டலத்தில்நீதிதப்பி மாந்தரெவராலும்
தண்டிக்கவேண்டுவது தருமமென்பீராமாகில்
அடியேனிம்மாதரசை யவன்காவலைக்கடந்து
விடியாமுன்கொண்டுவந்த விவரமதையறிந்தால்
நாட்டரசர்க்கெல்லாம் நகைப்புக்கிடமாகி
வீட்டிலிருந்துசற்றும் வெளியேறவெட்குற்று
பேடியிலும்பேடியென்று பேராவேனிச்மரை
நாடிநாம்செல்வதிலோர் நயமில்லைமன்னவனே
வேந்தன்நமக்கு விடைகொடுத்தநாட்கணக்கை
யாய்ந்தால்நாளைத்தினத்தோ டானதொருவருடம்
காலமிடம்வலிமை கண்டுபகைமன்னவர்தஞ்
சீலமுந்தேர்ந்தலவோ செயவேண்டும்போரரசே
என்றுபலநீதி யிசைவாயெடுத்துரைத்து
வென்றியரசனெஞ்சில் விளைந்தகோபாக்கினியைத்

துன்னும்தழலவியச் சோனைமழைபெய்ததுபோல்
தன்னுரியசொற்களெனுந் தண்ணீரினாலவித்தான்
மந்திரியின்சொல்லையெல்லாம் மன்னன்மகன்கேட்டுச்
சிந்தையின்மேற்கொண்ட சினமடங்கித்தானிருந்தான்
அப்போதுமந்திரியும் அரசன்முகம்பார்த்துரைப்பான்
எப்போதும்போலே யிருப்பதினிக்கூடாது
நாமிங்கேவந்துவெகு நாளாகிவிட்டதினித்
தாமதஞ்செய்தாலுமது தந்தைமனஞ்சகியார்
தாயார்தமருந் தன்மனஞ்சலித்திடுவார்
ஆயாசப்பட்டிருப்பா ரமைச்சன்முதன்மந்திரியும்
மாதரசுங்கற்ப வதியாயிருக்கிறார்
ஆதலினால்நம்பதிக்கே யாஞ்சேரவேண்டுமையா
மன்னவனேயென்று மதித்துரைத்தான்மந்திரியும்
அன்னபடிபயண மாகவென்றான்மன்னவனும்
அந்தத்தருணமதி லழகுபூலோகரம்பை
முந்திச்சமையல்செய்ய முதன்மாளிகையில்வந்து
கொப்பரைவெந்நீராடிக் கூந்தலையுந்தானுலர்த்தி
பொற்புடவைகட்டிப் புனிதவெண்ணீரணிந்து
தன்னுரியபூசை தவறாமலேமுடித்து
அன்னங்கறிவகைக ளறுசுவையுந்தான்சமைத்தான்
அத்தருணந்தன்னி லரசனும்மந்திரியுந்
தத்தமதுபூசைமுறை தவறாமலேமுடித்தார்
அன்னம்பொருநடையா ளன்னங்கறிபடைக்க
மன்னனும்மந்திரியும் மகிழ்ந்துண்டிளைப்பாறிச்
சந்தனந்தாம்பூலந் தரித்தோரிடத்திருக்க
வந்தனந்தானுமுண்டு மனங்களித்தாள்மாதுநல்லாள்
மந்திரிதன்வேந்துரையால் மாளிகையெல்லாம்போய்
விந்தையெல்லாம்பார்த்தவர்க்கு வேண்டுங்கருவிகளும்
பொன்னுடையுஞ்சிறந்த பூஷணமுந்தானெடுத்தான்
மின்னாளுமங்கவட்கு வேண்டியதெல்லாமெடுத்தாள்

அப்பாலமைச்ச னறைகளையெல்லாம்பூட்டித்
தப்பாதிருக்கத் தனதுமுகரொன்றுவைத்தும்
அரசனணிந்தகணை யாழிமுகரொன்றுவைத்தும்
விரசுடனேவந்துபுவி வேந்தனையும்மங்கையையும்
வணங்கியழைத்து மணிப்படியெல்லாங்கடந்தே
இணங்குகுளமுங்கடந்தா ரெய்தினுற்சோலைதனில்
பூங்காவனத்திற் புகுந்தாரம்மூவர்களும்
பாங்கரயங்கோர்மரத்திற் பாவைதனையிறுத்தி
மரத்தின்கிளைகள்வெட்டி வாகாயோர்தேர்சமைத்துக்
கரத்தினதுவல்லமையைக் காட்டினுன்மந்திரியும்
மந்திரியாற்செய்துவைத்தமணித்தேரைப்பார்த்தரசன்
இந்திரவிமானமிதிற் கீடல்லவென்றுரைத்தான்
செந்திருபோலிருக்குஞ்சேயிழையைத்தேரில்வைத்து
அந்தரத்திலோடு மசுவமிரண்டும்பூட்டி
மன்னவனும்மந்திரியும் வாம்பரியின்மேலேறிச்
சொன்ஞர்பரிச்செவியிற் சூட்சமமந்திரத்தை
குதிரையிரண்டும்வழி கொண்டதாகாயமதில்
எதிரேறிச்சென்ற திரண்டுமந்தமேற்றிசையில்
செல்லும்வழியிலந்தத் தேசவளங்களெல்லாம்
மெல்லியரேபார்த்திடென்று வேந்தனுந்தான்காட்டி
சென்ருர்கடல்கடந்து தேசம்பலகடந்தார்
அன்ருேர்பூஞ்சோலை யழகுகண்டுதானிறங்கி
பூமிதனிற்சிறந்து புரவிவிட்டுக்கீழிறங்கி
தேமலழகியையுந் தேரைவிட்டுக்கீழிறக்கி
சாலவிளைப்பாறித் தான்போகவேணுமென்ருேர்
ஆலவிருட்சத்தி னடியிலேபோயிருந்தார்
மந்திரிகைவாளுருவி மன்னன்பாற்காத்திருக்கப்
பைந்தொடிதன்மடியிற் படுத்தான்புவிராஜன்
மாதுமடிமீது மன்னன்தலையைவைத்துக்
காதலுடன்படுத்துக் கண்துயின்ருரம்மானை

மன்னவன்கண் துயில மந்திரிபாராக்கொடுக்கக்
கன்னியந்தமன்னவன்மேற் கைவருடிக்கொண்டிருக்க

விஜயநகர வரலாறு.

இந்தவிதமாக யிவர்களிங்கேயிருக்க
அந்தவிஜயநக றடுத்தகதைநான்புகல்வேன்
வந்தபரதேசியென்னும் மந்திரியுமாதாசும்
அந்தநாளவ்விரவி லகன்றுவெளியேறியபின்
வேந்தர்கள்வேந்தன் விஜயநகராதிபதி
ஏந்திழையாள்சொற்படியே யெண்ணினன்நாள்தனை
இன்றையதினத்தோடே ஏந்திழையாள்சொல்லியநாட்
சென்றுவிட்டதென்று தெரிந்தந்தநாளிரவில்
ஆலோசித்தேயிருந்தா னன்றுவிடிந்தபின்பு
மாலோடரசன் மறுநாளுதயமதில்
கன்னிமாடத்திலந்தக் கன்னியிடம்வைத்திருந்த
மின்னிடையார்தாதியரை விரைவிலழையுமென்றான்
வேந்தன்மொழிகேட்டு விரைவிற்சிலரோடி
ஏந்திழைமார்மாடமதி லெய்துஞ்சமையமதில்
அங்கிருந்ததாதியர்கள் ஆயிழையாளவ்விரவில்
தங்கியிருந்தவிடம் தனிலிருக்கக்காணுமல்
நெஞ்சந்திடுக்கிட்டு நிலைவுதடுமாறி
யஞ்சியந்தமாளிகையி லறைகளெல்லாந்தேடி
எவ்விடத்துங்காணும லேங்கினர்தாதியர்கள்
அவ்விடத்திலேகாவலாளிகளையுங்கேட்டார்
எல்லாருங்காணேமென் றியம்பினுரல்லாமல்
நல்லாளைக்கண்டமென்று நவின்றொருருவரில்லை
வாசல்காப்போருமிங்கே வரக்காணேமென்றூர்கள்
பாசிழையாள்பட்சியைப்போற்பறந்துதான்போனாளே
ஆரோவொருவன்வந்தானவனைப்பாராவில்வைத்தார்
தாரோதிபின்பவனைத் தனித்தழைத்துப்பேசலுற்றாள்

அவனும்வெளியில்வந்த தாகவுந்தான்காணவில்லை
எவன்நமன்போலே யிருந்தான்பரதேசி
பரதேசிபோலெவனோ பாவனைசெய்துவந்து
வரிசேர்விழியாளை மயக்கிக்கொண்டோடினனோ
கைம்மயக்கோமெய்ம்மயக்கோ கன்னிசெய்தவஞ்சகமோ
மெய்ம்மயங்கிப்போனோ விடியமட்டுந்தூங்கிவிட்டோம்
மன்னவன்செய்தண்டனைக்கு வசமாக்கிவிட்டோமே
என்னசெய்வோம்நாமினியென்றேங்கினார்தாதியர்கள்
பாங்கியர்களேங்கிப் பரிதவித்துநிற்கையிலே
ஆங்கழைக்கவந்தோ ராசனுமையழைக்க
உத்தரவுசெய்தாரென் றுரைத்தாரந்நேரம்
சித்தங்கலங்கித் திரும்பினார்தாதியர்கள்
வேந்தன்சமூகமதை மெல்லியலார்வந்துகண்டு
பாந்தமுடனேவணங்கிப் பக்கத்தொதுங்கிநின்றார்
போற்றிநின்றதாதியரைப் பூமனன்பார்த்துரைப்பான்
நேற்றுவரைமங்கைசொன்ன திருதிநாளுள்ளதினி
இன்றுமனஞ்சூட்டுதற்கே யிங்கழைத்துவாருமென்று
மன்றலர்ந்தமார்பன் வழுத்தினனம்மானை
தரைவேந்தன்சொன்னமொழி தான்கேட்டதாதியர்கள்
உரைவாய்குழறி யுடலம்நடுநடுங்கிக்
கைகட்டிவாய்பொத்திக் கருத்துமிகக்கலங்கி
மைகொட்டுங்கண்ணார் வழுத்துவார்மன்னனுக்கு
போர்வேந்தரெல்லாம் புகழும்வெற்றிவேல்வேந்தே
பார்வேந்தேசொல்லப் பயமாயிருக்குதென்றார்
ஏதடிதாதியரே ஏதும்விசேடமுண்டோ
மாதரசியேதும் வகைமோசஞ்செய்ததுண்டோ
அஞ்சாமற்சொல்லு மதிசயங்களுண்டானல்
வஞ்சியரேயொன்று மறையாமலென்றுரைத்தான்
வார்த்தைதனைக்கேட்டு மனதுதயிரியமாய்ப்
பார்த்திபனேநேற்றோர் பரதேசியிங்குவந்தான்

சத்திரத்திலன்னமுண்டான் தன்னையந்தக்காரியஸ்தர்
பத்திரமாய்க்கொண்டுவந்து பாராவடைத்துவைத்தார்
மங்கைநல்லாளோரிடத்தில் வந்துநின்றுபாராவிற்
தங்கியிருப்பவனைத் தானழையுமென்றுரைத்தாள்
நான்போயழைத்துவந்து நங்கையெதிராகவிட்டேன்
மான்போல்வாள்சற்றேநீ வாசலிற்போயிரென்றாள்
சொற்போல்வெளியில்வந்து சூழ்ந்திருந்தோமெல்லாம்
விற்போல் நுதலிசிவ வேடந்தரித்தவனை
முன்னேநிறுத்தி மொழிந்தாள்சிலவார்த்தை
அன்னேரம்வந்தவனு மஞ்சியடங்கிநின்று
சொன்னனவளுரைத்த சொல்லுக்கெதிர்மொழிகள்
ஜன்னல்வெளியிலதை ஜாடையாய்நான்பார்த்தேன்
பேச்சுகளின்சாரம் பிரித்தறியக்கூடவில்லை
ஓய்ச்சலொழிவன்றி யுரையாடிக்கொண்டிருந்தார்
நடுராத்திரிவரைக்கும் நாங்கள்விழித்திருந்தோம்
படுவான்செய்மோசமெணிப் பாராதுதூங்கிவிட்டோம்
கன்னியிருப்பிடத்தைக் காலையிலேபோய்ப்பார்த்தோம்
மன்னவனேயவ்விடத்தில் மங்கைதனைக்காணவில்லை
வந்தபரதேசியையும் மங்கையையுந்தேடினதில்
எந்தவிடங்களிலு மில்லாமையினாலே
பாராவிலுள்ளவரைப் பலவிதமாய்க்கேட்டதிலும்
ஆரோனுமந்தவழி யாகவரக்காணேமென்றார்
சேயிழையும்வந்துபர தேசியுமங்கிருந்து
மாயமாய்ப்போன வழியுந்தெரியவில்லை
இந்தப்புதுமையைப்போ லெங்கும்நான்கண்டதில்லை
எந்தைபெருமானேயென் றிசைத்துநின்றாளோர்தாதி
கேட்டானரசன் கிளர்ந்துபெருமூச்சுவிட்டான்
நாட்டாருங்கேட்டார் நகைப்பாரெனநகைத்தான்
எண்ணியவெண்ணமெல்லா மீடேற்றமாகவில்லை
பண்ணுமுயற்சியெல்லாம் பாழாய்முடிந்ததுவே

பரதேசிப்பையனிந்தப் பாவையைக்கொண்டேகினன்
சரசமிஞ்சிக்கச்சினிற்கை தான்போட்டாற்போலாச்சே
நாட்டரசர்க்கெல்லாம் நகைப்புக்கிடமாச்சு
கேட்டபேரெல்லோர்க்குங் கேலிக்கிடமாச்சே
நன்ருயிருந்ததுகாண் நமதிராஜாங்கமுறை
என்றேதிக்கோபித் திருக்குமந்தவேளையிலே
சேனுபதியுஞ் சிலகாரியஸ்தர்களும்
தானுபதிகளுடன் சாமாசிகளும்வந்தார்
மந்திரியும்வந்து வணங்கியொருபாலிருந்தான்
சிந்தைதெரிந்தெல்லோருஞ்சித்திரம்போலேயிருந்தார்
அந்தப்பொழுதரசன் அமைச்சன்முகம்பார்த்து
மந்திரியேகேட்டீரோ மங்கைசெய்தவஞ்சகத்தை
வந்தானும்நேற்றொருவன் மங்கையிடஞ்சென்ருனுந்
தந்தாயவளுந் தணித்துவைத்துப்பேசினளாம்
பாதியிரவுமட்டும் பரதேசிபேசினதைத்
தாதிகளுங்கண்டாராந் தாங்கள் துயின்ருராம்
பொழுதுவிடிந்தபின்பு போயவளைப்பார்த்தாராம்
முழுதும்பொய்யோ நிசமோ மொய்குழலைக்காணுராம்
எங்குங்காணுமலதை எனக்குரைக்கவந்தாராம்
இங்கிந்தச்சங்கதிபோ லெவ்விடத்துங்கேட்டதுண்டா
கன்னிமாடத்திலந்தக் காரிகைக்குகாவல்வைத்து
என்னுத்தரவையன்றி யெவராயிருந்தாலும்
உள்ளேவிடவவடுக் குத்தரவங்கார்கொடுத்தார்
தள்ளாவிருந்தெனினுந் தடுத்துவிடவேண்டுமல்லோ
உமக்குநான்செய்துவைத்த வுத்தரவொன்றங்குண்டு
நமக்குநீர்செய்துவைத்த சங்கதியுமொன்ருச்சே
இந்தவிதமெல்லா மிருக்கட்டுஞ்சத்திரத்தில்
வந்தவனைப்பாராமல் வைப்பதற்குக்காரணமென்
வைத்தவனுரவனை வரவழையுமென்றுரைத்தான்
அத்தருணம்மந்திரியு மவனைவரவழைத்தான்

வந்தவனைப்பார்த்தமைச்சன் வந்தபரதேசியை நீ
எந்தவகைக்காக விருத்திவைத்தாய்பாராவில்
சொல்லென்றபோதவனுஞ் சொல்வான் நடந்தவிதம்
வல்லிமின்னுளெங்களுட வகுத்தமுறைமீதாம்
நேருடனேசத்திரத்தில் நித்தமன்னமுண்பவர்க்கு
பூரிகொடுத்துவரும் போதிருவர்க்குள்ளொருவர்
பிரிந்தவருண்டோவென்று பேச்சுக்கொடுங்களதைத்
தெரிந்தவராருமங்கே திகைத்துமுகம்பார்த்தால்
அவரைப்பிடித்திங் கனுப்புமென்றாளவ்வார்த்தை
தவருமலப்படியே சாற்றிக்கொண்டெடுத்துவந்தோம்
தேற்றையதினமுமவள் நிகழ்த்தியசொற்படியே
சாற்றிக்கொடுத்துவருஞ் சமயத்திலங்கொருவன்
நெஞ்சந்திகைத்துநின்று நிமிர்ந்தான்முகம்பார்த்தான்
வஞ்சியுரைப்படியே மற்றவனைநான்பிடித்துக்
கொண்டுபோய்விட்டவட்குக் கூறினேனப்பொழுதே
வண்டுபோற்கண்ணியங்கே வைத்திடுபாராவிலென்றாள்
அந்தப்படியேநா னவனைப்பாராவில்வைத்தேன்
பிந்திநடந்த பிழையறியேனென்றுலரத்தான்
அந்தவுரைகேட்டரசனவர்முகம்பார்த்தே துரைப்பான்
வந்தவனிவ்வூரானோ மற்றொருதேசத்தானோ
அடையாளத்தாலவனை யாராயுரைத்திடலாம்
உடையால்நடையா லுணர்ந்துரையுமென்றுரைத்தான்
அவையோரைநோக்கி யரசனுரைத்திடலும்
சபையிலிருந்தவர்கள் தனித்தனியீ துசொன்னார்
காசிக்குப்போயொருவன் காவடிகொண்டிங்குவந்தான்
யோசிக்கும்போதவனே யொழியவேறில்லையென்றார்
பாதிசீமைக்காரி பார்ப்பாத்திபுத்திரனோர்
மாதிரியாய்த்தானேற்று வந்தானென்றார்சிலபேர்
ஆனாலவன்காசி யாத்திரைபோய்பெட்டாண்டு
தானாகும்வந்ததுவி சாரியுமென்றார்சிலபேர்

இந்தப்படியா யிருந்தவர்களெல்லோரும்
அந்தப்பிராமணன்மே லனுமானஞ்சொன்னார்கள்
சொன்னதெலாங்கேட்டரசன் துரிதமாய்ப்பார்ப்பாத்தி
தன்னையழையுமென்று சாற்றினானம்மானை
தூதுவர்களோடித் துரையழைத்தாருன்னையென்று
கோதைபார்ப்பாத்தியிடங் கூறியழைத்துவந்தார்
வந்தவளையாத்திரைக்கு மகன்போனானென்றுரைத்தாய்
வந்தானோவின்னம் வரவில்லையோ சொல்லிடென்றான்
வேந்தயென்மைந்தன் வெகுநாளாய்ப்போயிருந்து
பாந்தமுடனேற்றுப் பகல்வந்தானென்றுரைத்தாள்
அவனை நாம்பார்ப்போ மழைப்பாயெனவுரைக்கக்
கவனமுடன்வந்தமகன் காவடியைத்தோளில்வைத்து
சாப்பிட்டுநான்வருவேன் சத்திரத்திலென்றுசென்றான்
கூப்பிட்டுதயமுதற் கொண்டின்னந்தேடுறேன்
எவ்விடத்திற்போனானோ யானறியேனென்றுரைத்தாள்
அவ்விடத்திலேநடந்த வதிசயத்தைத்தானறியாள்
மன்னனதைக்கேட்டு மதித்தான்சபையிலுள்ளோர்
சொன்னதுவும்பார்ப்பனத்தி சொல்லும்சரியாச்சே
நல்லதிருக்கட்டுமங்கே நடந்தெல்லாங்கேட்டாயோ
சொல்லென்றான்யானறியேன் சூதொன்றுமென்றாளோ
மண்ணாவாயுன்றன் மகனுக்குச்சொல்லியல்லோ
பெண்ணைக்கடத்திப் பிழைசெய்தாயென்றுரைத்தான்
அய்யா நானொன்று மறியேனவனுமது
செய்யானேயென்று தியங்கியுரைத்தாளவளும்
வந்தான்பரதேசி வயதுபதினாறுசென்றோன்
சந்தேகமில்லாமற் சத்திரத்திலுண்ணவந்தான்
என்றாளவளு மிவள்மகனேயல்லாமற்
பின்றானவனைப் மெற்றவவள்மெய்சொல்வாளோ
என்காணுமென்றா னெல்லவருமப்படியே
தான்காணாதென்றார் தரையரசன்கோபமுற்றான்

சிங்கத்தின்வாயிரையைச் சிறுபுலிகைகொண்டதுபோல்
பொங்குபுலியிரையைப் புன்னரிகைகொண்டதுபோல்
ஆனையின்வாய்க்கரும்பில் ஆடுவாய்வைத்ததுபோல்
பூனையின்வாய்மீனைப் புல்லெலிவாய்கவ்வுதல்போல்
வன்கருடன்வாயரவை மச்சங்கைகொண்டதுபோல்
என்காவலிலிருந்த வேந்திழையைப்பார்ப்பனத்தி
மைந்தனவன்கொண்டுசெல்ல வல்லமையுமுண்டாச்சா
இந்தத்துரோக மிவளையன்றியாவர்செய்வார்
உள்ளபடிசொல்லிவிடென் றுண்மையாய்க்கேட்டாலும்
கள்ளியிவளுண்மையினைக் கட்டோடேசொல்லாளே
கொண்டுவந்தாள்மயிலைக் கூட்டிவிட்டாள்மைந்தனோடு
மூண்டச்சிசெய்த முழுமோசம்பார்த்தீரோ

## விஜயநகரத்துராஜா பிராமணத்தியைத் தண்டித்தல்.

மண்ணுவாளிந்த வகைமோசஞ்செய்ததினுற்
சுண்ணும்பறையிலிட்டுச் சுட்டுவிடுமென்றுரைத்தான்
மாறுபடுத்திவந்த வஞ்சகப்பிராமணத்தி
கூறுமுழுவுக்கேற்ற கோமுட்டிபோலானுள்
சிந்தைகொதித்தரசன் செப்புமொழிகேட்டுடனே
வந்ததலையாரிகளை மந்திரியும்பார்த்துரைப்பான்
கட்டிவைத்தசுண்ணும்புக் காளவாய்தன்னிலிந்த
மட்டிமுண்டையைக்கொடுபோய் வைத்துவிடுமென்ன
கொலைகாரியாமிவளைக் கொன்றுவிடுமென்றவுடன்
தலையாரிகளவளைத் தான்பிடித்துச்சென்றூர்கள்
வழிகூட்டிப்போம்பொழுது மானகரிலுள்ளோர்கள்
பழிகாரிசெல்லும் பரபரப்பைப்பாருமென்பார்
செய்தவினைசெய்தவரைச் சேருமேயல்லாமல்
எய்துமோமற்றோ ரிடத்திலேயென்றுரைத்தார்
அன்றோருமன்னவனை யனியாயமார்த்துணிந்து
கொன்றகொலையிவளைக் கொல்லாதோவென்றுரைப்பார்

இப்படியவ்வூரிலுள்ளோ ரெல்லோருந்தான்பழிக்கக்
கைப்பிடியாகப்பிடித்துக் காளவாய்சேர்த்தார்கள்
கொலையாளிகளவளைக் கொண்டுபோய்த்தானிருத்தி
மலையாமலுள்ளபடி வஞ்சகத்தைச்சொல்லிவிடு
சொல்லிவிட்டாவேந்தனிடஞ் சொல்லுஞ்சிபாரிசினல்
மெல்லவிலக்கியுனை விட்டிடுவோமென்றுரைத்தார்
உரையுரையென்றவர்க ளுரைத்ததும்பிராமணத்தி
பிரமைகொண்டாள்போலப் பேசாமல் நின்றுவிட்டாள்
விள்ளத்தகுந்ததெல்லாம் விளம்பியும்பிராமணத்தி
எள்ளத்தனையு மிணங்கினளில்லையென்று
வேந்தனுரைப்படியே மின்னாளைத்தான்பிடித்து
வாய்ந்தசுண்ணாம்பறையில் வைத்துவிட்டாரம்மானை
அன்றேதண்டிப்பா னரசனென்றுந்தெய்வமதை
நின்றேதண்டிக்குமென்று நிகழ்த்துமொழிமெய்யாச்சு
போனாள்பிராமணத்தி புரவலனைக்கொன்றபளி
யேனோவிடுமென் றிசையாரொருவரில்லை
வேந்தன்விஜயதரன் மின்னாள்செய்வஞ்சனையை
ஆய்ந்தாய்ந்துசிந்தை யழிந்துமதிமயங்கி
மின்னரசிசொன்ன விரதம்முடிந்தவுடன்
அன்னவளைமணமுடிக்க ஆங்கெண்ணியந்தமனன்
வேந்தருக்கெல்லாமோலை விட்டிருந்தகாலதனை
ஆய்ந்துலகிலுள்ள வரசரெல்லாமந்நகரில்
வந்திருந்தார்மங்கை வாலாறுங்கேட்டுமனம்
நொந்திருந்தாரென்று நுவலுமொழிகேட்டரசன்
நன்றாயிருந்ததல்லோ நாமந்தமாதரசைக்
குன்றாமனமுடித்துக் கொள்ளலாமென்றுநெஞ்சில்
எண்ணியிருந்ததுவும் ஏந்திழையாள்மாமோசம்
பண்ணியதுமிந்தப் பயித்தியகாரத்தனத்தைப்
பாரரசர்கேட்டுப் பழித்தற்கிடமான
காரணமுமென்று கருதியவமானமிஞ்சி

இந்தப்பழிப்புக் கிடமாகதாமிருந்து
சிந்தைகளித்தரசு செய்திங்குவாழ்வதிலும்
பெண்ணாசையால்விளைந்த பெரும்பழியெல்லாந்தீர
மண்ணாசை நீக்கி வனம்போய்த்தவம்புரிந்து
சித்தந்திருந்திச் சிவனடியைச்சேர்வதுவே
உத்தமமாகுமென வுள்ளத்திலேமதித்து
மைந்தனுக்குத்தன்னுடைய மகுடந்தனைச்சூட்டி
சிந்தைவெறுத்துவனம் சேர்ந்தான்விஜயதரன்
அந்தவரசுகலி யாணமதுபார்க்கவங்கே
வந்திருந்தவேந்தரெலாம்மாநகர்போய்ச்சேர்ந்தார்கள்
அந்நாள்விஜயநக ரதனில்நடந்தகதை
சொன்னேனினிமேல் தொடர்கதையுஞ்சொல்லுகிறேன்

அண்டரண்டப் பட்சிகள் சொல்லுதல்.

ஆலமரத்தடியி லரசனந்தப்பெண்மடியின்
மேலேதலையைவைத்து விழிதுயிலும்வேளையிலே
சந்திரனைத்தொட்டு தடவுமுடியுடைய
அந்தமரத்தி லமைந்தவொருகொம்பதனில்
இருந்ததண்டரண்டப்பட்சி யிரண்டங்கேஜோடாகப்
பொருந்துகொம்பிலேயிருக்கும்போதிலாண்பட்சியதை
பெண்பட்சிதான்பார்த்துப் பேசுஞ்சிலவார்த்தை
பண்புற்றநாயகமே பறவைகட்கெல்லாமரசே
இந்தமரத்தடியி லிருக்கின்றபேர்களிங்கு
வந்தவரலாற்றை வழுத்துவீரென்றுரைக்கப்
பறவையுரைக்குமந்தப் பார்வேந்தனூர்ப்பெயரும்
இறைவன்பெயரு மியலமைச்சன்தன்பெயரும்
மன்னன்மகன்பெயரும் மந்திரிமைந்தன்பெயரும்
அன்னவர்கள்பொன்னகர்விட்டகன்றுவந்ததாதியதாய்
அந்தமரத்தடியி லமர்ந்திருந்ததிருக
வந்தகதையெல்லாம் வகைவிபரமாயுரைக்கப்

பேடைப்பறவையதைப் பிரியமுடனேகேட்டு
வாடியுருகி மனதுமிகவிரங்கி
அய்யோவிவர்களிந்த வாபத்திலேயழுந்த
மெய்யாகவேதன் விதித்தவிதிதானே
இத்தனை துன்ப மிவர்போலெவர்படுவார்
அத்தனையுந்தெய்வபலத் தாலேகடந்துவந்தார்
நல்லதிருக்கட்டுமங்கே நண்ணியபிராமணத்தி
பொல்லாதபாவியென்று புகன்றீரொருவார்த்தை
வந்தபிராமணத்தி வண்டார்குழலணங்கை
அந்தவிஜயநகர்க் கவள்சேர்த்திடாதிருந்தால்
மன்னனிருப்பிடத்தை மந்திரியெங்கேகாண்பான்
கன்னியிவனுயிரைக் கண்டுபிடிப்பதெங்கே
ஆதலினால்மன்னவனுக் கவள்போலுபகாரி
பூதலத்திற்கிட்டாதெப் போதுமெனவெண்ணுகிறேன்
என்றந்தப்பேடை யியம்புமொழிகேட்டு
நன்றிந்தவார்த்தையென்று நகைத்ததுகாணம்மானை
அப்பானும்பெண்பறவைக் காண்பறவைதானுரைக்கும்
இப்போதிவர்கள்பட்ட விடைஞ்சலெல்லாமெந்தமட்டு
இனிமேலுந்தத்திவருக் கிரண்டுவருமென்றுரைக்கக்
கனிவாய்ப்பெண்பறவை காதலனைத்தான்கேட்கும்
இத்தனை துன்பமிவர்க் கெய்தியதுபோதாதோ
மெத்தவுமுண்டின்னமென் றீர்விளம்புமதையெனவே
அந்தவிடைஞ்சலையும் யானுரைப்பேன் நீகேட்பாய்
மைந்தரிருவருமிவ் மங்கையுமிச்சோலைவிட்டு
செல்லும்பொழுதிலிவர் திருநகர்ச்சமீபமதில்
அல்லும்பகலும் அனைவர்களுஞ்செல்வழியில்
ஒற்றைக்கால்மண்டபமொன் றுண்டதற்கூடேயிவர்கள்
பற்றிப்போம்போதிலது படீரென்றிடிந்துவிடும்
இடிந்துவிழுந்திவரை யேகமாய்மூடிவிடும்
மடிந்துவிடக்கூடுமிவர் மாதரசேயின்னமுங்கேள்

இந்தவாபத்தினுக்கு மிவர்தப்புவார்களெனில்
சொந்தநகர்போய்ச்சேர்ந்து துரைமகனுமங்கையரும்
இன்பமாய்வாழ்த்தங் கிவரிருக்கும்நாளையிலே
துன்பமாயொன்றுவந்து சூழுமதுவென்னவென்றால்
மன்னவனைவிட்டந்த மந்திரிபோனபின்பு
மின்னுமலர்சோலையிலே வேந்தனிருக்கும்போது
வந்ததொருநாகமதை மன்னன்வெட்டினனலவோ
ஐந்துதலைநாகமதற் கருமையுள்ளவோர்புதல்வன்
நாகலோகந்தனிலே நாடியிருப்பானவன்பேர்
வேகக்கருடனையும் வெல்லுங்கார்க்கோடகனும்
தந்தைதனையிந்தத் தரையரசன்வெட்டினதை
அந்தக்கார்க்கோட னறிந்துசினந்துரைப்பான்
என்தகப்பனின்னுயிரையிறைமகன்கொன்றுவிட்டான்
கொன்றவவனுயிரைப் போய்க்கடித்துநான்குடிப்பேன்
பழிக்குப்பழிவாங்கிடுவேன் பாரென்றுகார்க்கோடன்
விழிக்கனல்கள்கொப்பளிக்க விண்டிருக்கின்றனவனும்
வேந்தனிவன்மங்கையுடன் மேவியரண்மனையில்
வாய்ந்ததொருதூங்கு மஞ்சத்தின்மேற்படுத்து
நித்திரைசெய்யும்போது நெருங்கியந்தக்கார்க்கோடன்
கொத்திக்கடித்திவனைக் கொன்றுவிடப்போறனே
இந்தரகசியத்தை யெவர்வெளிமுன்சொன்னாலும்
சந்தேகமில்லையவர் சமைந்திடுவார்கல்லாக
இதுதானிவர்துயர மென்றண்டரண்டபட்சி
மதியாலுரைக்கவந்தவார்த்தைஎல்லாங்கேட்டபெடை
ஆகாவிதுபோலு மாச்சரியங்கண்டதில்லை
மாகாவியங்களிற்சொல் வார்த்தையுங்கேட்டதில்லை
கண்டதனைச்சொன்னவர்கள் கல்லாச்சமைவாரென்றீர்
உண்டோவிமோசனத்துக் குபாயமென்றுதான்கேட்க
அதற்குவிமோசனமுண் டதுவுநான்சொல்லுகிறேன்
எதற்குமருந்தொன் றிருக்காதோவேந்திழையே

தரையாளும்வேந்தனுக்கோர் தலைமகனுண்குளந்தை
கரையாமல்நெஞ்சமுறு கண்ணீரும்வாராமல்
பெற்றபிதாவுமந்தப் பிள்ளைக்குத்தாயாரும்
உற்றாருஞ்சம்மதித்தவ் வொருமகனைக்கொண்டுவந்து
தந்தையுந்தாயாருந் தலைப்புறமுங்காற்புறமும்
மைந்தனைத்தான்பிடித்து வாளாலவன்கழுத்தை
வெட்டிப்பலிகொடுத்தால் விட்டுவிடுங்கல்லுருவம்
அட்டியில்லைமற்றொரு மதுசொன்னாற்சாபமில்லை
என்றந்தப்பட்சி யுரைத்ததெல்லாங்கேட்டபெடை
நன்றிதுபோலோர்கதையும் நான்கேட்டதில்லையெனப்
பறவையிரண்டும் பலவிதமாய்ப்பேசியங்கே
யிறகுவிரித்துப்பறந்தேயிரையெடுக்கச்சென்றதுகாண்
அண்டாண்டப்பட்சி யவையுரைத்தவார்த்தையெலாம்
மண்டலத்திலேயிருந்த மந்திரியும்மாதரசும்
சற்பன்னபாஷைகளுந் தான்கற்றோராதலினால்
விற்பனத்தோடதனை விவரமாய்க்கேட்டிருந்தார்
மந்திரியும்மங்கையரும் மனதிற்கலக்கமுற்றார்
அந்தரங்கமானதினா லதைவெளியிற்பேசவில்லை
நித்திரையாலந்த நிருபனதையறியான்
அத்தருணம்நித்திரைவிட் டரசனெழுந்திருந்தான்
புத்திசிகாமணியைப் புரவலனுந்தானழைத்து
சித்திரப்பூந்தேரிலிரு தேசிகளைப்பூட்டிடென்றான்
மந்திரியுந்தேர்பூட்ட மங்கையைத்தேர்மேலேற்றிச்
சிந்தைமகிழ்ந்தவருந் தேர்த்தட்டின்மீதேறி
பூமிதனில்நடத்திப் போனார்கள்பொன்னகர்க்குத்
தாமதமிலாமலவர் தடங்கூட்டிப்போகையிலே
கண்டான்வழியிலொற்றைக் காலுள்ளமண்டபத்தை
அண்டாண்டப்பட்சியங்கே யறைந்தகதைக்கிதுவோர்
சாட்சிகண்டோமென்றமைச்சன் தார்வேந்தேயாகாயப்
பாய்ச்சலால்செல்வமிந்தப் பாதைவழிப்போது

மேவுபரிக்காதுகளில் விஞ்சையினைச்சொல்லியிங்கே
தாவியேமண்டபத்தைத் தாண்டுவதுபார்ப்பமென்றான்
பரிக்கிசைந்தவிஞ்சை பலியாமற்போய்விடுமோ
இருக்குமென்றுசொல்லி யிறைவன்மகன்சம்மதித்து
தாண்டுபரிச்செவியிற் சொன்னார்கள்விஞ்சையினைத்
தாண்டுபரிமண்டபத்தைத் தாண்டுதற்காய்மேலேறிச்
சொல்லுமந்தமண்டபத்தின் தூவிக்குநேராகச்
செல்லும்பொழுது திடீரென்றுகேட்டதங்கே
பார்த்தார்கீழாகப் பாழ்மண்டபமிடிந்து
வேர்தானடியற்று வீழ்ந்துவிடக்கண்டார்கள்
பட்சியுரைத்தகதைப் படியிதுவென்றேந்திழையும்
அட்சணமேமந்திரியு மறிந்துகொண்டாரம்மானை
ஈதென்னவாச்சரிய மிதனால்நமக்குமிங்கோர்
தீதுவராமலெந்தத் தெய்வமோசெய்ததென்று
நேயங்களாக நிகழ்த்திச்சிலதூரம்
போயங்கேகண்டார்கள் புவனேந்திர நகரை
அங்கேநகருக் கடுத்ததோரிடத்திலவர்
தங்கியிருந்தார்கள்சிலர் தமையழைத்தான்மந்திரியும்
வந்தார்வணங்கிநின்றார் மன்னன்மகனென்றறிந்தார்
சந்தோஷமாகிநின்றார் தங்கள்முகம்பார்த்து
மாநகரிற்சென்று மகாராஜன்தன்னிடத்திற்
போனவுங்கள்மைந்தன் புவனேந்திரனுடனே
புத்திசிகாமணியும் புறநகரில்வந்திருந்தார்
இத்தருணந்தன்னி லெனவுரையுமென்றனுப்ப
அவர்கள்விரைந்தோடி யரசன்சமூகத்திற்
கவனமுடன்சென்றுதங்கள் கைகட்டிவாய்புதைத்து
ஆண்டவனேதங்க ளருமைத்திருமகனும்
பூண்டவமைச்சன்மகன் புத்திசிகாமணியும்
வந்தார்களிந்த மணிநகர்க்குக்கீழ்புறத்தில்
எந்தாயும்மைந்தனுமோரேந்திழையுமென்றுரைத்தார்

வந்தார்கள்மைந்தரென்ற வார்த்தைசெவிபுகவே
சந்தோஷமிஞ்சிச் சரீரம்புளகமுற்ருன்
வாடும்பயிர்க்கு மழைதிரண்டுபெய்ததுபோல்
தேடும்பசுவிடத்திற் சிறியகன்றைச்சேர்த்ததுபோல்
கண்போனவர்கிரண்டு கண்கொடுக்கவந்தவர்போல்
விண்போனதன்னுயிரை மீட்டிக்கொடுத்ததுபோல்
சொன்னர்கள்மைந்தர் சுகமாய்வந்தார்களென்று
மன்னனவற்கு வரிசையுடனேகொடுத்து
சிந்தைகளிப்படைந்து தேகம்புளகிதமாய்
மந்திரியையிங்கே வரவழையுமென்றுரைத்தான்
உரைத்தமொழிகேட்டவுட னேடினர்தூதுவர்கள்
அரைக்கணத்துக்குள்ளே யழைத்துவந்தார்மந்திரியை
வந்துவணங்கிநின்ற மந்திரியைத்தான்பார்த்து
புத்திமகிழ்ந்து புகல்வான்புரவலனும்
தேசவளம்பார்க்கச் சென்றமைந்தர்வந்தாராம்
நேசப்பவுசுடன்போய் நீரழைத்துவாருமென்ருன்
அமைச்சனதுகேட் டகத்தில்மிகமகிழ்ந்தான்
இமைக்குமுன்னேபவுசை யெல்லாம்வரவழைத்தான்
பட்டத்தரசனங்கோர் பட்டத்தரசியுடன்
இஷ்டமுடன்வந்திருந்தா ரென்பதுங்கேட்டறிந்து
தங்கத்தினலே சமைத்துமணிபதித்த
சிங்கமுகத்தண்டிகையுஞ் சேகரமாய்க்கொண்டுவந்தான்
வேந்தன்புதல்வன்வந்து வீற்றிருக்குமண்டபத்திற்
சேர்ந்துபுவனேந்திரனைத்தெண்டனிட்டுமந்திரியும்
மந்திரிமைந்தன்வந்து வணங்கினன்தந்தைதனை
அந்தச்சமயத்தி லரசன்திருமகனை
எல்லோரும்வந்தங் கெதிரேவணங்கிநின்ருர்
சொல்வானமைச்சனந்தத் துரைமகனைத்தான்பார்த்து
இன்னுள்வரையாசசோ இதயந்திரும்பவென்று
சொன்னனதுவிரியச் சொல்வோம்பின்னென்றுதுரை

மகராசனுமுமது மாநமரும்யாவர்களுஞ்
சுகமோவென்றங்கே துரைமகனுந்தான்கேட்டான்
தாங்கள்வரக்காணாத தளர்ச்சியொன்றேயல்லாமல்
ஈங்குசுகக்குறைவுக் கேதொன்றுமில்லையென்றான்
மாநகருக்குச்செல்ல வறுதிபெற்றுமந்திரியும்
யானைதனையழைத்தா னம்பாரிதன்னுடனே
பொன்னுருமார்பன் புவனேந்திரனையங்கே
சொன்னபரணமணித் தூசாலலங்கரித்து
முன்னாடி தண்டிகையில் மொய்குழலையேற்றுவித்துப்
பின்னாலும்முன்னாலும் பெண்கள்படைசூழவிட்டு
வாள்வீரர்தம்மைமுன்னும் வல்லையக்காரர்பின்னுந்
தோள்வீரரைச்சிவிகை சுற்றிலும்சூழவிட்டு
அம்பாரியானையின்மே லரசுதனையேற்றிக்
கும்பாகச்சேனையெல்லாங் கூடவரவிடுத்துத்
தன்மகனையோரானை தனிலவுதாமீதேற்றி
மன்மதனைப்போலவர்கள் வரப்பார்த்துளமகிழ்ந்து
தானும்பரியேறித் தன்னுடனேகூடவந்தோர்
ஆனநாற்பத்தொன்ப தானவமைச்சர்களும்
வாகனங்களேறிவர மற்றோருஞ்சூழ்ந்துவரச்
சேகரமாய்ச்சேனையெல்லாந் திரண்டுபுடைசூழ
மன்னர்துரைமக்கள்சிலர் வாகனத்திலேறிவர
முன்னும்பின்னும்வீரர் முனைவாள்களேந்திவர
ஆனையெல்லாங்கூடிவர அசுவங்களாடிவர
மானனையர்கூடி வரிசைநடமாடிவர
மேளம்முழங்க மிருதங்கந்தான்முழங்கக்
காளம்முழங்கக் கனபேரிகைமுழங்க
வாரிமுழங்குதல்போல் வாத்தியமெல்லாமுழங்கத்
தேரின்மிசையேறிச் சிலதேசராஜர்வரத்
தாலவட்டமாலவட்டஞ் சந்த்ரவட்டந்தாண்டிவரக்
கோலவட்ட வெண்குடைகள் கொடிகளடுத்துவர

## இராஜாமந்திரிகுமாரனைத் தலையைவெட்டும்படி வுத்திரவுசெய்தது.

கண்டேனென்று கடுங்கோபங்கொண்டரசன்
கொண்டயிவன்சிரசைக்கொய்துவிடுமென்றுரைத்தான்
கொலையாளிகள்கரத்திற் கொடுத்தானவனையந்தத்
தலையாரிகள்பிடித்துத் தான்போனாரம்மானை
போனார்கள்வீதியிலப் புத்திசிகாமணியை
மானாரும்மைந்தர்களு மனங்கலங்கிப்பார்த்துரைப்பார்
அய்யோவிவன்றன் னரசனுக்கோ தீங்குசெய்வான்
பொய்யோ நிஜமோ புதுமையிதுவென்பாரும்
வைத்தானரசன்மகன் மனைவியின்மேலாசையென்றார்
செத்தானையும்பிழைக்கச் செய்வானோவென்பாரும்
நாட்டிலேசஞ்சரித்தெந் நாளுந்துயரடைந்தான்
வீட்டிலேவந்துமிந்தவினைவருமாவென்பாரும்
வாய்ந்தபருவம்நல்ல வயலையிவனாதலினால்
எந்திழைமேலாசைவைத் திருப்பான்காணென்பாரும்
பன்னூலுங்கற்றிருந்த பண்டிதனாய்த்தானிருந்து
மன்மனைவிமேலாசை வைப்பானோவென்பாரும்
வேந்வனிதைத்தீர்க்க விசாரித்தானோவில்லையோ
சர்நதம்பாராமல்வெட்டத் தானுரைத்தானென்பாரும்
தேசாந்திரம்போய்த் திரும்பிவந்தான்தன்வீட்டிற்
பேசாதிருந்தாற் பிழைவருமோவென்பாரும்
பார்வேந்தன்மைந்தன் படுக்கையறைதனிலே
சேரவோராத்திரியிற் சென்றான்காணென்பாரும்
சற்றாகிலுமிரக்கந் தானிலையோவேந்தனுக்குப்
பெற்றாரினிமேற் பிழைப்பாரோவென்பாரும்
மன்னனுடதேவிதன்னை மாதாவென்றெண்ணாமல்
என்னவினைசெய்தா னிவன்பாவியென்பாரும்
மந்திரியின்சொல்மறுக்க மாட்டானேமன்னனிவன்
தந்தையிதையேனோ தடுக்கவில்லையென்பாரும்

பிள்ளையானாலுமிந்தப் பெருமான் நீதிமுறையில்
எள்ளளவுந்தவரு னெவர்தடுப்பாரென்பாரும்
பார்த்திபனும்சற்றே பதறிவிட்டானின்னமிவன்
வார்த்தையினைக்கேட்டறிய மாட்டாமலென்பாரும்
கொற்றவனென்செய்வான் 'கொலைக்குறியதாய்ச்செய்த
குற்றமிவனேயொப்புக் கொண்டாக்காலென்பாரும்
என்னவினையோ இவனுயிரைவாங்குதற்கு
மன்னன்மகனுக்குபனம் வந்ததோவென்பாரும்
வாராதோதன்னுடைய மனைவியிவனைத்தழுவ
நேராகத்தான்பார்த்து நின்ருக்காலென்பாரும்
நெஞ்சத்திலேயிதனை நெடுநாளாய்வைத்திருந்த
வஞ்சகந்தனுக்குமிது மட்டுமோவென்பாரும்
தீங்கேசெய்தாலுஞ் சினத்தாலிவனுயிரை
வாங்காமல்வேறே வழியில்லையோவென்பாரும்
பாராளும்வேந்தனுக்குப் பாலனைவெட்டாதபடி
யாராகிலுஞ்சொல்லு வாரிலையோவென்பாரும்
பட்டணத்தாரந்தப் படிபுலம்பிப்பின்தொடர
வெட்டுங்களத்திலிந்த வித்தகனைக்கொண்டுசென்ருர்
அப்படிசெய்மத்தியினி லங்குமுதல்மந்திரியுஞ்
செப்பமுள்ளமற்றத் திரல்மந்திரிமாரும்
ஒன்ருகக்கூடியங்கே யோசித்துக்கொண்டுரைப்பார்
நன்ருயிருந்தஇங்கே நாமிருந்தவண்ணமெல்லாம்
மந்திரிமார்க்கெல்லாம் வசையதனையுண்டாக்கித்
தந்தைக்குந்தீராத சஞ்சலத்தையேற்படுத்தி
நடந்தவகையின்னதென்று நாவெடுத்துப்பேசாமல்
மடந்தைபலாசைகொண்ட மாபாதன்போலே
ஏதோஓர்சூதா லிறக்கத்துணிந்துவிட்டான்
வேதாவிதித்த விதியிதுவேயானாலும்
உத்தமசற்குணத்தி லுயர்ந்தோனிவனுக்கும்
புத்திதனிலிவனைப் போலில்லையென்றிருந்தும்

புத்திசிகாமணியும் புத்திவற்றுப்போனனென்
றெத்தலத்திற்சொன்னலு மெவருஞ்சிரிப்பாரே
இந்தவசைச்சொல்லு மிவன்மட்டிலேபோமோ
வந்தவகையெதுவோ வன்பழியைமேற்போட்டான்
நம்முடையபுத்திகளில் நாலுபங்குகொண்டவனே
சும்மாபழியைச் சுமக்கிறனேயிவனும்
காணுதேசமதிற் காவலவன்தன்னுயிரைப்
பேணினவனிங்குவந்து பெரும்பிழையுஞ்செய்வானே
ஆகையினலின்னமிதை யவனலறிவமென்று
சேகரமாயோசித்துச் சென்றூர்கள்வேந்தனிடம்
அரசேயம்மைந்தனிடம் யாங்களொருகாரியந்தான்
விரைவாயினங்கேட்க வேண்டுமென்றுமந்திரிகள்
வேந்தன்விடைபெற்று வெட்டுதற்குப்போமதனை
வேந்தன்வறுதியென்று விளம்பியவர்தடுத்து
மந்திரிமார்களந்த மைந்தன்முகம்பார்த்துரைப்பார்
இந்தக்குற்றத்தினை நீ யெப்படியோசம்மதித்து
கொண்டுசொல்லுஞ்சொலை நீகொள்ளவென்ருல்தேகம்
துண்டுபட்டுநிற்பதன்றிச் சுத்தமாய்நம்பவில்லை
இந்தவிதமான தெண்ணமுனக்கிருந்தால்
அந்தநாள்நீங்கள்சென்ற தானதேசாந்தரத்திற்
சத்தயாயாருஞ் சகாயமின்றித்தான்தனியே
செத்துக்கிடந்த ஜெயவேந்தன்புத்திரனை
உன்னுயிரையும்பெரிதா யொருபோதுமெண்ணுமல்
இன்னமனேககஷ்ட மெல்லாம்நீபட்டமுந்தி.
அக்காலம்நீயெழுப்ப அவசியமும்வேண்டாமே
இக்காரணத்தால்நீ செய்தகுற்றமெய்யாகில்
சாற்றுவதெங்களுக்குச் சமூகியமேயன்றிமனந்
தேற்றமில்லையிப்படி நீ செய்தகுற்றமெய்யாகில்
உன்னைவெட்டிப்போடிலங்கே உண்டாமபவாதம்
என்னுளும்நங்குலத்துக் கெல்லாம்வசையாகும்

நீயிறந்தாலென்ன நெடுநாள்வசைக்கிடமாம்
தாயிறக்குதென்று தளருகிறேங்கண்டாயே
ஆதலாலுன்பின்னே யாங்களனைவோருஞ்
சாதலேதிண்ணமென்று தானிருக்கிறோமிதன்றி
உன்னொருவனுலெங்கட் குண்டானசற்கீர்த்தி
என்னவிருந்தோவதுபே ரெய்துநவகீர்த்தி அய்யா
ஆகையினாலேநடந்த தாயிருக்குமுண்மைதனைச்
சாகசமாய்ச்சொல்லென்று தந்தைமுதலோர்கேட்க
இந்நாள்வரைதா னியற்றிவந்தசெய்கையையும்
பின்னேதனக்குவரும் பெரியஅவதூறினையும்
தானேயுணர்ந்துஜகஞ் சாற்றத்துணிந்தமைச்சர்
ஆனோர்தமைப்பார்த் தறைவானமைச்சன்மகன்
தானந்தவுண்மை நவிலுவேனாகிலய்யோ
தானேயெனக்குவந்து சாருமபாயமென்றான்
அய்யா நீயிந்த அபவாதத்துக்கிடமாய்
மெய்யாப்புவியிகழ வெட்டுண்டுபோவதிலும்
என்னவபாயமது வெய்திடினுங்குற்றமில்லை
சொன்னதைக்கேளுண்மையது சொல்லென்றவர்கேட்க
தரைவேந்தனையுமவன் தநயன்மூதல்யாருமிங்கே
வரவேயழைக்கிலுண்மை யழுத்துவேனென்றுரைக்க
அப்படியேவேந்தனிட மமைச்சர்களிற்சிலர்போய்ச்
செப்பினார்புத்தி சிகாமணிசொல்வார்த்தைதனை
அந்தமொழிகேட்டரச னாலோசித்தப்பொழுதே
மைந்தனையுந்தானழைத்து வந்தான்கொலைக்களத்திற்
தங்கள்வாலாற்றையெல்லாஞ் சாற்றியதுமாண்பறவை
இங்குஞ்சிலதுன்பமின மிருக்குதென்றுசொன்னதுவும்
என்னதுன்பமின்னமதை யியம்பென்றதுகேட்கவிது
சொன்னதுவுமிங்கிவர்கள் துணிந்தூர்வரும்வழியே
ஒற்றைக்கால்மண்டபமென் றுண்டென்றுரைத்ததுவும்
அற்றுப்போய்வீழுமது அதற்குமிவர்தப்புவித்தால்

சொல்லானுயர்ந்த துரையுந் துரைமகனும்
எல்லாரும்வந்து நிற்கு மிதையக்குணமறிந்து
கல்லாய்ச்சமைத்துவிடுங் காரணத்தால்நான்விவரஞ்
சொல்லாமலிந்தச் சுடுபழியையேர்ப்பதிலும்
இப்பழிச்சொல்லேலந்திழைக்கு மெனக்குமிலா தகற்றிச்
சற்புகழைக்கொண்டுகலாய் சமைவதுவேநன்மையென
அந்த அரசன்முதல் யாவரையுந்தான்பார்த்துச்
சிந்தைதெளிந்துபுத்தி சிகாமணியுஞ்செப்பலுற்றான்
அய்யா நீரெல்லாரு மன்பாகக்கேட்டருள்வீர்
மெய்யாகநானுரைக்கும் விண்ணப்பமானதவை
துரைமகனென்மேலே சுமத்திவைத்தவீண்பழியை
விரைவாயரசனுக்கு வெளிப்படுத்திநானுரைத்தால்
கல்லாய்ச்சமைத்துவிடுங் காரணமொன்றுண்டதனாற்
சொல்லாயிருந்ததன்றிச் சொல்வதிலோதோஷமில்லை
எங்களுக்கெல்லாமோ ரிழிவுவைத்தாயென்றுநொந்த
தங்களுக்காய்நானுரைப்பேன் சாபத்துக்கஞ்சாமல்

மந்திரிகுமாரன் உண்மைசொல்லிக்
கல்லாய்ச்சமைந்தது.

வேந்தன்மகனுமிந்த மெல்லியருநானுமங்கே
வாந்தவளநாடுவிட்டு வழியில்வருப்போது
ஆலமரமொன்றங் கதனடியில்வந்திருந்தோம்
நீலவிழியாள்மடியில் நித்திரைசெய்தானரசன்
மங்கையிருந்திட நான் மற்றிவரைக்காத்துநின்றேன்
அங்கேநடந்ததுவோ ராச்சரியங்கேளுமென்றும்
ஆலமரமதின்மே லண்டரண்டப்பட்சியது
பட்டணத்தில்வேந்தன்மகன் படுத்திருக்குமாளிகையில்
இஷ்டமுடன்மங்கையரு மிறைமகனுந் தூங்கையிலே
மங்கையைமுன்கொண்டுவந்து வைத்திருந்தநாகமதை
செங்கைவாள்கொண்டரசன்சிதைத்துவிட்டானலவோ

அந்தநாகத்துக் கருமைமகன்கார்க்கோடன்
தந்தையினையிந்தத் தரையரசன்கொன்றசெய்தி
கேட்டுடனேகோபங் கிளர்ந்துபாதாளம்விட்டு
நாட்டின்மேற்சென்றவனை நான்கடித்தென்தந்தைதனை
கொன்றுயிருவாங்கிக் கொள்வேனெனக்கூறி
நின்றதந்தப்பாம்பிவர்கள் நித்திரைசெய்வேளைகண்டு
கொத்திவிடப்போகுதென்று கூறியதுமம்மொழியை
இத்தலத்திலைவெளியிட் டிசைப்பார்கல்லாவரென்று
சொல்லியதுமிந்தவிதம் சொல்லியதுபோனபின்பு
வல்லியுந்தானுமந்த மன்னவனும்வந்ததுவும்
மார்க்கத்திலேயிருந்த மண்டபத்தைத்தாண்டுதற்காய்
தீர்க்கமுடன்புத்திசெய்து தேசியுடன்மண்டபமேல்
நேர்க்குவரும்போது நிலத்திலொலிகேட்டதைப்
பார்க்குபொழுதிலது படீரென்றிடிந்ததுவும்
பட்டணத்தில்வந்தபின்பு பாம்புவருமென்றுசொல்லிக்
கட்டளையாம்வந்திரவிற் காவலனைகாத்ததுவுங்
கடிக்கவந்தவாரவைக் கண்டுதான்வெட்டியதும்
துடிக்கவதனுடலந் துண்டமாய்வீழ்ந்ததுவும்
மங்கையுடமார்பில் வடிந்திரத்தஞ்சிந்தியதும்
அங்கைவிரல்நகத்தா லதைத்தான்துடைத்ததுவும்
கோதைபட்சிசொன்னகதை குறிப்பறிவாளாதலினால்
மாதுவிழித்துடனே வந்துதழுவியதும்
அந்தச்சமயத்தி லரசன்மகன்விழித்துச்
சொந்தமனைவியெனத் தொட்டுத்தழுவியதை
பார்த்துவெளியேயதும் பயந்துபின்சென்றதுவும்
வேர்த்தரசன்மைந்தனுக்கு வெஞ்சினமுண்டானதுவும்
செப்பியந்தமண்டபத்தின் செய்தியும்பார்த்திடலாஞ்
சப்ரமஞ்சமேற்பாயின் தனித்துண்டும்பார்த்திடலாம்
அல்லதோர்பொல்லாங்கு யாதொன்றும்செய்ததில்லை
யெல்லாமுரைத்தேனிது தானடந்ததென்று

சாற்றினானப்பொழுதே சமைந்தானேகல்லுருவாய்
போற்றினாரெல்லோரும் புத்திசிகாமணியைக்
கல்லாய்ச்சமைந்தவனைக் கண்டார்விவரமெல்லாஞ்
சொல்லாதிருந்ததிந்தச் சூதினாலென்றறிந்தார்
வந்தசபையோரும் மந்திரிமாருமவன்
தந்தையுந் துன்ப சமுத்திரத்திலேமூழ்கி
கல்லாய்ச்சமைந்தாலுங் கரிதிய தாறுநமக்
கில்லாமற்செய்தானென் றின்பமுமங்கெய்தலுற்றார்
கல்லுருவாய்நின்றமைந்தன்காரணத்தைப்பார்த்தரசன்
புல்லுருவியானேனே புத்திரனேநானுனக்கு
உண்மையறியாம லுன்னைவெறுத்தேனே
வெண்மையிலேபேசி வினைவளர்த்துக்கொண்டேனே
உத்தமவானீயென் றுனையறியமாட்டாமற்
புத்திரன்சொற்கேட்டுனக்குப் புன்மைவிளைத்தேனே
தன்னுயிர்போனாலுந் தருமமுறையென்றே
உன்னையறியாம லொறுத்தேன்பொறுத்தாயே
என்றுபலவாறு யிறைவன்புலம்பிநிற்கக்
கன்றிபவன்மைந்தன் கவலைப்பட்டேதுரைப்பான்
சத்தியத்திலென்றுந் தவறாதெனைக்காத்த
புத்திசிகாமணியே புண்ணியவான்கண்மணியே
என்னால் நீபட்ட துயரெல்லாமறந்தேனே
உன்னாலுயிர்பிழைத்த வுறுதியைக்கைவிட்டேனே
சொல்லாதசொல்லையெல்லாஞ் சொன்னானிவன்மனது
கல்லாகுமென்றே நீ கல்லாய்ச்சமைந்துநின்றாய்
பன்னாளுமுன்னோடு பழகியிருந்துமையோ
இன்றிவனிதுசெய்வா னென்பதறிந்தேனில்லையே
ஆடந்தை நீக்குதற்கா யங்குவந்தேனென்றுசொன்னாற்
பாடந்தைநோக்கியுன்மேற் பழிசுமத்தமாட்டேனே
சாவைவிலக்கியுயிர் தந்தானமைச்சனென்று
பூவையாளாலுமுள்ள புலனையுரைத்தாளில்லையே

கடிக்கவந்தரவைவெட்டிக்காத்துவிட்டாயென் னுயிரை
துடிக்கத்துடிக்கவுனை சொன்னேனேகண்மணியே
பேசாதிருந்ததனுற் பிழைசெய்திருப்பானெனவே
ஆசாபாசாத்தா லறிவுவேறுனேனே
பிள்ளையைக்கொன்றதெனு பெருங்கோபமாயொருவன்
துள்ளிவிழக்கீரிதனைத் துணித்தகதைபோலாச்சே
மல்லெடுத்தவேங்கைபகை மாதறிபுருவதனை
வில்லெடுத்துக்கொன்றுநின்ற வேடனும்நானுனேனே
மந்திரியேசிந்தா மணியேயெனப்புலம்பிப்
புந்திகலங்கிநொந்தான் புவனேந்த்ரனம்மானை
மற்றுமுள்ளாரெல்லோரும் மனதுவருந்திநின்றார்
பெற்றவரும்ஐயோ பெருந்துயர்கள்பெற்றார்கள்
வேந்தனினிமேல்நடக்க வேண்டியதென்னவெனறே
ஆய்ந்துபின்பாம்பி னடையாளம்பார்ப்போமெனறு
சென்றான் தன்மைந்தனுடன்சேர்ந்தான மண்மனைக்குள்
மின்றுவுசப்ரமஞ்ச மேற்கட்டின்மேற்பார்த்தார்
பார்க்கும்போதந்தப் பாம்புவெட்டுப்பட்ட துண்டம்
ஆர்க்குந்தெரியாம லந்தமேற்கட்டிலின்மேல்
துண்டமிரண்டுஞ்சுருங்கி வற்றிப்போய்க்கிடக்கச்
கண்டாரிருவர்களுங் கண்ணீர்வடித்துநின்றார்
தன்னரசைக்காப்பாற்றுந் தன்மையிலேயிவன்போற்
பன்னூலுஞ்சொல்லவில்லை பாருலகிற்கண்டதில்லை
இப்படிப்பட்டவனென் றெவ்வளவுந்தோற்றுமல்
மெய்ப்படிவங்கல்லாக்கி விட்டோமேயென்றுநொந்தார்
இந்தப்படியா யிவர்வருந்திநிற்கவங்கே
வந்தமடமயிலே மன்னன்மகன்பார்த்துரைப்பான்
தேன்பாபோலுமொழித் தேனேயென்மந்திரிக்கு
நான்பாவிசெய்துவைத்த ஞாயமெல்லாங்கேட்டாயோ
அன்றொருநாளிரவி லமைச்சுடனேநீதழுவி
நின்றதைக்கண்டேனலவா நினைத்தேனமக்குமிவன்

இப்படிபாசெய்தானென் றெண்ணியதும்வேந்தனிடம்
அப்படியேயாள்வசஞ்செய் தனுப்பியதுமப்பொழுதே
மன்னன்விசாரித்ததுவும் மந்திரிமாரெல்லோரும்
பின்னும்விசாரித்ததற்குப் பின்விதித்ததண்டனையும்
அப்பாலமைச்சனுங்கல் லாய்ச்சமைந்து நிற்பதையும்
பொற்பார்மனைவியிடம் புகன்றான்புவனேந்த்ரன்
மன்னனுரைகேட்டு மாதுபூலோகரம்பை
என்னவகைமோச மிப்படியோசெய்துவிட்டீர்
எனக்குமுதற்பிள்ளையவ னென்பதறியீரோ
தனக்குமுயிர்தந்ததனைச் சற்றும்மறந்தீரோ
என்னிடத்திலாகிலுமிதைக்கேட்கலாகாதோ
மின்னிடத்துருதிருக்கு மென்றே நினைத்துவிட்டீர்
புத்தியின்சிகாமணிதன் புத்திசற்றுமேறுமற்
சத்தியத்தினின்றுந் தவறிவிடலாமோவென்றாள்
மானே நீயாகிலும் மந்திரியாகிலுமிங்கே
மேனாள் நடந்தகதை விளம்பாதிருந்ததனால்
விட்டவிதிதோற்றமல் வீணே நான் சந்தேகம்
பட்டல்லோவிந்தப் படிமோசம்போய்விட்டேன்
மாய்ந்துவிட்ட நான்பிழைத்து வரும்படிசெய்ததன்றி
ஆந்துணையுமாகியெனக் காபத்துவாராமல்
செய்துவந்தபுத்தி சிகாமணியை நானிழந்தும்
உய்வெனோநானினியென் னுயிர்வைத்திருப்பேனோ
தீங்கானவாபத்தைத் தீர்த்துவைத்தமந்திரிக்குத்
தீங்குசெய்தானென்று ஜெகத்தோர்பழியாரோ
பாலப்பருவமுதற் பழகியிருந்துமவன்
சீலத்தையோராமற் செய்தானென்றேசாரோ
உத்தமவாகுதியெனக் குயிர்கொடுத்தமந்திரியை
எத்தனைசென்ம மெடுத்தாலுங்காண்பேனோ
சத்தியத்தைக்காப்பாற்றித் தானொருகல்லாகி நின்றான்
இத்தலத்திலேபழிப்புக் கிடமாகிவாழ்வதில்லை

மந்திரவாளாலுயிரை மாய்த்துக்கொள்வேனெனவே
சுந்தரராசன்மகன் சொல்லித்துணிந்துநின்றான்
மானுள்தன்கணவன் மனத்துணிவைத்தானறிந்தாள்
ஏனீர்வருந்தி யிரக்கத்துணிந்துநின்றீர்
அண்டரண்டபட்சியந்நா ளரைந்தகதையதனில்
துண்டாயொருகதையுஞ் சொல்லியதுண்டதனை
நானுமேகேட்டிருந்தேன் நவிலுவேன்மூந்தவிதை
மானிலத்திலிம்மொழியை வழுத்திவெளியிட்டவர்கள்
உடனேகல்லாவரொன் றுரைத்திந்தச்சாபமது
விடவேவிமோசனமும் வேறுண்டோசொல்லுமென்று
பெண்பறவைகேட்டதற்குப் பேசுமந்தவாண்பறவை
மண்புவியிற்சாபம்விடும் மார்க்கமதைநீகேளாய்
பாராளும்வேந்தனுக்கோர் பட்டத்துமைந்தனையே
தாராளமாய்ப்பெற்ற தந்தையுந்தாயாரும்
உற்றோரும்மற்றோரும் உள்ளம்வருந்தாமற்
சற்றேனுங்கண்ணீர் ததும்பிவ்வடியாமல்
கல்லுருவின்மீதுவைத்துக் காற்புறத்தைத்தாயாரும்
வல்லதலைப்புறத்தை மகனுடையதந்தையுமாய்
பிடித்துநின்றுகொண்டு பிதாவுடையகைவாளால்
துடிக்காமற்பாலகனைத் தொட்டுக்கழுத்தறுத்துக்
கல்லுருவின்மேலிரத்தங் கரைந்துவழிந்தோடவிட்டு
மெல்லப்பரிகொடுத்தால் விட்டுவிடுங்கல்லுருவம்
தன்னுருவம்பெற்றிடுவார் சந்தேகமில்லையிதன்
பின்னிதனைச்சொன்னாலும் பின்பவர்க்குச்சாபமில்லை
என்றுசொல்லிப்போனதைை யானுங்கேட்டிருந்தேன்
இன்றதுபோற்செய்தா லெழுப்பலாமந்திரியை
மன்னவனேயென்றுரைத்தாள் மாதுபூலோகரம்பை
அன்னதையெலாங்கேட் டரசன்மகனேதுசொல்வான்
தெல்லுங்கடலிற் றிசைதப்புங்கப்பலுக்கு
வல்லானொருவன்வந்து வழிகாட்டிவிட்டதுபோல்

துஞ்சியதன்சேனைகளைச் சுகமாயெழுப்புதற்குச்
சஞ்சீவிகொண்டனுமான் சார்ந்தசமயமும்போல்
தருவின்மேல்நின்று தவறிவிழும்போதவற்குப்
பெரிதாகவங்கோர் பிடிகொம்புவாய்த்ததுபோல்
தானேகிணற்றில் தடுமாறிவீழ்பவனைப்
போனானொருவன் புறந்தூக்கிவிட்டதுபோல்
தார்குழலேயிந்தச் சமயத்தில் நீயுரைத்தாய்
ஓர்குறையும்வாராதென் னுயிரையுங்காப்பாற்றிவிட்டாய்
மருந்தைப்புழக்கடையில் வைத்திருந்தும்யோசனையே
இருந்தும்வெண்ணெய்கையில் ஏங்கித்திரிவானேன்
ஆனதனாற்பலிக்கிங் கமைவாகநம்மிடத்தில்
தானோர்குழந்தைவைத்துத் தானிருக்கிறோமதையே
சீராய்ப்பலிகொடுத்தென் தீர்க்கமுள்ளமந்திரியை
நேராயெழுப்ப நினைக்கிறேனிக்குழந்தை
போனாலும்மந்திரி பிழைத்தாலேபோதுமென்ன
ஆனாலுன்சம்மதமெவ் வாறென்றவன்கேட்க
நாயகன்சொற்போலே நடப்பவளேகற்புடைய
தூயமனைவியென்று சொல்லுமே நூல்களெல்லாம்
என்னுயிரைக்கேட்டாலு மீவதேயல்லாமற்
பின்னெனக்கோர்யோசனை பேச்சுண்டோமன்னவனே
என்னைவேறாகநினைந் தேனிந்தவார்த்தைசொன்னீர்
மன்னவனேயும்முடைய மனம்போலெனக்குமென்றாள்
அந்தமொழிகேட் டரசன்மகனட்சணமே
தந்தைமுகம்பார்த்தானத் தாலபுரந்தரனும்
அப்படியேசெய்வ தழகதுவே நீதியென்றான்
இப்படிக்கேட்டங்கேவந் திருந்ததருமாபதியாம்
தன்றாய்முகம்பார்த்துச் சங்கதியெல்லாமவட்கு
நன்றாயுரைத்தவுடன் நங்கையுந்தான்சம்மதித்தாள்
மற்றார்தான்சம்மதிக்க மாட்டாரினியவருக்
குற்றாருஞ்சம்மதித்தா றாராருங்கேட்டறிந்தார்

தண்டிகைகொண்டுவந்தார் தார்வேந்தனுத்தரவால்
வண்டார்குழலியதில் மைந்தனுடன்செல்லலுற்றாள்
மந்திரவாள்கைபிடித்து மன்னன்மகன்நடந்தான்
புந்தியுடன்குல புரந்தரனுமங்குசென்றான்
காமரசவல்லிபெற்ற கன்னிதண்டிகைக்கருகே
சோமனிகர்வதனத் தோழிமார்சூழ்ந்துவர
தானபதிமடவார் சார்ந்திருபாலும்வர
மானரிக்கூழியஞ்செய் மடவார்தொடர்ந்துவர
முன்னேசிலவீரர் முனைவாள்பிடித்துவரப்
பின்னேசிலவீரர் பெரியவேலேந்திவர
மண்டலத்துவேந்தன் மைந்தனும்பூலோகரம்பை
தண்டிகையைமுன்புவிட்டுத் தாங்கள்பின்னேநடக்க
கோதைமகனைப்பலி கொடுப்பதற்குகொண்டுசெல்லுஞ்
சேதியினைத்தாதியரால் றெரிந்தார்கள்பட்டணத்தார்
பூமிவளம்பார்க்கப் போனமைந்தர்வாராத
தாமதத்தாலேசிலநாள் சஞ்சலம்கொண்டிருந்தோம்
வந்துவிட்டாரென்று துயர் மாற்றிமகிழ்ந்தோமதையுஞ்
சிந்தவிட்டான்புத்தி சிகாமணியுங்கல்லாகி
அன்னந்துயருக்கிட மாக்கிவைப்பதற்கோ
மன்னவனுமையோ மனந்துணிந்தானென்பாரும்
கல்லானசாபங் கடத்தவென்றலிக்குழந்தை
யல்லால்வேறோர்குழந்தையாகாதோவென்பாரும்
மன்னனுக்கோர்மைந்தன் மைந்தனுக்கோர்குழந்தை
இன்னதையுங்கொன்றுவிட்டா லிளவரசாரென்பாரும்
புத்திசிகாமணிக்காய்ப் பூலோகரம்பையுந்தன்
புத்திரனைகொல்லமனம் பொருந்தினளோவென்பாரும்
மாய்ந்தகணவனுயிர் வரவழைத்தமந்திரியென்
றோய்ந்தலவோநெஞ்ச மவள்துணிந்தாளென்பாரும்
செல்வாருமைசற்றுந் தெரியாப்பருவமதாற்
கொல்லத்துணிந்தானரசன் குமாரனிவனென்பாரும்

மைந்தருக்கேமாந்தமன்னன் மனவிதருமாபதிதான்
இந்தக்கொலேயைத்தடுக்கா தேனிருந்தாளென்பாரும்
தாலபுரந்தரனுஞ் சம்மதித்தானேயோவிப்
பாலகனைக்கொன்முற் பழியிலேயோவென்பாரும்
மைந்தன்மேல்வந்தவசை மாற்றுதற்காயலவோ
தந்தையுமிக்கொலேக்குச் சம்மதித்தானென்பாரும்
இவனுனைகல்லுருவை யென்மகனுதீர்ப்பனென்று
புவனேந்திரன் துணிந்து போவதைப்பாரென்பாரும்
ஆனுற்குழந்தைபலி யாற்சாபம்நீங்காமற்
போனுற்குழந்தையும்விண் போய்விடுமேயென்பாரும்
மந்திரிபோனலவன்போல் வருவாரனேகரையோ
இந்தமகன்போனு லினிவருமோவென்பாரும்
பொன்கொடுத்தானுலுமொருபுதல்வனைவாங்கென்னுது
மின்கொடுத்தாள்சம்மதிக்க விதியிதுவோவென்பாரும்
மைந்தரிவர்போய்நகர்க்கு வந்தடைந்தநாள்முதலாய்
இந்தத்துயர்படவே யிருந்தோமேயென்பாரும்
புத்திசிகாமணிக்காய்ப் புலம்பிநின்முரம்மானை
இந்தவிதம்பட்டணத்தா ரிரங்கவிவரெல்லோரும்
மந்திரிகல்லாச்சமைந்து வாழுமிடம்போய்ச்சேர்ந்தார்
சென்முர்களங்கே தெருவீதிகளிலெங்கும்
நின்முரிருந்தார்கள் நெடுநகருள்ளார்களெல்லாம்
கண்டுதொடர்ந்துவந்தார் களப்பலியைப்பார்ப்பதற்கு
மண்டலமிட்டெல்லாரும் வளைந்துகொண்டாரம்மானை
தண்டிகையும்விட்டிறங்கித்தையலுந்தன்மைந்தனுடன்
மண்டலத்துவேந்தன் மகனருகேவந்து நின்முள்
மந்திரிகளெல்லோரும் மாநகரிலுள்ளோரும்
அந்தமைந்தன்கல்லுருவுக் கடுத்துவந்து நின்முர்கள்
வையத்தரசன்முகம் மைந்தனுந்தான்பார்க்கச்
செய்யத்தகுவதினிச் செய்யுமென்முன்தேர்வேந்தன்

## இராஜகுமாரன் தன்மகனைப் பெலிகொடுத்து மந்திரிகுமாரனை யெழுப்புவது.

உடனேயக்கல்லி னுருமேல்மகனைவைத்துத்
திடமாகக்காற்புறத்தைத் தேவிபிடித்து நிற்க
தானுந்தலைப்புறத்தைத் தன்னிடக்கையாற்பிடித்து
மானவலக்கைதனிலே மந்திரவாளெடுத்து
மைந்தன்கழுத்தையிந்த மன்னன்மகனறுத்துச்
சிந்தரத்தங்கல்லின்மேற் சேரவழிந்தோடவிட்டான்
பாலகனையிவ்விதமாய்ப் பலிகொடுத்தந்தட்சணமே
வாலமதன்போலமைச்சன் மைந்தன்விளங்கிநின்றான்
கல்லாச்சமைந்தவுருக் காணுமல்மைந்தனையே
எல்லாருங்கண்டவுட னிதையமகிழ்ந்தார்கள்
பாரித்தசந்திரகிரிப் பார்த்திபனைப்பார்த்துமனம்
பூரித்தவாணரைப்போற் பூரித்தாரெல்லாரும்
சொல்லாலுயர்ந்த துரையமைச்சன்புத்திரனும்
புவனேந்திரனையுமப் பூலோகரம்பையையுங்
கவனமுடனேவணங்கிக் காவலன்தாள்பணிந்து
தந்தைக்குந்தாய்க்குந் தனித்தனியேதாள்வணங்கி
மந்திரிமாரெல்லோர்க்கும் வாயுபசாரஞ்சொல்லி
வேந்தனும்மைந்தனுந்தன் மேல்வைத்த அன்பதனை
ஆய்ந்தமைச்சன்மக னச்சரியந்தானடைந்து
தன்பொருட்டாற்பூமி தனையாளிளவரசை
கொன்றுபலியிட்டதனைக் குறித்துமனம்வருந்தி
எனக்காகவிம்மகவை யேனறுக்கவேணுமென்று
மனக்காதலோடிரங்கி மன்னன்முகம்பார்த்துரைப்பான்
ஆழிவைத்தகையரசே யடியேனுக்குந்தெரிந்த
ஊழியத்தைசெய்வேனென் றூகித்தங்கேதுசெய்தான்

## மந்திரிகுமாரன் இராஜகுமாரன் குழந்தையைப் பிழைக்க வைத்தல்.

கையாற்குழந்தையுடல் கருத்தாகவேயெடுத்துக்
கொய்ததலையினையுங் குறித்தெடுத்தோர்பாலிருந்து
மாசுதுடைத்துடலின் மருவுதலையொட்டவைத்துப்
பூசியவெண்ணீருடனே புண்ணியதீர்த்தந்தெளித்து
தேன்கொட்டுந்தார்மார்பன் திரைச்சீலைக்குள் நுழைந்து
தான்கற்றதோர்சீவ தாரகமந்திரத்தை
தேசானுபூதி நிறைந்தமனத்துடனே
ஆசானைமானதத்தா லன்பாகப்பூசைசெய்து
கொண்டொருசாமஞ்செபித்துக் குழந்தையுயிர்பெறவே
கண்டானுடனேதன் கையாலெடுத்தணைத்தான்
காம்போஜநாட்டரசன் காதலன்றன்கண்மணியே
பாம்பாலெனக்குவந்த பழியையும்சாபத்தினையும்
நீயாவிலக்குதற்கு நேராளசஞ்சீவி
யாயேபிறந்திருந்தா யரசன்குலக்கொழுந்தே
ஆனோர்கல்லுருவா யமைச்சன்விதிவசத்தாற்
றானேயென்றெண்ணிச் சரியென்றிருக்காமல்
அந்தோவெனக்கா யறுத்துப்பலிகொடுக்கத்
தந்தைதுணிந்தாலுநம்மன் தாயுந்துணிந்தாரோ
விரிஞ்சாதியனீன்ற மெல்லியலார்மந்திரிக்கு
வருஞ்சாபமென்றறிந்தோ மைந்தனைப்பெற்றிருந்தார்
புவனேந்திரன்கண்மணியே பூலோகரம்பைசெய்த
தவமேயொருவடிவாய்ச் சமைந்தசிந்தாமணியே
புத்திரசிகாமணியே பொன்னேயென்றிவ்விதமாய்ப்
புத்திசிகாமணியும் புகழ்ந்துரைத்தங்கேதுசொல்வான்
மைந்தனைக்கையேந்தி வளைந்ததிரையைவிட்டுச்
சிந்தைமகிழ்வாயரசன் திருக்காத்திலேகொடுத்தான்
தந்தைமகிழ்வாய்க்கொடுத்த தன்மகனைத்தான்வாங்கி
வந்தமகிழ்ச்சிதனை மனத்தினுக்குள்ளேயடக்கி

செல்வன்பிழைத்தசேதி தெரிந்துபூரித்திருக்கும்
மல்லிபூலோகரம்பை மலர்க்கரத்திலேகொடுத்தான்
வாங்கினாள்பெற்ற மகனைமார்போடணைத்து
தாங்கினாள்முத்தமிட்டுத் தனதுமுலைப்பாலூட்டி
விம்மிப்பெருமூச்சு விட்டுப்புளகமுற்றுத்
தம்மையறியா மகிழ்ச்சி சார்ந்தாள்பூலோகரம்பை
மந்திரிமாரெல்லோரும் மாநகரிலுள்ளோருந்
தந்தையுந்தாயாருந் தழைத்தார்மனமகிழ்ச்சி
புரவலன் தன்மைந்தனந்தப் புத்திசிகாமணியின்
தரமறியமாட்டாமல் தான்செய்தசெய்கையெல்லாம்
நினைத்து நினைத்து நெடுமூச்சுத்தானும்விட்டு
மனத்தினுள்ளின்பதுன்ப மகிழ்ச்சியுந்தானடைந்து
இந்தவிதமா யிவர்கள்மகிழ்ந்திருக்க
வந்தசபையோருமற்ற மந்திரிமாரெல்லோரும்
மந்திரிகல்லாய்ச்சமைந்த வண்ணமுமந்திரிக்காய்ச்
சொந்தமகனையந்தத் துரைமகள்செய் நன்மையையும்
புத்திசிகாமணிதன் புத்தித்திறமையையும்
வித்தையின்வல்லமையும் வேந்தனிடத்திலவன்
வைத்திருக்குமன்பினையும் மலைபெயருமாகிலுந்தன்
சித்தங்கலங்காத தீர்க்கதயிரியமும்
வாய்த்தவிருவோரின் மனநேசவாஞ்சையையுஞ்
சாந்தகுணசீல தயாளவிசேடங்களையும்
கல்விப்பெருமையையுங் கருதித்தனித்தனியே
பல்விதமாகப்புகழ்ந்து பாவினாரம்மானை
இன்னவிதமாயவ் விருவர்குணங்களையும்
பொன்னகருள்ளாரெவரும் புகழ்ந்திருக்குமந்நேரம்
தன்மநெறிதவறாத் தாலப்புரந்தானுந்
தன்மனத்துளாலோ சனையொன்றுசெய்யலுற்றான்
புத்திசிகாமணியிப் பூதலத்திலேயெவருஞ்
செத்தார்பிழைத்துவரச் செய்யும்வகையென்னவிதம்

மேலாங்கடவுளர்க்கும் வேதன்விதிமாற்றிவிட
ஏலாதென்றன்றோ வியம்பும்பல நூலும்
அந்தப்பிரம னமைத்தவிதியினையும்
இந்தப்படிமாற்றி யிவன்செய்ததெந்தவகை
போனவிடத்தேயிறந்த புவனேந்திர னுயிரைத்
தானேயெழுப்பிச் சலனமகற்றிவந்தான்
இங்கேபலிகொடுத்த விந்தக்குழந்தையையும்
பங்கமில்லாமற்பிழைக்கப் பண்ணினான்மந்திரத்தால்
இந்தவிதமாக விவன்செய்வானுமாகில்
அந்தமலரோன்செய் யதிகாரமெப்படியாம்
இன்னவிவரமதை யிவனாலறிவமென்று
மன்னன்மனதில் மதித்துடனேயேதுசெய்வான்
மந்திரிமார்யாவரையும் மருவுசபையார்களையும்
அந்தவரச னழைத்தங்கிருத்திவைத்து
புத்திசிகாமணியைப் புவனேந்திரனருகிற்
சித்தமகிழ்ந்திருக்கச் செய்துமுகம்பார்த்துரைப்பான்
மந்திரிசெய்தவத்தால் வந்தபிள்ளைரந்தினமே
இந்தவுலகத்தி லெவர்க்குமுடியாதசெய்கை
அல்லவோமாண்டவுயி ரதனைப்பிழைக்கவைத்தால்
வல்லமையில்வல்லமையிம் மந்திரம்நீகற்றதையா
இன்னமெனக்கிங் கிதிலேயோர்சந்தேகம்
அன்னதுவென்னவென்றா லம்புவியிலுள்ளோர்கள்
யாவரிறந்தாலு மவர்களுயிர்களையுந்
தேவையிருந்தாற்பிழைக்க செய்யவுந்தான்கூடுமல்லோ
அல்லதொருகாரணத்தி னாலிறந்தார்க்குமட்டும்
இல்லதுமற்றோர்க் கிசையாதோவிந்தவித்தை
எப்படியம்மந்திரத்தி னியற்கையதைநமக்குச்
செப்பிடுவாயென்றுபுத்தி சிகாமணியைத்தான்கேட்க
புத்திசிகாமணியப் போதேயெழுந்துவந்து
கர்த்தனடிவணங்கிக் கைகட்டிநின்றுசொல்வான்

வேந்தர்பெருமானேயிவ் வித்தையுமோர்சத்குருவைச்
சார்ந்துமேதொண்டுசெய்து சரியாய்நடந்துகற்றேன்
வேதன்விதித்த விதிப்படியேமேதினியில்
சாதல்பிறத்தல் சரியாய்நடந்துவரும்
எந்தவுயிருக்கு மிறுதிகணக்காயிருக்கும்
அந்தக்கணக்கினிலோ ரணுவுந்தவறாது
ஆர்க்குங்கிரகத்தா லபமிருத்துத்தன்னாலும்
பார்க்குளபாயத்தாலும் பலிக்குமொருக்கால்மாணம்
அந்நமரணத்தை யகற்றுதற்கேயாகுமய்யா
இந்தவித்தையென்னுசா னெனக்குபதேசித்திருந்தார்
ஆனதனாலந்த அவமிருத்துக்கல்லாது
மானிடர்கள்யார்க்கும் வரையறுத்தநாட்கணக்கை
மாற்றிவைக்கயார்க்கேனும் வல்லமையுண்டோதான்
தேற்றமுடையாயுமக்கோ சிறியேன்விரித்துரைப்பேன்
தேர்வேந்தேயென்றுபுத்தி சிகாமணியுந்தானுரைக்க
தார்வேந்தன்கேட்டுச் சரியென்றுநானிருந்தான்
சார்ந்தங்கிருந்த சபையிலுள்ளோரெல்லவரும்
வேந்தன்வினவுக்குவியந்துபுகழ்ந்தார்கள்
இத்தகையமைந்தனையு மிவற்கிசைந்தமன்னனையும்
மெய்த்தவத்தாற்பெற்றவரே மெய்த்தவம்பெற்றார்கள்
தாலபுரந்தரனுஞ் சபையிலுள்ளோரெல்லோரும்
மாலுடனேவார்த்தைசொல்லி மகிழ்ந்திருக்குமந்நேரம்
வந்ததங்கேயானைபரி மன்னனனுமதியால்
எந்தவிதப்பவுசு மிறைவனெதிர்வந்துநிற்கக்
கண்டவுடன்ரசன் காதல்மருமகனைத்
தண்டிகைமேலேற்றிமின்னார் தளங்களையுங்கூடவிட்டு
வடிவாளுருவி வயவீரர்முன்னடக்கப்
பிடியாயுதத்துடனே பின்சேனைதானடக்க
வந்தகுழந்தையுடன் மாதரசிபொன்மனைக்கு
முந்திச்செலும்படிக்கு முன்னேயனுப்பிவிட்டு

வள்ளல்மகனையுந்தன் மந்திரியின்மைந்தனையும்
உள்ளன்பினாலே யோர்யானைமீதேற்றிச்
சிங்கமுகத்தண்டிகையிற் சிலைவேந்தன்றானேறி
அங்குள்ளவாகனத்தி லமைச்சரெல்லாமேறிவர
மற்றோருந்தங்கள் வாகனத்திலேறிவர
வெற்றிக்குடைநிழற்ற விருதுபலசூழ்ந்துவர
மஞ்சுமுழங்குதல்போல் வாத்தியமெலாமுழங்க
குஞ்சம்பாவாடை கொடிகள்பலநெருங்க
நாடகமின்னார்கள் நடனம்புரிந்துவர
பாடகர்சங்கிதநயம் பாடல்செவிகுளிர
வெண்சாமரைவீச வெற்றிச்சின்னங்குமுறத்
தண்சார்ந்தவாசமலர்த் தாமமணிமார்பிலங்கத்
தேவேந்திரன்பவனி செய்துவருவதுபோற்
பூவேந்தன்மைந்தனுடன்புகுந்தான்தன்பொன்னகரில்
ஓரானைமேலே யுலகரசன்புத்திரனுஞ்
சீராளன்புத்தி சிகாமணியுமேறிவரக்
கண்டார்கள்பட்டணத்தார் கண்கல்களிப்படைந்தார்
விண்டாரனேக வியப்பானவார்த்தையெல்லாம்
தெய்வச்செயலைத் தெரிந்துகொள்ளவல்லவர்யார்
வையகத்தரசனிந்த மந்திரியின்புத்திரனைக்
கொன்றுவிடச்சொன்னபடிகொண்டுபோனாங்கவனும்
தின்றுவிட்டான்கல்லுருவாய் திருபன்மகன்தன்மகனை
வெட்டிப்பலிகொடுத்து விலக்கினான்சாபமதை
இஷ்டமுடன்மந்திரியங் கெழுப்பினான்பிள்ளைதனை
மந்திரியின்புத்திரனும் மன்னன்மகனுமொரு
தந்தியின்மேற்பவனி தான்வந்தார்பாருமென்பார்
வாய்ந்தமகன்கல்லுருவ மாறிமன்னன்மைந்தனுடன்
சேர்ந்துவரல்யார்க்குந் தெரியுமோவென்றுரைப்பார்
உள்ளபடிசாப மொழித்தாலும்கொன்றுவிட்ட
பிள்ளைபிழைக்குமென்றபேச்சுமுண்டோசொல்லுமென

ஈதெல்லாம்நம்ம னிறைவனொருநாளும்மனு
நீதிதவறுதிருந்த நேர்மைவிசேடமென்பார்
புத்திசிகாமணியின் பொறுமையிலென் றுரைப்பார்
தத்தைதருமாபதியின் தருமமிதுவென் றுரைப்பார்
பூலோகம்செய்த புண்ணியமீதாகுமென்பார்
சீலபுவனேந்த்ரன்மனத் தீர்க்கத்தாலென் றுரைப்பார்
இந்தப்படியா யெவரும்புகழ்ந் துரைக்க
அந்தப்பெருவீதிகடந் தரண்மனையி னுட்புகுந்தார்
வாகனங்கள்விட்டிறங்கி மைந்தர்களுமன்னவனுஞ்
சேகரமந்திரிகளுஞ் சேர்ந்தார்கள்மாளிகையில்
வேந்தனுஞ்சிங்காசனத்தின் மேவிச்சதிர்நடத்தி
வாய்ந்தசகலருடன் மனமகிழ்ச்சியாயிருந்து
அன்பாயமைச்சருடன் யார்க்கும்விடைகொடுத்து
பின்பமைச்சன்புத்திரனைப் பிரியமாகத்தழுவி
இந்தவுலகமன்றி யெந்தவுலகங்களையுங்
கந்தமலர்தோளில்வைத்துக் காக்கும்பராக்கிரமம்
பெற்றவனென்மைந்தனென்று பேருலகெலாந்தெரியும்
மற்றவன்தோளிலிந்த வையகத்தின்பாரமதை
வைத்துமதுமைந்தனுக்கு மந்திரிப்பட்டமதைச்
சித்தமுடன்கொடுக்கச் சிந்தித்தேன்மந்திரியே
எண்ணமுமக்கெவ்விதமா யிருப்பததையெனக்குத்
திண்ணமுடன்சொல்லுமென செப்பினான்தேர்வேந்தன்
வேந்தனுரைத்த விவரமெல்லாந்தான்கேட்டு
வாய்ந்தமதிமந்திரியும் மதியால்மதித்துரைப்பான்
தாஞ்சுமக்கும்பாரமதைத் தடுத்தொருவன்வந்துசும்மா
நான்சுமந்துதந்திடுவேன் நல்குமென்றால்நல்காரோ
பெரும்பாரந்தாங்குதற்குப் பிள்ளையுண்டானபின்பு
வரும்பாரரசரதை வசத்தில்வைத்துக்கொள்ளார்காண்
நானினைத்ததும்பாலே நன்மையுள்ளபண்டிதனார்
தானினைத்ததும்பாலே தானென்றதன்மையைப்போல்

என்னத்திலேமநானு மெண்ணியிருந்ததுபோல்
மன்னர்பெருமானுமது மனத்திலுமுண்டானதையா
அப்படியேசெய்வதினி லாட்சேபமொன்றுமில்லை
இப்பொழுதேசெய்வீ ரிதுதான்சமயமென்றான்

இராஜகுமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்
செய்து அரசாளுதல்.

மந்திரிசொற்கேட்டரசன் மைந்தன்முடிசூடுதற்குச்
சிந்தைக்கிசைந்தசுப தினமுரியதாய்ப்பார்த்துத்
தேசத்தரசருக்கும் ஜெகதலத்துள்ளோரெவர்க்கும்
நேசத்துடன்பாசுரங்கள் நீரனுப்பிப்பட்டணத்தைச்
சிங்காரஞ்செய்யத் தெரிவித்துவள்ளுவனால்
அங்காகத்தக்கதெல்லாமமைவித்துக்கொள்ளுமென
மேதினியாள்வேந்தன்விளம்பியசொற்கேட்டமைச்சன்
சோதிடரையழைத்துச் சுபதினமுந்தான்பார்த்துப்
பொன்னுருமார்பன் புவனேத்திரன்தனக்குச்
சொர்ணமணிமகுடம் சூட்டுநாளின்னதென்று
இட்டப்படுத்தியந்தச் செய்தியினைவள்ளுவராற்
பட்டணத்துக்கெல்லாம் பறையறையச்செய்துவைத்து
மன்னவருக்கெல்லாம் வரைந்தோலைதானனுப்பி
பொன்னகருக்கொப்ப புவனேந்திரநகரைச்
சிறப்பாயலங்கரித்துத் தேர்வேந்தர்தங்களுக்கும்
புரப்பாராசருக்கும் புதுவிடுதிகட்டிவைத்துச்
செம்பொன்னரண்மனையுந் திருமுகப்புவாசல்களும்
அம்புவியோர்கொண்டாட அழகாயலங்கரித்துச்
சிங்காரப்பட்டாபி ஷேகமண்டபந்தனையும்
அங்கேயனேக வலங்காரம்செய்துவைத்து
வேண்டும்பதார்த்தமெல்லாம் விரைவாகச்சேகரித்துத்
தூண்டுபரியானைரதச் சோடனையெல்லாமமைத்துத்
தேர்வேந்தனுக்கிதெல்லாந் தெரியப்படுத்திவைத்தான்
பார்வேந்தரெல்லோரும் பதியில்வந்துசேர்ந்தார்கள்

அந்தச்சமையமதி லமைத்தசுபதினமும்
இந்தத்தினந்தானென் றிசைந்தார்புரோகிதர்கள்
பூவேந்தனுத்தரவாற் புவனேந்திரனையங்கோர்
தேவேந்ரமண்டபம்போற் சிறந்தமணிமண்டபத்தில்
வைத்துநீராடும் வரன்முறையாலாட்டுதற்கு
சித்ரமணித்தூசிமுதற் சிறப்பாயலங்கரித்து
மண்டபத்திற்கொண்டுவந்து வைத்தான்மதியமைச்சன்
எண்டிசையிலுள்ள வீரராஜாதிராஜர்களும்
மாதவத்தினோரும் மறையோர்முனிவர்களும்
பூதலத்துள்ளோரும் புலவோர்பெருந்திரளும்
மந்திரிமாரும் மறுபுலத்துமன்னர்களும்
தந்திரதயாதிபருந் தானைபதியோரும்
இன்னம்வரத்தகுந்தோ ரெல்லோரும்வந்திருக்கப்
பன்னுமறையோராசி பல்லாண்டிசைமுழங்க
நாட்டியங்களாட நயசோபனம்பாடப்
பாட்டுடையோர்சங்கீதம் பாடியொருபாலிருக்கச்
சாஸ்திரங்கற்றோர்கள் சமையமதுபார்த்திருக்க
வாத்தியங்களெல்லாம்வகைவகையாய்த்தான்முழங்க
தங்கமகுடாதிபதி தாலபுரந்தரனுஞ்
சிங்கமணியாசனத்திற் சிறப்பாகவந்திருந்தான்
அந்தசிங்காசனத்தி லழகுபுவனேந்திரனை
வந்திருக்கச்செய்துபுவி மன்னரெல்லாம்வணங்க
வேதத்தொனிமுழங்க வித்வசனர்வாழ்த்திசைப்ப
நீதற்றமாதவத்தோர் ஜெயமென்றுசீர்வதிப்ப
பொன்னுலவுமார்பன் புவனேந்திரன்தனக்குச்
சொர்னமணிமகுடஞ் சூட்டினனம்மானை
புவனேந்திர நகரைப் புரக்குமிராசாதிபதி
புவனேந்திரனெனவே புனைந்தான்மணிமகுடம்
புந்திதனிலுயர்ந்த புத்திசிகாமணிக்கு
மந்திரிப்பட்டம் வரிசையாகக்கொடுத்தான்

பொன்மகுடம்பூண்ட புவனேந்திரனையந்த
மன்னன்சகல வரிசைப்பவுசுடனே
பட்டணத்தைச்சுற்றிப் பவனிவரச்செய்துவைத்தான்
திட்டந்தெரிந்தவனுஞ் செங்கோல்செலுத்திவந்தான்

## விரிஞ்சாதிபன் பூலோகரம்பையைத் தன்மகளென்றறிதல்.

பட்டாபிஷேகமது பார்க்கவந்தமன்னரெல்லாந்
தட்டாவரிசைபெற்றுத்தனதுநகர்சேர்ந்தார்கள்
அந்தமன்னருக்கு ளரசன்விரிஞ்சாதிபதி
முந்தித்தான்பெற்றெடுத்த மொய்குழல்பூலோகரம்பை
பூங்காவனத்தொருநாட் பூவெடுக்கப்போனதிலோர்
தீங்கானபாம்பெடுத்துச் சென்றதென்றநாண்முதலாய்
அந்நாள்வரையிலிவ ளானகெதியென்னவென்றே
எந்நாளுமெந்த விடத்தும்விசாரித்திருந்தான்
ஆனதனலிந்த அரசன்திருமகனல்
மேனடந்தகாதை விவரமெல்லாங்கேட்டறிந்து
சந்தேகமின்றியிவள் தன்மகளேயாகுமென்று
சிந்தைசெய்துபுத்தி சிகாமணியைத்தானழைத்து
வைத்தங்குபசரித்து வகைவிவரமாய்க்கேட்டான்
புத்திசிகாமணியும் புகன்றுவிட்டானுள்ளதெல்லாம்
மந்திரியின்சொற்கேட்டு மன்னன்விரிஞ்சாதிபதி
சிந்தைகசிந்துருகச் செய்யக்கண்ணீர்பெருக
மாண்டார்பிழைத்து வரக்கண்டமாந்தரைப்போல்
தூண்டாமகிழ்ச்சியுடன் துக்கங்கொண்டேபுகல்வான்
மாதுபூலோகரம்பை மங்கைப்பருவமதிற்
போதுகொய்யப்பூங்காவிற் போனகதைமுதலாய்த்
தான்றேடித்தேடித் தளர்ந்தவருத்தமெல்லாம்
நான்தேடும்பொன்மணிக்கும்நாயகற்குஞ்சொல்லுமென
வேந்தன்விரிஞ்சாதிபதி விளம்புமதுசெய்தியெல்லாம்
வாய்தபுவனேந்திரற்கு வழுத்தினன்மந்திரியும்

மன்னனதைக்கேட்டு மனைவியிடம்போயுரைத்தான்
மின்னனையிங்கழைத்தால் வெளியாகுமென்றுரைத்தாள்
புத்திசிகாமணிநீ போயழைத்துவந்திடென்றான்
அத்தருணம்போயங் கழைத்துவந்தான்மந்திரியும்
தரைக்கரசன்பத்தினிதன் தந்தையைச்சந்தேகமறத்
திரைக்குளிருந்துகொண்டு சிலவுண்மைகேட்டறிந்து
தந்தையிவரேயாகுஞ் சந்தேகமில்லையிவர்
வந்தபடிதெய்வம் வகுத்தபடியென்றுணர்ந்தாள்
கையால்திரையெடுத்தாள் கண்டாள்பிதாவின்முகம்
அய்யாவென்றோடிவந்தாள் அடியிணையிலேபணிந்தாள்
அண்ணல்விரிஞ்சாதிபனு மன்புடன்வாரித்தழுவிப்
பெண்ணமுதேதான்தவத்தாற் பெற்றபெரும்பாக்கியமே
காமரசவல்லிபெற்ற கட்டித்திரவியமே
சேமநிதியேநாங்கள் செய்ததவப்பேறே
பலநாள்வளர்த்த பசுங்கிளியைத்தப்பவிட்டு
சிலநாளாய்த்தேடித் திரிபவர்போல்நான்வாடிப்
போனகிளிகூட்டில்வந்து புகக்கண்டுகொண்டதுபோல்
நானுமுனையிங்குகண்டேன் நான்செய்தமெய்தவத்தால்
என்றுபலவாறுக இன்னமனேகம்புகன்று
கன்றுகண்டபாற்பசுபோல் கசிந்துகண்ணீருகுத்தான்
பொன்மாதின்தந்தையென்றே புவனேந்திரனறிந்து
தன்மாமன்தன்னைத் தழுவியுபசரித்தான்
மருமகன்முகம்நோக்கி மாமன்மகிழ்ந்துரைப்பான்
முருகனுக்குநேரான முடிவேந்தன்புத்திரனே
என்மகள்பூலோகரம்பைக்கேற்றமாப்பிள்ளையெந்த
மன்மகனோவென்று மனக்கவலைகொண்டிருந்தேன்
தேசமன்னரெல்லாந்திறைகொடுக்கப்பாராளும்
நாயகன் நீரேயிவட்கு நாயகனுய்ப்பெற்றேன்காண்
வேந்தருக்கெல்லாமுயர்ந்த வேந்தேயெனப்பலவாய்
வாய்ந்தவிரிஞ்சாதிபதி வாழ்த்தினாரம்மானை

இக்கதையைச்
பன்றான்வேந்தன் புகின்
..ரிடம்போயுரைத்தான்
முஞ்சொல்லென் றுசொல்லி
...தும்வரிசை செய்தவனூர்போய்ச்சேர
வைபத்தரசன் மகிழ்வாயனுப்பிவைத்தான்
பொன்பதியுமார்பன் புவனேந்திரனிடத்தில்
தன்பதிபோய்ச்சேர்வதற்குத் தானும்விடைவாங்கி
மீன்பற்றகண்ணியிடம் விரிஞ்சநகர்போய்ச்சேர
நான்பெற்றபெண்ணரசே நல்குவிடையென்றுரைக்க
தந்தைவிடைகேட்கத் தளிரியல்பூலோகாம்பை
சிந்தைவருந்தியிரு சேல்விழியின் நீர்சொரிய
நின்றுசொல்லத்தக்கதெல்லாம் நிகழ்த்திநெடுமூச்சா
யென்றினியான்காண்பேனென்றேங்கிவிடைகொடுத்து
தாயாற்குத் தங்கையற்குந்தமையனுக்குந்தோழியற்கும்
வாயாரவாழ்த்துரைகையும் வந்தனமுஞ்சொல்லுமென
வாய்ந்தமகளுக்கு வரிசைசிலதுங்கொடுத்து
வேந்தனும்சேனையுடன்விரிஞ்சநகர்போய்ச்சேர்ந்தான்
பூலோகாம்பை புகுந்தவரலாற்றையெல்லாம்
மாலோடுசொந்த மனைவிமகளார்க்குரைத்தான்
சொல்லியதெல்லாங்கேட்டுச் சுற்றத்தார்பட்டணத்தார்
எல்லவருங்கொண்டாடி யிருந்தார்களம்மானை
திங்கண்மும்மாரிபெய்யத் தேசம்விளைவோங்க
பொங்குத்தருமநெறி புவனியெல்லாந்தழைக்க
நாடுநகரந்தழைக்க நல்லோரெல்லாந்தழைக்கத்
தேடிப்புகழ்தழைக்கச் செல்வத்தினந்தழைக்கக்
கல்விப்பலர்தழைக்கக் கற்றோர்குடிதழைக்க
நல்விற்பனந்தழைக்க ஞானநெறிதழைக்க
தேவாலயந்தழைக்கத் திருப்பணிகள்பூசைமுதல்
யாவுந்தழைக்கவெங்கும் அன்னசத்திரந்தழைக்க

வேதகுலத்தோர்தழைக்க
நீதிதழைத்தோங்கியிந்த
தேர்ந்தமைந்தார்புத்தி சிகா
ஏந்தல்புவனேந்த்ர னிராஜா
மந்திரிகள்பெற்றோரும் மன்னன
தந்தமதுகாரியங்கள் சரியாய்நடத்திவந்தார்
வல்லமையின்மிக்க மதிச்சுமந்திராகரன்றன்
செல்வனும்புத்தி சிகாமணிக்குத்தன்குலத்தில்
கன்னியொருபெண்ணைக் கலியாணஞ்செய்துவைத்து
மன்னன்மனைப்போல்நடந்து வாவென்றுரைத்தார்கள்
தாலபுரந்திரனும் தன்னுடையமந்திரியும்
சீலவிராசாங்கமதைச் செல்வயஞ்சேர்ந்தபின்பு
ஆற்றுமலாபத்துக் கடுத்தமுயற்சிதனை
மாற்றுதலில்லாதுசெய்து வரவேண்டுமென்றுசொல்லி
போதம்விளையாகமமும் புராணமீரொன்பதுவும்
சாதனதத்துவமே காந்தசூடாமணியும்
சித்தமயக்கருக்குஞ் சிவஞ்ஞானசாஸ்திரமும்
பத்திக்குரியமற்றும் பலஞானசாஸ்திரமும்
ஆராய்ந்தோரானசில வாசான்கள்தம்முடனே
நேராகவாராய்ந்து நியமந்தவறாமல்
எக்காலுந்தங்க ளிதயபரிசுத்தமதாய்ச்
சற்காலக்ஷேபந் தான்செய்துகொண்டிருந்தார்
பன்னுமனு நீதிப் படியேசெங்கோல்செலுத்தி
மன்னன்புவனேந்த்ரன் வாழ்ந்திருந்தாரம்மானை
ஆயிரத்தியைம்பத்தோ ராண்டியில்யுவவருடந்
தூயசிங்கமாதந் துலங்குமுப்பதாந்தேதி
வதியாகியசோம வாரத்தினம்பகலில்
அதிகசுபம்நல்கு மவிட்டநட்சத்திரமும்
தேடுசித்தயோகமுடன் சிறந்ததனூர்லக்கினமும்
கூடுசுபயோகமெனக் கூறுஞ்சுபதினத்தில்
ஆதிமுதலாய்த்தழைத்த ஆற்றங்கரையெனவும்
கோதிபுகழோங்கியழ குருவார்பதியெனவும்

...ணன்மாலெனவும்
...ர்பொய்கைமாநகரான்
...ாளும் நீதிபதி
...ாக்கலிக்கப்பெத்தணமால்
... சிறந்தமணிமண்டபத்தில்
நம்ப... ...ரும நாட்டிலுள்ள நல்லவரும்
மக்கள் மருமக்கள்களும் வளருங்கிளேஞோரும்
தக்கபுகழ்காரியஸ்தர் தானுபதியோரும்
மேவித்தழைத்திடுமால் வேந்தன் சமூகத்திலிந்தப்
பாவையரங்கேற்றிப் பரிசுபெற்ளேம்மானை
வாழியொரு நால்வேதம் வாழியறுசாஸ்திரங்கள்
வாழிபுராணமெல்லாம் வாழிபலநூல்களெல்லாம்
மேகங்கள்வாழி விளைநிலமெல்லாம்வாழி
போகங்கள்வாழி புவியோரெல்லாம்வாழி
மாமறையோர்வாழி மன்னவரெல்லாய்வாழி
க்ஷேமமனுநீதிச் செங்கோல்களும்வாழி
மாதவங்கள்வாழி மகவேள்விகள்வாழி
பூதலத்திலுள்ள புலவோரெல்லாம்வாழி
தாலபுரந்தரா சாதிபதிவாழி
பூலோகரம்பையுடன் புவனேந்திரன்வாழி
வாய்ந்தபுவனேந்த்ர மாநகரத்தார்வாழி
தேர்ந்துயர்ந்தபுத்தி சிகாமணியுந்தான்வாழி
போற்றும்புவியதனிற் பொய்கைநகரென்றுசொல்லும்
வுற்றங்கரைநகரை யாளும்ராஜாதிபதி
தாராளன்முல்லைமலர்த் தாராளன்பாரேழும்
பேராளன்சொக்கலிங்கப் பெத்தண்ணன்மால்வாழி
பொய்கைநகர்வாழிமன்னன் புத்திரரெல்லாம்வாழி
செய்யமனைகிளைஞோர் சேர்ந்தோரெல்லாம்வாழி
புவியோர்புகழுமிந்தப் புவனேந்த்ரன்கதையைப்
பவியமுடன்கேட்போர் படிப்போரெல்லாம்வாழி
இப்புவியிலிக்கதையை யிப்படியம்மானையதாய்ச்
செப்புபாவாணனுமிச் செந்தமிழும்வாழியவே.

இந்தப்புவனேந்திரனம்மானைக
அச்சமயத்தி லுவகைமீக்
ரவர்கள் வரைட

அறுசீர்க்கழிநெடிலடி வி

சந்த்ரகிரியாதிபதி சொக்கல
பால்தந்த, இந்தநயச்சரிகைவ ... மாம்
வாங்குமெங்கோனிருகையீகை, சொந்தவ ... ய் வாங்
குங்கவி ஞோரைமற்றுமெங்கள் துரைசற்கீர்த்தி, வைந்
துடையமன்னர்பெற்ற புகழினையெல்லாம் விலக்கு
வாங்குந்தானே.

இதுவுமது.

கற்றுமிருப்பார்சிலர் நூல்கற்று லுங்கற்பனை சொற்
கவியின்சாரஞ், சற்றுமறியார்சார மறிந்தா லுங்கொடுப்
பதிலென் சாமிநின்போற், பெற்றிதெரிந்துதவாரிப்
பேருலகிலவரிருந்தென் பெறுவர்பெண்ணே, நெற்
றிரண்டு விளைபொய்கைச் சொக்கலிங்கப்பெத்தண்ண
மால்நிருபரேறே.

கட்டளைக்கலித்துறை.

கரும்பாட்டிச்சாரங் கவர்பவர்போலென் கருத்துக்
கொப்ப, வரும்பாட்டிற்சாரம் வரச்செய் ததுநின்வல
மையன்றே, விரும்பாட்டிறல் கொண் டெதிர்க்குமொன்
னாரையவ் விண்ணிடைப்போ, யிரும்பாட்டிலென்று
செய் சொக்கலிங் கப்பெத்த னேந்திரனே.

விருத்தம்.

கார்வாழி கார்பொழியும் மழைகள்வாழி
கடவுளரும் வாழிமன்னர் செங்கோல்வாழி
சீர்வாழி புவனேந்த்ரன் வாழிபுத்தி
சிகாமணியும் வாழிபூ லோகாம்பை
பேர்வாழி முத்தமிழ்நான் மறையாரங்கம்
பேருலகில் வாழிசெயுந் தருமம்வாழி
பார்வாழி யூர்வாழி யிந்தக்காதை
படிப்போருங் கேட்போரும் வாழிதானே.

புவனேந்திரனம்மானை முற்றிற்று.

---

இன்னும்பலவிருது மெவ்விடத் துஞ்சூழ்ந்துவர
மின்னுஞ்சுடர்விரிக்கும் வெண்சாமரைவீச
குலவைமுழக்கங்கேட்டுக் கொண்டல்ப்தறிக்குமுறப்
பலவலங்காரத்துடனே பட்டணத்தினுட்புகுந்தார்
பட்டணத்தினுட்புகுந்து பவனிவந்துவீதிசுற்ற
எட்டிஎட்டிப்பார்த்தார்களேந்திழையாரெல்லோரும்
காமனேவென்பாருங் கதிர்வேலவன்தனக்கு
மாமனேவல்லத்தவன் மருமகனேவென்பாரும்
மன்மதனென்றுலவற்கு வடிவிலேயேயென்பாரும்
பொன்மாலென்றுலவனும் புயல்வண்ணனென்பாரும்
ஆறுமுகத்தானிவனென் றுலவனுக்காறுதலை
ஆறுமுகமாறிருகண் ணறிருகையென்பாரும்
புவனேந்திரனிவனே புத்திசிகாமணியும்
அவனேயென்பாருமவ னல்லவடியென்பாரும்
தேசவளம்பார்க்கச் சென்றவர்வந்தாரெனவே
ஆசையுடன்சொல்வாரும் ஆமாமாவென்பாரும்
தண்டிகையிலேறியொரு தையல்வந்தாளென்பாரும்
எண்டிசைமன்னருக்குள் யார்மகளோவென்பாரும்
கலியாணஞ்செய்ததென்று காவலன்போகாமையினூற்
சலியாரோபெண்கொடுப்பார் சரியாமோவென்பாரும்
மன்னருக்கெல்லாமிதுவும் வழக்கந்தானென்பாரும்
சொன்னதையேமற்றவர்க்குச் சொலலிவருவாரும்
மாலைக்கொடுத்துவந்த மன்னவனேயெங்களுக்கும்
மாலைக்கொடுத்து மருவாயோவென்பாரும்
கைவளைசும்மா கழன்றுவிவளினியென்
செய்வளையாவென்று சிபாரிசுதான்செய்வாரும்
நீலவிழிசுருட்டி நெஞ்சுருகப்பார்ப்பாரும்
மாலைமலர்சூடி மதிலெட்டிப்பார்ப்பாரும்
நூலிடைதளளாட நுடங்கிவருவாரும்
தாவிவிழுஞ்சிலம்பைக் கைவிட்டுச்செல்வாரும்

கையிலிடும்வளையைக் காலிலிட்டுச்செல்வாரும்
கொய்யுமலரைக் குழலில்வைத்துக்கட்டுவாரும்
இன்னம்பலவிதமா யேந்திழையாரெல்லோரும்
மன்னன்வடிவுகண்டு மயங்கப்பவனிவந்தான்

### இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் பட்டணம் வந்து சேர்ந்து இராசாவைக் கண்டுகொள்ளுதல்.

தெருவீதிசுற்றிவந்து செம்பொன்னரண்மனையின்
மருவுமணிமுகப்பு வாசலில்வந்து நின்று
திட்டமுடனுலாத்தி திருட்டிசுற்றத்தானோக்கி
மட்டவிழுந்ததாரான் மதயானைவிட்டிறங்கி
தண்டிகையைப்பெண்களுடன் தாயார்மனைக்கனுப்பி
மண்டலத்துராஜனிடம் வந்தான்புவனேந்த்ரான்
மின்னுமுடிவேந்தன் வீற்றிருக்குமண்டபத்திற்
கன்னன்மதன்போலுங் காவலவன்மைந்தன்வந்தான்
வந்துபுவனேந்த்ரான் மணியாசனத்திருக்குந்
தந்தையைக்கண்டு சாஷ்டாங்கமாய்ப்பணிந்தான்
மன்னனுடனே வணங்கியதன்மைந்தனையுந்
தன்னிருகையாலே தழுவியெடுத்தணைத்து
பக்கத்தில்வைத்துமுகம் பார்த்துமனமகிழ்ந்து
மிக்கமனமகிழ்ச்சி மிகுத்திருக்கும்வேளையிலே
புத்திசிகாமணியும் புவிராஜன்பொற்பதத்திற்
பத்தியுடன்வீழ்ந்து பணிந்தங்கெழுந்திருந்தான்
நின்றவனைப்பார்த்து நிருபன்மனமகிழ்ந்து
தன்றுணைக்கையாலே தழுவியிங்கோர்பாலிருத்தி
மனதுமகிழ்வாகியந்த மைந்தர்வரக்காணாமல்
தனதுமனத்துள்ளே தரித்திருந்ததுன்பமெல்லாம்
சந்த்ரகிரிவேந்தன் தருணாதிகாந்தன்
விந்தையும்பூமகளும் விரும்புந்திருப்பதத்தான்
பொய்கைவளநாடு புரக்குமிராசசிங்கம்
வையகமெங்கெங்கும் மலைமேல்விளக்கதுபோல்

தோன்றும்பெரும்புகழான்சொக்கலிங்கப்பெத்தணலைத்
தான்றுதிக்கும்பாவாணர் தங்கவிபோலோடியதே
மைந்தரைக்கண்டவுடன் மனத்துயரெல்லாம்நீங்கி
சிந்தைமகிழ்ந்திருந்தான் தேர்வேந்தனம்மானை
அத்தருணமத்திரிக ளனைவோரும்வந்திருந்தார்
புத்திசிகாமணியைப் புவனேந்திரன்தனையும்
மின்னுமுகம்பார்த்திவ்வூர் விட்டகன்றநாள்முதலாய்
இந்தநாள்வரையிலும்நீ ரெந்தெந்தநாடுசென்றீர்
சென்றதுவுமவ்விடத்திற் சேர்ந்தவரலாறுகளும்
ஒன்றுந்தவரு துரைத்திடுங்களென்றுரைத்தான்
பூவரசன்சொன்னதெல்லாம் புவனேந்திரன்கேட்டுப்
பார்வையினுல்மந்திரியின் பால்ன்முகம்பார்த்தான்
பார்த்தகுறிப்பறிந்து பார்த்திபனைத்தான்பார்த்து
சீலமிகுபுத்தி சிகாமணியுந்தானுரைப்பான்
படியேழையும்புரக்கும் பார்த்திபனே நின்புதல்வன்
விடையாலடியேன்செய் விண்ணப்பங்கேளுநமையா
தங்கள்விடைபெற்றுத் தரணியெல்லாம்நாங்கள்சுற்றி
இங்குவந்தசெய்திகளை யானுமேசொல்லுகிறேன்
மன்னன்மகனுமந்த மந்திரியுவாம்பரிமேற்
பொன்னகரை நீங்கியங்கே புகுந்தகதைமுதலாய்
மைத்தன்பிரிந்ததுவும் மாதரசைத்தோய்ந்ததுவும்
பித்தியவனிறந்த பேச்சுமந்தப்பேதையினுல்
தான்வந்துசேர்ந்தரசன் தனக்குயிருண்டாக்கியதும்
மான்வந்தகன்னியுடன் மாநகர்க்குவந்ததுவும்
மண்டபத்தைத்தான்கடந்து வந்ததுவுமீருக
விண்டந்தமன்னனுக்கு விளம்பினனம்மானை
அண்டாண்டப்பட்சிசொன்ன வந்தாங்கத்தைமட்டும்
மண்டலத்துவேந்தனுக்கு வழுத்தாமலேமறைத்தான்
புத்திசிகாமணிதான் புகன்றதுவெலாங்கேட்டுச்
சித்தங்கலங்கித் தெளிந்தான்சிலைவேந்தன்

இருந்தவர்களெல்லா மிரங்கிமனமுடைந்தார்
அருந்துயரந்தானிவர்போ லாரோசகித்திடுவார்
இத்தனை துன்பமையோ விவர்க்குவரலாமோ
அத்தனையும்புத்தியினு லல்லவோவிலங்கிவந்தார்
என்றுபலசொல்லி யிரங்கினுரெல்லவருந்
துன்றியபேரெல்லாந் துதித்தார்கள்மைந்தர்களை
அப்போதரச னமைச்சன்மகனைத்தழுவி
இப்போதிலுன்வயிற்றி லென்மகன்தான்பிறந்தான்
அல்லவோஐயா அமைச்சர்குலக்கொழுந்தே
வல்லவருன்போலொருவர் வாய்ப்பாரோமன்னவர்க்கு
என்மந்த்ரிசெய்தவமே யெவைக்குமேலானதவம்
மன்மைந்தனையமைச்சன் மகன்காத்தவாறதுபோல்
எவரையெவர்காத்தார்க ளிப்புவியிலென்றுரைப்பேன்
தவறுவராமற்காக்குந் தருமனிவனுகுமென்முன்
இறைவனுரைத்தமொழி யிருந்தவரெல்லாங்கேட்டு
முறைதானரசன் மொழிந்ததெனவேமொழிந்தார்
புந்திமகிழ்ந்து புவனேந்திரனுடனே
அந்தப்புரத்துக் கரசனெழுந்துசென்முன்
நான்புத்திசொன்னதிலும் நானூறுபங்கதிகந்
தான்புத்திகொண்டு தலைவேந்தன்புத்திரனை
தன் னுயிர்க்கோர்சுகத்தைச் சற்றும்நினையாமல்
மன் னுயிரேதன் னுயிராய் மதித்திங்கேகாப்பாற்றி
கொண்வந்துசேர்த்தான் குழந்தையிவனுற்கீர்த்தி
உண்டுநமக்கென் றுணர்ந்தான்முதலமைச்சன்
முன்னரண்மனைக்குள் மொய்குழலார்சூழ்ந்துவரப்
பொன்னஞ்சிவிகைமேற் பூலோகரம்பைசென்முன்
முந்திசிலர்போய் முடிவேந்தன்பத்தினிக்கு
மைந்தன்புவனேந்திரன் வந்தானவனுடைய
மனைவிபூலோகரம்பை வருகிருளென்றுரைத்தார்
வினவியவள்மகிழ்ந்து வீற்றிருந்தாளந்நேரம்

வந்தாள்பூலோகரம்பை வணங்கினாள்மாமியரை
அந்தட்சணமவளை யணைத்தெடுத்தாள்மார்போடே
மார்போடெடுத்தணைத்து வாழ்த்தியாசீர்வதித்தாள்
பார்வேந்தன்பத்தினியாள் பார்த்தாள்மருமகளை
கட்டித்தழுவிக் கழுத்தோடுகையணைத்தாள்
பட்டிசைந்தபூபோழுகைப் பார்த்துக்களித்திருந்தாள்
அந்தச்சமயத்தில் அரசனுந்தன்புத்திரனும்
வந்தகுறிப்பறிந்து மருமகளோர்பால்மறைந்தாள்
பாலனங்கேவந்து பணிந்தான்தாயார்பதத்தை
மாலுடனேமைந்தனைத்தன் மார்போடெடுத்தணைத்து
உச்சிமுகந்தா ளுடலும்புளகமுற்றாள்
பட்சமுடன்மகனைப் பார்த்தாள்களிப்படைந்தாள்
அந்நேரமந்த வரசனங்கேவந்திருந்தான்
மின்னாள்மகனுடன்போய் வேந்தைப்பணிந்திருந்தாள்
இருக்கும்பொழுதிலங்கே இருந்தசிலதாதியர்கள்
பொருக்கென்றெழுந்தழைத்துப்பூலோகரம்பைதனை
மாமனார்பாதம் வணங்குமம்மாவென்றார்கள்
தாமவார்பூங்குழலாள் தலைகவிழ்ந்தோர்பாலொதுங்கி
சென்றுவணங்கவும் சிலைவேந்தன்வாழ்த்துரைத்தான்
மன்றற்குழலாள்போய் மறைந்தொருபால்நின்றாளே
பட்டத்தரசிமுகம் பார்த்தரசன்பேசலுற்றான்
மட்டவிழுந்தார்குழலீர்மைந்தன்வரலாற்றையெல்லாங்
கேட்டீரோமங்கையரே கேட்டாற்சகிப்பீரோ
நாட்டிலிந்தச்சங்கதிபோல் நான்கேட்டதில்லையென்று
நடந்தகதையையெல்லாம் நவின்றான்நரபாலன்
மடந்தைதருமாபதியும் வருத்தமுஞ்சந்தோஷமுமாய்
இருந்தாலப்பாலவர்க ளெல்லாருமன்னமுண்டு
திருந்துதாம்பூலமிட்டுச் சிந்தைமகிழ்ந்தார்கள்
மந்திரிமைந்தனங்கே மன்னன்சபையைவிட்டுச்
சொந்தமனைபுகுந்து தொழுதான்தாயார்பதத்தை

தாயார்மகனைத் தழுவியெடுத்தணைத்து
வாயாரவாழ்த்தி மகிழ்வுடனாசீர்வதித்தாள்
போய்வந்தசெய்தியெல்லாம் புத்திசிகாமணியின்
வாயுரையாற்கேட்டிருந்தாள் மந்திரியின்தாயாரும்
இந்தப்படியே யிவரிருக்கும்நாளையிலே
வந்தகதையையினி வழுத்துவேனம்மானை

மந்திரிகுமாரன் ராஜகுமாரன் பள்ளியறை
காத்து ஆபத்து விலக்குதல்.

சொத்தப்புரத்தில் துதிவேந்தனுக்காக
அந்தப்புரம்வேறு யாண்மனைக்குளேற்படுத்தி
பூலோகரம்பையையும் புவனேந்திரன்தனையும்
மாலோடங்கேசேர்த்து வாழ்ந்திடச்செய்தானரசன்
துன்பமெல்லாந்தீர்த்தந்தத் தோகையுமன்னவனும்
இன்பமுடனேவாழ்ந் திருக்குமந்தநாளையிலே
ஆலமரமேலிருந்த அண்டரண்டப்பட்சிசொன்ன
சீலமெலாம்புத்தி சிகாமணியுந்தானினைந்து
மன்னன்மகன்வாழு மனையிற்றினந்தோறுந்
தன்னையொருவர்களுந் தானறியாதபடி
இரவுவிடியுமட்டு மிருந்துதயமானபின்பு
வருவானவன்மனைக்கு வழக்கமதாய்க்காத்துவந்தான்
ஒருநாளிரவிலவ னுளித்திருக்கும்வேளையிலே
அரவமங்கேவந்ததுகா ணரசனுயிர்வாங்குதற்கு
மஞ்சத்தின்மேலேறி மங்கையும்மன்னவனும்
நெஞ்சங்களித்திருந்து நித்திரைசெய்யும்போது
பாதாலத்துள்ளிருந்து பாருலகின்மீதுவந்து
தீதானதன்சபதஞ் சினத்தால்முடிப்பதற்கு
வந்தான்கார்க்கோடனந்த மஞ்சமேற்கட்டிலின்மேல்
தந்தாய்கடிக்குஞ் சமையம்பார்த்தேயரவம்
அங்குவரும்போததனை யமைச்சனுந்தான்கண்டான்
செங்கைவாளால்வெட்டிச் சிதைத்தானப்பாம்புதனை

வெட்டினபாம்பின் னுணுக்கில் வீழ்ந்ததுஓர் துணுக்கு
சொட்டிட்டரத்தமொரு துளியந்தமாதரசி
கொங்கையின்மேல்வீழ்ந்த குறிப்பையிவனறிந்தான்
இங்கிதனுக்கென்செயலா மிறைவனிவளுடனே
சேர்ந்துசுகிப்பானுகிற் சிந்தியரத்தமது
தோய்ந்திடும்வாய்க்குள்ளாகில் துன்பமிகநேர்ந்திடுமே
துரைமனைவிதன் னுடலைத் தொட்டெடுக்கஞாயமல்ல
விரைவிலெடுக்காவிட்டால் வினைவந்துநேர்ந்துவிடும்
ஆபத்துக்குப்பாவமில்லை ஆகையினுலிதனைச்
சோபமுண்டாக்குமுனே துடைத்துவிடவேணுமென
மெள்ளத்தன்சுண்டு விரல்நகத்தாலேயெடுத்து
துள்ளக்கீழேவிழுந்த துண்டமதைமந்திரியும்
கைவாளாற்கோதிமேற் கட்டிலின்மேற்போடையிலே
மைவாள்விழியுடைய மாதுவிழித்தாளுடனே
பார்த்தாள்தன்மார்பினிலே பட்டரத்தங்கைநகத்தாற்
சேர்த்தடுத்துச்சுண்டியதுஞ் செங்கைவாள்வாயிரத்தம்
பட்டிருக்குங்குறியும் பாம்பின்துணுக்கினைமேற்
கட்டில்பின்போட்டமைச்சன்கருத்துடனே நிற்பதுவும்
எண்ணினுள்பட்சிசொன தெல்லாமவ்வேந்திழையாள்
துண்ணென்றெழுந்தாள் துதித்தாளம்மந்திரியை
ஐயா நீயிங்குவந்து ஆபத்துத்தீர்த்தாயெனவே
கையாலணைத்தவனைக் கட்டித்தழுவி நின்றுள்
வந்தவாபத்தையந்த மந்திரிவிலக்கியதைச்
சுந்தரத்தோள்வேந்தன்மகன்தோன்றுது தூங்கினவன்
அந்தச்சமயமதி லங்கேவிழித்தெழுந்து
மந்திரியைத்தன் னுடைய மனைவிதழுவி நிற்கப்
பார்த்தானரசனந்தப் பாவையிம்மந்திரியைச்
சேர்த்துத்தழுவுகையைத் தேன்மொழியும்விட்டுநிற்க
இப்படியாமந்திரியி னியற்கையெனமதித்து
மெய்ப்படியுங்கண்ணுள் மனத்துணிவுந்தாஅணர்ந்து

கொண்டுமனைவிட்டரசன் குமாரன்வெளியிலொரு
மண்டபத்திற்குவர மந்திரியும்பின்பில்வர
வந்ததொருமந்திரியை மன்னவன்பார்த்தென்னுடைய
அந்தபுரமானபள்ளி யறைக்கும்மனமஞ்சாமல்
இந்தநடுராத்திரியி லிங்குவந்துமேந்திழையாள்
சத்தமலர்க்கைகயாலே தழுவநின்றாயலவா
இப்படியாபுத்தியுனக் கிருந்ததெனக்கேட்டான்
ஒப்பில்லாமந்திரியு மூழ்விதிதானுவெனவே
கோபத்தாற்கேட்டதற்குக் கோதில்லாப்பட்சிசொன்ன
சாபத்தையெண்ணியங்கே சார்ந்த ஆபத்ததனை
சற்றுஞ்சொல்லாமலவன் தலைகவிழ்ந்து நிற்கையிலே
கொற்றவனுக்குற்ற குறிப்பெனவேதான்மதித்து
இப்படிப்பட்டவெண்ண மெதுமுதல் நீகொண்டிருந்தா
யப்படிக்கிவ்வெண்ணமுன தகத்திருக்குமேயாகில்
அன்றுபிராமணத்தி யாலிறந்துபோனவென்னை
இன்றும்பிழைத்திருக்க வேன்செய்திடவேணும்
நீங்களிப்போதுகொண்ட நினைப்புக்குநானிருந்தால்
ஈங்கோதடையார் யிருக்குமல்லோவென்றுசொல்லி
மன்னன்மகன்கேட்க மற்றதற்குமந்திரியும்
முன்னமண்டரண்டப்பட்சி யொழிந்தசாபமுணர்ந்து
தழுவினதுமெய்யென்றும் தானங்கேவந்ததுமாய்
பழுதென்றுங்குற்றமுந்தப் பாதொப்புக்கொண்டனவன்
நேராகத்தானுரைத்தான் நின்றான் தலைகவிழ்ந்து
பார்வேந்தன்மைந்தனவன் பகர்ந்தமொழிகேட்டு
கோபமுற்றுப்பாராக் கொடுப்பவரைக்கூவிமனவல்
தாபமுடனேநடந்த சங்கதியெல்லாமுரைத்து
அத்தினத்திராவின்மட்டு மமைச்சனைப்பாராவசத்தில்
வைத்திருக்கும்படிக்கு மறுநாளுதயமதில்
வேந்தன்சமுகத்தில் விரைவாகக்கொண்டுசென்று
பாந்தமுடனேயிவன்செய் பாதகமெலாமுரைத்து

தீர்க்கவிசாரித்தவனைத் தெண்டிக்கவே ணுமென்று
மார்க்கமுடனேசொல்லி வாருமென்முன்மன்னவனும்
அந்தவுரைகேட்டவன் தான்மிகப்பயந்து
சிந்தைகலங்கியந்தச் செல்வன் தனையழைத்து
பாராவிலேயவர்கள் பத்திரமாய்வைத்திருக்கத்
தீராதகோபமின்னுஞ் சிந்தைகொதித்தெழும்பி
புத்திசிகாமணியைப் புரவலன்விசாரணைக்குச்
சித்தப்படுத்திச் சிலவேந்தன் மைந்தனங்கே
எண்ணுவான்பலவிதமா வேந்திழையாளைக்குறித்து
மண்ணிலிவள்கற்பின் மதிப்புடையாளென் றிருந்தோம்
நாதத்தைவிட்டெனக்கு நாயகன் நீயாகுமென்முள்
மோகத்தாலிங்கே மூயங்கினாள்மந்திரியை
என்னுடையபத்தினியா யிருந்துமிவ்வாறுசெய்தாள்
மின்னுமிவன்மேல்தான் பிரியம்வைக்கரதியுண்டோ
இந்தட்சணமிவளை யென்கரத்திலேபிடித்து
மந்திரவாளுக்கிரையாய் வைத்துவிடவேணுமென்றும்
மாதர்களைச்சிறிய மைந்தரை நிராயுதரைத்
தூதர்களையாருந் துதிக்குமறையோரை
நல்லதபசிகளை ஞானவாசாரியரைக்
கொல்வதுநீதியென்று கூறார்பெரியோர்கள்
ஆதலினாலிந்த வணங்கைதான்கொல்லுவதாற்
பாதகமுந்தீராப் பழியும்வந்துநேருமென்றும்
மங்கையுங்கர்ப்ப வதியாயிருப்பதினால்
இங்கந்தமந்திரியை இறைவன்விசாரிப்பதனால்
முடிவாகுஞ்சங்கதிகள் முற்றுந்தெரிந்தபின்பு
கொடிபோலிடையாளைக் குறித்துயோசிப்பமென்றும்
இந்தவிதந்தன்மனைவி யிடத்திலேசந்தேகம்
வந்துபலவிதமாய் மதித்துமனமோய்ந்தான்
பாராவில்வைத்திருந்த பாவலனைக்காவலர்கள்
நேராய்விடிந்தபின்பு நீவாவெனவழைத்துக்

கொண்டுபோய்மன்னன்கொலுமுகத்தின்முன்புவிடத்
தெண்டனிட்டுவேந்தன் திருமுகத்தைத்தான்பார்த்து
புவனேந்திரன்தமக்குப்புகன்றதையெல்லாந்தெளிவாய்
அவர்நேரில்நின்றழ கறைந்துவிட்டாரம்மானை

### மந்திரிகுமாரனை ராஜா விசாரணை செய்குதல்.

மன்னனதைக்கேட்டு மனதுதிடுக்கிடவே
என்னதான்சொன்னீ ரிதுமகாநேர்த்தியென்று
மூக்கில்விரல்வைத்து மூகூர்த்தமொருகால்வரையில்
தீர்க்கயோசித்திருந்து செப்புவான்மன்னவனும்
வாவையாவெனுடைய மந்திரியின்புத்திரனே
பாவையாலுன்மேற் பழிவந்தகாரியமென்
இந்தப்பேர் நீயடுக்க வேதுவேறேதுமுண்டோ
முந்தப்பேர்பெற்றதெல்லாம் மூதலோடிழந்தாயோ
நீயேயிச்செய்கைதனை நெஞ்சில் நினைப்பாயானால்
தூயோரென்றுரையினிச் சொல்லலாந்தொல்லுலகில்
நேசத்தைவேருக்கி நிந்தனைகளாக்கினையே
மோசப்படுத்தவிந்த முறைமையெவர்சொன்னரோ
அல்லது நீதானுன் னறிவுமயங்கினையோ
பொல்லாதகாலம்வந்துன் புத்தியைவேருக்கினதோ
சொல்லையாயுள்ளபடி சோதனையீதானலும்
எல்லாம்விசாரித் திடுவேன்பயம்வேண்டாம்
என்றுனரச னிதையெல்லாங்கேட்டவனும்
தின்மைசெய்தபேர்க்கலவோ தீங்குவரும்நாமிவர்க்கு
தன்மைசெய்யத்தின்மைவர நாமதனுக்கென்செயலாம்
நடந்ததையெலமுரைத்தால் நாமுடனேகல்லாவோம்
விடந்தலைக்கேறினாற்போல் வேந்தன்சினந்துநின்றுன்
வந்தால்வரட்டும் வருகின்றதீமையெல்லாம்
நொந்தாவதென்னவென்று நுண்மதியாலேமதித்து

மான்நிகர்க்குங்கண்மடந்தை வாழுமந்தப்புரத்தில்
தான்குற்றஞ்செய்தவன்போல் தலைகவிழ்ந்து நின்றானே
வேந்தன்மொழிக்கு விடையொன்றுஞ்சொல்லாமல்
ஓய்ந்ததுகாரணமென் றூமைபோலங்கு நின்றான்
ஒன்றும்பேசாமலவ னுள்ளந்தடுமாறி
நின்றநிலையை நிருபன்மதித்தறிந்தான்
செய்யாதசெய்கையிவன் செய்துவிட்டானாதலினால்
மெய்யானதைத்துணிந்து விளம்பமுடியாமல்
நின்றான்வாய்பேசாமல் நீயிப்படியிவனை
நன்றாகக்கண்டித்து நாம்விசாரிப்பமென்று
இந்நேரமட்டு மிதமாய்நாங்கேட்டதிலும்
உன்னால்நடந்திருக்கு முண்மையெதுஞ்சொல்லாமல்
ஏதாகிலுந்தெரியா வேழைபோல் நீயிருந்தால்
மாதர்மேலிச்சைவைத்த மாபாவியாகாயோ
நல்லதடா தம்பியுன் நடத்தையுமிப்படியோ
வல்லிமேலிச்சைதனை வைத்தாயோவைக்கலையோ
நேற்றிரவிலென்புதல்வ னீண்மனையிற்சென்றதுவுங்
கோற்றொடியுமெய்தழுவக் கொண்டுநீ நின்றதுவுஞ்
செய்யாதகாரியத்தைச் செய்துதன்வல்லமையாற்
பொய்யாக்கலாமெனவோ புத்தியிலே நினைத்தாய்
செப்படிவித்தையைப்போற் செய்தோநடத்திவந்தாய்
இப்படிச்செய்வாயென் றெனக்குந்தெரியாதே
மன்னன் திருமனைவி மந்திரிக்கும்மற்றவர்க்கும்
அன்னையென்றேசொல்லு மருமறைநூலாய்த்திலையோ
எல்லாம்படித்திருந்து மிறைமாட்சிதேர்ந்திருந்தும்
கல்லாருஞ்செய்யாதே காரியமோ நீசெயலாம்
என்னடாவின்னமுனக் கேன்வாய்திறக்கவில்லை
பின்னையார்பக்கலுண்மை பேசவிருக்கின்றாய்
என்றுபலவிதமா யிருவிழியுந்தீப்பறக்க
மென்றுதடுதின்று விளம்பினான்பார்வேந்தன்

மன்னன்சினந்து வழுத்தியதெல்லாங்கேட்டு
பின்னுமந்தப்பட்சிசொன்ன பெருஞ்சாயலுநினைந்து
இருதலைக்கொள்ளிக்குள் ளெறும்புபோலேதியங்கி
ஒருதலைக்குநிற்கின்ற னுண்மைசொல்லென்றானதனுற்
பொய்யுரையாமற் புலனும்வெளியாகாமல்
வையகத்தரசன் மகனம்மைக்கண்டபடி
இன்றுநாஞ்சொல்வோம்பின் னெப்படியுமாகுதென்று
நின்றுவாய்பொத்தி நிகழ்த்துவானையாதான்
பொழுதுபட்டபின்புவந்தப் புரத்துக்குப்போனதுவுந்
தழுவியதுமுண்மையென்று சாற்றினனம்மானை
சும்மாவிவன்மீது சொல்வானேநம்புதல்வன்
அம்மாவினம்மமைச்ச ராலும்விசாரித்துவெளி
செய்வோமெனத்துணிந்து ஜீவன்போனாலுமொரு
பொய்பேசாமந்திரிகளைப்போயழைத்துவாருமென்றான்
நின்றார்களோடி நிருபனுமையழைத்தான்
என்றாருடனமைச்ச ரெல்லோருமங்குவந்தார்
சேர்ந்தார்சபையோருந் தேர்வேந்தனைவணங்கி
சார்ந்தாரவரவர்க்குத் தக்கவிடஞ்சார்ந்திருந்தார்
அந்நேரமன்ன னவர்கள்முகம்பார்த்துச்
சொன்னனடந்ததெல்லாந் துக்கித்தாரெல்லோரும்
வினையமறியாதவனே வீணனகாரியத்தைத்
தினையும்நினைப்பானே செய்யத்துணிவானே
செய்யத்தகாதசெய்கை செய்தாலுயிர்க்குறுதி
செய்யப்படுமென்று சிறிதுந்தெரியாதவனே
இந்நாள்வரையிவனுக் கில்லாதபுத்தியிவன்
தன்னலேவந்ததுவோ தவறிதுசெய்தாரோ
பலநாளும்பாசாங்கு பண்ணித்தான்வந்தானே
இலையாகிலிந்வெண்ண மிடைதட்டில்வந்ததுவோ
காலச்செயலோ கருத்துமயங்கினதோ
சீலத்தைமந்திரிகள் செய்கையைக்கைவிட்டானே

தெறியானதைமறந்து நிலைமைவடுமாறினனோ
வெறிதான்பிடித்தானோ வினையோவிதிப்படியோ
சொல்லுதற்கொண்ணாத துர்நடத்தைக்காகினனோ
அல்லவோதெய்வமன்றி யாரறியக்கூடுமிதை
நம்மரசன்மைந்தனிவன் நன்மையெலாங்கண்டிருந்து
சும்மாவவதூறு சொல்வான்பொய்சொல்வானோ
இந்தவிதம்மந்திரிமா ரிருந்தவர்களெல்லாருந்
தந்தம்மனதுப்படியே தனித்தனியேசொன்னார்கள்
வார்த்தையெலாங்கேட்டரசன் மந்திரிமாரையெலாம்
பார்த்திவனையின்னம் பலநாள்விசாரணையால்
உண்மையினைச்சரியா யுரைக்கச்செயவேண்டுமென
வெண்மையிலேபேசி விளையாட்டுக்காட்டுகிறான்
ஆனதனால் நீங்க ளனைவரும்வந்திங்கு
தானொருவராய்நமது சமூகத்தின்முன்னிருந்து
யோசித்திவனையின்ன முண்மைவிசாரித்திரண்டு
மாசத்துக்குள்முடிவு வழுத்துமமைச்சர்களே
இவனுமதற்குளுண்மை யேதுஞ்சொல்லாதுவிட்டால்
தவறுதிவன்மரண தண்டனைக்குள்ளாவதென்று
வேந்தனெவர்க்கும் விடைகொடுத்தான்மற்றவருஞ்
சார்ந்துமறுநாண்முதல்வி சாரணைசெய்துவந்தார்
இப்படிவிசாரணைக்கங் கிவர்தொடங்குநாள்மூன்றில்
மைப்படியுங்கண்ணாளாம் மாதுபூலோகரம்பை

## இராஜகுமாரனுக்குக் குழந்தைபிறந்தது.

ஆகியிருந்தகர்ப்ப மதுமாதம்பத்தாகிச்
சோகமிருந்து சுபமானவோர்தினத்திற்
பெற்றாளோராண்குழந்தை பெருந்துயரெல்லாந்தீரப்
பொற்றாரணிமார்பன் புவனேந்திரன்தனக்குக்
குழந்தைபிறந்ததென்று கோவேந்தருன்கேட்டுத்
தழைந்தமனமகிழ்ந்து தானமெல்லாந்தான்கொடுத்து

சாதகமாதி சடங்குகளெல்லாம் நிறைத்து
மேதினியாள்வேந்தன் விசாரணையிலேதொடங்க
அங்கேநாளொன்றுக் கமைச்சர்களுமெர்வ்வொருவர்
தங்காமல்வந்தரசன் சமுகத்தின்முன்னிருந்து
புத்திசிகாமணிக்குப் புத்திபலவாயுரைத்துச்
சித்தமயங்காதே நீ செய்ததுண்மையானாலும்
உள்ளபடிசொன்ன லுனைவிலக்குமார்க்கமுண்டு
பள்ளமன்றிமேட்டில் பரந்துபுனல் நில்லாது
பேசையர்வுண்மையென்றுபேசியதைக்கேட்டமைச்சன்
பாஷையாலண்டரண்டப் பட்சிசொன்னசாயமதைச்
சிந்தைதனிலெண்ணியுண்மை செப்பினல்கல்லுருவம்
வந்துவிடுமென்றேதான் வாய்பேசாதங்கு நின்றான்
பேசாமலேயிருந்தாற் பிழையொன்றுமில்லையென்றே
கூசாமலேதேனுங் கூறாமல் நீயிருந்தாய்
நீயெதுவும்வாய்திறந்து நிகழ்த்தினையாகிலன்றே
ஞாயமநியாயமென்று தாம்பிரித்துசொல்லிடலாம்
சொல்லாமல்வாய்மூடிச் சும்மா நீதானிருந்தால்
எல்லா நீசெய்ததென்றே எங்களுக்குத்தோனுதுகாண்
மந்திரிமார்வம்மிசத்தில் வசையொன்றுவைத்தாயே
சந்திரனுக்கோர்மறுப்போல் தந்தைக்குதேடிவைத்தாய்
குலத்திலொருபிள்ளை குணமாய்த்தலையெடுத்தால்
நலத்தையடைவதுபோல் நாங்கள் நினைத்திருந்தோம்
அந்தப்புரத்துக் கரையிரவிற்போய்மடந்தை
வந்துதழுவி நின்ற வார்த்தை நிஜமென்றுசற்றும்
அஞ்சாமற்சொல்லி நின்று யல்லவாவேந்தனிடம்
நிஞ்சாலிச்செய்கை நினைக்கத்தகுந்ததுவா
இன்னமந்தவார்த்தையில் ஏதோவோர்சூதுவைத்துச்
சொன்னதாய்த்தோனுதந்தச் சூதையும்சற்றுவெளியிற்
சொல்லையாவென்றுசிலர் சொல்லியும்பேசாதிருந்தான்
கல்லையானுலுங் கரைத்திடலாமோர்நொடியில்

எத்தனைபுத்தி யிவனுக்குதாமுரைத்தும்
பித்துப்பிடித்தவன்போற் பேசுகிறானில்லையென்றும்
சொன்னதைச்சொல்லுகிறாய் சூதிதனிலேதுமுண்டோ
பின்னுரையென்றாலதற்குப் பேசுகிறாயுமில்லை
பெண்ணாசையாலுனக்குப் பித்துப்பிடித்ததுவோ
மண்ணாசைதன்னை மறந்துதான்விட்டாயோ
உங்களுடபாட்டனுக்குமுண்மையுஞ்சொல்லேனென்று
எங்களிடத்தினுமோ விப்படி நீசெய்திடலாம்
உடம்பறியாபேயாட்டு முண்டோவுலகமதில்
தடம்பிரண்டுபோனாயோ தாய்க்கொளித்தசூலுண்டோ
சிறுபிள்ளைபுத்தியினுந் தீரவில்லையோவுனக்கு
மறுமொழி நீசொல்லவெனில் வாய்திறக்கக்கூடலையோ
ஓதியுணர்ந்துமற்றோர்க் கோதியுந்தானடங்காப்
பேதையிலும்பேதையுன்போற் பேருலகிலில்லையேதான்
இன்னவிதமாயவர்களெல்லாந்தனித்தனியே
மன்னன்சமூகமுன்பு வைத்துறுக்கிக்கேட்டதிலும்
அய்யோவிவர்களென்னை யறிவிலாச்செய்கையிவன்
செய்தானென்றல்லோ சினமிகுந்துபேசுகிறார்
உள்ளபடிசொன்னா லுடனேநான்கல்லாவேன்
விள்ளவகையில்லையே விதியிதன்மேல்வேறுமுண்டோ
என்றுபலவாறாக வெண்ணியரசனிடம்
அன்றுரைத்தாற்போல யவர்க்கெலாந்தானுரைத்தான்
எத்தனைசொன்னாலு மிவனுண்மைபேசவில்லை
புந்தியிவனுக்கினியார் புகல்வாரெனவெகுண்டார்
தந்தையும்வந்தவனைத் தனியேயழைத்துவைத்துப்
புத்திபலசொன்னதிலும் புகன்றதன்றிவேறுரையான்
இன்னவிதமாக மிவன்பேச்சேயூர்முழுதும்
மன்னவன்முன்சொல்லிவைத்த மாதமிரண்டுஞ்சரியாய்
ஆனதனாலும் அமைச்சர்விசாரணையில்
தானொருவர்பாக்கியின்றிச் சரியானதுநோக்கி

மாவேந்தன் தன்னுடைய மந்திரிமார்யாவரையும்
தாவேந்தி நீதி நடுவுரைப்போர் தங்களையும்
உற்றசபையோர்களையு மொருமுகமாய்த்தானழைத்துக்
கொற்றமிகுஞ்சபையிற் கூட்டிவித்துத்தா னுரைப்பான்
தினந்தோறும் நீங்களிங்கே செய்தவிசாரணையின்
மனந்தான் திரும்பியதா வாய்மைவெளியிட்டானு
என்னமுடிவுசெய்தீர் இயம்புமெனக்கேட்க
மன்னன்முகம்நோக்கி மந்திரிமார்கள்சொல்வார்
இந்நாள்வரைநாங்க ளெத்தனையோபார்த்ததிலும்
சொன்னோர்சொல்லந்தச்சொல்லையன்றிவேறுமில்லை
தீதிவன்செய்ததன்றிச் செய்யவில்லையென்பதற்கோர்
ஏதுவொன்றுங்காணோ மெனவுரைத்தார்மந்திரிகள்
பின்னுஞ்சபையோருமவர்பேசியதேவுண்மையென்றார்
இன்னவிதக்குற்றமதை யெல்லோருஞ்சம்மதிக்க
திருபனுடனேயவனை நேரழைத்துமுன்னிருத்தி
வருவதறியாமலுண்மை வார்த்தைசொல்கிறாயிலை நீ
என்மகனானாலு மிராசநீதிக்கிணங்காத்
தன்மைசெய்தாலுடனே தண்டிப்பதென்கடமை
இராஜரெவர்க்கும்பொதுவா யிருந்துநடுத்தீர்ப்பதிலே
தராசுநிறைபோலிருக்கத் தக்கதென்று நீயறிவாய்
ஆனாலுமுண்மை யறைந்தால்பரிகாரந்
தானாகிலுஞ்செய்யத் தக்கதொருபட்சமுண்டு
மன்னன்நமதுயிரை மாய்ப்பானென்றெண்ணாது
இன்னமுண்மைசொல்லா திருந்தால்நானப்படியே
செய்வேனெனவேந்தன் செப்பிடவும்நாமினியென்
செய்வதுபட்சிசொல் செப்பவொட்டுதில்லையுண்மை
ஐயோவென்றேங்கி யதற்கும்பேசாது நின்றான்
பொய்யேதுமில்லையிவன் புன்றொழில்செய்துவிட்டான்